
தென்குமரி வட்டார வழக்குகள்



பொன்னீலன்

தென்குமரி வட்டார வழக்குகள்

பொன்னீலன்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை- 600 098.
☎: 26258410, 26251968, 26359906

Language : Tamil
Thenkumari Vattaara Vazhakkugal
Author : Ponneelan
First Edition : March,2013

No. of pages : xxxiv + 276=310
Typesetting : Renuga DTP
Publisher :

New Century Book House Pvt. Ltd.,

41-B, SIDCO Industrial Estate,
Ambattur, Chennai - 600 098.
Tamilnadu State, India.
Email : info@ncbh.in
Buy online:www.ncbhpublisher.com

ISBN: 978-81-234-2373 -9

Code No. A2737

₹ 220 /-

Branches

Ambattur (H.O.) 044-26359906, 26258410, 26251968
Thiruvanmiyur 044-24404873 **Spenzer Plaza** (Chennai) 28490027
Trichy 0431-2700885 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-2323990
Madurai 0452-2344106, 2350271 **Dindigul** 0451-2432172
Coimbatore 0422-2380554 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726
Ooty 0423-2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800
Pondicherry 0413-2280101 **Thiruvannamalai** 04175-223449

தென்குமரி வட்டார வழக்குகள்
ஆசிரியர் : பொன்னீலன்
முதல் பதிப்பு : மார்ச்,2013

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,
16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14
☎ : 044 - 28482441, 28482973

Declaration

This book is compiled and finalised during the Writers In Residency Scheme Period, April to September 2009, launched by Sahithya Akademy, New Delhi

Ponneelan

சமர்ப்பணம்

எங்கள் மூத்த தோழர்
முதுமையையும் வறுமையையும் பொருட்படுத்தாது
சலியாமல் எங்களுடன் கலைத்தொண்டு ஆற்றிய
பூதை நல்லதம்பி அவர்களுக்கு

பதிப்புரை

இருட்டுக்குள் குறிப்புகள் எழுதி வெளிச்சத்தில் விரிவு செய்து புதிய தரிசனங்கள் தந்தவர் படைப்பாளர் பொன்னீலன் அவர்கள். அவருடை 14 வருட அறிதுயிலில் தோன்றிய சிந்தனைகளை, விளக்கெரியவிட்டு எழுதினால் வீட்டில் தூங்கும் விழிகள் திறந்துவிடுமே என்று எண்ணி நள்ளிரவை நல்லிரவாக்கி, குருட்டாம் போக்கில் குறித்து வைத்து, பெரிதாகப் படைத்துத் தந்து, சாகித்ய அகடமி விருது பெற்றவர். விடாமுயற்சிக்கும் அயராத உழைப்புக்கும் ஒரு நாள் பயனும் பாராட்டும் கிடைக்கும் என்ற நம்பிக்கையை நெஞ்சில் சுமந்தவர். மிகப் பெரிய வாசகர் வட்டத்தை உருவாக்கிக் கொண்டவர். பொன்னீலன் படைப்பு என்றால் அதைக் கருவூலமாக, களஞ்சியமாக நினைக்கும் அறிஞர் வட்டம் மிகவும் பெரியது.

பல நூல்கள் படைத்துப் பயன் செய்த நூலாசிரியரின் **'தென்குமரி வட்டார வழக்குகள்'** என்னும் இந்நூலும் அவருடைய சேகரிப்புக்குக் கிடைத்த சிகரம்தான். சிரமங்களைத் தகர்த்தெறிந்து விட்டு அதைத் தாண்டிச் சென்று சாதனை படைக்கும் போக்கு உடையவர். அவருடைய அம்மாவும் படைப்பாளராக இருப்பதால் அவரது போக்கு உயர்நோக்கு உடையதாகவே அமைந்துவிட்டது. எழுத்துலகில் தனக்கென்று ஒரு இடத்தைத் தக்க வைத்துக்கொண்ட தமிழறிஞர் இராமசுந்தரம் அவர்கள் வரைந்த முன்னுரையில் பொன்னீலன் அவர்கள் சிறந்த படைப்பாளர், திறனாய்வாளர், உரை வீச்சாளர், கலை இலக்கியப் பெருமன்றத்தை இயக்குபவர் என நாற்கோண படிமத்தைப் பளிச்சிடச் செய்கிறார். இருபத்தேழு தலைப்புகள் இந்நூலில் நட்சத்திரங்கள் போல் மின்னுகின்றன.

அடிமையாக நடத்தப்படுபவன் நேரம், காலம் இல்லாமல் அலுக்க அலுக்க உழைக்க வேண்டும் என்பதுதான் மேல்

தட்டு வர்க்கத்தின் எதிர்பார்ப்பாக இருக்கும். 'அடிமை போல் உழைக்கணும்' என்ற பழமொழிவரி உழைப்புக்கு உயர்வு வரும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது. 'அரைப்படி அரிசி அன்னதானம்; விடியும் வரையில் மேளதாளம்' என்ற வரி விளம்பர விழாக்கள், போலித்தனமான பக்தி பூஜைகள் தேவையில்லை என்பதை உணர்த்துகிறது. ஒரு கோவிலில் விழா என்றால் சாமிப் படத்தைச் சிறிதாகவும் அதை நடத்து கின்றவர்களின் படங்கள் பெரிதாகவும் போட்டு கட்அவுட் வைக்கும் போக்கு மிகுந்திருக்கிறது. இவையெல்லாம் அவசிய மற்றவை என்பதை அந்தப் பழமொழி சுட்டிக்காட்டுகின்றது.

வசதி படைத்தவர்கள் பலர் உழைக்காமல் ஊர் சுற்றித் திரிகிறார்கள். சொத்துக்களை விற்று டாஸ்மாக்குக்குக் கொடுத்துவிட்டு மனைவி மக்களைப் பட்டினிப் போடு கிறார்கள். பாட்டில் பாட்டிலாகக் குடித்துப் பழாக்கிய வனுடைய மகள் பாட்டில்கள் கழுவி அதில் கிடைக்கும் குறைந்த சம்பளத்தைக் கொண்டு வயிற்றைக் கழுவி வாழ் கிறார்கள். "ஆயிரம் பனை உள்ள அப்பனுக்குப் பிறந்து பல்லு குத்த ஈக்கு இல்லை" என்ற பழமொழி இந்த வாழ்க் கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

ஆண் - பெண் தாம்பத்திய அன்பு அடிமன ஆழமுடை யதாக இருந்தால் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்றில்லாமல் தடம் புரண்டு போகாது. கணவன் - மனைவி உறவில் காதலும் கண்ணியமும் கட்டிக்காக்கப்பட்டால் தான் கணவன் கண்டவளோடும், மனைவி கண்டவனோடும் தொடர்பு கொண்டு எய்ட்ஸ் போன்ற நோய்களைப் பரவ விடுகிறார்கள். 'கொண்டவன் இருக்க கண்டவனோடு போவானேன்?" என்ற கருத்துள்ள பழமொழி ஆணும் பெண்ணும் கற்பு காத்து வாழ வேண்டும் என்ற உணர்வை ஊட்டுகிறது.

'பூனை சொர்க்கலோகம் போச்சாம் கருவாட்டுத் தலையை கன்னத்துக்க மறைச்சிட்டு' என்னும் பழமொழி போலித்தனமான பூனை ஆன்மிக வாதிகளின் அந்தரங்க வாழ்க்கை அருவருப்பாகவும் வெளிவேசம் வெள்ளையாக இருப்பதையும் உணர்த்திக் காட்டுகிறது.

'தாயைப் போலப் பிள்ளை நூலைப் போல சேலை' என்பார்கள். ஆனால் தந்தையைப் போல பிள்ளை இல்லை, தந்தை கற்ற நூல்கள் வேஸ்ட் பேப்பர் கடையிலே என்பது போல் ஆகிவிட்டது. ஞானம் காத்து, செல்வம் சேர்த்து வைத்த தந்தைக்குப் பிறந்த பிள்ளைகள் தாறுமாறான செலவாளிகளாக வாழும் போக்கு உள்ளது. மது, புகை, பாக்கு இவற்றுக்கு அடிமையாகி அலைகிறார்கள். வாய் எப்போதும் புகை கக்கிக் கொண்டிருக்கிறது. நோய் உள்ளே புகுந்து கொண் டிருக்கிறது. நோய் உள்ளே புகுந்து கொண்டிருக்கிறது. பாக்கெட் பாக்கெட்டாக சிகரெட் இழுப்பதால் தந்தையின் சட்டைப் பாக்கெட் காலியாகி விடுகிறது. "வகை வகையா சேர்த்த செல்வமெல்லாம் என் மக்கள் வாய் புகை புகையாய் போகுதே' என்ற பழமொழிக்கேற்ப தந்தை புலம்பும் நிலை உள்ளது. சுகம் கண்டவர்கள் விலகிப் போகமாட்டார்கள் என்ற ஒரு பழமொழி விளக்கமும் இதற்கு எடுத்துக்காட்டாகிறது.

மனைவிக்குத் துரோகம் செய்துவிட்டு ஆசைநாயகிக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கும் புறம்போக்குப் புருசர்களைக் கண்டிக்கும் பழமொழி, கடமையை மறந்து சடலங்களில் தடுமாறக் கூடாது என்ற பொன்மொழி எச்சரிக்கை போன்றவை. நல்ல படிப்பினை தரக்கூடியவை.

'அஞ்சு வீட்டுக்கு ஒரு முற்றம்' என்ற விடுகதை ஐந்து விரல்களையும் உள்ளங்கையையும் குறிக்கிறது. அதே நேரத்தில் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களெல்லாம் ஒரே முற்றத்தில் ஒற்றுமையாகப் பழக வேண்டும் என்ற உள்அர்த்தமும் உரைத்துக் காட்டப்படுகிறது. 'அஞ்சு பேருக்கு ஒரு தட்டு' என்ற விடுகதைக்கு 'கை' என்று விடை சொல்லிவிடலாம். அண்ணன் - தம்பிகள் ஐந்து பேர் இருந்தால் ஒரே தட்டில் சாப்பிட்டுக் கூட்டுக் குடும்பமாக வாழலாம் என்ற அறிவுரையாகவும் எடுத்துக் கொள்ளலாம் எடுத்துச் சொல்லலாம்.

சோம்பேறிக் கணவனுக்கும் பெருந்தீனி மனைவிக்கும் இடையே உள்ள முரண்பாட்டை நூலாசிரியரின் அம்மா அழிய நாயகி அம்மாள் அவர்கள் தொகுத்துத் தந்துள்ள பாடலாக இடம்பெறுகிறது. கணவன் சோம்பேறியாக இருக்கக்

கூடாது. மனைவி பெருந்தீனி தின்னுகிறவளாக இருக்கக் கூடாது. என்ற இல்லற ஞானம் வெளிப்படுத்தப்படுகிறது. பழங்காலத்தில் மாப்பிள்ளை வீட்டார்தான் பெண்ணை மணந்து கொள்ளப் பணம் கொடுக்க வேண்டும் என்ற நடை முறை இருந்தது. இன்றைய வரதட்சணை முறை அன்னு இல்லை என்பதைச் சொல்லி வரதட்சணைக் கொடுமை மாற்றப்பட வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது.

நாடு செழிப்பாக இருக்க கோவில்களில் பேய்களைத் தலையிடவிடக்கூடாது என்றும், நீதியில்லாமல் கோவில் கும்பிடுகள் தேவையில்லை என்பதும் மறைமுகமாகக் குறிப்பிடப் படுகிறது. பறவையின் கண்ணீர், நாயின் துயரம் நெஞ்சை ஈரப்படுத்துகிறது. நண்டுக்கும் ஓணானுக்கும் உள்ள நட்பு மனித இனத்துக்கு எச்சரிக்கையாகிறது. மருத்துவம் வியாபார மாகிவிடக்கூடாது என்று நெறிப்படுத்தப்படுகிறது. நடவு நட்ட கூலியைக் கும்பிட்டுக் கேட்கும் நிலைமையும் முதலாளியின் கொடுமையும் விளக்கப்படுகிறது. உழைப்புக்கேற்ற கூலி உடனே கொடுக்கப்பட வேண்டும் என்ற அறவுரை பொதியப் பட்டுள்ளது. வேர்வை காயுமுன் கூலி கொடுத்துவிட வேண்டும் என்ற நீதி போதிக்கப்படுகிறது.

நூலாசிரியர் ஊரான மணிகட்டிப் பொட்டலில் 1845ல், அதாவது 167 ஆண்டுகளுக்கு முன் வைகுண்டசாமியின் ஏற்பாட்டில் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டதாக வரலாற்றைப் பதிவு செய்கிறார். சடங்குப் பாடல்கள், கதைப் பாடல்கள், கேலிப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், சிறுவர் பாடல்கள், உள்ளிட்ட 27 தலைப்புகளில் வகைப்படுத்தி பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒரு நூலைப் படிப்பதற்கு எடுத்தால் விளக்கைக் கண்ட இருள் போல் உள்ளத்தின் இருள் அகன்று மனம் ஒளி பெற வேண்டும். இந்நூலில் உள் வரிகள் உள்ளத்தில் ஒளியேற்றத் தக்கவை. பயனுள்ள இந்நூலை எமது நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டு ஆதரவை வேண்டுகிறது.

-பதிப்பகத்தார்

என்னுரை

கல்லூரிக் காலத்திலிருந்தே நாட்குறிப்பு எழுதும் வழக்கம் எனக்கு இருந்தது. என்னைக் கவரும் பழமொழி களையும், விடுகதைகளையும், பாடல்களையும் நேரம் கிடைக்கும்போது குறித்து வைப்பேன். அவற்றைத் தொகுத்து வெளியிடவேண்டுமென்ற எண்ணம் வெகுநாள் வரை எனக்கு ஏற்படவில்லை. கால ஓட்டத்தில் பல நாட்குறிப்புகள் கரையானுக்கு இரையாயின. இடமாற்றங்களின்போது சில காணாமல் போயின. கவனக்குறைவாக நான் தவறவிட்டவை களும் உண்டு.

பேராசிரியர் நா. வானமாமலை அவர்களுடன் 1969ல் ஏற்பட்ட தொடர்பின் பின்தான், இந்த நாட்டுப்புற இலக்கியச் செல்வங்களின் சமூக மதிப்பு எனக்குப் புரியத் தொடங்கிற்று. நான் ஆரல்வாய்மொழி உயர்நிலைப் பள்ளியில் பணிபுரிந்த காலத்தில், கங்கா, இசக்கிமுத்து, பகவதி, சங்கர் முதலிய வர்களின் முயற்சியால், குமரி மாவட்டக் கலை இலக்கியப் பெருமன்றத்தில் ஆரல்வாய்மொழி இளரத்தம் பாய்ந்து செழிப்படையத் தொடங்கிற்று. செந்தி, சொக்க லிங்கம், பெருமாள், கங்கா, நான் எல்லோரும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அழகியநகர் போவோம். நிலவொளியில், தெருவில் எங்களுடன் உட்கார்ந்து அருமைச் சகோதரிகள் நகோமி, சொர்ணம், காளி இன்னும் சிலர் பாடுவார்கள். அப்பேர்ப்பட்ட இனிய குரலை நான் என் வாழ்நாளில் வேறெங்கும் கேட்டதில்லை. பாடல்களை ஒலி நாடாவில் பதிவு செய்து, வீட்டுக்குத் திரும்பி, இரவு முழுவதும் கேட்டுக் கேட்டு இன்புறுவோம். மறக்க முடியாத இனிய நாட்கள் அவை.

ஆனால் கவனக் குறைவால், பல பாடல்கள் அழிந்து போயின. ஒருசிலவற்றைக் குமரி மாவட்டக் கலை இலக்கியப்

பெருமன்றம் நடத்திய "புதிய வானம்" இலக்கிய இதழில் வெளியிட்டோம். அவை இங்கே இடம்பெற்றுள்ளன. காருபாறை தா. முருகன் சேகரித்த பாடல்கள் சிலவும் புதிய வானத்தில் இடம்பெற்றுள்ளன. அவையும் இங்கே சேகரமாகியுள்ளன.

1983-1987 காலத்தில் நான் வேலை பார்த்த அத்தாணியும் நாட்டுப்புறப் பாடல்களின் பெருஞ்சுரங்கம். நாற்று நடும் போது, களை எடுக்கும்போது மட்டுமல்ல, நாட்டுப்புற தெய்வங்களுக்கு விழா எடுக்கும்போதும், இழவு வீடுகளிலும்..... எங்கும் பொங்குவது இந்த மண்ணின் பாடல்களே. முழுநிலா நாட்களில், தெருமுனைகளில் பாட்டுத் திறனுள்ளவர்கள் கூடிவிட்டால், இரவு முழுதும் கொண்டாட்டம்தான். எனக்கு நாட்டுப்பாடல்களில் இருந்த ஈடுபாட்டை அறிந்ததும், அந்தச் சகோதரிகள் பாட்டு பொங்கும் இடங்களுக்கெல்லாம் என்னை அழைப்பார்கள். என் எதிர்வீட்டுத் தம்பி லட்சுமணன் அல்லது ராஜா அல்லது ஆரல்பிரபுவுடன் ஒலிநாடாவைத் தூக்கிகொண்டு ஓடுவேன்.

அத்தாணியில் லட்சுமி, பொட்டு, சிட்டு ஆகிய சகோதரிகளும், ஜெயந்தி, குணவதி முதலிய அன்றைய சிறுமிகளும் அபூர்வமான பாடகர்கள். இவர்களின் பாடல்களை ஏராளம் சேகரித்திருந்தேன். ந. பிரபாகரன் என்னும் தம்பியும், சில சேகரித்துத் தந்தார். அவற்றிலும் கவனக்குறைவால் அருமையான பாடல்கள் பல அழிந்து போயின. எஞ்சிய சில இங்கே உள்ளன.

இவ்வாறு நான் சேகரித்தவைகளைத் தொகுத்து வெளியிட வேண்டுமென்ற எண்ணம் நான் அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு எனக்குள் வளர்ந்தது. அத்தாணிக் கதைகள், பொட்டல் கதைகள், அத்தாணி மக்கள் ஆகிய என் நூல்களின் தொடர்ச்சியாக, இப்போது இந்தத் தொகுப்பு உருவாகியுள்ளது.

என் சேகரிப்புகளை ஐந்து பாகமாகத் தொகுத்திருக் கிறேன். பழமொழிகள் முதல் பாகம். பெரும்பான்மையும் அவை பொட்டல் வட்டாரத்தில் நான் சேகரித்த

பழமொழிகளே. நான் வேலை பார்த்த சில இடங்களில் சேகரித்த ஒருசில பழமொழிகளும், என் அம்மாவின் கவலை நூலிலிருந்து பொறுக்கி எடுத்த சில பழமொழிகளும் இதில் கலந்துள்ளன. என் ஊரைச் சார்ந்த செ. சா. பவிதா, பத்மா, ஜெயமதி, ஜெகதா, புத்தன்துறை ராகேஷ் ஆகியோர் சேகரித்துத் தந்த சிலவும் உள்ளன.

அடுத்த பகுதி பொட்டல் வட்டார விடுகதைகள். இவ்வட்டாரத்தின் தொழில், சுற்றுச்சூழல், பண்பாடு இவற்றின் பிரதிபலிப்புகளாக இவை இருக்கக் காணலாம். பல விடுகதைகள் ஓசைநயம் மிக்கவை. நாட்டுப்பாடல்கள் போல் எதுகை மோனை அழகோடு அமைந்தவையும் உண்டு.

விடுகதைகளை இப்பகுதிகளில் அழிப்பாங்கதை என்பார்கள். அழிப்பாங்கதையைப் போட்டு, பேரன் பேத்தி களிடம் அழிக்கச் சொல்லி விளையாடுவது அக்கால முதியவர்களின் பொழுதுபோக்கு.

மூன்றாம் பகுதி நாட்டுப்புறப்பாடல்கள். நான் சேகரித்த பாடல்களோடு, என் அம்மா சேகரித்த பாடல்கள், என் துணைவியாரின் தமக்கையார் பள்ளம் புஷ்பநாயகி சொன்ன பாடல்கள், அனந்தை தமிழி, பொட்டல் புஷ்பலதா ஆகியோர் தந்த பாடல்கள் ஆகியவையும் உள்ளன. நாட்டார் பாடல்கள் படிப்படியாக அழிந்துவரும் இன்றைய சூழலில், பல பாடல்களின் பகுதிகளையே சேகரிக்க முடிந்தது. இவற்றோடு, ஆரல் அழகியநகர் பாடல்கள் சிலவும், காருபாறை பாடல்கள் சிலவும் உள்ளன.

அத்தாணிப் பாடல்கள் அவற்றின் அழகும் ஆழமும் கருதித் தனியாகத் தரப்பட்டிருக்கின்றன.

மக்களும் மரபுகளும் என்பது நான்காவது பகுதி. இந்த வட்டாரத்துக் காலவரம்புகள், மரங்கள், பயிர்கள், மனிதர் களின் நகைகள், உணவுவகைகள், தொழில்கள் ஆகியவை பற்றிய செய்திகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

வட்டாரமொழியின் தனித்தன்மை பற்றிய சில குறிப்புகள் ஐந்தாவதாக இணைக்கப்பட்டுள்ளன. சில சிறப்பான வட்டாரச்

சொற்களும், அவற்றின் விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. இவ்வட்டாரப் பேச்சுவழக்கைப் புரிந்துகொள்ளத் தேவைப் படும் சில இலக்கணக் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன.

நாட்டார் வழக்காற்றியலாளனல்ல நான். நாட்டார் வழக்காற்றியல் தொகுப்புமுறைகளோ, ஆய்வுமுறைகளோ எனக்குத் தெரியாது. சுவை அடிப்படையிலேயே பாமரத் தனமாக இவற்றைச் சேகரித்தேன். இங்கே ஒழுங்குபடுத்தியும் இருக்கிறேன்.

இத்தொகுப்பை உருவாக்க எனக்கு உதவியவர்கள் பலர். நாட்குறிப்புகளில் சிதறிக்கிடந்த பழமொழிகளையும், விடுகதைகளையும் இதர குறிப்புகளையும் வரிசைப்படுத்தித் தொகுத்ததில் என் உறவினர்களான ஜெயமதி, ஜெகதா, சிவசக்தி, சுகாசினி ஆகியோரின் பங்கு முக்கியமானது. மொத்தத்தையும் படித்துச் செழுமைப்படுத்தியுள்ளார் அருமைத் தம்பி பெ. சுணபதி சுப்ரமணியன். நாடறிந்த தமிழ் அறிஞரும், நாட்டாரியல் ஆய்வாளரும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியருமான இராம. சுந்தரம் அவர்கள் அருமையான முன்னுரை தந்திருக்கிறார்.

இந்தத் தொகுப்பு புதுடில்லி சாகித்ய அகாதமியின் “Writers in Residency Scheme” திட்டத்தின் கீழ் 2009 ஏப்ரல் - செப்டம்பர் காலத்தில் முழுமைப்படுத்தப்பட்டது. மத்திய சாகித்ய அகாதமியின் தலைவர், செயலாளர், இதர அலுவலர் களும், தமிழ் அமைப்பாளர் மற்றும் உறுப்பினர்களும் கவிஞர் சிற்பியும் இந்த வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்தார்கள்.

தமிழகத்தின் மார்க்சிய ஞானரதமான நியூசெஞ்சுரி புத்தக நிறுவனம் எப்போதும்போல இந்த நூலையும் சிறப்பாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறது.

எல்லோருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

15/33, மணிகட்டிப் பொட்டல்
கன்னியாகுமரி 629501

அன்புடன்
பொன்னீலன்

முன்னுரை

தமிழ்மொழி வழக்கு / பயன்பாடு செய்யுள் வழக்கு, உலக வழக்கு என இருவகைப்பட்டது என்பார் தொல்காப்பியர். இவற்றை எழுத்துமொழி, பேச்சுமொழி என இன்று நாம் வழங்குகிறோம். உலகமொழிகள் அனைத்துக்கும் இது பொருந்தும் என்றாலும், எல்லா மொழிகளிலும் இவ்விரு வகை வழக்குகள் நடைமுறையில் இல்லை. பல மொழிகள் பேச்சுவழக்கில் மட்டுமே உள்ளன. ஒருசில மொழிகள் பேச்சு வழக்கொழிந்து எழுத்துவழக்கில் மட்டும் உள்ளன. தமிழ் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்து இன்றுவரை இவ்விருவகை வழக்கிலும் இருந்து வருவது அதன் பழமைக்கும் புதுமைக்கும் எடுத்துக்காட்டாகிறது. இரண்டாயிரம் ஆண்டு களுக்கும் மேலாகத் தமிழ் உயிர்த் துடிப்புடன் இயங்கக் காரணம் பேச்சுவழக்கை உள்ளடக்கிய வட்டார வழக்குகள் தான். இந்த வட்டார வழக்குகள் காலப்போக்கில் எழுத்து வழக்கிலும் இடம்பெற்று 'அழியா வரம்' பெற்று வாழ்கின்றன.

தொல்காப்பியரே இந்த இரு வழக்குகளையும் தக்க சான்றுகளுடன் பதிவு செய்யத் தவறவில்லை. 'ஒருவன் வந்தான்' என்பது எழுத்துவழக்கு (இலக்கண வழக்கு) என்றால், 'ஒருவர் வந்தார்' என்பது பேச்சுவழக்கு ஆகிறது. ஒரு குறிப்பிட்ட மனிதரை உயர்த்திச் சொல்ல விரும்பும் போது, இந்தச் சிறப்புவழக்கு பேச்சுமொழியில் இடம் பெறுகிறது. 'அமைச்சன் வந்தான்' என்பது 'அமைச்சர் வந்தார்', 'அமைச்சர் அவர்கள் வந்தார்கள்' என இன்று பேச்சு, எழுத்து என்ற இரு வழக்குகளில் இடம்பெறக் காண்கிறோம். குறிப்பிட்ட வட்டாரத்திலுள்ள மக்களின் சமூகநிலை கருதிப் பயன்படுத்தப்பட்ட இவ்வகையான வழக்குகள் பேச்சுவழக்கில் மட்டும் இல்லாது எழுத்து வழக்கிலும் தங்களைப் பதிவு செய்து கொண்டன. சங்க

இலக்கியத்திலேயே இதனைக் காணமுடிகிறது. காரணம், சங்கப் புலவர்களுள் பலர் 'ஊர் சுற்றிகள்'. தாங்கள் சென்ற இடங்களில் சந்தித்த மக்களிடமிருந்து பெற்ற சொற்களைத் தங்கள் பாடல்களில் பதிவு செய்தனர். இது இன்றைய படைப்பாளிகளிடமிருந்தும் தப்பவில்லை. கதைமாந்தர்களின் வாழிடம், சமூகம் சார்ந்து இவ்வகை வழக்குகள் அவர்களது படைப்புகளில் இடம்பெறுகின்றன. அவற்றின் மூலம் அந்தப் படைப்புகளின் இயல்பைப் புரிந்துகொள்ள முடியும்.

இவ்வகை வட்டார வழக்குகளைப் படைப்பிலக்கியங்களில் பதிவு செய்வது ஒருபுறமிருக்க, மற்றொருபுறம் இவற்றையெல்லாம் தொகுத்து அகராதிகளாக, களஞ்சியங்களாகத் தரும் முயற்சியும் தமிழகத்தில் செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும். இவற்றைக் கொண்டு சில சொற்களின், மரபுத்தொடர்களின் வட்டாரத் தனித்தன்மையையும், பொதுத்தன்மையையும் அறிந்துகொள்ள முடிகிறது. 'கொத்சு' (கத்தரிக்காயைக் கொண்டு தயாரிக்கப்படும் கறிவகை) நாஞ்சில் நாட்டுவழக்கு என அ. கா. பெருமாள் (**நாஞ்சில் வட்டார வழக்குகள் அகராதி**) கூறுவார். இது சிதம்பரம் பகுதியில் 'கொஸ்து' எனச் சொல்லப்படும். செட்டிநாட்டுப் பகுதியில் 'கோசுமல்லி' என்பார்கள். இவற்றுள் கொத்சு / கொஸ்து இன்று பரவலாக அறியப்பட்ட சொல்லாகவும், 'கோசுமல்லி' குறிப்பிட்ட வட்டாரம் சார்ந்த சொல்லாகவும் வழங்கக் காண்கிறோம். 'தாலி கட்டுதல்' என்பது பொது வழக்கு என்றால், 'திருப்பூட்டுதல்' என்பது இதே பொருளில் செட்டிநாட்டில் வழங்கப்படுகிறது. 'கால்கட்டு' என்பது திருமணத்தைக் குறிப்பதாகப் பெருமாள் கூறுவார். இது இன்று பொதுவழக்காக மாறியுள்ளது. ஒரு வட்டார வழக்கு மற்றொரு வட்டாரத்திற்குச் செல்வதற்கும், அது காலப் போக்கில் பொதுத்தன்மை அடைவதற்கும் காரணம் மக்களுக்கிடையேயான தொடர்பும் ஊடகங்களின் தாக்கமும்தான்.

மேலே உள்ள சில கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளத் தூண்டுகோலாக அமைந்தது பொன்னீலனின் **தென்குமரி வட்டார வழக்குகள்** என்ற இந்த நூல்தான். பொன்னீலனின் நெடுநாளைய கனவு இன்று நனவாகியுள்ளது.

அவரது கனவு நனவாகப் பலரும் உதவியுள்ளனர். அதன் விளைவாக, தென்குமரி வட்டாரத்தில் வழக்கிலுள்ள பழமொழிகள், விடுகதைகள், பாடல்கள், கதைகள், விளை யாட்டுகள் முதலியவற்றை வகைப்படுத்தித் தந்திருப்பதோடு, பல வட்டாரச் சிறப்புச் சொற்களையும் வரிசைப்படுத்தி யுள்ளார். இவற்றுக்கு அணிசேர்க்கும் வகையில், மக்களின் அணிகலன்கள், வட்டாரம் சார்ந்த நிலம், பயிர், கல்வி, அளவைகள் முதலியவற்றையும் தொகுத்துள்ளார். இவற்றை யெல்லாம் ஒருசேரப் பார்க்கும்போது தென்குமரி வட்டார மக்களின் வாழ்க்கைமுறையைப் புரிந்துகொள்ள முடிகிறது. இந்தப் புரிதிறன் பிற வட்டார மக்களின் வாழ்வியலோடு இவற்றை ஓரளவு ஒப்பிட்டுக் காணவும் உதவுகிறது.

இந்நூலில் தரப்பட்டுள்ள பழமொழிகள், விடுகதைகள், பாடல்கள் முதலியன வாய்மொழி மரபு சார்ந்தவை. எழுதப்படா இலக்கியமாக இவை இயங்கி வந்தன. எனவே, இவற்றை வாய்மொழி இலக்கியம் என முன்பு அழைத்தனர். இந்த இலக்கியம் சார்ந்த ஆய்வு தொடங்கியதும் இதை நாட்டுப்புறவியல் என்றனர். இது இன்று நாட்டார் வழக்காற்றியல் எனத் தரப்படுத்தப்பட்டுள்ளது. Folk lore என்பதற்கு நிகராக இக்கலைச்சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றுள் இடம்பெறும் சொற்கள் வட்டாரக் கிளைமொழி (Regional Dialects) சார்ந்தவையாகும். இவை தனி ஆய்வுக்குரியவை.

மக்களின் இயல்பு வாழ்க்கை, கற்பனைக்கும், புனைவுக்கும் மிகுந்த இடந்தராது. கூடுமானவரை உள்ளது உள்ளபடியே சொல்லும் இலக்கியக்கூறுகளாக இவை உள்ளன. தமிழ் மக்களின் வாழ்வியலை அறிந்துகொள்ளும் வரலாற்றுச் சான்றுகளாகவும் இவை திகழ்கின்றன. ஆங்கிலேயர் ஆட்சியின் கெடுபிடியை விரும்பாத மக்கள் தங்கள் எதிர்ப்பை ஒரு பாடலின் மூலம் வெளிப்படுத்தினர்:

'ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்டானாம் வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டா விக்கச்சொல்லி
காகிதம் போட்டானாம் வெள்ளக்காரன்'

என்பது அந்தப் பாட்டு. இந்தப் பாட்டை யார் முதலில் பாடியது, அது எவ்வாறு பரவியது என்பதெல்லாம் விளங்காப் புதிர். நாட்டார் வழக்காற்றின் சிறப்புத்தன்மை இதுதான். வாய்மொழி இலக்கியமாதலின் எந்த வாய் முதலில் இதைப் பாடியது என்பது இன்னும் கண்டு பிடிக்கப்பட முடியாத ஒன்று. சர்வாதிகார ஆட்சி நடக்கும் நாடுகளில் மக்கள் தங்கள் எதிர்ப்பை இவ்வகைப் பாடல்கள், பழமொழிகள், நகைச்சுவைத் துணுக்குகள் போன்றவை மூலம் வெளிப்படுத்துவர். இது உலகெங்கும் காணப்படும் ஒன்று. இங்கு ஒன்றைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

1970களில் நான் போலந்தில் இருந்த காலத்தில், போலந்து மக்கள் ரஷ்யக் கெடுபிடியை விரும்பவில்லை. அதை எப்படி வெளிப்படுத்துவது? ஊடகங்கள் மூலமோ, அரசியல் மேடைகள் மூலமோ செய்தால் தண்டனை கிடைக்கும். அதிலிருந்து தப்பிக்கவும் வேண்டும், தங்கள் எதிர்க்குரலை வெளிப்படுத்தவும் வேண்டும். அதற்கு இந்த நாட்டார் வழக்கொன்றைப் பயன்படுத்தினர். ரஷ்ய அதிபர் போலந்துக்கு வந்துவிட்டுத் திரும்புகிறார். அவரை வழியனுப்பப் போலந்து தலைமை அமைச்சரும் பிறரும் வந்திருக்கின்றனர். ரஷ்ய அதிபர் வானூர்தியில் ஏறும்போது, போலந்து அமைச்சர்கள் டாடா காட்டுவதுபோலக் கையசைக்கின்றனர். அதைப் பார்த்த ரஷ்ய அதிபர் இரண்டு உள்ளங்கைகளையும் கெட்டியாகப் பிடித்துக் காட்டி விடைபெறுகிறார். இதன் பொருள் என்ன என்றால், போலந்துக்காரர்கள் "நீ எடுத்துச் செல்ல உனக்கு ஒரு பொருளும் தரமாட்டோம்" என்று கையசைத்துக் காட்டுகின்றனராம். "நீ தராவிட்டால் உன்னை நசுக்கிவிடுவேன்" எனக் கையைக் கெட்டியாகப் பிடித்து ரஷ்ய அதிபர் கூறினாராம். இது ஒருவகை சைகைமொழி என்றாலும், இதிலுள்ள கருத்து போலந்து மக்களின் மனக் குமுறலின் வெளிப்பாடாக உள்ளது என்பது தெளிவு.

மக்களின் மண்சார்ந்த வாழ்க்கைமுறையை எடுத்துரைப்பதில் பழமொழிகள் சிறப்பிடம் பெறுகின்றன. "பழமொழிகளைப் போல் மனிதவாழ்வை வெளிச்சமிட்டுக் காட்டுவன வேறு எவையுமில்லை" என்றும், "குறிப்பிட்ட

பகுதி சார்ந்தவை என்றாலும் பல பழமொழிகள் உலகு தழுவியதாக உள்ளன. ஏனெனில் மனிதவாழ்க்கை உலகெங்கும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகவே உள்ளது" என்றும் ஹெர்மன் ஜென்சென் (Herman Jensen) என்ற அறிஞர் தமது வகைப்படுத்தப்பட்டுள்ள தமிழ்ப் பழமொழிகளின் தொகுப்பு (A Classified Collection of Tamil Proverbs, 1897) என்ற நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார். இந்நூலில் 3644 பழமொழிகள் பொருண்மைவாரியாக வகைப்படுத்தப்பட்டு ஆங்கில மொழி பெயர்ப்புடனும் சிறுசிறு குறிப்புரைகளோடும் தரப்பட்டுள்ளன. இந்த நூலுக்கு முன்பே, தமிழ்ப் பழமொழிகளின் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் சில ஆங்கில மொழிபெயர்ப்பு களையும் கொண்டிருந்தன. இவரது முன்னுரை மூலம் அதை அறியமுடிகிறது.

பழமொழிகளின் இந்தச் சிறப்பு கருதித்தான் தொல்காப்பியரே இதற்கு இலக்கணம் கூறியுள்ளார். பழமொழியைத் தொல்காப்பியர் முதுமொழியென்பார். (இன்றும்கூட முதுசொல், பழஞ்சொல், மூதுரை, சொலவடை, ஒவகதை சொலவந்தரம் எனத் தமிழகத்தின் பல பகுதிகளில் இது வழங்கப்படுகிறது). தான் சொல்ல வந்த கருத்தை நுட்பமாகவும், சுருக்கமாகவும், தெளிவாகவும், மென்மை யாகவும் கூறி, கூறியதன் நோக்கத்தை முதுமொழி நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பார் தொல்காப்பியர் (தொல். மரபியல் 175) முதுமொழி என்பது பழமொழி எனச் சங்க இலக்கியத்தில் இடம் பெறலாயிற்று (அகநானூறு 101). 'இந்தப் பிறப்பில் நல்லது செய்தவருக்குத் தீமை வராது என்று தொன்றுதொட்டு வழங்கும் பழமொழி இன்று பொய்யாகிவிட்டதோ?' எனத் தலைவி தோழியிடம் கூறிக் கவலைப்படுவதாக இந்தப் பாடல் கூறுகிறது. முதுமொழி, தொன்றுபடு பழமொழி என்ற சொல்லாட்சிகள் பழமொழியின் சிறப்பை எடுத்துக்காட்டும்.

நூலாசிரியர் பொன்னீலன் 896 பழமொழிகளை அகர வரிசையில் தந்துள்ளார். சிலவற்றுக்கான விளக்கங்களும் இடம்பெறுகின்றன. பல பழமொழிகள் தென்குமரி வட்டாரம்

சார்ந்தவை. சில பழமொழிகள் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் புழக்கத்தில் உள்ளவை. சான்றாகச் சில.

'ஆயிரம் பனை உள்ள அப்பனுக்குப் பிறந்து
பல்லு குத்த ஈக்கு இல்லை' (138).

'இவர் துயரம்
ஒருபனை ஓலையில்
எழுதினாலும் தீராது' (188).

'ஓரப்பம் தின்னாலும் நெய்யப்பம் திங்கணும்
ஓர் அடி குடுத்தாலும் செவளையில குடுக்கணும்' (341).

இவை குமரி வட்டாரம் சார்ந்தவையாக உள்ளன. பிறபகுதிகளிலும் உள்ளவை:

'அய்யர் வரும்வரை அமாவாசை காத்திருக்குமா?' (61).

'அழுதபிள்ளை பால் குடிக்கும்' (98).

'ஆறின கஞ்சி பழங்கஞ்சி' (152).

சில பாடவேறுபாடுகள்:

'காத்திருந்தவன் காத்திருந்தான், நேற்று வந்தவன் கொண்டு போனான்',

'காத்திருந்தவன் பொண்டாட்டிய நேற்று வந்தவன் கொண்டு போனான்' (417, 418).

'அவசரக்காரனுக்கு புத்தி மட்டு',

'ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு' (85, 130).

ஜென்சன் தொகுப்பிலும் இந்தப் பாட வேறுபாடு இடம்பெறுகிறது. செட்டிநாட்டுப் பகுதியில் இரண்டாவது பழமொழி பரவலாக உள்ளது.

'ஆடிமாசக் காத்து அம்மியை உருட்டும்' (119).

இது 'ஆடிக்காத்தில் அம்மியும் பறக்கும்' எனப் பிறபகுதிகளில் வழங்கப்படுகிறது.

'ஆயிரம் வேரைக் கண்டவன் அரை வைத்தியன்' (139)

'ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்'. இது பொதுவழக்கு. ஜென்சன் நூலில் இது இடம்பெறுகிறது. முதலாவதாக உள்ளது குமரி வட்டாரம் சார்ந்ததாக இருக்கலாம்.

'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' (360). இதற்குக் 'கடுகுபோல ஒன்று சிறிதாக இருந்தாலும் அதன் குணம் மாறாது' என்று பொருள் சொல்வதுண்டு. ஆசிரியர் தரும் பொருள்: 'காதலுக்குத் திருமணம் செய்தது (இழிவாகச் சொல்வது)': இது மறு சிந்தனைக்குரியது.

ஆசிரியர் சிலவற்றுக்குத் தரும் விளக்கம் வட்டாரம் சார்ந்த சமூகச் சூழலை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. 'அப்படி இப்படி வந்தவளுக்கு அஞ்சு தூலம் வீடு, ஓடக் குழியிலே இருக்கிறவளுக்கு ஒரு தூலம் வீடு' (51). இந்தப் பழமொழிக்கான விளக்கம்: 'வைப்பாட்டியாக வந்தவளுக்குச் சலுகை அதிகம், பெண்டாட்டிக்குச் சலுகை குறைவு'. தென்குமரி வட்டாரத்தில் வாழும் பல சமூக மக்களின் வாழ்க்கைச் சூழலை அறிந்துகொள்ளப் பழமொழிகளும் விளக்கங்களும் உதவுகின்றன எனலாம். நமது பழமொழி களில் ஆங்கில நுழைவும் இருப்பதை 'சாமியே சைக்கிள்ல போகச்சில பூசாரி புல்லட்டு கேட்டாராம்' (529) என்ற பழமொழி காட்டுகிறது.

'விடுகதைகள்' பகுதியில் 88 விடுகதைகளும் அதற்கான விடைகளும் தரப்பட்டுள்ளன. பழமொழியைப் போலவே விடுகதையும் பண்டு தொட்டுத் தமிழகத்தில் வழக்கிலிருந்து வருவதைத் தொல்காப்பியம் 'நொடியோடு புணர்ந்த பிசி' என்று கூறும். பிசி, நொடி, புதிர், வெடி, அழிப்பாங்கதை எனப் பல பெயர்களால் வட்டாரம் சார்ந்து இது அழைக்கப்படுகிறது. விடுகதையைப் புரிந்து அதற்கான விடை சொல்வது சிறிது கடினம்தான். அதற்கான திறன் வேண்டும்.

விடுகதையைக் கேட்பவருடைய அறிவுத்திறனை அளந்தறியும் ஒரு அளவுகோலாகவும் இது செயல்படுகிறது. சில விடுகதைகள் எளிமையாக உள்ளன, சில திக்குமுக்காட வைக்கின்றன.

'ஆயிரம் தச்சன் கட்டிய அழகு மண்டபம், ஒருத்தன் கண்பட்டே உடஞ்சுபோச்சு' (14) - இதற்கு விடை 'தேன்'. இது பரவலாக விடுக்கப்படும் விடுகதை. 'ஊருக்கெல்லாம் ஒரே தீவட்டி' (22) - 'நிலா' என்பது விடை, எளிமையானது. 'ஞாயிற்றுக்கிழமை வராத பால் என்ன பால்?' - தபால். இது புதியது, சிந்திக்கவைப்பது. இப்படிச் சில விடுகதைகள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. காலத்துக்கேற்ற விடுகதைகளும் சொல்லப்படுகின்றன. (பார்க்க. தினமணி - சிறுவர் மணி).

'பாடல்கள்' பிரிவில் கடவுள் வணக்கப்பாடல்கள் முதலில் தரப்பட்டு, அவற்றுக்கான சிறு விளக்கமும் கொடுக்கப் பட்டுள்ளன. இப்பாடல்களை அடுத்துத் தாலாட்டுப் பாடல்கள் 8 தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றிரண்டு சிற்சில வேறுபாடுகளுடன் செட்டிநாட்டுப் பகுதியில் வழங்கக் காணலாம். 'பெண் தாலாட்டு' என்ற தாலாட்டுப் பாட்டின் முதல் வரிகள் சிறிது மாற்றத்துடன் பாடப் படுகிறது. 'வள்ளி அழக்குக்கோ, வலது கை தேமலுக்கோ, கூந்தல் அழக்குக்கோ, வேலவர் குறவேசம் கொண்டாரோ' என்பது 'வள்ளி அழகுக்கோ, வலது கை தோமலுக்கோ, கூந்தல் அழகுக்கோ சுப்பையா குறவேசம் ஆனாரோ' எனச் சிறு மாற்றத்துடன் செட்டிநாட்டில் தாலாட்டப்படுகிறது. இதே பாடலில் உள்ள 'சீரங்கம் ஆடி, நான் சிவனிடத்தில் வாதாடி' என்பது 'சீரங்கம் ஆடி, திருப்பாற்கடலாடி' என மாற்றம் பெறுகிறது. பல வட்டாரங்களிலும் வழங்கும் தாலாட்டுப் பாடல்களில் மலர்கள், தெய்வங்கள், சடங்குகள், புராண இதிகாசக் கதைகள், தாய்மாமன் தருகிற பரிசுகள் எனப்பலவும் இடம்பெறக் காணும்போது தாலாட்டுப் பாடல்களின் அமைப்பு பற்றிய ஒரு பொதுப்பார்வை கிடைக்கிறது. மொழிநடையும் கிட்டத்தட்ட ஒன்றுபோல் இருப்பதையும் கவனிக்க முடிகிறது. இந்த அமைப்பும் மொழிநடையும் தமிழகத்தையும் தாண்டி ஈழத்திலும்

இருப்பதைக் காணமுடிகிறது. குழந்தை ஏன் அழுகிறது? யார் அடித்தார்? எது கொண்டு அடித்தார்கள்? என்றெல்லாம் கேட்டுவிட்டு 'அடித்தாரைச் சொல்லி அழு, ஆக்கினைகள் செய்து வைப்போம்' எனச் சொல்லிக் குழந்தையைச் சமாதானப் படுத்தி, அந்த ஆக்கினைகளைப் பட்டியலிடுவதுண்டு. அது இவ்வாறு அமைகிறது.

'தொட்டாரைச் சொல்லி அழு, தோள் விலங்கு போட்டு வைப்போம்,

வெண்ணெயால் விலங்கு பண்ணி வெய்யிலிலே போட்டு வைப்போம்,

மண்ணால் விலங்கு பண்ணி தண்ணீரில் போட்டு வைப்போம்'

இதிலுள்ள 'இன்பமான தண்டனைகளை'க் கேட்ட வண்ணம் கனவுலகில் குழந்தை மிதந்துவிடுகிறது. தாலாட்டுப் பாடிய தாயின் முரண்தொடையும் சுவையாக உள்ளது. இதே இனிய தண்டனை வரிகள் ஈழத்துத் தாலாட்டுப் பாடல் ஒன்றிலும் அப்படியே இடம்பெற்றுள்ளதைக் காணும்போது 'தொப்புள்கொடி உறவை' உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது.

கேலியும் கிண்டலும் கலந்த சிறுவர் பாடல்களைப் படிக்கும்போது, நமக்கும் இளமை திரும்புகிறது.

சடுகுடு, பசுவும் புலியும், குப்பத் தோண்டி எனச் சில விளையாட்டுகள் பற்றியும் அவற்றுக்கான பாடல்கள், விளையாடும் முறை பற்றியும் குறிப்பிடுகிறார். சடுகுடு பொதுவான ஒன்று. குப்பத்தோண்டி குறிப்பிட்ட வட்டாரம் சார்ந்தது எனத் தெரிகிறது. ஊஞ்சல்பாட்டு, எதிர்ப்பாட்டு, சடங்குப்பாட்டு என்பனவற்றைத் தந்து விளக்கமும் தருகிறார். சடங்குப்பாட்டு பெண் பூப்பெய்வது தொடர்பான விழா நிகழ்ச்சியில் பாடப்பெறுவது. நிறம்புதல், புத்தியறிதல், சடங்காதல், சமைதல், பெரியபிள்ளையாதல், திரளுதல், குத்தவைத்தல் என்ற வழக்காறுகள் பூப்பெய்துதலைக்

குறிக்கும் என்ற குறிப்பு கவனத்திற்குரியது. சில பகுதிகளில் 'சடங்காயிட்டா, பெரியவளாயிட்டா, சமஞ்சிட்டா' என இதைக் குறிப்பிடுவர். இந்த விழாவில் கலந்து கொள்பவர்கள், பூப்படைந்த பெண்ணின் பெற்றோரைப் பார்த்து 'பேரன் உண்டா?' எனக் கேட்பர் (செட்டிநாட்டு வழக்கம்). அதாவது பெண் பூப்பெய்திவிட்டாள், திருமணம் செய்யும் பக்குவமும் அடைந்துவிட்டாள் என்பதை உள்ளுறையாகக் கொண்ட வாசகம் இது.

'கேலி' பிரிவில் இடம்பெற்றுள்ள தலைப்பெண்ணே பாட்டு உண்மையான கேலிப்பாட்டுதான். 'வேம்பரங்குப் பாடல்' அணிகலன்களை அணியும் உறுப்பு, முறை பற்றியும் அது தவறக்கூடாது என்பது பற்றியும் சுவையாகச் சொல்கிறது. ஆனால் முழுமையாக இல்லை எனத் தெரிகிறது. தென்குமரி வட்டாரத்துக்குரிய அகத்தீஸ்வரம் அம்மன் கொடை குறித்த பாட்டு, 'நல்லாப் பாடுனாம் பொலவெம் பாட்டாளி நாங்கெடந்து ஒறங்கினே மேலச் சந்நிதியிலே' என நகைச்சுவையுடன் முடிகிறது. அந்தப் பாட்டில் இடம்பெறும் 'காரி' என்பது புன்செய்யில் விளையும் ஒருவகை நெல் என்ற குறிப்பு கவனத்திற்குரியதாகிறது. தென்னிந்தியாவின் ராபின் ஹுட் எனக் கருதப்பட்ட செம்பலிங்கம் பற்றிய பாடல் அவரது வாழ்க்கை வரலாற்றின் ஒரு சிறு பகுதியைக் காட்டுகிறது. அந்தப் பாடலின் காலநிலைக்கு ஏற்ப (1890 - 1923) ஆங்கிலச் சொற்களும் (ரோடு, ஏட்டு, இனிசுபெட்டர், போலீசு சூப்பிரண்ட்) இடம் பெற்றுள்ளன. செம்பலிங்கம் பற்றிய பிற செய்திகளையும் அறிய இது தூண்டுகிறது எனலாம். நூலாசிரியரே அந்தப் பணியையும் மேற்கொள்ளலாம்.

'பத்தினி கதை' (கதைப் பகுதி) என்ற பாடல், பிள்ளை யில்லாத ஒரு பெண்ணின் ஏக்கத்தையும், அதைப் போக்க ஒரு பிள்ளையைத் தத்தெடுத்து, அதைப் படிக்க வைக்க மேற்கொள்ளும் முயற்சியில் ஏற்படும் தளர்ச்சியையும் தாய் குறிப்பிட, தத்துவந்த பிள்ளை தத்தெடுத்த தாயின் மனம் புண்படும்படிப் பேசுவதும், தன்னைப் பெற்றெடுத்த தாய்

பட்டபாட்டைக் குறிப்பதும் ஒரு மலடி படும்பாட்டை வேதனையுடன் வெளிப்படுத்துகிறது. 'மலடி அறிவாளோ - என் தாயார் மக்க பெறப்பட்டபாடு' என்றே அந்தப் பையன் வெளிப்படையாகக் கூறுகிறான்.

தென்குமரி வட்டார ஈத்தாமொழிப் பகுதியில் தளிர் வெற்றிலை, பச்சைப்பாக்கு, சிப்பிச்சுண்ணாம்பு ஏராளம். புகையிலை மட்டும் யாழ்ப்பாணத்திலிருந்து வரும். அதைப் போட்டால் போதை ஏறும், அதை வாங்கக் காசும் எகிறிக் குதிக்கும். இதைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் ஒரு சிறுபாட்டு தரப்பட்டுள்ளது.

'தகப்பன் குடியக் கெடுக்கும் போயில' 'வெத்திலைக்குச் சத்ரு' 'சத்து கெட்ட போயில்' என்பன சில தொடர்கள். இதைப் படித்தபோது 'உலகப் புகையிலை ஒழிப்பு நாள்' நினைவுக்கு வந்தது.

நாட்டார் வழக்காற்றிலக்கியங்களில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்று 'ஒப்பாரி'யாகும். தொல்காப்பியர் காலத்திலேயே இது மக்கள் வழக்கிலே இருந்திருக்கிறது என்பதை

'நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபாலையும்
கழிந்தோர் தேஎத்து அழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறுநிலையும்'

(புறத்திணையியல், 24)

என்ற வரிகள் சுட்டுகின்றன. போரில் மாண்ட தந்தையை, மகனை, கணவனை, அண்ணனை, தம்பியை இழந்தவர்களும், உறவினர்களும் துன்புற்று அலறும் நிகழ்வை இந்நூற்பா கூறுகிறது. இன்றும் இதை நாம் காண்கிறோம். தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றுத் தொடர்ச்சி இது. ஒப்பாரிப் பாடல்கள் துன்பத்தையும், துயரத்தையும் மட்டும் வெளிப் படுத்தாது, இறந்தவர்களின் வாழ்க்கைச் சுவடுகளையும் பதிவு செய்யத் தவறுவதில்லை. அவலச் சுவையோடு இந்த

வரலாற்றுப் பதிவும் இதன் சிறப்பாகும். இந்நூலிலுள்ள 'இழவு' பாடல்களிலும் இவற்றைக் காணமுடிகிறது.

கணவன் இழப்பைக் கண்டு கதறும் மனைவி, தன் குடும்பச் சூழலை இப்பாட்டில் குறிப்பிடக் காணலாம்.

'கொல்லையிலே கொய்யாமரம்,
 கொடிகொடியா ஓடும் மரம்'

'மந்தையிலே மாட்டக்கட்டி மாமனாரு காத்த காவல்
தன்னே னன்னானே
மங்கு வச்சி பால் கறந்தால், மாமனாரு சாதிப்பாரே'

வாசலிலே வாகைமரம்

பர்மாவில் இருந்த கணவன் அங்கேயே மாண்டு விட்டார்.

செய்தியறிந்த மனைவியின் துடிப்பு பற்றிய சிவகங்கை வட்டார ஒப்பாரிப் பாட்டு

'தங்கமான ரெங்கோனைத்
தங்கமென்று சொன்னீகளே - அங்கே
தங்கலாம் என்றீகளே - இப்பத்
தங்கங் கசந்ததென்ன - நீங்க
தனிப்பட்டுச் சென்றதென்ன'.

மற்றொரு நிகழ்ச்சியும் நினைவுக்கு வருகிறது. எனது உறவினரின் தாயார் மகன் சிறுவயதாக (4 அல்லது 5) இருக்கும் போது இறந்துவிட்டார். தந்தை பர்மாவில் இருந்தார். அவரைப் பாட்டி வளர்த்து வந்தார். பாட்டியும் சில ஆண்டுகளில் காலமானார். பாட்டி காலமானபோது எனது உறவினர் உரிய வயதுக்கு வந்துவிட்டார். தாயார் இறந்த ஆண்டு தெரியாத நிலை. பாட்டியின் இழவுக்கு வந்திருந்த அவரது உறவினர் பாடிய ஒப்பாரிப் பாட்டில் அந்த ஆண்டு வெளிப்பட்டது. தன் தாயைத் தன் கண்ணெதிரே வைத்துக் காக்கும் நோக்கில் மகளை உள்ளூரிலேயே திருமணம் செய்து கொடுத்தார் பாட்டி. மீண்டும் குழந்தை பெற

வாய்ப்பில்லை. காரணம், கணவர் பர்மாவில் இருந்தார். அவரால் நாடு திரும்ப முடியாத சூழல். ஏனெனில், அப்போது இரண்டாம் உலகப்போர் நடந்தது. கணவன் வரவில்லை. மனைவி நிம்மதியாக வாழ முடியவில்லை. இறந்துவிட்டார். இந்தச் செய்தி அந்த ஒப்பாரிப் பாடலில் இடம்பெறுகிறது.

'மறு ஊரு போகாம மகிழ்ந்த ஊருக்குள்ளாக
மாலையிட்ட ஓவியம் போல்
மாலையிட்டமய்க்கா நாள் மஞ்ச முதலானமுன்னா
மறுத்துமொருக்கா மஞ்சள் மொதல் ஆக
வாவரசி மன்னர் வளவிலே இல்லைன்னா
வையகத்துச் சண்டையின்னா
பின்பும் ஒருக்கா புள்ள மொதலாக
பேரழகி மன்னர் பூமியிலே இல்லைன்னா
பூலோகத்துச் சண்டையின்னா...'

'வையகத்துச் சண்டை', 'பூலோகத்துச் சண்டை' - இரண்டாவது உலகப்போர் நடந்த காலம். என் உறவினர் பிறந்த ஆண்டு 1939. பர்மா சென்ற தந்தை திரும்புமுன் தாய் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். அந்த ஆண்டு 1944 என்று அறியப்பட்டது (1939 - 44 இரண்டாம் உலகப்போர் நடந்த காலம்). இந்தப் பாடல்தான் என் உறவினரின் தேடுதலுக்கு விடையானது.

'வல்வேல் சாத்தான் மாய்ந்த பின்றை, முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே' என்ற புறநானூற்றுக் கையறுநிலைப் பாடலின் (240) தொடர்ச்சிதான் இன்றைய நமது ஒப்பாரி. இவற்றை வட்டாரவாரியாகத் தொகுத்து ஆய்வுக்குட்படுத்துவது மரபின் நீட்சியை வரலாற்றுவழி அறிந்துகொள்ள உதவும்.

இந்தத் தொகுப்பின் மற்றொரு சிறப்பான பகுதி 'வட்டாரச் சிறப்புச் சொற்கள் சில' என்பதாகும். அடியோலை, அனந்தரத்தி, ஊச்சாளி என்பன அந்தச் சிலவற்றுள் சில.

சில மரபுத் தொடர்கள்:

கொடி முடிஞ்சி போவான் - வம்சம் வளராமல் அழிவான்.

வில்லு வச்சாச்சி - வசை பாடத் தொடங்கியாச்சி.

வாழி பாடியாச்சி - எல்லாம் முடிஞ்சிட்டு (வாழி என்பது வில்லுப்பாட்டின் இறுதி).

மோர் விட்டாச்சி - காரியம் முடிஞ்சிட்டு.

சாவு, ஏச்சு தொடர்பான சில மரபுத்தொடர்களும் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றிரண்டு பிற பகுதிகளிலும் வழக்கிலுள்ளன என்பது ஒப்பீட்டாய்வுக்கு உதவும்.

இறுதியாக உள்ள அணிகலன்கள், நிலம், பயிர், உணவு, தொழில் முதலியன தென்குமரி வட்டாரத்தில் புழக்கத்தில் உள்ளவற்றைக் காட்டுகின்றன. பனைபற்றிய விளக்கம் விரிவாக உள்ளது. அங்குள்ள கல்விநிலை - குறிப்பாக உடற் கல்வி - பற்றிய செய்திகளும் சுருக்கமாக இடம்பெற்றுள்ளன.

பொன்னீலனின் படைப்புகளை இடைவிடாது படித்து வருபவன் நான். அவரது படைப்புகளில் நாஞ்சில் நாட்டு வட்டார வழக்குகள் தூக்கலாக நின்று அவரை இனங் காட்டும். அவரது சிறுகதை ஒன்றை (போடுபவனும், தின்னுபவனும், தாமரை, 1973) போலந்தில் தமிழ் படித்த மாணவர்களுக்காக நான் தயாரித்த 'தமிழ் வாசகம்' என்ற நூலில் (1975) இடம்பெறச் செய்தேன். அதைப் படித்துப் போற்றி மொழிபெயர்த்த மாணவர்கள் பல கருத்துக்களை என்னோடு பரிமாறிக் கொண்டது இப்போது நினைவுக்கு வருகிறது.

சிறந்த படைப்பாளர், திறனாய்வாளர், உரைவீச்சாளர், கலைஇலக்கியப் பெருமன்றத்தை இயக்குபவர் எனப் பல தளங்களில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் பொன்னீலன் இத்தகையதொரு தொகுப்பு நூலைத் தந்து பல துறைசார் ஆய்வாளர்களிடத்தே அறிவுப் பசியைத் தந்திருக்கிறார். பசியைப் போக்க விரும்புவோர் இன்னும் பல தரவுகளைக்

கொண்ட நூல்களைத் தேடிப் படித்து, தமது அறிவுப் பசியைப் போக்குவதோடு, ஆய்வுத்தளத்தை விரிவு படுத்தவும் வேண்டும். தமிழகத்தில் உள்ள பிற வட்டாரங்கள் பற்றியும், சமூகங்கள் பற்றியும், பல கட்டுரைகளும் நூல்களும் வந்திருக்கின்றன. எல்லாவற்றையும் ஒன்றாக வைத்துப் பார்க்கும்போது, தமிழகப் பண்பாட்டின் ஒருமைத்தன்மை, சீர்மை நன்கு புலப்படும். வேற்றுமையில் ஒற்றுமை காண்பது என ஒரு வழக்கு உண்டு. அதைச் செயல்படுத்த இதுபோன்ற தொகுப்பு நூல்களின் இடைவிடா வாசிப்பு பயன்தரும். இவ்வகை ஆய்வுக்குத் தூண்டுகோலாக அமையும் நல்லதொரு தொகுப்பு நூலைத் தந்துள்ள ஆசிரியர் பொன்னீலனுக்கு வாழ்த்துக்கள்; பாராட்டுக்கள். தொடர்ந்து இத்துறையிலும் செயல்பட வேண்டும் என்பது வேண்டுகோள். இந்த நூலுக்கு முன்னுரை தருமாறு கேட்டுக்கொண்டதற்கும், இது தொடர்பாகச் சில நூல்களை மீண்டும் படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததற்கும் தோழர் பொன்னீலனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இராம. சுந்தரம்

மதுரை
7. 6. 2010

பொருளடக்கம்

குளிக்கக் குளமும் வெட்டி
யாரடிச்சா
அக்காளக் கட்டிட்டு
பூ முடிக்க வரல்லியே
தனிமை வலி
ஆத்தோரம்
சிட்டு வடிவெடுத்து
அத்தாச்சிமார் சண்டை
ஒரு கல்
ரொம்ப சடையிறாரே
பாக்க வச்சி திங்குறானே
ஆதரிப்பார் யாருமில்ல
கரும்பு வெட்டிக் கால் நிறுத்தி
வாசலிலே வாகைமரம்
தொப்பையத் தடவியல்லோ
அம்மாடி பெத்தவளே
ஒத்துமை
தோணிக்காரா தோணிக்காரா

பழமொழிகள்

அ

1. அக்கறையான பனை ஏத்தாம்
   அரிவாளும் கடுப்பும் இரவலாம்

2. அக்கா வீட்டுத் தாராளத்த
   அடுத்த வீட்டுக் கல்யாணத்தில பாரு

3. அக்கா இருக்கிற வரையிலதான்
   அத்தான் உறவு

4. அக்காளுந் தங்கையுமா நாங்க
   அக்கரைக்குப் போகச்சில
   தக்காளிப்பழம் குடுத்து என்னைத்
   தள்ளிவிட்டான் பள்ளத்தில

5. அக்கினி நட்சத்திரத்தில மழை பெய்தால்
   அகப்பையில அள்ளக்கூட தண்ணி கிடைக்காது

6. அகத்தி ஆயிரங்காய் காய்ச்சாலும்
   புறத்தி புறத்திதான்

7. அகப்பை குறைந்தால்
   கொழுப்பு அடங்கும்

8. அகத்தின் அழகு
   முகத்தில் காட்டும்

9. அங்கத்தைத் தட்டித்
   தங்கத்தைச் சேர்

10. அங்காடி வாய்க்கிறது அகராசி
    ஆண்மகன் வாய்க்கிறது முகராசி

11. அங்காடிக்காரியைச் சங்கீதம் பாடச் சொன்னா
வெங்காயம் கருவேப்பிலை என்பாள்

12. அங்கே ஏண்டி கிடக்கிற ஆலக்காத்துல
இங்கே வாடி பக்கத்துல பெருங்காத்துல

13. அச்சாரம் வாங்கின பிறகு
அரைநாண் கயிறு நாறுவுன்னா விடுவானா

14. அச்சில்லாமல் தேரோடுமா
தீ இல்லாமல் புகை வருமா

15. அசைந்து தின்னது யானை
அசையாமத் தின்னது வீடு

16. அஞ்சு பணம் கொடுத்து அடிக்கச் சொன்னான் - அவனே
பத்துப் பணம் கொடுத்து நிறுத்தச் சொன்னான்

17. அஞ்சும் சரியா இருந்தால்
அறியாப் பெண்ணும் கறி சமைப்பாள்
(கறி - குழம்பு வகை)

18. அஞ்சு பிள்ளையும் தாயும்
கஞ்சி கஞ்சின்னு கதறும்போது
அதில ஒரு அடியறுவா
ஆருக்குன்னு கேட்டாளாம்
(அடியறுவா - வேர் அழிந்து போகிறவள்)

19. அஞ்சு ரூபா குடுத்தேனடா அழகரப்பா - உனக்கு
அண்ட வெட்டத் தெரியலியே பொட்டக்கரப்பா
நாலு ரூபா குடுத்தேனடி நாட்டு மகராணி - உனக்கு
நாத்து நடத் தெரியலியே ஊசி மகராணி

20. அஞ்சு வயசில அண்ணன் தம்பி
பத்து வயசில பங்காளி

21. அஞ்சாறு பெண் பிறந்தால்
அரசனும் ஆண்டியாவான்

22. அஞ்சிலே பழுத்தான்
ஆறிலே விழுந்தான்

23. அட்ட மத்தச் சனியன
வட்டிக்கி வாங்கினது போல

24. அட்டமி நவமி
தொட்ட காரியம் வெட்டை
(வெட்டை - கட்டாந்தரை, பயனற்றது)

25. அட்டையைப் பிடிச்சித்
தொட்டில்ல போட்டது போல

26. அடங்காத மாட்ட
வெள்ளங் கொண்டு போகும்

27. அடக்கமுடைய பெண்ணுக்கு
அழகு எதுக்கு?

28. அடி உதவுற மாதிரி
அண்ணன் தம்பி உதவமாட்டான்

29. அடியே என்கிறதுக்குப் பொண்டாட்டி இல்ல
எத்தனை பிள்ளைண்ணு கேக்குறான்

30. அடித்து உதைக்கும் கணவனும்
அயந்து தூங்கும் மனைவியும் ஆகாது

31. அடிபட்ட பாம்பு
கடியாம விடாது

32. அடி மேல் அடி அடிச்சா
அம்மியும் நகரும்

33. அடியாத மாடு பணியாது

34. அடிமை போல் உழைக்கணும்
அரசன் போல் தின்னணும்

35. அடி என்கிறவன் அரசனும் இல்லை
பிடி என்கிறவன் மந்திரியும் இல்லை
(மன்னனும் - மந்திரியும் குறிப்பால்
சொல்லத் தெரிந்திருக்க வேண்டும்)

36. அடுத்த வீட்டுக்காரி ஆம்பிளை பிள்ளை பெத்தா - என்னு
அம்மி குழவியால அடிவயத்தில் குத்தினாளாம்

37. அடுப்பச் சுத்தின பூனை
அண்டை வீட்டுக்குப் போகாது

38. அண்ணன் ஆறடி பாஞ்சா
தம்பி எட்டடி பாய்வான்

39. அண்ணன் மேல கோபத்த
நாய் மேல ஆத்தினானாம்

40. அண்ணாமலையார் அருள் உண்டானால்
மன்னார் சாமி மயிரப்புடுங்குமா?

41. அண்டை வீட்டுக் கண்ணம்மா - என்னைக்
கொண்டு விடு கவனமா
(அனாவசியமாக வேலை வாங்குதல்)

42. அண்டைவீட்டு கஞ்சி ஆற ஆற
கொண்டவன் வீட்டுக் கஞ்சி கொதிக்க, கொதிக்க

43. அண்டத்தச் சுமக்கிறவனுக்குச் சுண்டைக்காய் பாரமா?

44. அணில் முட்டித் தென்னை சாயுமா?

45. அணில் வயசானாலும் துள்ள மறக்காது

46. அத்தி பூத்தாப்ல தெரியிதே

47. அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை
குடியானவன் வீட்டு அம்மியை உடைக்கும்

48. அதிர அடித்தால் உதிர விளையும்

49. அதிகாரியும் தலையாரியும் ஒண்ணானால்
விடியுமட்டும் திருடலாம்

50. அந்த நாடும் இந்த நாடும்
அடக்கிச்சோறு வச்சி
காலேயரைக்காப் பணம் மொய் பிரிஞ்சு
சின்னப்பிள்ளை கொண்டப்பூவுக்கு அழுகுறா
பய உறுமாலுக்கு அழுகிறான்.
கிழவி ஈக்கு விளிம்புக் கண்டாங்கி கேட்கிறா
கிழவன் தடிகம்புக்குப் பூணு கட்டச் சொல்றான்.

51. அப்படி இப்படி வந்தவளுக்கு
அஞ்சு தூலம் வீடு.
ஓமக் குழியில இருக்கிறவளுக்கு
ஒரு தூலம் வீடு.

52. அப்பன் கூடவே போறவளுக்கு
அண்ணன் ஏது தம்பி ஏது

53. அப்பனுக்குப் புள்ள
தப்பாமப் பிறந்திருக்கு

54. அப்பனுக்க கோவணத்த காக்கா தூக்கிட்டுப் போவுது
மொவன் துப்பட்டிக்கு அழுதானாம்.

55. அப்பனைக் கள்ளுக்கடையில பாத்தா
மகனைக் கூத்தியா வீட்ல பாக்கலாம்

56. அமாவாசைச் சோறு
அகப்படுமா என்னைக்கும்

57. அம்மியும் குழவியும் ஆகாயத்துல பறக்குது
இந்த எச்சி இலை எம்மாத்திரம்.

58. அமாவாசைக் கருக்கல்ல- பெரிச்சாளி
போனதெல்லாம் வழி
(கருக்கல் - இருட்டு)

59. அம்மி ஒரு தேசமும்
குழவி ஒரு தேசமுமாய்

60. அய்ங்காத வழியைத்
தங்காம நடந்து வந்தேன்.
அங்கேயும் வந்தாயே சிறுதும்பையே

61. அய்யர் வரும்வரை
அமாவாசை காத்திருக்குமா.

62. அயன் இட்ட கணக்கு
ஆருக்கும் தப்பாது.

63. அய்யாகதிர் போல
அம்மா குதிர் போல

64. அரச மரத்தச் சுத்தினதும்
அடிவயித்தத் தொட்டுப் பாத்தாளாம்

65. அரசன் குடுமியைப் பிடிக்கலாம்னு
அம்பட்டன் வேலையை விரும்பலாமா

66. அரசன் அன்று கொல்வான்
தெய்வம் நின்று கொல்லும்

67. அரசன் இல்லாத படை வெட்டாது

68. அரசனுக்கு ஒரு சொல்
அடிமைக்குத் தலைச்சுமை

69. அரண்டவன் கண்ணுக்கு
இருண்டதெல்லாம் பேய்

70. அரண்மனை காத்தவனும்
அடுக்களை காத்தவனும்
வீண் போறதில்லை

71. அரிக்கிற அரிசிய விட்டுட்டுச்
சிரிக்கிற சித்தப்பன்கூட போனாளாம்

72. அரிசியைக் கொடுத்து அக்கா வீட்ல உறவா?

73. அரிசி மறந்த கூழுக்கு உப்பு ஒண்ணுதான் குறைச்சல்

74. அவன் தொட்டுக் கொடுத்தான் - நான்
இட்டுக் கொடுத்தேன்

75. அரைக்காசு உத்தியோகம்னாலும்
அரசாங்க உத்தியோகம் மேல்

76. அரைப்பணம் குடுத்து அழச் சொன்னாளாம் - அவளே
ஒரு பணம் கொடுத்து ஓயச் சொன்னாளாம்

77. அரைப்படி அரிசி அன்னதானம்
விடியும் வரையில் மேளதாளம்

78. அரை காசுக்குப் போன மானம்
ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது

79. அரோகரா என்பாருக்குக் கஷ்டமா
அமுது படைப்பாருக்குக் கஷ்டமா

80. அரிசி உழக்கானாலும்
அண்டைக் கல்லு மூணு வேணும்

81. அறுபது தேங்காயை
எழுபது குசவன் சுமந்தது போல

82. அலை ஓயிறதெப்ப தலை முழுகுறதெப்ப

83. அலை ஓயும்போது தலை முழுகு
காற்றுள்ளபோது தூற்றிக்கொள்

84. அவசரப்பட்ட மாமியார்
மருமகனை அழைச்சாளாம்

85. அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு

86. அவசரக் கோலம் போட வந்தவ
அள்ளித் தெளிச்சது போல

87. அவசரமாக் குழந்தை பெத்தாளாம் அவ
அத எடுத்து முத்தம் கொஞ்சினாளாம் இவ

88. அவலை முக்கித் தின்னு
எள்ளை நக்கித் தின்னு

89. அவளிருப்பது அறையிலே - அவள்
கதை கிடப்பது தெருவிலே

90. அவன் தேங்காயைத் துருவினா
நாம சிரட்டையவாவது துருவ வேண்டாமா?

91. அவன் உதட்டுக்கும்
பல்லுக்கும் எட்டாத இடைவெளி

92. அவன் தறிதக்கட்ட

93. அவள் முகத்தில முன்னாழி வேகும்.

94. அவன் மூக்கும் அரவான் மூக்கும் ஒண்ணு

95. அவன் முட்டிட்டுக் குனியிறவன்

96. அவியலில் சேராத மரக்கறியுமில்லை
துலுக்கனில் சேராத சாதியுமில்லை

97. அவுத்தியரத்துல அம்மங் கொட
கிடந்து கொட்டுடா சொள்ளமாடா

98. அழுத பிள்ளை பால் குடிக்கும்

99. அன்பில்லாத மாமியாருக்குக்
கும்பிடறதும் குத்தம்

100. அன்னியன நம்புனாலும்
அண்ணன் தம்பிய நம்பாத

101. அன்பான சினேகிதன ஆபத்தில அறி

102. அன்று தின்னும் பலாக்காயைக் காட்டிலும்
இன்று தின்னும் கிளாக்காய் மேல்

ஆ

103. ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்கணும்

104. ஆக்கை அலைஞ்சு அடுப்பங்கரையாச்சி
குந்த அலைஞ்சி குளத்தங்கரையாச்சி

105. ஆகாத மருமக கைப்பட்டாலும் குத்தம்
கால்பட்டாலுங் குத்தம்

106. ஆகாதவன் ஆயிரம் கொடுத்தாலும் ஆகான்

107. ஆகாயத்தப் பருந்து தூக்கிட்டு போகுமா?

108. ஆசான் விழுந்ததும் ஒரு அடவு தான்
(அடவு - அடிமுறையில் ஒரு உத்தி)

109. ஆசைப்பட்டு ஈச புடிக்கப் போனாளாம்
அவள் குண்டிய கரையான் அரிச்சிட்டாம்

110. ஆசைப்பட்டென்ன தோசை சுட்டென்ன
அடியோட மக்கா குடியோட போங்க

111. ஆசைப்பட்ட பண்டம் ஊசிப் போனது போல

112. ஆசை உள்ளளவும் அலைச்சலும் உண்டு

113. ஆட்டுக்கும் வாலை
அளந்துதான் வச்சான் ஆண்டவன்

114. ஆடத் தெரியாத தேவிடியா
தெருக் கோணல் என்னாளாம்

115. ஆடிக்காத்து அடிக்குது - போடி
உங்கப்பன் வீட்டுக்கு
கோடை மழை பெய்யிது - வாடி
நம்ம வீட்டுக்கு

116. ஆடிக்கி அழையாத மாமியாளத்
தேடிப்பிடிச்சுச் செருப்பால அடி

117. ஆடிப்பட்டம் தேடி விதை

118. ஆடிய காலும் பாடிய நாவும் சும்மா இருக்காது

119. ஆடி மாசக் காத்து அம்மிய உருட்டும்

120. ஆடு அறுக்கும் முன்னே
புடுக்குக்குக் கையேந்தினானாம்

121. ஆடு மேய்ச்சாலையும் ஆச்சி
அண்ணனுக்குப் பொண்ணு பாத்தாலயும் ஆச்சி

122. ஆடு நனையிதுன்னு ஓநாய் அழுததாம்

123. ஆண் மூலம் அரசாளும் பெண் மூலம் நிர்மூலம்

124. ஆணால் அழிந்தவர் யாருமில்லை - வையத்தில்
பெண்ணால் அழிந்த பேர் மெத்த உண்டு

125. ஆத்தா ஆத்தா எங்க போற?
உம்மாண மச்சான் பயினி குடிச்சேன்
(பயினி - பதநீர்)

126. ஆத்தி ஆத்திப் பாத்தாலும்
ஆட்டுப்பால் கொச்சை மாறாது (கொச்சை - வாசம்)

127. ஆத்திலே தண்ணி அலை மோதிப் போனாலும்
நாய்க்கித் தண்ணி நக்கித்தான் குடிக்கணும்

128. ஆத்தில போற தண்ணிய அப்பா குடி, ஆத்தா குடி

129. ஆத்தில போட்டாலும் அளந்து போடணும்

130. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு

131. ஆத்திரத்தை அடக்கினாலும் மூத்திரத்தை அடக்காதே

132. ஆத்திரம் பொறுத்தாலும் மூத்திரம் பொறுக்காது

133. ஆதாயம் இல்லாமச் செட்டி ஆத்தோட போவாரா

134. ஆத்தங்கரைப் பீயை வெள்ளங் கொண்டு போனது போல

135. ஆம்பிடையான் பாக்கும்போது
தாலியைத் தொட்டுப் பாப்பாளாம்

136. ஆமை சுடுறது மல்லாத்தி
அதை நானும் சொன்னா பொல்லாப்பு

137. ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்

138. ஆயிரம் பனை உள்ள அப்பனுக்குப் பிறந்து
பல்லு குத்த ஈக்கு இல்ல

139. ஆயிரம் வேரைக் கண்டவன் அரை வைத்தியன்

140. ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது
ஒரு கல்யாணத்தை நடத்து

141. ஆவணியில் அகல நடு
ஐப்பசியில் அணைத்து நடு

142. ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே

143. ஆள் இல்லாத கதைக்கு அழுதால் தீருமா

144. ஆள் கண்டு ஏய்க்குமாம் ஆலங்காட்டு நரி
(ஆள் கண்டு - ஆள் தராதரம் கண்டு)

145. ஆளப்பார்த்தா அழகு போல -ஆளுக்க
வேலையைப் பார்த்தா இழவு போல

146. ஆளுக்கு மிஞ்சி எடுப்பெடுத்தா
இடுப்பு ஒடிஞ்சித்தான் போகும்

147. ஆழ உழுதாலும் ஆடு வச்சிப் பார்த்தாலும்
தாழ உழுதாலும் தலைவிதி தப்பாது

148. ஆழம் தெரியாம கால விடாதே

149. ஆழம் விழுந்த வயிறும்
அங்காடிப்பட்ட மனமுமாக

150. ஆறாத் துயரம் அழுதால் தீருமா

151. ஆற்றில் கரைத்த புளி போல

152. ஆறின கஞ்சி பழங் கஞ்சி

153. ஆறு பொண்டாட்டிய
யாரு கொண்டு போனா என்ன?

154. ஆறு கடக்கு மட்டும் அண்ணே அண்ணே
ஆறு கடந்த பின்னே போடா புல்லே

155. ஆன வாலத் தூக்குது
லொத்தி போடவா குட்டி போடவா?

156. ஆனா அந்திமடம்
ஆகாட்டுச் சந்த மடம்

157. ஆனைக்கு ஒரு காலம் வந்தா
பூனைக்கும் ஒரு காலம் வரும்

158. ஆனியும் ஆடியும் ஆண்ட புரட்டாசியும்
தேடி வச்சித் தின்னாதவன் தேச வழிபோவான்

159. ஆனையைப் பார்க்க வெள்ளெழுத்தா?

160. ஆனையக்குத்தி
சுழகால மறிச்சது போல

161. ஆனையைக் குடுப்பானாம்
துறட்டியக் குடுக்க மாட்டானாம்

162. ஆனை வரும் முன்னே - மணி
ஓசை வரும் பின்னே

163. ஆனை தூறுதுன்னி
ஆட்டுக்குட்டி தூறினா
மூலம் போயிடும்
(தூறுது - உட்டை போடுது)

இ

164. இக்கரைக்கு அக்கரை பச்சை

165. இட வசதி இல்லாத பதி விரதை

166. இடச்சி சம்பத்தும்
சாணாத்தி வாழ்வும் சரி

167. இடுவார் பிச்சையைக்
கெடுவார் கெடுத்தது போல

168. இடிவிழுந்த மரம் போல

169. இதயம் இருந்தால் துடிப்பிருக்கும்

170. இந்தப் பூனையும் பால் குடிக்குமா

171. இரந்து குடிச்ச மணியாரனுக்கு
பிச்சை எடுத்து விளக்கு வை

172. இரும்பு பிடிச்ச கையும்
சிரங்கு பிடிச்ச கையும் சும்மா இருக்காது

173. இருக்கிறவன் செம்மையா இருந்தா
சிரைக்கிறவன் செம்மையாச் செரைப்பான்

174. இருதலைக் கொள்ளி

175. இருந்தா செட்டி
எந்திரிச்சா சேவகன்

176. இருந்தா மருமகன் கூட இருப்பேன்
இல்லாட்டா பரதேசம் போவேன் என்னாளாம்

177. இருந்தவன் எந்திரிக்கும் முன்னால
நடந்தவன் காதவழி

178. இருந்தும் கெடுத்தான்
செத்தும் கெடுத்தான்

179. இரும்பு அடிக்கிற இடத்தில
ஈக்கி என்ன வேலை

180. இருக்க இடம் கொடுத்தா
படுக்க பாய் கேட்பான்

181. இருட்டுக்குள்ள இருத்தினால்
விளக்கே வேண்டாம்

182. இருந்த வெள்ளத்தை
வந்த வெள்ளம் தள்ளிக்கொண்டு போனது போல

183. இருந்தா எந்திரிச்சிக்கிடாத - பொண்ணுக்கு
நடந்தா இருந்துக்கிடாத மாப்பிள்ளையாம்

184. இரும்பு உண்ட நீரைக் கக்காது

185. இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை

186. இலவு காத்த கிளி போல

187. இலை எடுக்கச் சொன்னா
எத்தனை பேருக்குன்னு கேப்பானேன்

188. இவர் துயரம்
ஏழுபனை ஓலையில எழுதினாலும் தீராது

189. இழவுக்குச் சொல்லிவிட்டா
எட்டுக்கு வந்தாளாம்

190. இழவோடு கல்யாணந்தான் (துயரமும் மகிழ்ச்சியும்)

191. இழவோடு குழிமுறைதான் (துயரத்தில் மகிழ்ச்சி)

192. இழவுக்கு வந்தவ
தாலி அறுத்தது போல

193. இழுக்கு இழுக்கென்னு மஞ்சள் அரைத்ததும்
இந்தக் கிழவனுக்கோ! நான்
இத்தனை நாளும் பத்தி நடந்ததும்
இந்தக் கிழவனுக்கோ

194. இளமையில் கல்வி சிலையில் எழுத்து

195. இளங்கன்று பயமறியாது

196. இளிச்சிக்கிட்டிருந்தாளாம் மடத்தாயி
ஏறி அடிச்சானாம் தவசிப்பிள்ளை

197. இறைச்சிக்கிப் போனவன் விறைச்சிச் செத்தான்
வீட்டில் இருந்தவன் கெரிச்சிச் செத்தான்
(கெரிச்சி - தின்னும் ஆசை ஏறி)

198. இன்னிக்கிச் செத்தா
நாளைக்கு ரெண்டாம் நாள்

199. இனிய பிறவியையும்
இன்பமுள்ள தாயாரையும்
கடுகவே மறக்க வைத்தாள் - என்
கட்டழகி பெண்டாட்டி

ஈ

200. ஈயத்தைக் கண்டு
இளிச்சதாம் பித்தளை

201. ஈரைப் பெருக்கிப்
பேனைப் பெருமாளாக்குவான்

உ

202. உடைந்த சங்கு ஊத்துப் பறியாது

203. உடைத்துச் சிதைத்தாலும் பாத்தி ஒண்ணு

204. உடையவனுக்குப் பொறுத்தாலும்
உடையவன் வீட்டு நாய்க்குப் பொறுக்காது

205. உடையானுக்கு ஒரு சொல்
அடியானுக்குத் தலைச்சுமை

206. உடுத்துச் செழிச்சவன் கிட்ட ஒரு முழத்துணி
உண்டு செழிச்சவன் கிட்ட ஒரு பிடி சோறு

207. உண்ட வீட்டுல
கெண்டி திருடுறது போல

208. உண்ணாமல் அலையலாம்
உடையில்லாமல் அலையலாமா?

209. உண்பார்க்கு தேன் எடுத்துக்
கொடுத்தது போல

210. உண்ட வீட்டுக்கு
ரெண்டகம் செய்யாதே

211. உண்டு கெட்டவன் பார்ப்பான்
உடுத்துக் கெட்டவன் பட்டாணி

212. உதடு தேய்வதை விட
உள்ளங் கால் தேயலாம்

213. உதடு பழஞ் சொரிய
உள்ளே நஞ்சொரிய

214. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே

215. உப்பு அறியாதவன் துப்புக் கெட்டான்

216. உப்பு தின்னவன் தண்ணி குடிப்பான்

217. உப்பிட்டவரை உள்ளளவும் நினை

218. உரலிலே அகப்பட்டது
உலக்கைக்குத் தப்புமா

219. உரலுக்கு ஒரு பக்கம் இடி
மத்தளத்துக்கு இருபக்கம் இடி

220. உலக்கையை விழுங்கி
சுக்குக் கசாயம் குடிச்சாளாம்

221. உலை வாயை மூடினாலும்
ஊர் வாயை மூட முடியாது

222. உழுபவனுக்கு
உழவு கோல்தான் மிச்சம்

223. உள்ளதைச் சொன்னா
ஊருக்குப் பகை

224. உள்ளத அடுத்தவனுக்குக் குடுத்துட்டு
இல்லாததுக்கு ஊர்ல அலைஞ்சானாம்

225. உள்ளூர் பேய்க்கும்
வெளியூர் குளத்துக்கும் பயம் அதிகம்

226. உள்ளத்துக் குற்றம் கோடியிருந்தாலும்
பிள்ளைக்கும் தாய்க்கும் பிணக்கில்லை

227. உள்ளதும் போச்சிடா நொள்ளக் கண்ணா

228. உளக்கிலே கிழக்கு மேற்கா

229. உள்ளூர் குளம் தீர்த்தக் குளம் ஆகாது

230. உள்ளூர்ல ஓணான் பிடிக்கத் தெரியாதவன்
அசலூர்ல ஆனை பிடிக்கப் போனானாம்

231. உளுந்தரைச்ச அம்மி போல
(உளுந்து அரைத்த அம்மி வழுவழுக்கும்)

232. உழுகிற மாடு
ஊர்ல விலை போகாதா?

233. உறவை உழவில் பாரு

234. உன் வயலை பண்ணி உழுது
கழுத அறுக்க!

235. உன்னால நான் கெட்டேன்
என்னால நீ கெட்டாய்

236. உன்னையும் என்னையும் பகட்டுது
மேனி கொழுத்த தொங்கட்டான்

237. உனக்குக் கோபம் வந்தால்
எனக்கு யோகம் வந்தது மாதிரி

ஊ

238. ஊரார் பண்டம்னா
உப்புப் போடாமத் தின்பாளாம்

239. ஊரான் வீட்டு நெய்யே
என் பொண்டாட்டி கையே.

240. ஊரைச் சிரிச்ச கீரை
உப்பில்லாமல் வேகுது.

241. ஊரறிஞ்ச பாப்பானுக்குப் பூணூல் எதுக்கு.

242. ஊரான் பிள்ளைய ஊட்டி வளத்தா
தன் பிள்ளை தானே வளரும்.

243. ஊருக்குச் சொல்லுமாம் பல்லி
காடி பானைக்க விழுமாம் துள்ளி.

244. ஊருக்குள்ள நடக்கிது யாருக்குத் தெரியும்
ஊட்டுக்குள்ள இருக்க ஊயாளுக்குத் தெரியும்.

245. ஊரு ஒச்சியம் (புகழ்) வீடு பட்டினி.

246. ஊரு பழிக்குமுன்னு
ஒப்புக்கு அழுறேன்
மதிகெட்ட பெண்டுகளா - என்
வாய வந்து பொத்துங்கடி.

247. ஊருக்கு ஒரு தேவடியா
யாருக்கெல்லாம் ஆடுவா.

248. ஊரைச் சுத்தின வயந்தமாலைக்கு
வடிச்ச சோத்து மேல ஆசை.

249. ஊரோட சேராத பூராடம்.

250. ஊரான் கிளையக் கண்டா அகப்பை உயத்திக் கோரும்
தன் கிளையைக் கண்டா அகப்பை தாந்துக் கோரும்.
(கிளை - உறவு)

251. ஊணுக்கு வாரியா ராயப்பா
உண்பேனப்பா நாநாழி
வேலைக்கு வரியா ராயப்பா
நானேனப்பா சீக்காளி.

252. ஊமை ஊர்ல கொன்னையன் ராஜா.

253. ஊமை ஊரைக் கெடுக்கும்
கோட்டான் குடியைக் கெடுக்கும்.

254. ஊமைக் குறத்தி மாப்பிளை புடிச்சா
ஒருத்தருக்கும் தெரியாதோ?

255. ஊமை போல இருப்பான்
எருமை போல சாணி போடுவான்.

எ

256. எங்க வீட்டுக்கார
பழங்கஞ்சி குடிக்க மாட்டாவ
"ஏன்?"
இல்லாமத்தான்.

257. எங்க வீட்டுத் தாராளத்த
அடுத்த வீட்டுக் கல்யாணத்தில பாரு.

258. எங்க போனாலும்
இணலும் கூட போகும். (இணல் - நிழல்)

259. எச்சி இலைக்கு
நாய் அடிச்சிக்கிட்டது போல.

260. எச்சிக் கையால காக்கா விரட்டாதவன்.

261. எச்சிச் சோத்தைக் கொடுத்துப்
பிச்சைக்காரியை முத்தினது போல.
(முத்தினது - முத்தமிட்டது)

262. எட்டாத பழத்துக்கு
நொட்டை விட்டது போல.
(நொட்டை விடுதல் - ஆசையில் நாக்கைச்
சப்புக் கொட்டுதல்)

263. எட்டிப் பாத்தா
எட்டுப் பணம் தெண்டம்.
(தெண்டம் - அபராதம்)

264. எட்டாத பழத்துக்குக்
கொட்டாவி விட்டது போல.

265. எடுப்பாரைக் கண்டா
குடம் கூத்தாடும்.

266. எடுக்கிறது பிச்சை
ஏறுறது பல்லாக்கு.

267. எட்டினால் குடுமியைப் பிடி
எட்டாட்டா காலைப் பிடி.

268. எண்ணெய் மிச்சத்த
எறும்பு கொண்டு போச்சி.

269. எண்ணப்பட்ட குதிரையெல்லாம்
மண்ண மண்ணத் திங்கையில
குருட்டுக் குதிரை காணத்துக்கு அழுததாம்.

270. எண்பது வேண்டாம்
அம்பதும் முப்பதும் கொடு.

271. எண்ணிச் செய் செட்டிமை
எண்ணாமச் செய் வெள்ளாமை.

272. எண்ணிச் சுட்ட பணியாரம்
பேணித் தின்னு மருமவனே.

273. எந்த ஆண்டிக்கு எந்த மடமோ.

274. எந்தப் புத்துல எந்தப் பாம்போ.

275. எந்தனுக்குப் புத்தி எடுத்தெடுத்துச் சொன்னாலும்
கந்தனுக்கு புத்தி கவட்டைக்கு இடையில.

276. எதிரி இளப்பமானால்
கோபம் சண்டப் பிரசண்டம்.

277. எய்தவனிருக்க அம்பை நோவானேன்

278. எரியிற கொள்ளியில
எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி?

279. எரியிற தீயில எண்ணெய விட்டது போல.

280. எரியிற வீட்ல பிடுங்கினது ஆதாயம்.

281. எரணங் கெட்ட பாவிக்கு
எங்க போனாலும் நன்மையில்லை.

282. எருது ஏறல்லண்ணா
பசு பத்தினிதான்.

283. எருது நோவு காக்கை அறியாது.

284. எருது நக்கி வந்தா வீடு நக்கி வரும்.

285. எருது கொழுத்தா கழனி செழிக்கும்.

286. எரும மாட்ல மழை பெய்தது போல.

287. எருமை வாங்கும் முன்னே
நெய் விலை பேசாதே.

288. எலும்பைக் கடிக்கும் நாய்
இரும்பைக் கடிக்குமா.

289. எல்லாரும் தேங்காய் துருவினா
நாம சிரட்டையாவது துருவ வேண்டாமா?

290. எல்லாரும் எண்ணெயில போட்டா
நாம தண்ணியிலாவது போட வேண்டாமா?

291. எலி வளையானாலும்
தனி வளை வேணும்.

292. எலி அழுதால் பூனை விடுமா.

293. எள்ளடிச்ச களம் போல
இல்லாமப் போவான்.

294. எளியவன் வலியவனை முட்டினா
வலியவனை வாசப்படி முட்டும்.

295. எளியவன் பொண்டாட்டி
எல்லாருக்கும் மைனி.

296. எழுதாப் பொறிக்கு அழுதால் தீருமா.

297. எழுதிய விதி அழுதால் தீருமா.

298. எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்
படிச்சவன் பாட்டைக் கெடுத்தான்.

299. என்னத்துக்கோ இடம் குடுத்தா
வீடெல்லாம் மோண்டு அழிக்குமாம்.

300. என் புழுகு என்னோட - என்
அப்பன் புழுகு கப்பல்ல வருது.
(புழுகு - பொய்).

301. என்னையும் பெண்ணையும் முன்னே விடுங்க
செய்யும் சடங்கைப் பின்னே செய்யுங்க.

302. என்னைக் கெடுத்தது நரை
என் மகளைக் கெடுத்தது முலை.

303. என் வாய்பிறப்பை கேட்குமுன்னே
போயிடு அப்பால.

304. என்ன பிரியம் இல்லாத பிரியம்.

ஏ

305. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.

306. ஏட்டில் எழுதியதை எடுத்தெறியப் போமோ
ஓட்டில் எழுதியதை உடைத்தெறியப் போமோ.

307. ஏணி தோணி
அண்ணாவி நார்த்தங்காய்.

308. ஏத்தம் இறைக்கிற
என் புருசன் சாவானா
கள்ளப் புருசன் கிட்ட
கை கலந்து பேசலாமே.

309. ஏரிக்கரையினிலே
எட்டாட்ட மேச்சவரே
பொட்டாட்டக் காணும் மென்னு
புலம்புறாளே புள்ளத்தாச்சி.

310. ஏலத்தவன் குண்டியிலே
ஏன் கடிச்சா கட்டெறும்பே.

311. ஏழாம் நகரத்திலே
கீழான நரகத்துக்குப் போவா.

312. ஏழையில் இடும்பன்.

313. ஏறி ஒழிந்த பருவப்பனையும்
இறக்கி ஒழிந்த கட்டுப்பாளையும்
போக வர பார்த்துக் கொள் - என்ற கதை போல.

314. ஏற ஆசைப்பட்டா
சாணாப் பிறவி வேணும்.

315. ஏறு ஏறு என்பான்
இறங்க மதி சொல்ல மாட்டான்.

316. ஏன் கிழவா தூங்குத?
பழைய ஆவல்தான்!

317. ஏழையக் கண்டால்
மோழையும் பாயும்.

ஒ

318. ஒக்கச் சிரிச்சா வெக்கமில்லை.

319. ஒக்கல்ல பிள்ளைய வச்சிக்கிட்டு
ஊரெல்லாம் தேடினாளாம்.

320. ஒட்டு மண் சுவராகாது.

321. ஒண்ட வந்த பிடாரிய
ஊர்ப் பிடாரி துரத்துச்சாம்.

322. ஒண்ணும் தெரியாத பாப்பா - ஆளை
உள்ள விட்டுப் போடுவாளாம் தாப்பா.

323. ஒண்ணும் தெரியாத வெண்ணியமால
ஒரு பான திம்பாளாம் பண்ணிக்கறி.

324. ஒண்ண ஒண்ணைக் காணோம்
பின்னால கட்டத் துணியக் காணோம்
சம்சாரம் ஏராளம்
சமைச்சுப் போட ஆளைக் காணோம்.

325. ஒரு உவச்சன் (பூசரி) உண்டு
ஒன்பது கோவிலும் உண்டு.

326. ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விசம்.

327. ஒரு இலையில சோறு
மறு இலையில மண்ணு.

328. ஒரு கண்ணுல வெண்ணெய்
மறு கண்ணுல சுண்ணாம்பு.

329. ஒரு நாள் கூத்துக்கு மீசை எடுத்தானாம்.

330. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

331. ஒரு பொண்டாட்டிக்காரனுக்கு உறியில சோறு
இரு பொண்டாட்டிக்காரனுக்கு நடையில மாறு.
(மாறு - பெருக்கு மாறு).

332. ஒரு நாளும் சிரிக்காதவன்
திருநாளில் சிரிச்சானாம்
திருநாளும் வெறு நாளாப் போச்சாம்.

333. ஒருவனாய் பிறந்தால் தனிமை
இருவராய் பிறந்தால் பகைமை.

334. ஒரு வாசல் அடைச்சால் மறு வாசல் திறக்கும்.

335. ஒழுக்கம் ஒன்றே பலம்.

336. ஒளியத் தெரியாதவன்
தலையாரி வீட்ல ஒளிஞ்சானாம்.

ஓ

337. ஓட்டைச் சட்டியானாலும்
கொழுக்கட்டை அவிஞ்சா சரி.

338. ஓம்பும் புள்ள தேம்பும்.

339. ஓர் ஆடி அலைஞ்சா
ஏழு ஆடி அலையணும்.

340. ஓலைக் குவியல்ல நாய் மோண்டது மாதிரி.

341. ஓரப்பம் தின்னாலும்
நெய்யப்பம் திங்கணும்
ஓர் அடி குடுத்தாலும்
செவளையில குடுக்கணும்.
(செவளை - கன்னம்)

ஐ

342. ஐப்பசி மாசத்த அடைமழை போல.

க

343. கச்சை கட்டி அருவா தீட்டி
உள்ள பயினியும் கள்ளாச்சி.

344. கஞ்சி ஊத்த ஆள் இல்லை என்னாலும்
கச்சை (சண்டை) கட்ட ஆள் உண்டு.

345. கஞ்சி கண்ட இடம் கைலாசம்
சோறு கண்ட இடம் சொர்க்கம்.

346. கஞ்சிக்கு அலந்து கடும் வேலை செய்தாலும்
கஞ்சி பெரிசு என்பாள் கடும் வேலை சிறிது என்பாள்.

347. கட்டக் கருவாட்டுக்குச்
சுட்டாலும் சுணையில்லை.

348. கட்டினவனுக்கு ஒரு வீடு
கட்டாதவனுக்குப் பல வீடு.

349. கட்டின வீட்டுக்கு எட்டு வக்கணை.

350. கட்டு கட்டாயிருக்க பிட்டை நாய் கொண்டு போச்சு.

351. கடப்பாரையை விழுங்கிவிட்டு
சுக்குக் கசாயம் குடித்தது போல.

352. கடல் நீரை ஏற்றம் போட்டு
இறைக்க முடியுமா?

353. கடல் வற்றிக் கருவாடு தின்னலாம்னு
உடல் வற்றி உண்ணாம செத்ததாம் கொக்கு.

354. கடலில் கரைந்த பெருங்காயம்.

355. கடிக்கக் கருப்பட்டி கொடுக்காதச் சுற்றத்தார்
கடைத் தெருவைக் கடத்தி வழிவிட்டது போல.

356. கடிச்ச பாக்கு குடுக்காத சித்தப்பன் - அவன்
கடக்கிற வரை போய்ப்
பாத்து வா மகளே, பாத்து வா.

357. கடைத் தேங்காயை எடுத்து
வழிப் பிள்ளையாருக்கு உடைச்சானாம்.

358. கடுகு திங்காதவன் கிடுகு.

359. கடுகு போன இடம் அறிவார்
பூசணிக்காய் போன இடம் அறியார்.

360. கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது.

361. கண்டறியும் காக்கை கொண்டறியும் கொக்கு.

362. கண்டு மேவிக் கட்டினது.

363. கண்ணப்பன் பெண்டாட்டி
நெய் அப்பம் சுட்டாளாம்
ஒண்ணு குறஞ்சின்னு அவ
உதட்டுல சுட்டாளாம்.

364. கண்ணடிச்சி வராதவன்
கையைப் புடிச்சா வரப்போறானா?

365. கண்ணை மறைக்குது கஸ்தூரிப் பொட்டு
கை நீட்டிப் பேசமுடியல்ல குறுக்குச் சீல கட்டு.

366. கணவன வச்சிக்கிட்டுல்லா
கள்ள மாப்ள பிடிக்கணும்.

367. கணுக்கால் பெருத்தாள்
கணவனைத் தின்பாள்.

368. கத கேட்ட நாய
வாரியல எடுத்துச் சாத்து.

369. கத கேட்ட கல்யாணி, கதவுக்கு ரெண்டாணி
ஒட்ட குந்தாணி, ஓடிப்போடி தட்டுவாணி

370. கதை கேட்ட நாய்
வேட்டை பிடிக்காது.

371. கதை கிடக்கிற கிடையப்பாரு
கிழவன் கிடக்கிற திண்ணையப் பாரு.

372. கதைக்கு ஏது கண்ணு, மூக்கு.

373. கதையும் பாட்டும் படிச்சி
கலையத்தில போட்டு வச்சேன்
காத்திருந்த கவுண்ட மூட்டு நாயி
தூக்கிட்டு வந்துடிச்சி.

374. கமத்தி அடிச்சா காக்காசு கிடையாது
மலத்தியடிச்சா மாகாணிக் காசு கிடையாது.

375. கர்மத்துக்கும் கசண்டிக்கும்
மருந்துண்டா. (கசண்டி - வழுக்கைத் தலை).

376. கரணம் தப்பினால் மரணம்.

377. கரிசனக்கார காமாச்சி
புருசனைக் காட்டி அழுதாளாம்.

378. கருப்பட்டியிலும் கல் உண்டு.

379. கருப்பட்டி இருந்தா தவிடு இல்லை
தவிடு இருந்தா கருப்பட்டி இல்லை
இரண்டும் இருந்தா
திங்க ஆளு இல்லை.

380. கரும்பு கொடுத்தவன் - கூடவே
இரண்டு யானையும் கட்டிவிட்டானாம்.

381. கருப்பட்டியக் குடுத்துச்
செருப்பால அடிச்சானாம்.

382. கருப்பட்டிப் பானைக்க கைய விட்டவன்
நக்காமல் விடுவானா?

383. கரும்பு ருசின்னா
வேரோட திங்கலாமா?

384. கரையடி நிலம் பயிரிடாதே
ஊர்க் கணக்கு பாக்காதே
அறுதலிக்கிச் சோலி பாராதே
அன்பற்றாரைப் பின்பற்றாதே.

385. கல்லடி பட்டாலும்
கண்ணடி படக்கூடாது.

386. கல்லான முரக்குட்ட
காதோரம் சதுரவட்ட
எண்ணெய் இல்லாத கிராப்பு
உனக்கு என்னடா வீராப்பு.

387. கல்லூளி மங்கனுக்கு
காடு மேடெல்லாம் தவிடு பொடி.

388. கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருசன்.

389. கல்லிலே நார் உரிப்பது போல.

390. கல்லைக் கழுவினவன்
கரையேற மாட்டான்.

391. கல்லைக் கண்டால் நாயைக் காணோம்
நாயைக் கண்டால் கல்லைக் காணோம்.

392. கல்லை குத்துவானேன்
கையை நோவானேன்.

393. கல்லைப் போல கணவன் இருக்க
நெல் சோற்றுக்கு அழுவானேன்.

394. கவட்டைக்கு முந்தின நாய் போல.

395. கழுதையைக் கொண்டு
உழவுக்குக் கட்டினாற் போல.

396. கழுத தேய்ஞ்சி கட்டெறும்பாப் போச்சி.

397. கழுதை மோளை நம்பி
கட்டுச் சோத்தை அவிழ்க்கலாமா?

398. கழுத பொரண்ட களம் போல.

399. கழுதையோடு சேர்ந்து கன்றும் பீ திங்கும்.

400. கழுதை விட்டையில முன்விட்டை வேற
பின்விட்டை வேறயா.

401. கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பாதே.

402. கள்ளிக்குக் கண்ணீர் முந்தும்.

403. கள்ளப் பிள்ளைக்குக் கள்ளப் புத்தி.

404. களவுக்கு ஒருவன் கல்விக்கு இருவன்.

405. கறக்கிறவன் கவனமா இல்லாட்டா
உதைக்கிறது பல்லு தப்பாது.

406. கனத்தைக் கனம் அறியும்
கருவாட்டுத் தலையை நாய் அறியும்.

407. கறந்த பால் மடி ஏறாது.

கா

408. காக்கா உட்கார
பனம்பழம் விழுந்தது போல.

409. காக்கா கருங்காக்கா
கண்டபடி தின்னு காக்கா
என்ன செருவம் இருந்தா
என்ன வந்து பொண்ணு கேட்கும்.

410. காக்கைக்கு கொண்டாட்டம்
எருமைக்குத் திண்டாட்டம்.

411. காக்கைக்கு இடம் கொடுத்தா
ஆபத்து வந்து சேரும்.

412. காஞ்ச ஓலை விழும்போது
பச்ச ஓலை சிரிக்குமாம்.

413. காடி ஆனாலும் மூடிக் குடி

414. காடு வாவா எங்குது
வீடு போபோ எங்குது.

415. காணாத மூளி கஞ்சியக் கண்டா
ஓயாமக் கஞ்சிய ஊத்திக் குடிப்பா.

416. காணாமக் கிடந்த கழுத
தூவாமத் தின்னு தவிட்ட

417. காத்திருந்தவன் காத்திருந்தான்
நேற்று வந்தவன் கொண்டு போனான்.

418. காத்திருந்தவன் பொண்டாட்டிய
நேற்று வந்தவன் கொண்டு போனான்.

419. காதலிக்கிறது கண்ணுக்குத் தெரியும்
காதலின் வலி யாருக்குத் தெரியும்.

420. காதறுந்த மூளி
காப்புக்கு அழுதாளாம்.

421. கார்த்திகைக்குப் பின் மழையுமில்லை
கர்ணனுக்குப் பின் கொடையுமில்லை.

422. கார்த்திகை மாச மழையில
கல்லும் கரையும்.

423. காய்ச்சிறவ காய்ச்சினா
கழுத மோளும் கறியாகும்.

424. காய்க்கிற மாவில்
கல்லெறி விழும்.

425. காயும் கனியும் உண்டானால்
கார்த்திகை மாசம் கல்யாணம்.

426. கார்த்தியலுக்கு இலையுருட்டி மழை
பொங்கலுக்குப் பொங்கக்குழி மழை.

427. காலம் கிடக்கிற கிடையில பெருச்சாளி
காவடி எடுத்து ஆடிச்சாம்.

428. காரியமா வீரியமா?

429. காளை மாட்டுக்குப் பயந்து
டிரான்ஸ்பாரத்தில ஏறினது போல.

430. காலம் வரும்போது காளி
கற்றதெல்லாம் வித்தை.

431. காவோலையில நாய் மோண்டது மாதிரி.

432. காறி உமிழுதா அந்தத் தெருவில
கடுவு போட்டுத் தாளிக்குதா இந்தத் தெருவில.

கி

433. கிட்டப் போனா எட்டிப் போகும்
எட்டப் போனா கிட்ட வரும்.

434. கிட்டச் சொந்தம் முட்டப் பகை.

435. கிடப்பது ராப்பட்டினி
கனவு காணுவது மாடமாளிகை.

436. கிடாரம் உடைஞ்சா கிண்ணிக்கு ஆகும்
கிண்ணி உடைஞ்சா என்னத்துக்கு ஆகும்.

437. கிடைக்கப் போகும் பலாகாயைவிட
கையிலிருக்கும் கிளாக்காயே மேல்.

438. கிடை கிடக்கிற கிடையப் பாரு
கிழவனத் தூக்கித் திண்ணையில போடு.

439. கிடையிலே மோண்டவளுக்குக் கல்யாணம்
கிடந்து கொட்டடா சொள்ளமாடா.

440. கிறிச்சானுக்கு மறிச்சான்.

கீ

441. கீழ்க்காதும் பித்தளை மேல் காதும் பித்தளை
தாவணி தொலங்குது தட்டுவாணிப் பித்தளை.

கு

442. குஞ்சுப் பாப்பா பஞ்சுப் பாப்பா
கோவணத்த நீக்கிப் பாப்பா

443. குட்டி கொழுத்தாலும்
கொழுப்பு வழுக்குத்தான்

444. குட்டி யானை குளம்
கலக்கியது போல

445. குட்டக் குட்டக் குனிகிறவனும் மடையன்
குனியக் குனியக் குட்டுறவனும் மடையன்

446. குடிக்கிறது கூழு
கொப்பளிக்கிறது பன்னீரு.

447. குடலை உருவிப் போட்டாலும்
வாழைநார் என்பாள்.

448. குடுக்காத இடையன்
சினை ஆட்டைக் கட்டினானாம்.

449. குடுக்கிற தெய்வம் கூரையைக்
கிளப்பிக்கிட்டு கொடுக்குமாம்.

450. குண்டி மினுக்கி அருவா தீட்டி
உள்ள பயினியும் கள்ளாச்சி.

451. குணத்தைப் பார்த்து முடிக்க
வேண்டிய கல்யாணத்தைப்
பணத்தை பார்த்து முடிக்கலாமா.

452. குத்தமுள்ள நாக்கு குறுகுறுக்கும்.

453. குந்தித் தின்னா குன்றுங் கரையும்.

454. குப்ப காட்டு முண்டைக்கு
கொய்யாப் பழ ருசி தெரியுமா?

455. கும்பி காய்ஞ்சா
குதிரை வைக்கோல் திங்கும்.

456. கும்பி கூழுக்கு அழுகுதாம்
கொண்ட பூவுக்கு அழுகுதாம்.

457. கும்பிடப் போன தெய்வம்
குறுக்கே வந்தது போல.

458. குரங்கு மூத்திரத்தை
மருந்துக்குக் கேட்டா - அது
கொப்புக்குக் கொப்பு
கொண்டுக்கிட்டுத் தாவுமாம்.

459. குருடன் கூட வழி போனாலும்
செவிடன் கூட வழி போகக்கூடாது.

460. குருடன் பொண்டாட்டியை
அடிக்கிறது போல.

461. குருட்டுப் பூனை விட்டத்தில்
பாய்ந்தது போல.

462. குருடனுக்குத் தெய்வம் துணை.

463. குருவுக்கு துரோகம் செய்தாலும்
குடலுக்குத் துரோகம் செய்யாதே.

464. குருவி இருக்க
பனம்பழம் விழுந்தது போல.

465. குரைக்கிற நாய் கடிக்காது.

466. குரைக்கிற நாய்க்குத் தலை வீங்கும்.

467. குருடி தண்ணிக்குப் போக
ஏழுபேர் மெனக்கெடு.

468. குழந்தையும் தெய்வமும்
கொண்டாடும் இடத்தில்.

469. குறை குடம் கூத்தாடும்.

470. குறை தீரும்னு கோவிலுக்குப் போனாளாம்
கோபுரம் இடிஞ்சி மண்டையில விழுந்ததாம்.

கூ

471. கூத்தியா வந்து பின்னால நிக்குறா
குஞ்சி இல்லாத சங்கடம்

472. கூதி கொழுத்து
அரிவா மணையில ஏறிச்சாம்.

473. கூட இருந்து
குரல் வளையை அறுக்கிறவன்.

474. கூட்டி வைத்துப் பறிகொடுக்கும்
கூட்டுத் தேனி போல.

475. கூரை ஏறிக் கோழி பிடிக்கத் தெரியாதவன்
வானம் ஏறி வைகுண்டம் போறேன் என்றானாம்.

476. கூரையில சோறு போட்டா
ஆயிரம் காகம்.

477. கூலிக்குக் குத்தலாமாம்
கம்புக்கூட்ட உயர்த்தப்படாதாம்.

478. கூலி கொடுத்துச் சூனியம்
வச்சது போல.

479. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.

480. கூறு கெட்ட மாடு
நூறு கட்டுப் புல்லுத் திங்குது.

கெ

481. கெஞ்சினா மிஞ்சுவார்
மிஞ்சினா கெஞ்சுவார்.

482. கெட்டிக்காரன் வாழை
எட்டு மாதத்தில ஈனும்.

483. கெட்ட குடி வாழும்
செத்த குடி வாழாது.

484. கெட்டுக் கிடந்தாலும் நட்டுக் கிட

485. கெட்டவன் பட்டணம் போ.

486. கெடுவான் கேடு நினைப்பான்.

கே

487. கேக்க ஆளில்லாட்டா கரையான்
மோடு வரை ஏறும்.

488. கேப்பார் பேச்சு கேட்காதே
வீம்பா மூத்திரம் குடிக்காதே.

489. கேடு வரும் பின்னே - மதி
கெட்டு வரும் முன்னே.

கொ

490. கொட்டு முழக்கம் இல்லாவிட்டாலும்
குரவை முழக்கமாவது வேண்டாமா.

491. கொடுக்கிற நாயன்
கூரையைக் கிளப்பிக்கிட்டும் கொடுப்பான்.

492. கொடுத்தது கேட்டால் அடுத்தது பகை.

493. கொடுமை கொடுமைன்னு
கோயிலுக்குப் போனாளாம்
அங்கே ரெண்டு கொடுமை நின்னு
சிங்கி சிங்கின்னு ஆடிச்சாம்.

494. கொல்லப் புடிச்சாலும் வாள் வாள்
கொடுக்கப் புடிச்சாலும் வாள் வாள்.

495. கொல்லன் இருக்கிற இருப்பப் பாத்து
குரங்கு எதுக்கோ பூணுகட்டச் சொல்லிச்சாம்.

496. கொலை செய்தவன் ஏத்தாலும்
குசு விட்டவன் ஏக்கமாட்டான்.

497. கொண்டவ சரியா இருந்தால்
கூரை ஏறிக் கோழி பிடிக்கலாம்.

498. கொண்டவன் இருக்க
கண்டவனோடு போவானேன்.

499. கொண்டவன் துணை இல்லாதவளுக்கு
கூரை இலக்கும் துணையில்லை
(இலக்கு - ஈர்க்கின் இரண்டு பக்கமும் இருப்பது)

500. கொளத்த கோவிச்சிட்டுக்
குண்டி கழுவாமப் போனானாம்

501. கொள்ளும் வரை கொண்டாட்டம்
கொண்ட பின் திண்டாட்டம்.

502. கொறத்தி புள்ள பெத்தா
கொறவன் காயங் குடிப்பானாம்.

503. கொன்னாப் பாவம் தின்னாத் தீரும்.

504. கொன்னையன் ஊர்ல
ஊமையன் ராஜா

கோ

505. கோணாத புத்தி கோடி படித்தாலும்
சாணான் புத்தி சாணுக்குள்ள

506. கோடி குற்றம் செய்தாலும்
கொண்டணைப்பான் கொழுனன்.

507. கோடி ஒரு வெள்ளைக்கு
குமரி ஒரு பிள்ளைக்கு.

508. கோடேறியவன் ஓடேறுவான்.

509. கோவைக் கொடி பறிக்கப் போனேன்
கோவிச்சிக்கிட்டார் பண்டாரம்
அவிச்சிப் பொரிச்சி முன்னே வச்சேன்
சிரிச்சிக்கிட்டார் பண்டாரம்.

510. கோழி முட்டைக்குத் தலையுமில்லை
கோயில் ஆண்டிக்கு முறையுமில்லை.

511. கோழி மிதிச்சி குஞ்சு சாகுமா.

ச

512. சட்டி ஓட்டை ஆனாலும்
கொளுக்கட்டை வெந்தாச் சரி

513. சடையப் பிடிச்சா பண்டாரம்
தானே வருவாரு.

514. சந்தியிலே பந்தானாள்
தலைகுலைந்த நூலானாள்.

515. சத்தியத்துக்கு அறச்ச பிள்ளை
தறவாடு ஆளாது.

516. சம்பிராயக் கோழி
செம்பராம்பூர்ல முட்டையிட்டாம்.

517. சமர்த்தி சந்தைக்குப் போனானாம்
வட்டியும் கிண்ணியாப் போச்சாம்.

518. சர்க்கரை பந்தலில் தேன்மாரி
பொழிந்தது போல.

519. சவரிராயன் முள்ளுப் போடுவான் நாய் நக்கும்.

520. சவம் நாளி அரி பொங்குறத
காப்பக்கா பொங்கி
கஞ்சியும் தண்ணியுமாக்
குடிச்சிட்டு போறது.

521. சனிப் பிணம் தனிப் போகாது

சா

522. சாண்பிள்ளை ஆனாலும்
ஆண்பிள்ளை ஆண்பிள்ளைதான்.

523. சாணான் ஒரு அடி அடிச்சா
ஒரு முந்தி அவுப்பான்

524. சாணான் கருப்பட்டி தின்னது அறுதி

525. சாணான் எச்சில் கருப்பட்டி

526. சாணான் உறவு சட்டிக்குள்ள பெட்டிக்குள்ள

527. சாண ஏறினால் முழம் வழுக்கும்.

528. சாப்பாட்டுக்கு நானும்
மோதிரப் பணத்துக்கு எங்கப்பனும்.

529. சாமியே சைக்கிள்ல போகச்சில
பூசாரி புல்லட்டு கேட்டாராம்.

530. சாமி வரங் கொடுத்தாலும்
பூசாரி வரங் கொடுக்கமாட்டார்.

531. சாமைக் கதிரும் சக்கிலிப் பெண்ணும்
சமைஞ்சாத் தெரியும்.

சி

532. சிங்கத்துக்கு என்னடா பங்கம்
தொளி கண்ட இடத்துல சவுட்டுவான்
தண்ணி கண்ட இடத்தில கழுவுவான்.
(தொளி - சேறு)

533. சித்திரை அப்பன் தெருவிலே

534. சித்திரையில் சுருங்கி வைகாசியில பெருகு

535. சிரிச்சா உண்டு சினத்தா இல்ல.

536. சின்ன மீனு பெரிய மீனுக்கு இரை

537. சிறு துரும்பும் பல்லு குத்த உதவும்

538. சிறு துளி பெரு வெள்ளம்

சீ

539. சீலை இல்லன்னு சித்தப்பன்
வீட்டுக்குப் போனாளாம் - அவன்
ஈச்சம் பாயைக் கட்டிக்கிட்டு எதுக்க வந்தானாம்.

540. சீறும் பாம்பை நம்பினாலும்
சிரிக்கும் பெண்ணை நம்பாதே.

541. சீனிக் கிழங்கு தின்ன பண்ணி
செவியறுத்தாலும் நிக்காது.

542. சீ என்று சிரிச்சா அந்தத் தெருவுல
சீரகம் போட்டு தாளிக்கிறா இந்தத் தெருவில.

சு

543. சுக்கு அரையாத கசாயம் உண்டா?

544. சுத்தம் இருந்தால்
சித்தெறும்பு தீண்டாது.

545. சும்மா கிடந்த மாமியாரு
கால்பணத் தாலி
காணாது என்றாளாம்.

546. சுண்டைக்காய் கால்பணம்
சுமட்டுக் கூலி முக்காப்பணம்.

547. சும்மா கிடந்தால்
சுகம் கிடைப்பது எக்காலம்.

548. சும்மா கிடந்த சங்கு
ஊதிக் கொடுத்தானாம் ஆண்டி.

549. சும்மா கிடந்த கிழவனுக்கு
திண்ணையும் பாயும் காணாதாம்.
(காணாதாம் - போதாதாம்).

550. சும்மா கொடுத்த மாட்டுக்குப்
பல்லப் புடிச்சிப் பாத்தானாம்.

551. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்.

552. சுற்றி வந்தவ சுற்றி வந்தா சும்மா இருந்தவ சூலானா.

சூ

553. சூடு அடிக்கிற மாடு
வைக்கோல் திங்காம இருக்குமா?

554. சூடு சூடு என்கிறது சுண்டைக்காய்க்கு
கேடுன்னு நினைச்சுக்க.

செ

555. செட்டியடியும் சாரைக்கடியும்
ஆளைக் கொல்லாது

556. செட்டி கெட்டா பட்டுடுப்பான்

557. செய்யும் தொழிலே தெய்வம்

558. செய்வார் வினை செய்வாருக்கு
சீதாலெட்சுமி அம்மா பிச்சை போடு.

559. செல்லப் பிள்ளையப் பெத்து
மொண்ணப் பயலுக்கு கொடுத்தாளாம்.

சொ

560. சொந்தம் நமக்கு நன்மை பிறருக்கு.

561. சொம்மு எடுத்தது
கடன் தீர்க்கப் பத்தாது.

562. சொல்லிப் பார்
தல்லிப்பார்
தள்ளிக் களை.

563. சொல்லப் போனா பொல்லாப்பு
சொறியப் போனா அரையாப்பு

564. சொன்னவன் சொன்னான்
கேட்டவனுக்கு மதி எங்க போச்சு

சோ

565. சோத்துக்கு அலந்து
சொன்ன வேலை செய்தாலும்
சோறு பெரிசு என்பாள்
சொன்ன வேலை கொஞ்சம் என்பாள்.
கஞ்சிக்கு அலந்து
கனவேலை செய்தாலும்
கஞ்சி பெரிசென்பாள்
கனவேலை கொஞ்சமென்பாள்.
(அலந்து - பேராசைப்பட்டு)

566. சோத்துக் கத்தாளை - கொம்ம
நேத்துப் பெத்தாளே
நான் இல்லாட்டா - கொம்ம
நாறிப் போவாளே.

567. சோம்பேறி சோறு கேட்டான்
தின்னுபுட்டுத் திண்ணை கேட்டான்

த

568. தங்கச்சி பிள்ளை தன் பிள்ளையா இருந்தா
தவசிக்கு ஏன் போகணும்

569. தச்சன் அடிச்சான்
கிடாவு இழுத்தது.

570. தச்ச இலைக்காரனுக்குத் தரையில போடு
எனக்கும் என் பெண்டாட்டிக்கும் இலையில் போடு.
(தச்ச - தைத்த)

571. தண்ணிக்குள்ளே குமிழி விட்டா
தளத்துக்கு மேலே எழும்பாமல் இருக்குமா?

572. தண்ணியிலே தடம் பார்க்கிறவன்

573. தம்பி உடையான் படைக்கு அஞ்சான்.

574. தருவேன் தருவேன் என்பாள் தாகம் தீராது .
குடுப்பேன் குடுப்பேன் என்பாள் கும்பி நிறையாது.

575. தரித்திரம் கொண்டு அகத்த இருக்கவும் முடியல்ல
அந்தஸ்து கொண்டு புறத்தே இறங்கவும் முடியல்ல.

576. தரித்திரியம் பிடிச்சவன் விறகுக்குப் போனா
விறகு கிடச்சாலும் கொடி கிடைக்காது.

577. தலை இருக்கும்போது வால் ஆடலாமா?

578. தல்லிப் பழுக்குறது பழமா
தானாப் பழுக்கிறது பழமா.

579. தலை பிழைத்தது தம்பிரான் புண்ணியம்.

580. தலைவனில்லாத அரசு போல.

581. தலைவன் மயங்கினால்
சகலரும் மயங்குவார்.

582. தலை வாசல் வழி ஒருத்தி வந்தாள்
புறவாசல் வழி ஒருத்தி போனாள்.

583. தவிச்ச வாய்க்குத் தண்ணி தராதவ.

584. தங்கத்தையும் தவிடாக்கித் தந்திருவான்.

585. தற்கொல்லியை முற்கொல்லி
கொல்லுவது போல.

586. தன்னால கெட்டா
அண்ணாவி என்ன செய்வார்.

587. தன் பல்லைத் தானே
குத்தி நாத்துவது போல.

588. தன்னால கெட்டவன் பத்ம சூரன்.

589. தன் வினை தன்னைச் சுடும்
ஓட்டப்பம் மோட்டச் சுடும்.

590. தனக்கு எளியது சம்மந்தம்.

591. தனக்கு மிஞ்சினது தான் தர்மம்.

592. தனக்கு இருந்தாலும் போதாது
தலைமாட்ல இருக்கணும்.

593. தனக்குப் போகத்தான் தானமும் தர்மமும்.

594. தனித் தின்னி விருந்தறியாள்
தொட்டு நக்கி தயிர் கடையாள்.

தா

595. தாட்சண்யம் உள்ள
தேவடியாளுக்குச் சேல கட்ட நேரமில்லை.

596. தாடியப் பிடிச்சா
பண்டாரம் தானே வருவாரு.

597. தாய் எட்டடி பாய்ஞ்சா
புள்ள பதினாறடி பாயும்.

598. தாய் ஏழு காதம் முழங்கி
மக பதினாலு காதம் முழங்கி.

599. தாய்க்குப் பின் தாரம் - தாரம்
வந்த பின் தாய் ஓரம்.

600. தாய்த் தாலியையும் - தட்டான்
தப்பாமத் திருடுவான்.

601. தாய்க்குத் தவிடு இடியான்
தம்பிரானுக்கு இரும்பு அடிப்பான்.

602. தாய் சொல் கேட்காத வவ்வால்
தலை கீழாத் தொங்கும்.

603. தாய்மாமன் பெண்டாட்டி நாய் மாதிரி.

604. தாயப் போலப் பிள்ளை
நூலைப் போல சேலை.

605. தாயும் பிள்ளையும் ஆனாலும்
வாயும் வயிறும் வேற.

606. தாயைத் தண்ணித் துறையில பார்த்தா
மகளை வீட்ல பார்க்க வேண்டாம்.

607. தாயைக் கழிச்சாலும்
தண்ணியைக் கழிக்காதே.

608. தாரம் வாச்சது வள்ளுவருக்கு
தம்பி வாச்சது ராமருக்கு.

609. தாரம் இழந்தால் தா(ழ்)வாரம்.

610. தாலியை அழிச்சி பீலி செய்தது போல.

611. தாழ உழுவார் இல்ல தட்டிக் கேட்பார் இல்ல.

612. தாள் பறக்குது தூள் பறக்குது
கதவில்லாத சங்கடம்
பெண்டாட்டி வந்து பின்னே நிக்கிறா
புடவை இல்லாத சங்கடம்.

613. தான் வெட்டுன கிணறுண்ணு
தலை கீழாக் குதிச்சானாம்.

614. தான் உடைச்சா மண்சட்டி
எதிரி உடைச்சா பொன்சட்டி.

615. தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும்.

616. தான் போனா தரும ராஜா
எதிரி போனா எருமை ராஜா.

617. தானத்தில் சிறந்த தானம் நிதானம்.

தி

618. திருடி தெருவுக்கு வந்தாலும்
தேவடியா தெருவுக்கு வரமுடியாது.

619. தின்னு கெட்டது வயிறு
தின்னாமக் கெட்டது உறவு.

620. தினை விதைத்தவன் தினை அறுப்பான்
வினை விதைத்தவன் வினை அறுப்பான்.

து

621. துக்கம் மிகுந்தவர்கள் அழுவார்கள்
துதி மிகுந்தவர்கள் துதிப்பார்கள்.

622. துட்டனைக் கண்டால் தூர விலகு.

623. துணை பட்டவன்
கொலைப்பட்டான்.

624. துள்ளுற மாடு பொதி சுமக்கும்.

625. தும்மலிலே போனாலும் தூறலிலே போகாதே.
(தும்மல் - கெட்ட சகுனம்)

தூ

626. தூண்டினாத் தானே விளக்கெரியும்.

தெ

627. தெரு மறிச்சான் கோயிலின் எதிரே.

628. தெரு வாசல் ஆண்டியும்
ஒரு வேளை உதவுவான்.

629. தென்னை மரத்துல தேள் கொட்டிச்சாம்
பனை மரத்தில நெறி கட்டிச்சாம்.

தே

630. தேடின மூலிகை காலில் சுற்றினது போல.

631. தேரோட தென்னை வண்டியோட வாழை.

632. தேரோட மாலை தெருவோட

633. தேனத் தடவிக்கிட்டு தெருவெல்லாம்
பெரண்டாலும் ஒட்றதுதான் ஒட்டும்.

634. தேன் எடுத்தவன் நக்காம இருப்பானா.

தொ

635. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

636. தொட்டாச் சிணுங்கி தோட்டத்தில முள்ளங்கி.

637. தொளிஞ்சி பறக்கினது.....
(தொளிஞ்சி - உதிர்ந்து)

தை

638. தை பிறந்தால் வழி பிறக்கும்.

639. தை மாத்தப் பனி தரையைத் துளைக்கும்.

ந

640. நக்கக் குடுக்காத வாணியன்
ஒக்கக் கொடுப்பான்.
(ஒக்க - மொத்தமாக)

641. நக்குற மாட்டுக்குக்
செக்குன்னு உண்டா
சிவலிங்கம்னு உண்டா.

642. நகம் படாம நத்தை எடுக்க முடியுமா?

643. நட்ட இடம் சுட்டுடுவா
நாடு விட்டுப் பறந்திடுவா.

644. நட்டு வச்சவன் தண்ணி ஊத்துவான்.

645. நடக்க மாச்சப்பட்டு
சித்தப்பன் வீட்ல பொண்ணு எடுத்தானாம்.

646. நடத்துங் கடவுள் நடத்தி வந்தால்
நம்மால் என்னச் செய்ய முடியும்?

647. நண்டு கொழுத்தா
வளையில தங்காது.

648. நண்டு கொழுத்தா
குண்டுக்குள்ளே கிடக்காது.

649. நண்டு திங்கிற நாட்டுக்குப் போனா
நடுத்துண்டு எனக்குங்கணும்.

650. நாய் வாயில தேன் இருந்தா
நக்கவா முடியும்.

651. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு
நல்ல மனுசனுக்கு ஒரு சொல்லு.

652. நல்லாருக்குப் பெய்யும் மழை எல்லாருக்கும்.

653. நல்லாருக்கு ஈந்த உபகாரம் கல்லில் எழுத்து
அல்லாருக்கு ஈந்த உபகாரம் தண்ணீர் எழுத்து.

654. நல்லெண்ணெய் கவுந்தா
நாய்க்கிக் கொண்டாட்டம்.

655. நல்ல உடம்புக்கு நாளி தண்ணி.

656. நரிக்கி இளக்கம் கொடுத்தா
கிடைக்கி ரெண்டு ஆடு பிடிக்கும்.

657. நரியை ஏய்க்குமாம்
சில்லா நண்டு.

658. நரிக்கி ஏது சிவலோகம்.

659. நன்றி செய்தவரை நாய்க்குப் புடிச்சித்
தாலி கட்ட வச்சிடுவா.

நா

660. நாசுவக் குடி மாப்பிளைக்கி
மீச வச்சது போல.

661. நாம் ஒன்று நினைக்க
தெய்வம் ஒன்று நினைக்கும்.

662. நாய் நம்மள கடிச்சிட்டுண்ணி
நாம நாயைக் கடிக்கலாமா?

663. நாய் வித்த காசு குலைக்காது.

664. நாய் குரைத்து நேரம் விடியுமா?

665. நாய்க்க வாணாளு களியல் கம்பால.
(வாணாளு - வாழ்நாள்)

666. நாய் கெட்ட கேட்டுக்கு
தேங்காய்ப் பாலும் சோறுமாம்.

667. நாய் போற இடம்தான்
வாலும் போகும்.

668. நாய் எச்சித் தின்னாலும்
பேய் எச்சித் தின்னப்படாது.

669. நாய் பத்தஞ் சேருமா?
(பத்தம் - மந்தை)

670. நாய் வாலை நிமிர்த்த முடியுமா?

671. நாயை அடிப்பானேன்
பீயைச் சுமப்பானேன்.

672. நாயைக் குளிப்பாட்டி
நடுவீட்ல வச்சாலும்
அது குப்ப மேட்டுக்குத்தான் ஓடும்.

673. நாயை அடிச்சிப் பல்லிளி பார்க்கவா.

674. நாள் வழியே கடனெடுத்துத்
தேவடியாளுக்குக் கொடுத்துக் கெட்டவர் போல.

675. நாளி அரியில சேர்த்து வைக்காதவன்
நாலுபடி அரியிலேயா சேர்த்து வைக்கப் போறான்.

676. நாற வாயன் தேடிவச்சான்
கேண வாயன் தின்றழிச்சான்.

677. நான் நாய ஏவுனா நாய் வால ஏவுமாம்.

678. நான் போனா சண்டை வரும்
நீ போய் தலைமுடியைப் பிடி.

679. நானும் போனேன்
நாதியத்துப் பேயும் போச்சு.

நி

680. நித்தம் கொடுத்தா முத்தமுங் கசக்கும்.

நீ

681. நீ அவல் கொண்டு வா
நான் உமி கொண்டு வாரேன்
ரெண்டு பேருமே கலந்து
ஊதி ஊதித் தின்னலாம்.

682. நீயத் தெரியாத மாட்ட
வெள்ளங் கொண்டு போகும்.

683. நீயும் நானும் ஒண்ணு
உன் வாயில் மண்ணு.

684. நீர் அடிச்சி நீர் நீங்காது.

685. நீர்க்கோலி கடிச்சாலும்
அத்தாளம் பட்டினி.

நூ

686. நூறு வரை ஏறு நூற்றுக்கு மேலே ஊற்று.

687. நூற்றைக் கெடுத்தது குறுணி.

நொ

688. நொங்கு தின்னவன் போயிட்டான்
கூந்தல் வழிச்சவன் அகப்பட்டான்
(கூந்தல் - சுளை எடுக்கப்பட்ட நொங்கு)

689. நொண்டிக் குதிரைக்குச் சறுக்குனது சாக்கு

690. நொய் அரிசி சோறாகாது
கொள்ளுக் கொடி பந்தல் ஏறாது.

691. நோய்க்கும் பாரு பேய்க்கும் பாரு.

ப

692. பங்கு வச்சித் தின்னால் பலன் உண்டு.

693. பங்குனி மழை பதம் கொடுக்கும்.

694. பசிச்சவன் பழங்கணக்குப் பார்த்தது போல.

695. பசி பொறுத்தாலும் பாட்டு பொறுக்காது.

696. பசி வந்தா பத்தும் பறக்கும்.

697. பசி ருசியறியாது
நித்திரை அகமறியாது.

698. பசி வந்தா ருசி வரும்.

699. பசு வயசானாலும் பால் ருசி மாறாது.

700. பட்ட காலிலே படும்
கெட்ட குடியே கெடும்.

701. பட்டு கிழிஞ்சா பொட்டியில வைக்கலாம்
பழந்துணி கிழிஞ்சா எங்கே வைக்கலாம்?

702. பட்டப் பகல்ல போறவளுக்குத் தட்டு மரக்கட்டி.

703. பட்டால் அறிவான் சாணான்
படாமல் அறிவான் சூத்திரன்.

704. பட்டு வேட்டி கட்டிக்கிட்டுப்
பாதையிலே போற மச்சான்
எட்டி ஒரு முத்தம் கொடும்
ஏறிக்கிறேன் தோளு மேல.

705. படிச்சவ படிக்கட்டுல
படிக்காதவ செடிக்காட்ல

706. படி அளப்பவன் உத்தமன்.

707. பண்டைய பாட்டையெல்லாம்
பரணிலே போட்டுட்டு
செம்பானை நெல்லுக்குத்தி
சீக்கிரத்தில பொங்க வையி.

708. பண்ணியோட சேர்ந்த
கண்ணும் பீ திங்கும்.

709. பணம் பத்தும் செய்யும்.

710. பத்து அரிசியும் வேகமாட்டேங்கு
பாவி என் பிராணனும் போகமாட்டேங்கு.

711. பத்தையத்தில நெல்லுங் குறையக்கூடாது
பெண்டாட்டி பிள்ளை முகமும் வாடக்கூடாது.

712. பதறாத காரியம் சிதறாது.

713. பதக்குச் சாணானுக்கு
உழக்கு வெள்ளாளன்.

714. பந்திக்கு முந்து படைக்குப் பிந்து.

715. பய்யப் பய்யப் பாயும் தண்ணி
கல்லும் குழியப் பாயும்.

716. பரிசு கெட்ட தண்ணிய விட
பட்டினி நல்லது.
(பரிசு - மரியாதை)

717. பகையாளி குடும்பத்தை
உறவாடிக் கெடுத்தது போல.

718. பரணியில் பிறந்தவன்
தரணி ஆள்வான்.

719. பருங் குண்டிக்கித் தடுக்கு போடுறவ.

720. பருவந் தவறினால் பனங்கிழங்கு நாராகும்.

721. பருத்தி படும் பாட்டிலும்
பத்து ரெட்டிப் பாடு.

722. பல்லாக்கு ஏறப் பலனிருக்கு
உன்னி ஏறப் பெலனில்ல.

723. பல்லு போனா சொல்லு போச்சி.

724. பல கண்பட்டா பாம்பும் சாகும்.

725. பல நாள் திருடன்
ஒரு நாள் அகப்படுவான்.

726. பழகப் பழக பாலும் புளிக்கும்.

727. பழ வாரியலுக்குப் பட்டுக் குஞ்சம்.

728. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல.

729. பழைய குருடி கதவத் திறடி.

730. பழைய கிணற்றைத் தூர் வாராதே.

731. பனங்காட்டு நரி
சலசலப்புக்கு அஞ்சுமா.

732. பனைமரத்து நிழலும் சரி
பரதேசி உறவும் சரி.

பா

733. பார்க்கப் போன சீமாட்டி
பல்லு உடைஞ்சி செத்தாளாம்.
எடுக்கப் போன சீமாட்டி
இடுப்பு முறிஞ்சி செத்தாளாம்.

734. பாடு பாடுண்ணா பறையனும் பாடமாட்டான்
தன்னால பாடினா தலைகீழாய்ப் பாடுவான்.

735. பாத்திரம் அறிஞ்சி பிச்சை குடு
கோத்திரம் அறிஞ்சி பெண்ணை எடு.

736. பாத்துத் தெரிஞ்சிக்கிட்டாம் பண்ணைக்கீர
கேட்டுத் தெரிஞ்சிக்கிட்டாம் தெய்யம் கீர.

737. பாம்பறியும் பாம்பின் கால்.

738. பாம்புஞ் சாகாம கோலும் முறியாம.

739. பயப்பட்டாலும் பாயும் புலி போல் நிக்கணும்.

740. பாழாப் போறது பசு வயித்திலே.

741. பானையா சட்டியா மாத்தி எடுக்க.

742. பானையில் சோறு இருந்தால்
பாப்பாத்தி பாராமல் போடுவா.

பி

743. பிச்சைக்காரனுக்குப்
பயந்து அடுப்பு மூட்டாம இருக்கிறதா.

745. பிடித்தான் சைத்தான்
பின் தொடர்ந்தான் மாத்தான்.

746. பிராமணப் பிள்ளை
நண்டு பிடிச்சது போல.

747. பிள்ளைக்கு அலந்து
பேயைக் கட்டி அழுதாளாம்.

748. பிள்ளை பெறப் பெற ஆசை
பணம் சேரச் சேர ஆசை.

749. பிள்ளை இல்லாத வீட்டில் - கிழவன்
துள்ளி விளையாடினானாம்.

750. பிள்ளைச் செல்வம் பெருஞ் செல்வம்.

751. பிள்ளைய அடிச்சி வள
முருங்கைய முறிச்சி வள.

752. பிள்ளையார் பிடிக்கக் குரங்காப் போச்சாம்.

753. பிறவிக்குணம் மட்டை
வச்சி கெட்டினாலும் மாறாது.

பீ

754. பீத்த கம்பளி லாத்தப் போச்சாம்
பிள்ளைய எல்லாம் பொறத்தால போச்சாம்.

755. பீயில அரிசி பொறுக்கி
புளிச்சத் தண்ணியில காடி காய்ச்சுறவ

பு

756. புண்ணியமாப் போகுதுனு பழம் பொடவ கொடுத்தாப்
பின்னால மொளம் போட்டு பாத்தாளாம்.

757. புதுச் சுளவக் கண்டா
பழஞ் சுளவு பிடிக்காது.

758. புல்லில் சிந்திய தவிடு போல.

759. புலிக்குப் பசித்தாலும் புல்லைத் திங்காது.

760. புலியைப் பார்த்து
பூனை சூடு போட்டுக்கிட்டாம்.

761. புலி வாயில் அகப்பட்ட
மாமிசம் திரும்பக் கிடைக்குமா.

பூ

762. பூக் கடைக்கு விளம்பரம் வேண்டுமா.

763. பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்.

764. பூனைக்கு யாரு மணி கெட்டுவா.

765. பூனை சொர்க்கலோகம் போச்சாம்
கருவாட்டுத் தலையை கன்னத்துக்க மறைச்சிட்டு.

766. பூனை மெலிஞ்சா
எலி மச்சான் முறை கொண்டாடும்.

பெ

767. பெல்லு மில்ல பிரேக்கு மில்ல.

768. பெட்டியின்னா ஒரு வார்த்தை
புடிச்சிகிட்டா தாயும் மகளும்
வெட்டுண்ணு விடியும் மட்டும்
விட வில்லை தாயும் மகளும்.

பே

769. பேத்தி மூத்தா பெண்டாட்டி.

770. பேய்க்கி வாழ்க்கைப் பட்டா
மரம் ஏறித்தான் ஆகணும்.

பை

771. பையத் தின்னாப் பனையும் திங்கலாம்.

பொ

772. பொதுவில் அடியான் புழுத்துச் செத்தான்.

773. பொட்ட கூடுற இடம் வெட்ட

774. பொம்பள சிரிச்சாப் போச்சி
புகையில விரிச்சாப் போச்சி.

775. பொய்யச் சொன்னாலும்
பொருந்த சொல்லணும்.

776. பொழைக்க முடியாத பொட்ட
பொண்டாட்டிய ஏண்டா தொட்ட

777. பொறுக்கும் மட்டும் பொறுப்பான் பிறகு
கொப்பன் தான் பொறுப்பான்.

778\. பொன்னு கிடைத்தாலும்
புதன் கிடைக்காது.

போ

779\. போக்குத் தெரிஞ்சவர் போலீசு - நாலு
வாக்குத் தெரிந்தவர் வாத்தியாரு.

780\. போக்கு முட்டினா - புலி
ஆள் மேலே.

781\. போடாத மகராசியே பிச்சை போட்டுட்டா
நித்தம் போடுற தேவடியாளுக்கு என்ன ஆச்சி?

782\. போது மென்ற மனமே
பொன் செய்யும் மருந்து.

783\. போ என்னு சொல்லாமப்
போச்சப் போட்டுத் துரத்துவாளாம்.

ம

784\. மக வாழுற வாழ்வில மாசத்துக்கு
எட்டுக்கட்டு வெளக்குமாறாம்.

785\. மகரத்துச் சனியன்
சுற்றிப் பிடித்தது போல.

786\. மகன் செத்தாலும் பரவாயில்லை
மருமக தாலி அறுக்கணும்.

787\. மச்சினன் இருந்தால்
மலை ஏறிப் பொளைக்கலாம்.

788\. மண்ணாகப் பிறந்தாலும்
பெண்ணாகப் பிறக்கக் கூடாது.

789\. மண்டை இருந்தால்
மயிர் மொளைக்கும்

790. மண்ணு தின்னுறத
மகராசன் தின்னா என்ன?

791. மதத்துச் சாவாரை
எடுத்துப் புதைப்பாருண்டா?

792. மதுரைக்கு வழி வாயிலே.

793. மந்திரம் கால் மதி முக்கால்.

794. மயிலே மயிலே இறகு
போடு என்றால் போடுமா.

795. மரத்தை வச்சவன் தண்ணி ஊத்துவான்.

796. மருந்தும் விருந்தும் மூணு நாள்.

797. மலையை எடுப்பேன் என்றவன்
தூக்குங்கள் எடுக்குறேன் என்றானாம்.

798. மலையாளம் பெருத்த சீமையில
மாப்பிள்ளைக்குப் பஞ்சமா?

799. மழை விட்டும் தூவானம் விடல்ல.

800. மழை வருகிறதும் குழந்தை பிறக்கிறதும்
மகா தேவருக்குக் கூட தெரியாது.

801. மனம் உண்டுன்னா இடமும் உண்டு.

802. மன முரண்டுக்கு மருந்துண்டா?

803. மனுப் போட்டு
மலடி பிள்ளை பெறப் போறாளா?

804. மலை போல வந்தது
பனி போலப் போச்சு.

மா

805. மாசாத்தன் தேடும் முதல்
மலையளவும் கடலளவும்

அத்தனையும் அழிப்பதற்கு
அவன் பிறந்தான் கோவலவன்.

806. மாசிக்கும் பங்குனிக்கும்
மத்தளம் கொட்டு
சித்திரை பிறந்தால்
குப்புறத் தட்டு.

807. மாசி பார்க்காதவன் மாம் பூவைப் பார்.

808. மாசி மழை மா பூக்கும்.

809. மாதா ஊட்டாத சோறு
மாங்காய் ஊட்டும்.

810. மாடு வாய்க்கணும் மகராசனுக்கு
பெண்டாட்டி வாய்க்கணும் புண்ணியவானுக்கு.

811. மாப்பிளை பெண்ணைப் பார்க்கிற பார்வை வேற
மாமியார் பெண்ணைப் பார்க்கிற பார்வை வேற.

812. மாப்பிள்ளைக்கு அலந்து
மலப்பாம்பைக் கட்டி அழுதாளாம்.

813. மாமியா உடைச்சா மண்சட்டி
மருமக உடைச்சா பொன்சட்டி.

814. மார்கழிப் பனி விளைச்சல் பெருகும்.

815. மார்கழிப் பனி மண்டையைப் பிளக்கும்.

மி

816. மினுக்கிச் சித்தாத்தா - வடமலைக்
கிழவன் பெண்டாட்டி
கடைக்கு போனாளாம்
ஒருபுறம் கனத்து வந்தாளாம்.

மீ

817. மீனுக்கு நீந்தச் சொல்லி கொடுக்கணுமா.

மு

818. முதல் கோணல் முற்றிலும் கோணல்.

819. முத்தத்துப் பருவப்பனை பாளை வாரதும் சரி
மூத்த மக தாலி அறுத்து வீடு வாரதும் சரி.

820. முட்டைக்கு மயிர் பிடுங்குவான்.

821. முட்டாளுக்கு வழி கிட்ட

822. முட்டையிடும் கோழிக்குத்தான்
மூலம் கரிக்கும்.

823. முயலைக் கலச்சிட்டு
நாய்க்கு அலைஞ்சானாம்.

824. முடப்புல்லு முக்குர்னி
வெள்ளத்தத் தடுக்கும்.

825. முருங்கை வளர்ந்தால் தூணுக்காகுமா?

826. முருங்கையை முறிச்சி வளக்கணும்
பிள்ளையை அடிச்சி வளக்கணும்.

827. முலை கொடுத்தவ மூதேவி
முந்தானை விரிச்சவ சீதேவி.

828. முன் கிளையைப் போலத்தான்
பின் கிளையும் இருக்கும்.

829. முன்னங்கை நீண்டாதான் முழங்கை நீளும்.

830. முன்னே பின்னே செத்தாத்தானே
சுடுகாடு தெரியும்.

831. முன்னே பட்ட புண் முதுகினில் இல்லையோ
மோசம் போன பின்னும் ரோசமாச்சுதே.

மூ

832. மூத்த கொளுந்தனாரு செத்த
முப்பதாம் நாளு
மூங்கிக் கொல்லைக்கு போனாளாம்
ஏங்கி அழ.

833. மூணு நாளைக்கு முட்டையும் சோறும்
மூணாவது நாள் மட்டையும் மாறும்

834. மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிசு.

835. மூளி அலங்காரி மூதேவி சண்டாளி.

மே

836. மேயிற மாட்டை
நக்குற மாடு கெடுத்தது போல.

837. மேலே மினுக்கடி உள்ளே புழுக்கடி.

மொ

838. மொடப்புல்லு முக்குருணி
வெள்ளத்தத் தடுத்தது போல.

839. மொய் அரிசி நிரந்து வேகாது
கொள்ளுக் கொடி பந்தலுக்கு ஏறாது.

மை

840. மைனர் ஜாலி மணிபர்சு காலி.

ய

841. யானை உண்ட விழாம்பழம் போல.

842. யாரை நம்பினாலும் ஊமைய நம்பாதே.

843. யோக்கியரு வாறாரு
சொம்ப எடுத்து உள்ளே வையி.

ரா

844. ராசா போனது பெரும் பாதை.

845. ராசாப் பயலோட சேர்ந்த
கூத்தாடிப் பயலுங் கெட்டான்.

846. ராவுத்தரே ஆலாப் பறக்குறாரு
குதிரை கோதம்பு ரொட்டி கேட்டதாம்.
(கோதம்பு - கோதுமை)

வ

847. வக்கப் பிடிச்சாலும் வாள் வாள் - பண்ணி
வளர்க்கப் பிடிச்சாலும் வாள் வாள்.
(வக்க - நெருப்பில் வாட்ட)

848. வக்கத்தவனுக்கு வாத்தியார் வேல
போக்கத்தவனுக்குப் போலீஸ் வேல.

849. வகை வகையாச் சேர்த்த செல்வமெல்லாம்
என் மக்கள் வாய்
புகை புகையாப் போகுதே.

850. வச்சா குடுமி எடுத்தா மொட்ட

851. வந்தால் மலை போனா மயிரு.

852. வண்ணான் ஆட்டுத் தலைக்கு
அலைந்தது மாதிரி.

853. வந்த குடி வலுத்தது
இருந்த குடி எழுந்தது.

854. வந்தவன் தலையில வழிச்சுமடு
போறவன் தலையில பொட்டணச் சுமடு.

855. வயசுப் பொண்ணு மாடு மேய்க்கப் போனாளாம்
ஒரு மாடுகூட வீட்டுக்கு வரல்லியாம்.

856. வயித்துப் பிள்ளையை நம்பி
வளர்ப்புப் பிள்ளையைத் தொரத்தினாளாம்.

857. வயிறு நிறைஞ்சா
வாழைப்பழம் பல்லுக்கு அறாது.

858. வருத்தங் கெட்ட பிராமணன்
பருப்புச் சோறு கேட்டானாம்.

859. வராத பொருளுக்கு அழுதால் தீருமா.

860. வர வர மாமியார் கழுத போல ஆனாளாம்.

861. வரும் விதி வந்தால் எந்த விதி மாற்றும்.

862. வல்லவன் பம்பரம் மணல்லையும் ஆடும்.

863. வல்லவனையும் தள்ளுமாம் வழுக்கு பாறை.

864. வழி பேச்சு சண்டை - அதை
வளைச்சிக்கிட்டது கொண்டை

865. வளர்த்த கிடா மாருல பாஞ்சது போல.

வா

866. வாகை கூகை வக்கணத்தி
வாழுற வீட்டுக்கு ஆகாது.

867. வாணியன் எண்ணெய் போறத கவனிக்க மாட்டான்
கடுகு போறத கவனிப்பான்.

868. வாடைக் காத்தடிச்சி தாழை பூத்தது போல.

869. வாத்தியார் புள்ள முட்டாளு
வைத்தியன் புள்ள சீக்காளி.

870. வாய்க் கொழுப்பு சீலையில வடியிது.

871. வாய் பெருத்தவள் வழிக் கரையிலே.

872. வாயால் வருகிற சீதேவியைக்
காலால் உதச்சித் தள்ளுவது போல.

873. வாயில கூச்சமில்ல
வயித்தில வாட்டமில்ல.

874. வாழாத பிள்ளை தாயோடு.

875. வாழ்வு வரும் காலம் வாராது கண் தூக்கம்
கேடு வரும் காலம் கேளாது கண் தூக்கம்.

876. வாழைப்பழம் கொண்டு போனவ வாசலிலே
வாய் கொண்டு போனவ வீட்டுக்குள்ளே.

வி

877. வித்தாரக் கள்ளி விறகுக்குப் போனாளாம்
கத்தாள முள்ளு கொத்தோட குத்திச்சாம்.

878. விதிய வெல்ல யாரால் முடியும்.

879. விதி வீட்டச் சுத்திச்சாம்
விருந்தாளி பெண்டாட்டியச் சுத்தினானாம்.

880. விதியில்லாக் கொதி கொதித்தால்
விதனம் அடங்குமா.
(விதனம் - வலி, வேதனை)

881. விதி மறந்த மண்ணாவா
விருந்துக்காரன் கூட ஏன் போனா?

882. விதுக்கு வேப்பிலையாம்
வேளைக்கு ஒரு மாப்பிளையாம்.

883. விடிய விடிய ராமாயணம் கேட்டு
சீதைக்கு ராமன் சித்தப்பன் என்னாளாம்.

884. விடிஞ்சா வேடன் அடைஞ்சா ஆண்டி.

885. விடிய விடிய மழை பெய்தாலும்
ஓட்டாஞ்சல்லி முளைக்குமா.

886. விடியா மூஞ்சி விறகுக்குப் போனாளாம்
விறகு கிடைச்சும் கொடி அம்பிடல்லியாம்.

887. விரலுக்குத் தக்க வீக்கம் வேண்டும்.

888. விருத்தனுக்கு ஆசை வந்தா காசுக்கு நட்டம்
வேசிக்கு ஆசை வந்தா ஊருக்கு நட்டம்.

889. விளையும் பயிர் முளையிலே தெரியும்.

890. விளக்கு மாத்துக் கட்டைக்குப்
பட்டுக் குஞ்சம் வேறயா.

891. விளக்கு வச்சா மழை கிழக்கு.

892. விளக்கெண்ணெய் தேய்ச்சு
வீதியில படுத்தாலும்
ஒட்டுற மண்ணுதான் ஒட்டும்.

வீ

893. வீணுக்கு மாரடிச்ச கதையாப் போச்சு.

894. வீட்ல எலி வெளிய புலி.

வெ

895. வெக்கத்தை தூக்கி கக்கத்தில வை.

896. வெட்டருவாளுக்கு வெயிலா, மழையா

897. வெடிக்காரன் கோழி குசுவுக்கு அஞ்சுமா.

898. வெந்தயம் போடாத கறியும் கறியல்ல
சந்தடியில்லாத ஊரும் ஊரல்ல.

899. வெயில் அடிக்கும் போதே
காயப் போடணும்.

900. வெள்ளாளன் போற இடமும்
வெள்ளாடு போற இடமும் வெட்டை

901. வெள்ளரிக்காய் விற்ற பெட்டி
வெறும் பெட்டி.

902. வெறுங்கை முழம் போடுமா.

903. வெறும் புளியத் தின்னு
ஏன் நாக்கு கரிக்கணும்.

வே

904. வேகமெல்லாம் உள்ளடக்கி
மேலே ரெண்டு பாட்டும் பாடு.

905. வேலை செய்தவனுக்கு கூலி உண்டு.

906. வேலிக்குள்ளே போற ஓணான புடிச்சி
சீலைக்குள்ள விட்டாளாம்.

907. வேலை இல்லாத நாசுவன்
வீட்டைப் போட்டு செரைச்சானாம்.

908. வேலைக் கள்ளிக்குப் புள்ள சாக்கு.

909. வேண்டாப் பெண்டாட்டி
கைபட்டா குத்தம் கால்பட்டா குத்தம்.

910. வேணும்னா சக்கை வேர்லயும் காய்க்கும்.
(சக்கை - பலாக்காய்)

வை

911. வைக்கப் படப்புக்கு ரெண்டு மொட்ட எருமை
வாழுற வீட்டுக்கு ரெண்டு பொட்டப்புள்ள.

912. வைத்தியனுக்குக் கொடுக்கிறத
வாணியனுக்குக் கொடு.

913. வைகாசி மழை வாழை பெருகும்.

பழமொழி விளக்கங்கள்

1. ஒரு காரியத்தைத் தொடங்குமுன், அதற்குரிய தயாரிப்பு களை முறையாகச் செய்யாதவரைக் கேலி செய்கிறது.

2. பிறர் பெருமையைத் தன் பெருமையாகப் பாவனை பண்ணுவோரைக் கேலி செய்கிறது.

3. இரத்த உறவுதான் மற்ற உறவுகளுக்கு அடிப்படை.

4. ஒருவர்க்கொருவர் பாதுகாப்பு என இருவர் இணைந்திருக்க, சுயநலக்காரர்கள் சலுகைகள் மூலம் ஒருவரைப் பிரித்து இருவரையும் வீழ்த்திவிடுவார்கள்.

6. அகத்துக்குடையவள் ஆயிரம் நன்மைகள் செய்தாலும், புறத்தியாள் பெயரில்தான் ஆசை திரும்பும்.

9. உழைத்துச் செல்வம் சேர்க்கவேண்டும்.

10. நல்ல சந்தை கிடைப்பது வீட்டுச் செல்வத்தைப் பெருக்கும். முகமலர்ச்சியோடு பெண் இருப்பது கணவனைச் சீர்ப்படுத்தும்.

13. எண்ணித் துணிக கருமம்.

18. பிறர் துயரத்தைப் புரிந்துகொள்ளாத மூடமையைக் குத்திக்காட்டும் பழமொழி.

22. சிறுவயதிலேயே புலன் இன்பத்திற்காக அலைபவர்கள் வெகுசீக்கிரத்தில் ஆற்றல் இழந்துவிடுகின்றார்கள்.

26. சமூகத்தோடு இணங்காதவர் அழிந்து போவார்.

29. காரியத்தைத் தொடங்கு முன்னரே அதன் பலன்களைக் குறித்து அறியத் துடிப்பவரைக் கிண்டல் செய்யும் பழமொழி.

35. உயர் பதவிகளில் இருப்பவர்கள் வெளிப்படையாகப் பேசாமல், குறிப்பால் உணர்த்துவதே சிறந்தது.

37. சுகம் கண்டவர்கள் விலகிப் போகமாட்டார்கள்.

41. கண்ணம்மா என்பவர் பக்கத்து வீட்டுக் கிழவி. அவரிடம் போய் என்னை என் வீட்டில் கொண்டுவிடு என்பது மூடத்தனம்.

49. ஆட்சி செய்வோரும், அதிகாரம் செய்வோரும் ஒன்றுபட்டு விட்டால், சமூக ஒழுங்கு அழிந்துபோகும்.

50. மொய் வசூலைச் சுற்றி உருவாகும் ஆசைகளைக் கேலி செய்தல். மிகப்பெரிய விருந்து வைத்துக் கிடைத்த மொய் வெறும் காலே அரைக்கால் பணம். அதற்குச் சின்ன மகள் தங்கக் கொண்டைப்பூ கேட்கிறாள். மகன் உருமால் கட்டுவதற்கு சால்வை கேட்கிறான். தாய்க்கிழவி புதுச் சேலை கேட்கிறார். தந்தைக் கிழவரோ தன் தடிக் கம்புக்குப் பூண்கட்ட விரும்புகிறார். யாருடைய ஆசையை நிறைவேற்றுவது? (சிறுவருவாயைச் சுற்றி முளைக்கும் பெரிய ஆசைகளைச் சுட்டிக்காட்டுவது).

51. மனைவிக்கு நல்லது செய்யாமல், வைப்பாட்டிக்கு நல்லது செய்பவன் பற்றிய கண்டனம்.

56. மகிழ்ச்சி அபூர்வமாகவே வாழ்க்கையில் மலரும்

58. ஒழுங்கற்ற நாட்டில் அயோக்கியர்கள் துணிந்து அலைவார்கள்.

60. துன்பம் தொடர்ந்து வருவது பற்றி ஒரு கதை.

கொடுமைக்கார மாமியார் சோற்றுக்குள் தும்பைப் பூவைப் புதைத்து வைத்து, மருமகளை அரைப்பட்டினி போடுவார். தூரா தொலைவான ஒரு திருமண வீட்டில் நன்றாகச் சாப்பிடலாமென்று வருத்தம் பார்க்காமல் நடந்து போனாள் மருமகள். அங்கேயும் முன்கூட்டிப் போய், சோற்றில் தும்பைப்பூவைப் புதைத்து, மருமகளை அரைப்பட்டினி போட்டுவிட்டார் மாமியார். (துயரம் தொடர்ந்து வரும்).

65. அற்ப ஆசைப்பட்டுத் தகுதிக்கு கீழே இறங்கக்கூடாது.

66. முன்னேயோ, பின்னேயோ, குற்றத்துக்குத் தண்டனை நிச்சயம் உண்டு.

68. சொல்லுவது எளிது, செய்வது கடினம்.

70. அதிகாரத்தோடு தொடர்புடையவர்களும் நிதியோடு தொடர்புடையவர்களும் சுரண்டவே செய்வார்கள்.

71. தன் கடமையை மறந்து அற்ப சபலங்களில் தடுமாறக் கூடாது.

72. நல்ல உறவென்பது பொருளுறவைத் தாண்டிய மனஉறவு.

77. விளம்பர ஆசை பற்றிய கேலி.

84. அற்ப சபலப்பட்டுப் பெரும் தவறு செய்துவிடக்கூடாது.

87. உழைத்துச் சாதனை புரிந்தவளின் பலனைச் சும்மா யிருந்தவள் அனுபவிக்க முந்துவதுபோல.

90. பொன் வைக்கிற இடத்தில் பூ வைப்பது என்பதுபோல.

91. சொல்லுவது ஒன்று, செய்வது ஒன்று.

92. எந்தக் கட்டுப்பாட்டுக்கும் அடங்காத முரடன்.

94. முன்கோபி.

95. தப்பு செய்தபின் திருந்துகிறவன்.

97. காரியம் நடப்பது பெரிய இடமென்பதால் கைவலி கால்வலி பார்க்காமல் நம் கடமையை செய்துதான் ஆகவேண்டும். (கிடந்து கொட்டு = படுத்துக் கிடந்தாவது மேளம் அடி).

104. ஏழைப் பெண்ணின் துயரம் பற்றியது. சோறாக்கிச் சோறாக்கிப் பாதி வாழ்க்கை அடுக்களையில் கழிகிறது. வெளியில் போவதற்காக அலைந்து அலைந்து, மீதி வாழ்க்கை குளத்தங்கரையில் கழிகிறது.

125. கேட்ட கேள்விக்கு முறையாகப் பதில் தராததைச் சுட்டிக்காட்டும் பழமொழி.

126. மனித இயல்பு மாறாது.

128. பொதுக் காரியத்தில் தன் தாராள குணத்தைக் காட்டும் போலித்தனம் பற்றி.

134. பெருவெள்ளம் அழுக்குகளை அடித்துக்கொண்டு போய்விடும்.

138. செல்வச் செழிப்பிலே பிறந்து, வறுமைப்பட்டுப் போன துயரைச் சுட்டிக்காட்டுவது.

149. பசித்த வயிறும், அரற்றும் மனமுமாக.

158. ஆனி, ஆடி, புரட்டாசி, பஞ்ச மாதங்கள். முன்கூட்டியே சேர்த்து வை.

175. ஒருவருக்கு மதிப்பளிப்பது அவர் இருக்கும் ஆசனமே.

176. தீவிர நிலைப்பாடு பயனற்றது.

196. கவனமின்மை ஆபத்து.

230. கறார்த்தன்மை இல்லாதவன் பயனற்றவன்.

248. ஊர் சுற்றித் திரிபவன் நாக்கு கெட்டுப் போகும்.

258. விதி விடாது தொடரும்.

312. ஏமாற்றுச் சீதனம்.

390. பூசாரி செழிக்கமாட்டான். அதாவது பிறரைச் சேவித்து வாழ்பவன் சுய வளர்ச்சி அடையமாட்டான்.

397. பகட்டான சொல்லை நம்பி காரியத்தில் இறங்காதே.

440. ஏட்டிக்குப் போட்டி

450. தயாரிப்பிலேயே காலம் நீட்டினால் காரியம் கெட்டுப் போகும்.

453. உழைக்காமல் உட்கார்ந்து தின்றால் பெருஞ்செல்வமும் கரைந்து மறையும்.

477. நெல்லு குத்துவது தொடர்பான பழமொழி. கை உயர்த்திக் கம்புக்கூடு (அக்குள்) காட்டாமல் நெல் குத்த முடியாது. கூலிவேலை செய்யப் போனால் அவமானத்தைத் தாங்கிக்கொள்ளாமல் இருக்கமுடியாது.

490. பணம் செலவு செய்து ஆடம்பரம் செய்ய இயலா விட்டாலும், சொந்த வலுவுக்குத் தக்கவாறு சிறிது செய்ய வேண்டும்.

494. கொல்லப் பிடித்தாலும், வளர்க்கப் பிடித்தாலும் பன்றி ஒரே மாதிரி கூச்சலிடும். அறிவற்றவரும் நல்லது கெட்டது தெரியாமல் கத்துவர்.

514. சந்தியில் பந்து : யார் வேண்டுமானாலும் உதைக்கலாம். தலைகுலைந்த நூல் : சிக்கல் எடுத்துப் பயன்படுத்த முடியாது.

515. செல்வத்தை ஆள வேண்டுமென்றால் பொய்ச் சத்தியம் செய்யவும் தயங்கக்கூடாது.

516. தான் சாமார்த்தியக்காரி என்று நினைத்த ஒரு கோழி செம்பருந்து வாழும் ஊரில் ரகசியமாக முட்டை யிட்டதாம், குஞ்சு பொரித்து வளர்ப்பதற்காக.

519. கஞ்சர்கள் ஈயமாட்டார்கள்.

520. பிறரிடம் கெஞ்சி நிறைவாக வாழ்வதைவிட, தன் காலில் நின்று மானமாக வாழ்வதே மேல்.

524. சாணான் வீட்டில் கருப்பட்டி எவ்வளவும் சாப்பிடலாம்: விளைவித்ததைத் தாராளமாய்க் கொடுப்பான் விவசாயி.

558. பிற காரியங்களைக் கணக்கில் எடுத்து எனக்குக் கொடுப்பதை நிறுத்திவிடாதே.

568. அடுத்தவர் பிள்ளை தன் பிள்ளையாகாது.

570. இலை தைத்தவனுக்குச் சோறு தரையில் போடு. எனக்கும் என் மனைவிக்கும் சோறு அந்த இலையில் போடு. ஏறுக்கு மாறான நியாயத்தைக் குத்திக்காட்டுவது.

584. பெருந்தொகையை வாங்கிவிட்டுச் சில்லரை சில்லரை யாகத் திருப்பித் தந்து பணத்தைச் சிதைத்துவிடுவான்.

623. துணை இழந்தவன் தன்னை இழந்துவிடுவான்.

632. தேரிலிருந்து விழுந்த மாலை தெருவில் மிதிபடும்.

637. உதிர்ந்ததைச் சேகரித்தது - அதாவது கல்வி ஞானமில்லாத கேள்விஞானம்.

665. களியல் கம்பை எலும்பென வீணாகக் கடித்துக் கடித்து நாயின் வாழ்நாள் கழியும். அதாவது பயனற்ற செயலில் வாழ்நாளைப் போக்கக்கூடாது.

675. குடும்பம் சிறியதாக இருக்கையில் சேமிக்காதவன் குடும்பம் பெருத்துவிட்டால் சேமிக்க முடியாது.

702. பட்டப்பகலில் தகாத பாலுறவு கொள்பவள் தன்னைச் சுற்றி எப்போதும் திரை மறைப்பு இருக்கவேண்டும் என்றாளாம்.

741. திருமண உறவு மாற்ற இயலாதது.

767. ஊமையும் செவிடுமாக இருப்பவர்.

768. பெற்றாள் இறந்ததும் நகை பங்குவைப்புப் பிரச்சினை வரும். நகை பெட்டியில் இருக்கிறது என்று மகள் (கட்டிக் கொடுக்கப்பட்டவள்) சொன்னதும், வீட்டு மருமகளும் இறந்தவள் மகளும் விடியும்வரை சண்டை போடுவார்கள். (ஒரு கதைப்பாடலின் பகுதி இது). போலி அன்பு காட்டுவோர் நிசமான பிரச்சினை என வந்துவிட்டால் எப்படிக் காட்டமாய்ச் சீறுவார்களெனக் குத்திச்சொல்வது.

819. முற்றத்துப் பருவப்பானை பாளை வந்தால் தேவைப் படும்போதெல்லாம் ஏறிப் பதனீர் குடிக்கலாம். மூத்த மகள் தாலியறுத்து வீடு வந்தால், நாள் முழுவதும் வேலை வாங்கலாம். (பண்டைக்காலத்தில் கணவன் சொத்து மனைவிக்கு இல்லை. வாழாத பிள்ளை தாயோடு).

839. மொய் அரிசி தினிசு தினிசாக இருக்கும். ஒருப்போல், நிரந்து வேகாது. கொள்ளுக் கொடி குட்டையாக வளர்வது. பந்தலில் ஏறிப் படராது.

847. பன்றியைக் கொல்லப் பிடித்தாலும் அலறும், வளர்க்கப் பிடித்தாலும் அலறும்.

விடுகதைகள்

1. அக்கா வீட்டுக்குத் தங்கச்சி போவாள்
தங்கச்சி வீட்டுக்கு அக்கா போகமாட்டாள்.

2. அஞ்சு வீட்டுக்கு ஒரு முற்றம்

3. அஞ்சு பேர் உடன் பிறந்தார்
தர்மருமல்ல
அதுல ஒருத்தன் சூடி சொல்வான்
பெருமாளுமல்ல
நஞ்சுண்டான் மாலை கொண்டான்
நாகமுமல்ல
நாள்தோறும் புல்லு சொமப்பான்
பறையனுமல்ல
அம்மனுட சிரம்பாதம் தனை சேவித்துக்
கன்னியரை மணம்புரிவான் கடைசிப் பையன்

4. அஞ்சு பேருக்கு ஒரு தட்டு

5. அண்ணனுக்கு எட்டாது
தம்பிக்கு எட்டும்

6. அத்துவானக் காட்டுக்குள்ளே
அங்கம்மா பொங்க வைக்கிறா.

7. அத்துவானக் காட்டுக்குள்ளே
சந்திரன் குடைபிடிக்கிறான்.

8. அந்தரத்திலே பட்டு கிடக்கு
மடிக்க ஆள் இல்லை
மல்லிகைப்பூ பூத்துக் கிடக்கு
பறிக்க ஆளில்லை

ராஜா மகா தனியாப் போறா
துணைக்கு ஆள் இல்லை.

9. அந்தாப் போறான் இந்தாப் போறான்
அடியையுங் காணோம் முடியையுங் காணோம்.

10. அப்பன் முள்ளன் ஆத்தா சடைச்சி - அவ
பெத்ததெல்லாம் சக்கரைக் கட்டி.

11. அம்பலத்தில் ஆடும் சின்னப் பொண்ணுக்கு
அங்கம் எல்லாம் தங்கக் கண்ணாடி.

12. அத்துவான காட்டில்
வெள்ளை வேட்டிக் காயிது.

13. ஆத்து மணல அள்ளித் திங்கிற
நாங்க ஒரு சாதி
அஞ்சு விரலப் பிச்சித் திங்கிற
நாங்க ஒரு சாதி......

14. ஆயிரம் தச்சன் கட்டிய அழகு மண்டபம்
ஒருத்தன் கண்பட்டே உடஞ்சி போச்சு.

15. ஆடி குடத்தடையும் ஆடும்போதே இரையும்
ஓடிமுகம் காட்டும் பாம்பெனவே
ஊரும் அது என்ன?

16. ஆடி அசைஞ்சி வர
அருமிளகு சிந்திவர
கூடியிருக்கும் பெண்களெல்லாம்
குடுமி பிடிச்சி ஆட்டிவர.

17. இத்துனோண்டு சிட்டுக்குருவி - வாலை
இழுத்து இழுத்துப் பொருத்துது.

18. இரண்டு பேர் கண்டு
அஞ்சுபேர் பறிச்சான்.
முப்பத்தி ரெண்டுபேர் நொறுக்கி
ஒருத்தன் விழுங்கிட்டுப் போயிட்டான்.

19. ஈர்க்கு ஈர்க்கு நெட்டை ஈர்க்கு
ஈரப்பதம் ஆக்கும் ஈர்க்கு
வானத்தையும் பூமியையும்
ஊசியாகத் தைக்கும் ஈர்க்கு.

20. உடுத்த சீலைய உரிஞ்சிகிட்டு
உள்ள இருக்கத உருவிகிட்டு
உனக்குப் பாதி எனக்குப் பாதி
ஒடிச்சித் தின்னா நல்லா இருக்கும்.

21. உடம்பு காய் வாய் பழம்.

22. ஊருக்கெல்லாம் ஒரே தீவெட்டி.

23. ஊருக்கே ராசா அவர்
வாறது மட்டும் கம்பியில.

24. ஊசி நுழையாத கிணற்றுக்குள்ளே
ஒருபடி தண்ணீர்.

25. எங்க விளை பெரிய விளை
ஏறிப்போகத் தொண்டில்லை.

26. எங்க வீட்டுத் தோட்டத்தில
மஞ்சக் குருவி தொங்குது.

27. எங்க வீட்டுக் கிணற்றில
வெள்ளிக் கிண்ணம் மிதக்குது.

28. எங்க வீட்டுத் தண்டவாளத்தில
ரயில் போகாது.

29. எட்டு கால் ஊடே
இருகால் தலை மூன்று
வட்டமிட்ட கொம்பிரண்டு
வளைந்து நிற்கும் வாலிரண்டு
திட்டமுடன் கையிரண்டு
திசை பார்த்த வாய் நாலு
இட்டமுடன் இக்கதையை
அழித்துப் பார் காரிகையே.

30. ஏக மாய்க்கன்று விடும்
ஆளாகவில்லை
எங்கும் நிழலாய் இருக்கும்
இளைப்பாற இடமில்லை
பாசமுடன் பால் சுரக்கும்
பசுவும் இல்லை
பாதையிலே பயிர்காக்கும்
நாயும் இல்லை - இதை
ஆகமுடன் கள்ளி என்பார்
அநியாயம்தான் ஆனால்
அவளுக்கோ அதை விட்டால்
அடுத்த பெயரும் இல்ல.

31. ஏழு பேருக்கு ஒரு குடுமி.

32. ஏரும் கலப்பையும் இல்லாம
எட்டு நாளைக்கு ஒரு வெள்ளாமை.

33. ஏரிக் கரையிலே
இருநூறு தென்னம்பிள்ளை
பூக்காது காய்க்காது
காக்கை குருவி அடையாது.

34. ஒத்தைக் காலில் சுத்திடுவான்
உயிர் போனால் படுத்திடுவான்.

35. ஒத்தைக் குடுமிக்காரன்
உடைச்சிப் பார்த்தா வெள்ளைக்காரன்.

36. ஏழேழும் பதினாலு சேலை
இரண்டு பக்கம் தச்சனார் வேலை - இத
பிரிச்சிக் கொடுத்தவருக்கு
தங்கத்தால மாலை.

37. ஒரு சாண் உடம்புக்கு
வயிறெல்லாம் பல்லு.

38. ஒரு சாண் மனிசருக்கு
அரைச்சாண் தொப்பி.

39\. ஒரு புட்டியில
இரண்டு எண்ணெய்.

40\. ஒல்லி மனிசருக்கு
ஒரே காலு.

41\. ஓடுவான் சாடுவான்
ஒத்த காலில் நிற்பான்.

42\. ஒரு சொட்டு ரத்தம்
உலகமெல்லாம் பெருகுது.

43\. ஒரு நெல்லு குத்தி வீடெல்லாம் உமி.

44\. கடக்க முடக்கப் பத்துக் காலு
அத எண்ணி பாத்தா மூணு பேரு.

45\. கட்டையனுக்கு ஆயிரம் கண்ணு
முட்டையனுக்கு மூணு கண்ணு
மூர்த்தி வேலாயுதனுக்கு ஒத்தக் கண்ணு.

46\. கடகடா குடுகுடு நடுவிலே பள்ளம்.

47\. கண்டு பூ பூக்கும் காணாமல் காய் காய்க்கும்.

48\. கத்திபோல் பூ முடிச்சி
குடம் நீர் கைபிடிச்சி - போற
மங்கையாரே - உன்
கணவன் எங்க போயிட்டான்?
ஒடிஞ்சவனுக்குக் - கை
கொடுக்கப் போயிருக்கான்
நீர் வந்தா வரமாட்டான்
நீர் வராவிட்டால் வருவான்
அப்படியும் வராவிட்டால்
இந்த ராஜா போயி
மறுராஜா பட்டம் வாங்கி
குடமல்லிப் பூ பூத்து
வீட்டோட வீடு மோதி
நெடுமரமெல்லாம் சாஞ்சி

எண்ணெக்குள்ளே திரி ஒழிஞ்சி
வேவாத ஊட்ட வுட்டு
வெந்த ஊட்டுக்கு வா!.

49. ஏற்றுக் கூனன் காவல் கூனனை மடக்கி
வாயில் அடக்கி வச்சான்
கருத்த கூனன் ஓடிவந்து
காவல் கூனனைக் கொத்தி எறிஞ்சான்
கண்டுக்கிட்ட பாம்படக் கூனி - அத
அடுப்புக்குள்ளே வீசி எறிஞ்சாள்.

50. கண்ணாடிக் குண்டு காற்றிலே பறக்குது
கையில தொட்டா பட்டுன்னு மறையிது.

51. கரையோட கரையோட போவோம் நாங்க
கன்னிமார் தோட்டத்தை அழிப்போம் - நாங்க.

52. கால் ஆறு, சிறகு இரண்டு சேராத இனங்கள்
மூன்று, சேர்ந்து பறக்கிறது அது என்ன?

53. குயவன் பண்ணாத பாண்டம்
வண்ணான் வெளுக்காத வெள்ளை
மழை பெய்யாத தண்ணி.

54. குத்தி அளந்தாலும் பதக்கு
குத்தாமல் அளந்தாலும் பதக்கு - அது என்ன?

55. கொத்து கொத்து ஈந்தங்காய்
குலையோட ஈந்தங்காய்
மதுரைக்குப் போனாலும்
வாடாத ஈந்தங்காய்.

56. கொம்பு வால் உண்டதற்கு
மிருகமில்ல
கொண்டாட்டத்துடன் பறக்கும்
பக்கியும் இல்ல
தம்பூர் வீணையல்ல
கீதம் பாடும்

அதுக்குத்தான் உயிர் இல்ல
காற்றில் ஏறும்
அன்னம் போல் கயிறு கட்டி
ஆட்டி வைப்பார் குரங்குமில்ல.
(பக்கி - வண்ணத்துப்பூச்சி)

57. சன்னப் பின்னல் கயிறு
சாதி லிங்கக் கயிறு
எண்ணப்படாத கயிறு
அது என்ன கயிறு?

58. சிலுக்குப் பக்கறைக்குள்ளே
சில்லரைக் காசுகள்.

59. சின்ன வீட்டுக்குள்ளே
சிப்பி அடுக்கியிருக்கு.

60. செக்க சிவந்திருக்கும்
செவ்வானம் போலிருக்கும்
வாலு முளைச்சிருக்கும்
வந்திருக்கும் சந்தையிலே.

61. செம்புக் கலயமாய் வளர்ந்தாய் மகளே
செங்காட்டுத் தீயில் விளைந்தாய் - மகளே
மகாராசன் வீட்டில் நுழைந்தாய் மகளே
மெல்லப் படுமுன்னே உடைந்தாய் மகளே.

62. செம்பு நிறைய முத்து.

63. ஞாயிற்றுக் கிழமை வராத பால்
என்ன பால்.

64. தங்க மிட்டாயி திங்க முடியல்ல.

65. தச்சனார் மகனைத்
தையலார் அணைத்தேறி
வெள்ளையாய்ப் பண்டம்
அள்ளி அள்ளிக் கொடுக்க

முத்து மணியும் முன்னாலே
பிச்சிப்பூக் குவியல் பின்னாலே.

66. தட்டையைத் திங்குமாம்
தழையைத் திங்குமாம் எங்க வீட்டுக்காளை
தண்ணியைக் கண்டா செத்துக் கிடக்குமாம்
எங்க வீட்டுக்காளை.

67. தட்டான் குண்டி தேய்வதேன்
தாசிமுலை பருப்பதேன்.

68. தத்தக்காப் புத்தக்கா நாலு காலு
தானா நடந்தா ரெண்டு காலு.
உச்சி பழுத்தா மூணு காலு
ஊருக்குப் போனா எட்டு காலு.

69. தகதக தட்டுப் போல
தாமரை மொட்டுப் போல
இந்திரன் குடையைப் போல
எரியிது ஒரு விளக்கு.

70. தலையைச் சுருக்கி
கம்பூக் கூட்டுக்குள்ளே வச்சிக்கிட்டுப் போறான்.

71. நமக்குச் சொந்தம் மானது
நாலு பேருக்குப் பிரயோசனமானது.

72. நாலு கால் இருக்கும் - ஆனா
அவனால நடக்க முடியாது.

73. நித்தம் குளிக்குமாம் பொத்தக்கிடா - அதன்
கூடக்குளிக்குமாம் குட்டிக்கிடா.

74. நீரிலே விளைஞ்சி
நீராலே அழியுது.

75. பச்சை நிறமாயிருக்கும்
கிளியும் இல்லை
பலநாளும் கொழுந்து கிள்ளும்
கொடிக்காலும் இல்லை

உச்சியிலே பூ முடிக்கும்
தாசியும் இல்லை.

ஓசந்த விட்டம் ஏறித் தொங்கும்
வெளவாலும் இல்ல
தச்சனடிக்கல் சுமக்கும்
தாசனும் இல்ல இது பேர்ல
பலபேரும் இச்சை கொள்வார்
வேசியுமில்ல.

76. பக்கம் பழுத்த கிழவா - நீ
எத்தனை நாள் இருப்பா - என்
சதையைக் குத்தி விதைய எடுத்தா
வேண்டிய நாள் இருப்பேன்.

77. பச்சை நிறத்தாள் பவள நிறத்தாள்
ஒரு பிள்ளை பெத்தாள்
உடன் தாலி அறுத்தாள்.

78. பச்சை மரத்து மேலிருந்து
பட்டாணி பாக்கு வெட்டுறான்.

79. பட்ட மரத்தின் கீழே - நின்று
பருப்பு பொறுக்கும் பெண் பிள்ளாய்
பழுக்கச் சுடுறவன் வீட்டுக்குப்
போற பாதை எப்படி?
செத்த மாட்டு மேலே ஏறிச்
சொகுசாப் போற ஆண்பிள்ளாய்
கொட்டுச் சத்தம் கேட்டுப்போ.

80. பழம் காயாகும்
காய் பூவாகும்
பூ பாலாகும்.

81. பத்து முள்ளுக்குள்ளே
பச்சப் புதருக்குள்ளே
மடக்குப் பெட்டிக்குள்ளே
மாணிக்கப் பரல் இருக்கு.

82. பெத்த வீட்டுக்குள்ளே காலூனி
பிள்ளை சலங்கையுங்கட்டாம
தாய்ப்பாலுங் குடியாம
தண்ணி குடிச்சி வளர்ந்த பிள்ளை.

83. மலையேறி இலை பறிச்சி
மகிழ்ந்திருந்து தொன்னை தச்சு
பத்தினியாள் விட்ட கஞ்சி
உப்பும் இல்ல பத்தும் இல்ல.

84. மலையிலே மலைச் சரிவிலே
சரிஞ்சி நிற்கிற கூண்டிலே.

85. கிள்ளலாம் கிழிக்கலாம்
கிளிக் கூட்டில் அடைக்கலாம்
முட்டையிடும் சட்டை கழற்றும்
மூணுமாசம் அடை கிடக்கும் நாக்கை நீட்டும்.

86. படம் எடுக்கும் நாயனாண பாம்பு இல்லை
மூடு தத்தக்க புத்தக்க இலை மஞ்சக்க புஞ்சக்க
காய் இனிச்சிக்க புளிச்சிக்க.

87. மேஞ்சிட்டு வாற ஆடு
வரப்புல கிடக்கிற நண்ட.
சமுட்டி விட்டது
வலி எடுத்தவுடன் நண்டு சொன்னது
நாலு கால் மன்னா உனக்கு
நாளை அல்லவா சாக்காலம்
விலாவில கண்ணா உனக்கு
யாருல சொன்னா
நண்டு சொல்லிச்சு
கொடலில்லாத முண்டம்பய என்ன
கூப்பிட்டு கூப்பிட்டு சொன்னான்
இது வியாழக்கிழமை நடக்குது
ஊரழைப்புக்கு முரசடிக்கிறான்.

88. வாறியளே வந்துட்டுப் போறியளே
போயிட்டுத் திரும்பவும் வாறியளே
திரும்பவும் போறியளே.

89. வயிறு நிறையக் குடிச்சிட்டு
வரிவரியாக் கழிவான்

90. விளை வெள்ளை விளை
வித்து கருத்த வித்து
கையால் விதைத்து
வாயால் பறிப்போம்.

விடைகள்

1. நாளியும் உழக்கும்.
2. உள்ளங்கை.
3. கைவிரல்கள், பெரிய தர்மர்விரல், ஆட்காட்டிவிரல், பாம்பு விரல், சுண்டுவிரல்.
4. கை.
5. உதடு.
6. பிணம் எரியுது.
7. குடைக்காளான்.
8. ஆகாயம், நட்சத்திரம், நிலா.
9. குசு.
10. பலாப்பழம்.
11. மயில்.
12. உப்பளம்.
13. சீனி, வாழைப்பழம்.
14. தேன்கூடு.
15. பாம்பு, எண்ணெய்.
16. திரிகல்.
17. நூல்ஊசி.
18. கண், கை, பல், நாக்கு.
19. மழை.
20. பனங்கிழங்கு.
21. கிளி.
22. நிலா.
23. மின்சாரம்.
24. இளநி.

25. வானம்.

26. எலுமிச்சை.

27. நிலா.

28. ஏணி.

29. பசு, கன்று, செம்பில் பால் கறப்பவன்.

30. கள்ளி.

31. பூண்டு.

32. உப்பளம்.

33. இமை.

34. பம்பரம்.

35. தேங்காய்.

36. வெங்காயம்.

37. சீப்பு.

38. பேனா.

39. முட்டை

40. ஊசி.

41. கதவு.

42. நெருப்பு.

43. தீக்குச்சி.

44. ஏரும் மாடும்.

45. நார்க்கட்டில், உரித்த தேங்காய், ஊசி.

46. ஆட்டுரல்.

47. கடலை.

48. பொண்ணு தாழம்பூ தலையில வச்சிட்டு தண்ணிக்குப் போனா, இவன் வெள்ளாடு மேய்ச்சிட்டு வந்தான். அப்போது உன் கணவன் எப்ப வருவான் என்று பெண்ணிடம் கேட்டான்.

அதற்கு அவள், என் கணவன் ஆத்துக்கு அந்தாண்ட தெய்வம் முனிக்கு கை உடைஞ்சதற்கு கை செஞ்சி சுடுறான். ஆத்துல நீர் நிறைய வந்தா வரமாட்டான். வரவில்லையென்றால் வருவான், என்று சொன்னாள்.

இந்த ராஜா போயி மறுராஜா என்பது, பொழுதுபோயி நிலா வெளிச்சம் ஆகி (குடமல்லி) நட்சத்திரம் பூத்து, வீட்டோடு வீடுமோதி என்பது கதவு சாத்தி, நெடுமரம் சாஞ்சி என்பது நாம தூங்கிறது. விளக்கு அணைந்து போன பிறகு, பானை வனையும் இடத்தைத் தாண்டி சுடும் இடத்துக்கு வா. அதாவது அவனை நேரம் பார்த்து வீட்டுக்கு வரச்சொல்லுறா.

49. காக்கை பதனிக் கலையத்தை மூடி வைத்திருந்த மடக்கோலையை இழுத்துக் கீழே போட்டது. எடுத்து அடுப்பு பற்ற வைத்தாள் கிழவி.

50. சோப்பு நுரை.

51. நண்டு.

52. பஸ்.

53. தேங்காய்.

54. தண்ணீர்.

55. பாம்படம்.

56. பட்டம்.

57. பாம்பு.

58. வற்றல் மிளகாய்.

59. பல்லு.

60. வற்றல் மிளகாய்.

61. மண்பானை.

62. மாதுளை.

63. தபால்.

64. நெருப்பு.

65. தச்சனார் செய்த பருத்தி மனையில் ஒரு பெண் உட்கார்ந்து ஒரு கையால் பருத்தியை அள்ளிக் கொடுத்தாள். பருத்திக் கொட்டை முன்னால் சிந்த பஞ்சு பின்னால் சிந்தியது.

66. தீ.

67. பலகைதட்டு.

68. மனிதர்.

69. சூரியன்.

70. குடை

71. பெயர்.

72. கட்டில்.

73. அம்மி.

74. உப்பு.

75. புகையிலை.

76. புளி.

77. வாழை.

78. அணில்.

79. சருகு பொறுக்கும் பெண்ணே
சட்டி பானை சுடுகிறவர் வீடு எங்கே?
செருப்புப் போட்டு நடக்கிறவனே பானை
வனையும் சத்தம் கேட்கும் போ.

80. தேங்காய்.

81. மாதுளைப் பழம்.

82. கோழிக் குஞ்சு.

83. பயினி.

84. வெற்றிலை.

85. பனங்கிழங்கு.

86. அன்னாசிப் பழம்.

87. விலாவிலே கண்ணா - நண்டு
குடலில்லாத முண்டம்பய - கோவில் முரசு.

88. பல்லு.

89. பேனா, மை, எழுத்து.

90. காகிதம், எழுத்து, படித்தல்.

பாடல்கள் – அம்மன் வணக்கம்

பூரா பூரண நிலவிலே

தென்குமரிப் பகுதியில் புகழ்மிக்க ஒரு பேரூர் ஈத்தா மொழி. ஏழு சிற்றூர்களைக் கொண்ட இவ்வூரின் மையமாக அமைந்திருப்பது வடக்கு வள்ளியாவிளை. இதன் வடக்கு எல்லையில் அழகிய நாயகியம்மன் கோவிலும், தெற்கு எல்லையில் பொன்னம்பல நாதசாமி கோவிலும் உள்ளன. கார்த்திகை மாதம் முப்பது நாளும் இரண்டு கோவில்களிலும் திருவிழா நடக்கும். அந்தத் தெய்வங்களைப் போற்றிப் பாடப்படும் பாட்டு இது. பிற நாடார் ஊர்களில் இருக்கும் முத்தாரம்மன் கோவிலோ, சுடலை மாடன் கோவிலோ, இசக்கியம்மன் கோவிலோ இந்த ஊரில் இல்லாதது ஆய்வுக்குரியது. இப்பாடலை எனக்களித்தவர் என் அன்னை அழகிய நாயகி அம்மாள்.

இந்தப் பாடல் அழகிய நாயகி அம்மன் என்ற பெயரில் வணங்கப்படும் பத்திர காளியம்மனைப் போற்றிப் பாடப் படுவது. முற்காலங்களில் முழுநிலவு நாளில் அம்மன் கோவில் முன் இளம்பெண்கள் கூடி வட்டமிட்டுக் கும்மியடித்து இப்பாடலைப் பாடுவார்கள்.

இந்த அம்மன் இந்த ஊர் மக்களோடு புட்டாபுரம் ஊரிலிருந்து கடல்வழியாகத் தெற்கே வந்து, மீனவர்களால் கண்டெடுக்கப்பட்டு, இங்கே கோவில் கொண்டதாக மக்கள் நம்புகிறார்கள்.

இந்த ஊர்த்தலைவர் சிறவான் என்ற சிறப்புப் பட்டத்துடனே அழைக்கப்படுகிறார்.

1) பூரா பூரண நிலவிலே, பெரிய தோப்பு மணலிலே
காரணமாக வந்து குடிகொண்ட கருணைத் தாயாராம்
ஆரணன் தங்கை அழகிய நாயகி - அம்மன்
தோரண வாசலைச் சுற்றிக் கும்மியடிப் போமடி

2) அந்தரி அம்பிகை அழகிய நாயகி
சுந்தரி சிவகாமி சூரனைச் சங்கரித்த தாயாராம்
பந்தவினையறுக்கும் பகவதி தாயார் பாதம்
சிந்தனை செய்து சூழக் கும்மியடிப் போமடி

3) சிட்டாக மக்களைத் தேசமெல்லாஞ் செலுத்தி
தொட்டாரையும் வணங்காத சூரத்தனத்தோடு
கட்டான உடலுறுதி தந்த காமாட்சியம்மை
புட்டாபுரத்தாளைப் போற்றிக் கும்மியடிப் போமடி

4) மண்மூடிய புட்டாபுரத்தை மறந்த மகமாயி
கண்மூடி நில்லாமல் கல்லுச் சிலை வடிவு கொண்டும்
விண்மூடி வேகங் கொண்டெழுந்த வீர மாகாளியை
தன் மூடந்தீர தாழ்ந்து கும்மியடிப் போமடி

5) கற்சிலை வடிவுகொண்டு கடலதிலே புகுந்து
விற்சிலை போலே வந்த மீனவன் மரத்திலேறி
மெய் சிலையாகி வந்த விமலை அமலை தன்னை
கைச்சிலை வணங்கிக் கனிந்து கும்மியடிப் போமடி

6) தருமம் தழைத்த தரும புரந்தனிலே தாயாரும் வந்தமர்ந்து
உரிமையுடனே ஊரார் பலருங் கூடியந்த ஓங்காரி ஓம்காளி தனக்கு
பருவங்கள் பெறவே பக்தியோடு பூசை பண்ணி
அரு வினையறவே ஆனந்தக் கும்மியடிப் போமடி

7) சில நாள் செல்லவே யந்த சிவகாமித் தாயாரும்
வல மாகவீற்றிருக்கும் வலிய தருமபுரத்தைவிட்டு
தலம்மாறித் தலமமர்ந்த அந்த சர்வேஸ்வரியாளை
பலமாக மனதிலெண்ணிப் பணிந்து கும்மியடிப் போமடி

8) செம்பட்டை ஓடையின் தென்கரையானதிலே
தென்பட்ட குப்பயங் குமரன் புரயிடமாம்
தன்பட்டமாக்கி வந்தமர்ந்த தயாபரியை
முன்பட்டமாய் கூடிக் கும்மியடிப் போமடி

9) பாயும் புனலருகே பகவதியாள் வீற்றிருந்தாள்
ஆயும் பலனருளி ஆண்டிருந்தாள் மகமாயி
தேயந்தனில் நீராடி சுற்றிவந்து தாள் பணிந்து
மாயயிருளறவே வருந்திக் கும்மியடிப் போமடி

10) ஏழூர்த் தலைமையாம் ஏழில் பொங்கும் பேரழகாம்
தொழுதூரேழுஞ் சுற்றிப் பணிகள் பல செய்து
வாழுமூர் மக்கள் கூடி அந்த வாலை அம்பிகையை
தாழ வினையறவே தலை வணங்கிக் கும்மியடிப் போமடி

11) நித்தநித்தம் நெல்லுச்சோறு நெய்மணக்கும் காய்கறியாம்
அத்தன் பொன்னம் பலவன் அருள் பெற்ற ஆலயமாம்
சித்தன் சிதம்பரச் சிறவான் சுற்றஞ் சூழ்ந்திலங்கவே - அந்த
வித்தகத்தாள் சக்தியை வாழ்த்திக் கும்மியடிப் போமடி

திருவிளக்கு

இந்தப் பாடலும் என் தாயார் குறிப்புகளிலிருந்து எடுத்ததே. இருபதாம் நூற்றாண்டின் முதல் பகுதியிலேயே இந்த வட்டாரங்களில் விளக்கு வழிபாடு பரவியிருக்கிறது என்பதற்கு இது அடையாளம்.

இங்கு சொல்லப்படும் திருவிளக்கு பசுமாட்டுச் சாணியைப் பிசைந்து கிண்ணம் போலாக்கி, அதில் எண்ணெய் விட்டுத் திரிபோட்டு ஏற்றப்படுவது. இந்த விளக்கு இப்போது வழக்கத்தில் இல்லை.

எங்களுக்கு உணவும், குழந்தையும் பசுவும், நெல்லும் அருள்க என்று முழுக்க முழுக்க உலகியல் சார்ந்த வணக்க முறையாக இது அமைந்துள்ளது. உலக வாழ்வு மீறிய எந்த ஆசைகளும் இங்குப் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சீதா சிறுவிளக்கே
சீதரவா லட்சுமியே
கோதே திருவிளக்கே
கும்பிட்டேன் உன்னடிமை
அஞ்சுமாட்டுச் சாணியும்
அமுது போல் குளச்சுவச்சி
பஞ்சு போல் திரிபோட்டு
பவளம் போல் விளக்கேற்றி
எங்கும் எரிய
லோகமெல்லாந் தான் தோண
உனக்கெரிக்க எண்ணெயும்

எனக்குங்கச் சோறும்
தொட்டிலுக்குப் பிள்ளையும்
தொழுவுக்கு பால்பசுவும்
பட்டறைக்கு நெல்லும்
பதிஞ்ச மரக்காலும் - அருள்வாய்
அன்னலட்சுமி ஆதிலட்சுமி
சொர்ணலட்சுமி சோதிலட்சுமி
அகிலாண்டகோடி பிரம்மாண்டேஸ்வரி
ஆண்டு கொண்ட சீதேவி
கோடி கோடியாகக்
கும்பிட்டேன் உன்னையே.......

பாடறியோம் படிப்பறியோம்

நாக்கிலே வந்த சரஸ்வதி அம்மனை
பூவுல வச்சித்துலக்கம் செய்வோம்
பாட்டறியோம் நல்ல படிப்பறியோம்
பள்ளிக்கூடத்தையே நாமறியோம்
ஏடறியோம் எழுத்தறியோம் - பெண்கள்
இத்தன வாசிப்பும் கத்தறியோம்
அடி அறுத்த மாங்காயாம் கீத்துப்போலே - நல்ல
ஆடி வருகிற செக்கு போலே.......

ஊர்

ஈத்தாமொழி

வெள்ளை இளமணலும், விரிந்த தென்னந்தோப்பும், கடல்வளமும், நிலவளமும் கொண்ட ஈத்தாமொழி கொழும்பு நகருக்கு இணையான செல்வச் செழிப்புடையது. அந்த ஊரின் சிறப்பும் ஊர்த் தலைவரின் சிறப்பும் சொல்லும் நாட்டுப்பாடல்.

பூரா பூரண நிலவிலே
பெரியதோப்பு மணலிலே
காரணஞ் செய்யும் அழகிய நாயகி அம்மைக்கு
கைதட்டிக் கும்மியடிப் போமே நாங்க
நித்த நித்தம் நெல்லுச் சோறு
நெய் மணக்குங் காய்கறியாம்
பூ மணக்கும் ஈத்தாமொழி
போக மனம் வருகுதில்லை
பொன்னு முத்துச் சம்பாவாம்
பூவாலு குதிப்பு மீனாம்
தின்னத்தின்னத் தனி ருசியாம்
தேன் மணக்கும் ஈத்தாமொழி
நித்த நித்தம் நெல்லுச் சோறாம்
நெய் மணக்கும் சீலா மீனாம்
பொன் விளையும் ஈத்தாமொழி - விட்டு
போக மனம் வருகுதில்லே
குட்டிக் கொழும்பாம் - ஈத்தாமொழி

கொரு கொருத்த மணல் தோப்பாம்
இளமரத்துச் சோலை விட்டு
எங்கே நான் போவேனப்பா
பேரழகாம் ஊரழகாம்
பொருத்தமுள்ள உடலழகாம்
சீரழகாஞ் சிறப்பழகாம்
செல்வச் சிதம்பரச் சிறவானாம்
மங்காத புகழுடையான்
மனகாவலப் பெருமாளாம்
மேன்மையாக வாழ்ந்தான்
வீரமாத்தாண்ட நாடானும்........

அ. அழகிய நாயகி அம்மாள்

ஊர்ப்பாட்டு

புத்தேரி நாவக்காடு
புதுமை பெற்ற ஈசாந்திமங்கலம்
ஆத்தோரம் பூதப்பாண்டி
அதுக்கடுத்த சீதப்பாலு
கூத்தாடும் தாழக்குடி
குடியக் கெடுத்த வடிவீஸ்வரம்—

அ. அழகிய நாயகி அம்மாள்

தாலாட்டு

உறங்காத கண்ணுக்கு

ராராரோ ராரி ரரோ - என் கண்ணே
ராராரி ராரி ரரோ
உறங்காத கண்ணுக்கு
ஓலை கொண்டு மை எழுதி
தூங்காத கண்ணுக்கு
துரும்பு கொண்டு மை எழுதி

பச்சை இலுப்பை வெட்டி
பால்வடியத் தொட்டில் கட்டி
அன்னக் கொடியசைய
ஆட்டிவிட்டார் அம்மானார்
தொட்டிலின் கீழே
துணையிருப்பார் மாதாவும்

மாதாவின் கோவிலிலே
மாதமொரு பூ பூக்கும்
திங்கப்பழம் பழுக்கும்
திருமுடிக்குப் பூ பூக்கும்
அருநல்வேலி திருநெல்வேலி
ஆளுவார் கொத்தமல்லி
கொத்தமல்லி விலையாக்கி - உங்க அப்பா
கொலுசு பண்ணிப் போடுவாக
மலடி மலடி என்று
வையகத்தார் ஏசாம

மலடி என்ற சொல்லை
மாற்றப் பிறந்த கண்ணே
ஈனாத வாழையது
இளம்வாழை ஈன்ற கண்ணே
எங்கள் குடி தழைக்க
ஈடேற்றப் பிறந்த கண்ணே

பால் அளக்கும் நாளையிலே
பணமாக்க வந்த கண்ணே
மோர் அளக்கும் நாளையிலே
முத்தளக்கப் பிறந்த கண்ணே

தாழை ஒரு மரமாம் - என் அரசே - தாழை
பூக்கும் பூ ஆயிரமாம்
தாழை சுற்றிப் பூ எடுக்கும்
தருமரோ உங்கள் அப்பா

பின்னை ஒரு மரமாம்
பின்னைப் பூ ஆயிரமாம்
பின்னை சுற்றிப் பூ எடுக்கும்
புண்ணியரோ உங்கள் அப்பா

சித்திரத் தேர் ஓடும்
செல்லம் வடம் பிடிக்க
தேரும் புதுத்தேரு
வடக்கயிறு பொன்னால
தெரு சுத்தி நிலை நிற்கும்
திருச்செந்தூர் வேலவர்க்கு.......

பாடியவர் : லெட்சுமி, காருபாறை

பதிவு : தா. முருகன், காருபாறை

வா வாவோ வாழ்வரசே

வா வாவோ வாவாவோ
கண்ணே உறங்குறங்கு.......
கான மயிலுறங்கு
கற்கண்டே நீயுறங்கு
பொன்னே உறங்கு
பூ மரத்து வண்டுறங்கு
வண்டுறங்கும் சோலையிலே
வந்துதிச்ச மாங்கனியோ
மதுரப் பலாக்கனியோ
வேலுமணி வேண்டுமென்று - நான்
வெகு நாளாய்த் தவிச்சிருந்தேன்
தவசிருந்து பெற்றெடுத்த
கற்பகத்தை யாரடிச்சா
யாரும் அடிக்க வில்லை
அனைவோரும் தீண்டவில்லை
பெற்றாள் அடித்தாளோ
பிள்ளைக் கலி தீர்த்தாளோ
தாயார் அடித்தாளோ
தாளம் பூ கையால
வாரும் வளையல் செட்டி
வந்திறங்கும் மணிப்பந்தலிலே
கோண வளையலிடும் - என் அரசனுக்கு
குணம் உள்ள பச்சையிடும்

நீல வளையலிடும்
நிறம் உள்ள பச்சையிடும்
வானம் கறுத்திருக்க
மழைமேகம் கூடியிருக்க
வாழைக் குருத்தோ - நீ எனக்கு
வளர் குருத்தும் ஆகுதுமோ
பக்கக் குருத்தோ - நீ எனக்கு
பலாக் குருத்தும் ஆகுதுமோ
சாலக் குருத்தோ - நீ எனக்கு
தலைக் குருத்தும் ஆகுதுமோ

லெட்சுமி, காருபாறை

பதிவு : தா. முருகன்

தாய்ப்பாசம்

நான் பெத்த மவனே......

தாய் : நான் பெத்த மொவனே
நாய்க் குட்டித் தலைவா
நான் செத்துப் போனா - பழஞ்
சோத்துக்கு எங்கே போவா?

மகன் : சின்னாத்தா வருவா
சிறு பயிறவிச்சித் தருவா
பெரியாத்தா வருவா
பெரும் பயிறவிச்சித் தருவா

இன்னும் ஒருவகை

சின்னத்தை வருவா
சீனாப்பழம் தருவா
பெரியத்தை வருவா
பெண்ணக் கட்டித் தருவா

கண்ணு மவனுக்குச் சோறு போட

கண்ணு மொவனுக்குச் சோறூட்ட
சட்டுவம் எங்க வச்சேன்?
கில்லிப் பொதச்சேனோ
கீழ் மடியில் வச்சேனோ
மூத்தார் இளையாருக்கு
எடுத்துக் கொடுத்தேனோ,
தட்டி ஒடச்சேனோ
சந்தியிலே போட்டேனோ
செல்ல மவன் சட்டுவத்தத்
தேடி அலஞ்சேனே

அ. அழகிய நாயகி அம்மாள்

தோ தோ நாய்க்குட்டி

தோத் தோத்தோ நாய்க்குட்டி
தொவரங் காட்டுக்குப் போயிவாறென்
எட்டத்திலெ முறுக்கிருக்கு
எட்டி எட்டிக் கடிச்சிக்கோ

அ. அழகிய நாயகி அம்மாள்

கண்ணாட்டி மவளே

கண்ணாட்டி மவளே
கடைக்குட்டி மவளே
நான் செத்துப் போனா
நீ என்ன செய்வா
ஆத்தங்கரை ஓரம்
அங்கு நின்னு அழுவேன்
கப்பல்காரன் வருவான்
காசுமாலை போடுவான்
தோள் மாலை ஆட்டித்
தூக்கிக்கிட்டுப் போவான்

அ. அழகிய நாயகி அம்மாள்

சிறுவர் பாடல்

பிள்ளை

சப்பாணி
கொட்டும் பிள்ளை
தயிரும், சோறும்
உண்ணும் பிள்ளை
அப்பம் சுட்டா தின்னும் பிள்ளை
அவல் இடிச்சா சவைக்கும் பிள்ளை

(அனந்தை தமிழி - அனந்தசுவாமிபுரம்)

ஆத்துக்குள்ளே

ஆத்துக்குள்ளே ரெண்டு - முட்டை
அச்சடிக்குது பார்
அழகான மாடு வந்து
கொட்டடிக்குது பார்

(அனந்தை தமிழி - அனந்தசுவாமிபுரம்)

கீரி கீரி

கீரி கீரி நண்டு பிடி
கீரிப்பிள்ளா நண்டு பிடி
வைக்கக் கீரி நண்டு பிடி
வரப்புக் கீரி நண்டு பிடி
(வைக்கக் கீரி = வைக்கோல் போரில் வாழும் கீரி)

(அனந்தை தமிழி - அனந்தசுவாமிபுரம்)

மழை வருது

மழை வருது, மழை வருது
நெல்லை அள்ளுங்கோ
அங்க வாற மாமனுக்கு
தடுக்குப் போடுங்கோ
சும்மா வாற மாமனுக்கு
சூடு போடுங்கோ

ஓர் பத்தி, ஈர் பத்தி
ஓரிய மங்கலம்
சிக்கும் புக்கும்
சிவந்திய மாலை
பூதம், பூதம்
புதிய ராஜா

ஆடும், கன்றும்
வாரவேளை
காலை மடக்கு
தோழிப் பெண்ணே

புஷ்ப நாயகி, பள்ளம்

என்னடா தம்பி

என்னாசத் தம்பி
எங்கடா போனா?
அக்கா வீடு போனேன்
அரிசி மாவு தந்தா
வேண்டாமுன்னு சொன்னேன்
வழியிலே பாம்பு
பாம்படிக்க மட்டை
மட்டைக்குள்ளே பல்லி
பல்லியம்மா பல்லி
உங்கம்மா கள்ளி

பாட்டியம்மா

பாட்டியம்மா பாட்டி
பழைய அரிசி தீட்டி
கோணக் கால நீட்டி
குசுவுடம்மா பாட்டி

புளியங்காய்

கோணக் கோணப் புளியங்கா
கொங்க நாட்டுப் புளியங்கா
ஒங்க நாட்ல இருந்து
எங்க நாட்டுக்கு வருகுது

புஷ்ப நாயகி, பள்ளம்

அட்டலங்கா புட்டலங்கா

சிறுமியர் இருவர் எதிரெதிரே உட்கார்ந்து, கால்களை நீட்டி, ஒருவர் குனிந்து அடுத்தவர் காலைத் தொட்டு முதல் வரியைச் சொல்ல, அடுத்தவர் குனிந்து எதிர்நபர் காலைத் தொட்டு இரண்டாம் வரியைச் சொல்ல, அத்தனையும் தின்ன பூச்சை கக்கு. பூச்சை என்று சொல்லுபவர் எதிர் நபரின் உச்சியில் அடிப்பார். அவர் கக்— கக்— எனக் கக்குவார்—

அட்டலங்கா புட்டலங்கா
அரியோடி மாதுளங்கா
தேங்காயைத் திருவி
தெருவிலே போட்டு
மாங்காயப் பறிச்சி
மடியிலே போட்டு
அத்தனையும் தின்ன பூச்சை
இந்தப் பூச்சை......

கக்கு பூச்சை........
கக் கக் கக்.......!

பச்சை மிளகாய்
பால் மிளகாய் - எங்க
அண்ணன் பொண்டாட்டி - அந்த
காகத்துக்கு மூக்கு அறுக்க
கத்தி கொண்டாட்டி

புஷ்ப நாயகி, பள்ளம்

தத்தக்கா புத்தக்கா

தத்தக்கா புத்தக்கா தா தா
தவலையோட தா தா
சீனி போட்டு தா தா
தரமாட்டேன் போ போ

அனந்தை தமிழி

ஒரு நெல் எடுத்து

ஒரு நெல் எடுத்து
இரு நெல்லாக்கி
பச்சை குத்தி
பால் சோறு பொங்கி
நானும் தின்னு
லெட்சுமிக்கும் கொடுத்தேன்.

கள்ளன் வந்தான்
மீனைக் கேட்டான்
முள்ளைக் கொடுத்தேன்
விக்கிக் கிட்டுச் செத்தான்

அனந்தை தமிழி

காலு

(ஒவ்வொரு பருவத்துக்கும் ஒவ்வொரு விதமான கால்)

தத்தகா புத்தகா நாலு காலு
தனியே நடந்தா ரெண்டு காலு
முதுகு வளைஞ்சா மூணு காலு
முழுசும் முடிஞ்சா எட்டு காலு

அனந்தை தமிழி

மொட்டப் பாப்பாத்தி

(இது குழந்தைகளின் உல்லாசமான குழுப்பாடல்)

மொட்டப் பாப்பாத்தி
ரொட்டி சுட்டாளாம்
எண்ணெய் இல்லாம - அவ
கடைக்கிப் போனாளாம்
காசு இல்லியாம் - கடக்காரனப் பாத்துக்
கண்ணடிச்சாளாம்......
என்னிக்கிக் கலியாணம்?
நாளைக்கி கலியாணம்

டொண், டொண்
பீப்பி, பீப்பி
சிங் சிங் டம் டம்

அனந்தை - தமிழி

ஒண்ணு ரெண்டு

ஒண்ணு ஓலைத் துரும்பு
ரெண்டு இரத்தினக் கிளி
மூணு முத்துப் புறா
நாலு நாய்க்குட்டி வாலு
அஞ்சி நெஞ்சம் சுறா
ஆறு அடுத்த வீட்டுக் கள்ளன்
ஏழு அத்தாணிப் புழுக்கை
எட்டு பொட்ட நாய்க் கட்டு
ஒன்பது ஒட்டகத்து வால்
பத்து பாளையங் கோட்டை ராஜாவுக்கு
விடிய விடிய கலியாணம்.

கட்டெறும்பு

நாடாச்சி குண்டியிலே
நா நாழி கட்டெறும்பு
தட்டத் தட்ட போகல்ல
தாலி அறுப்பான் கட்டெறும்பு

பத்மா, பொட்டல்

குத்தடி குத்தடி

குத்தடி குத்தடி சைலக்கா
குனிஞ்சி குத்தடி சைலக்கா
பந்தலிலே பாவக்கா
தொங்குதடி லோலக்கா
ஆல இலை பழுக்கும்
தாழம்பூ மணக்கும்
ஒண்ணரை வருடம் பொண்ணுக்கு

புஷ்ப நாயகி, பள்ளம்

பூ

தாழம்பூ
தாமரப்பூ
தாயார் தந்த
செண்பகப்பூ
மாம்பூ
மா துளம்பூ
மாமியார்தந்த
மல்லிகைப்பூ

அனந்தை தமிழி

பூவே பூ

பூவே பூ புளியம் பூ
பொன்னேர் கொண்டைக்கித் தாழம் பூ
காயே கா கருவைக்கா
கஞ்சிக் கூட்டுக்கு நெல்லிக்கா

சாடிக்கு மூடி

சாடிக்கு மூடி
சையலுக்குச் சோடி
பாறைக்குப் பின்னே
பறந்து வா ஓடி
பாம்புக்கு மகுடி
பருப்புக்குப் போட்டி
கட்டிக்க வேட்டி
கதை சொல்லு பாட்டி

அனந்தை தமிழி

விளையாட்டு

தொட்டு வருபவரைத் தேர்வு செய்தல்

தொட்டு விளையாட்டில் யார் முதலில் தொட்டு வருவது என்பதைக் கண்டுபிடிக்கக் குழந்தைகள் பல உத்திகளைப் பயன்படுத்துவார்கள். சமயோசிதம்போல மூணு வார்த்தைகள் அல்லது ஐந்து வார்த்தைகள் என ஒற்றைப்படை எண் வரிசையில் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவார்கள். விளையாட்டுத் தலைவர் தாய்ச்சி. தலைவர் தன்முன் மற்றவர்களை வரிசையில் நிறுத்தி, தன் வார்த்தைகளை அடுக்கி ஒவ்வொன்றாய் ஒவ்வொருவரை நோக்கிச் சொல்லி, முடிவுச் சொல் யாரைச் சுட்டுகிறதோ அவரை வரிசையிலிருந்து விலக்குவார். இப்படியே ஒவ்வொருவரை விலக்கி, யார் கடைசியாக மிஞ்சுகிறாரோ அவர் தொட்டு வரவேண்டும்.

ஒளிந்து விளையாடுதல், நொண்டியடித்துத் தொட்டு வருதல் முதலிய விளையாட்டுகளிலும் விளையாட்டைத் தொடங்கி வைக்க இப்படித்தான் ஆள் தேர்ந்தெடுப்பார்கள்.

ஒண்ணர	அல்லது	அல்லது
டக்கர	இங்கு	சங்கு, சக்கரம்
டு வர	புங்கு	இந்திர, நாகம்
டே	டங்கு	பால், பழம்
ஆவல்	அக்!	சுவீட்
காவல்		
பிங்கி		
டே		
ஆ		
ஈ		
க்ளப்		

விடுடா துலுக்கா

இந்த விளையாட்டும் கிட்டத்தட்டப் பசுவும் புலியும் விளையாட்டுப்போல விளையாடக் கூடியதே. இரண்டு குழந்தைகள் கைகளை மேலே தூக்கிக் கோர்த்து வாசல் போல் நிற்க, மற்ற குழந்தைகள், ஒருவர் கொடுக்கை ஒருவர் பிடித்துக்கொண்டு, கீழ்க்கண்ட பாட்டைப் பாடியபடி சுற்றிச் சுற்றிப் போய்க்கொண்டிருப்பார்கள். போகப் போகப் பாடிக்கொண்டிருப்பார்கள்.

ஒவ்வொரு அடியாகத் தாய்ச்சி பாட, மற்றவர்கள் அதை எடுத்துப் பாடுவார்கள்.

ஒரு கொடந் தண்ணியெடுத்து
ஒரு பூ பூத்தாச்சி
ரெண்டு கொடந் தண்ணியெடுத்து
ரெண்டு பூ பூத்தாச்சி
மூணு கொடந் தண்ணியெடுத்து
மூணு பூ பூத்தாச்சி
நாலு கொடந் தண்ணியெடுத்து
நாலு பூ பூத்தாச்சி

அப்படியே ஒன்பது முறை சொல்லி, பத்தாவது முறையில்......

"பத்தாவது பெண்ணைப்
பூ போட்டுப் புடிச்சிக்க" என்பார் தாய்ச்சி.

வாசலருகே காத்துக்கொண்டு நிற்கும் துலுக்கன், கடைசிப் பெண்ணைப் பிடித்துக்கொள்ளுவான். துலுக்கன் ஒரு பக்கம் இழுக்க மற்றவர்கள் பெண்ணைத் தம்பக்கம் இழுப்பார்கள். இழுபறியின்போது ஒரு பாட்டு பாடப்படும்

ஒரு பணந்தாரேன்
உடுடா துலுக்கா
உடமாட்டேன் வலுக்கா
ரெண்டு பணம் தாரேன்
உடுடா துலுக்கா
உடமாட்டேன் வலுக்கா
பீங்காட்டு விளையிலே
பாதியத் தாரேன்
உடுடா துலுக்கா
உடமாட்டேன் வலுக்கா
பூமியில பாதி தாரேன்
உடுடா துலுக்கா
உடமாட்டேன் வலுக்கா
வானத்தில பாதி தாரேன்
உடுடா துலுக்கா
உடமாட்டேன் வலுக்கா
ராசா பொண்ணக் கட்டித் தாரேன்
உடுடா துலுக்கா
(துலுக்கன் பெண்ணை விட்டுவிட
விளையாட்டு முடியும்)

பசுவும் புலியும்

இதுவும் ஒரு குழு விளையாட்டு

இரண்டு பெண்கள் எதிரெதிராகக் கைகளை உயர்த்திக் கோர்த்துக்கொண்டு, வாசல்போல் நிற்பார்கள். மீதிச் சிறுசுகள் ஒருவர்பின் ஒருவராக வரிசைப்பட்டு, ஒருவர் கொடுக்கை (இடுப்பில் சுற்றியிருக்கும் பாவாடைக் கயிறு அல்லது கால்சட்டையின் முதுகுப் பக்கம்) ஒருவர் பிடித்தபடி "பாதே போ" பாட்டைப் பாடிக்கொண்டு, பாம்புபோல வளைந்து நெளிந்து நடந்து வாசலில் நுழைந்து வெளியேறு வார்கள். கடைசிக் குழந்தை வாசலைக் கடக்கும் நேரத்தில், வாசலருகே காத்து நிற்கும் புலி (குழுவின் மிகவும் வலுவுள்ள குழந்தை) அதைக் கன்றுக் குட்டியாகப் பாவித்துப் பிடித்து இழுக்கும். முன்னால் போனவை பசுக்கள். அவை ஒன்று சேர்ந்து கன்றை தம் பக்கம் இருக்கும். புலியை உள்ளே விடாமல் வாசல் தடுக்கும். பெரும் போராட்டத்துக்குப் பின் ஏதாவது ஒன்று வெற்றி பெறும். முன்காலத்தில் இது பெண் குழந்தைகள் விளையாடும் பிரபலமான கிராமிய விளையாட்டு.

தலைமைப் பசு எடுத்துப்பாட, குழு தொடுத்துப் பாடும்.

பாதே போ பாதே போ
பயத்தங்காய் பறியாம
நேரே போ நேரே போ
நெருஞ்சி முள்ளு தையாம......
எங்க அண்ணனுக்க
அருவாப் பெட்டியக் காணயில்ல......
தேடி எடு தட்டாப் புள்ளா
எங்க அண்ணனுக்க
முருக்குத் தடியக் காணயில்ல

தேடி எடு தட்டாப் புள்ளா......

பாதே போ பாதே போ........

பருத்திப் பூ பறியாம.......

நேரே போ நேரே போ... நொண்டங்கா பறியாம

(பிள்ளைகள் ஒன்றுக்குப் பின்னால் ஒன்று கொடுக்கைப் பிடித்துக்கொண்டு போக)

காத்து நிற்கும் புலி, கடைசியில் போகும் கன்றுக் குட்டியைக் கவ்விப் பிடித்துப் பின்னால் இழுக்கும்.

புலி

காறு காறெங்கிற
கண்ணுக் குட்டியையும் பசுவையும்
கொண்டல்லாம போவேனோ

பசுக்கூட்டம்

சுறுசுறுங்கிற சுண்ணாம்புத் தண்ணிய - உன்
மொகத்தில வீசாமப் போவோமோ.

புலி கன்றுக் குட்டியை இழுக்க, பசுக்கள் அதைத் தம் பக்கம் இழுக்க, புலி உள்ளே நுழைய விடாமல் பாதை தடுக்க, போட்டி மிகவும் கலகலப்பாக நடக்கும்.

சடுகுடு

கிராமப்புறத்து வீர விளையாட்டுகளில் இது முக்கியமானது. மணற்பாங்கான இடத்தில், ஒரு கோடு போடுவார்கள். இது எல்லைக்கோடு. இந்த நடுக்கோட்டின் நடுவில் மணலைக் குவிப்பார்கள். இது உப்புக் குவியல். இரண்டு பக்கமும் சற்று தூரத்தில் காலால் இரண்டு கோடு கீறுவார்கள். இவை எல்லைக் கோடுகள். எல்லைக்கோட்டைத் தாண்டியதும் பாடிவருபவர் மூச்சை அடக்கி பாடத் தொடங்குவார். அவர் எதிரி எல்லைக்கோட்டைத் தாண்டிப் போனால்தான் விளையாட முடியும். இல்லையென்றால் வெளியேறிவிட வேண்டியதுதான். பாடிப்போகிறவர் மூச்சு விடாமல் எல்லைக் கோட்டைத் தாண்டி தன் பக்கம் திரும்ப வேண்டும். எதிரிகள் பிடித்தால், அல்லது தொட்டால், இவர் மூச்சுவிடாமல் உப்பைத் தொட்டுவிட வேண்டும்.

இந்த விளையாட்டில் பாடிப் போவது முக்கியமானது. ஒரு பக்கம் பாடிப் போகிறவர் பாடுவார். அவர் திரும்பியதும் அவர் விட்ட இடத்திலிருந்து எதிர்பாட்டு பாடுவார் எதிரி. கேட்க இது ஒருவகை அந்தாதிபோல இருக்கும்.

வெத்தலடி வெத்தல

ஒருவர்: வெத்தலடி வெத்தில
வெள்ளாங்குடி வெத்தில
பறிச்சப் போன எடத்தில
தூக்கிப் போட்டு நொத்துல.....

எதிராளி: ஒன்ன நொத்தல
நொத்தல
நொத்தல.........

சடுகுடு சல்லி

ஒருவன்: குடு குடு சல்லி கூண்டு சல்லி
கூண்டு மரைக்கா மாராயம்
மாராயம் மாராயம்.........

எதிராளி: மாராயம்
ஒங்க அப்பனுக்குல
அப்பனுக்குல......... அப்பனுக்குல.........

சடுகுடு மலையில

ஒருவன்: சடுகுடு மலையில ரெண்டான
தவறி விழுந்தது கிழட்டான
கிழட்டான....... கிழட்டான.......

எதிராளி: கிழட்டானக்கிப்
பொண்டிருந்தது
நீ தானோ
நீ தானோ...... நீ தானோ......

மலையிலே மலங்கரையிலே

ஒருவர்: மலையிலே மலங்கரையிலே
கமந்தடிக்கிற வவ்வாக் குஞ்சிக்கு
கண்ணு ரெண்டும் புடதியிலே
புடதியிலே புடதியிலே

எதிராளி: ஒன் பொடதியிலே
பொடதியிலே
பொடதியிலே..........

குப்பதோண்டி

(குப்பை - அடுப்புச் சாம்பல்)

இந்த விளையாட்டை 5 வயசுக்கும் 10 வயசுக்கும் இடைப்பட்ட குழந்தைகள் ஆண், பெண் இருவரும் விளையாடுவார்கள். ஒருவர் தலைவர் பொறுப்பு ஏற்கிறார். அனைவரும் வட்டமாக நெருங்கி உட்காருகிறார்கள். இரண்டு கைகளையும் விரித்துத் தரையில் ஊன்றுகிறார்கள். இரண்டு விரல்களுக்கிடையே உள்ள இடைவெளியை அடுப்பாகக் கற்பனை செய்து கொள்ளுகிறார்கள். இரண்டு கைகளையும் ஊன்றினால் மொத்தம் எட்டு அடுப்பு.

அதிகாலை நேரம் தலைமைப் பொறுப்பேற்ற குழந்தை முதலில் அடுப்புச் சாம்பலைத் தோண்டி (நீக்கி) அடுப்பைச் சுத்தம் பண்ணுகிறது. தன் விரலால் சுற்றி உள்ள ஒவ்வொரு அடுப்பையும் அது தோண்டுகிறது. ஒவ்வொரு முறை தோண்டும்போதும் குப்பைத் தோண்டி, குப்பைத் தோண்டி என்று பாடுகிறது.

குப்பை தோண்டி முடித்ததும், அடுப்பு மெழுகி, தீ மூட்டி, தோசைக் கல் ஏற்றி, அதில் எண்ணெய் தடவி, மாவு ஊற்றி, தேங்காய் போட்டு, மூடிவைக்கிறது. தோசை வெந்துவிட்டதா வேகவில்லையா என்று தலைமைக் குழந்தை பார்க்கிறது. அப்புறம் அந்தக் குழந்தை எழுந்து, நான் குளித்துவிட்டு வாரேன், அதுவரை தட்டும், தோசையும் அப்படியே இருக்கட்டும் என்று சொல்லிவிட்டுத் தள்ளிப்போய் குளிப்பதுபோல பாவனை செய்கிறது. உக்காந்திருக்கிற குழந்தைகளெல்லாம் தோசையை அவசர அவசரமாகச் சாப்பிட்டு விடுகிறார்கள். குளித்துவிட்டு வரும் குழந்தை

தோசையைக் காணாமல் திகைக்கிறது. அது கேள்வி கேட்க, மற்ற குழந்தைகள் கூட்டாகப் பதில் சொல்லுகின்றன.

இனி முழுமையான பாடல். தலைவியும் மற்றவர்களும் ஆளுக்குப் பாதி பாடவேண்டும்.

குப்பதோண்டி, குப்பதோண்டி
அடுப்பு மெழுவி, அடுப்பு மெழுவி
தீமூட்டி, தீமூட்டி
கல்லுவச்சி, கல்லுவச்சி
எண்ணெய்தடவி, எண்ணெய் தடவி
மாவு ஊத்தி, மாவு ஊத்தி
தேங்காய போட்டு, தேங்காய போட்டு
தோசைய மூடிவைங்க
வச்சாச்சி
வெந்துற்றா வேகலியா
இன்னு வேகல்ல
நான் குளிச்சிட்டு வாரேன் - அது வரை
தட்டும் தோசையும் அப்படியே இருக்கட்டும்.
குளிச்சிட்டு வந்து பாத்தா தோசையைக் காணவில்லை
தலைவர்
தோசை எங்கே

குழு:

காக்கா தூக்கிட்டு போயிற்று
காக்கா எங்க
மரத்தில
மரம் எங்க
காஞ்சி போச்சி
சுள்ளி எங்க
எரிச்சிப் புட்டோம்

சாம்பல் எங்க
பாத்திரம் பூசினோம்
பூசின தண்ணீர்?
செடிக்கி விட்டோம்.
செடி என்ன தந்தது
பூ தந்தது
பூ எங்கே
சாமிக்கு வச்சோம்
சாமி என்ன தந்தது
பழம் தந்தது
எனக்கு என்ன இருக்கு
குசு இருக்கு.

இந்த பதிலைக் கேட்டதும் தலைமைக் குழந்தை மற்ற குழந்தைகளை அடிக்கப் போகும். அவை சிரிச்சிக்கிட்டே கலஞ்சி ஓடும். இதுதான் விளையாட்டு.

அனந்தை - ர. ஜெகதா

விளையாட்டில் ஏசல் அல்லது சீக்கா அறுத்தல்

(காதில் சீழ் வரும் அளவு வைதல்)

சடுகுடு, கிளச்சி, கிளித்தட்டு, சிங்காம்புள் போன்ற விளையாட்டுக்கள் நெடுநேரம் நடக்கும். திரும்பத் திரும்பத் தோற்றுப் போகிறவர்கள், அல்லது வீட்டுக்குப் போக விரும்புகிறவர்கள் இடையிலே ஓடத் தொடங்குவார்கள். அவர்களைத் தடுத்து, திரும்பவும் விளையாட்டில் கலந்து கொள்ளச் சொல்வதற்காக, எதிர்கட்சிக்காரர்கள் ஒரு பாட்டுப் பாடுவார்கள். இதற்குச் சீக்கா அறுத்தல் என்பது பெயர். ஒரு முழ நீளமுள்ள ஓலை இலக்கை எடுத்து, இரண்டாகக் கிழிப்பார்கள். ஓலை இலக்கு "U" போல் இருக்கும்படி ஒருத்தன் ஒன்றின் இரண்டு நுனிகளையும் இரண்டு கைகளால் பிடித்துக்கொள்ள, அடுத்தவன் மீதி இருக்கும் ஓலை இலக்கை இதேமாதிரி எதிர்பக்கத்திலிருந்து நுழைத்துப் பிடித்துக்கொள்வான். இரண்டு ஓலை துரும்புகளின் நடுப்பகுதியும் ஒரு சங்கிலியின் கண்ணிகளைப் போல எதிரெதிராகக் கவ்வும். இரண்டு பேரும் தாங்கள் பிடித்திருக்கும் முனைகளை இழுத்துக்கொண்டே,

"சீக்கா சீக்கா சில்லாட்டை
செறுக்கி மவனே விளையாட வா"

என சீக்கா அறுப்பார்கள்.

துரும்பை இழுக்கும் வேகமும், பாட்டைச் சொல்லும் வேகமும் படிப்படியாக அதிகரிக்கும். ஒரு கட்டத்துக்கு மேல், ஓடிப்போனவனால் தாக்குபிடிக்க முடியாது. திரும்பி வந்து விளையாட்டில் கலந்துகொள்ளுவான் அல்லது சண்டை போடுவான்.

சீக்கா	- *சீழ்க்காது.*
சில்லாட்டை	- *சல்லடை. பனைமட்டைகளின் இடையே இருக்கும் வலைப் பின்னல் போன்ற பகுதி. எளிதில் கிழிக்க முடியாதது. விடாப்பிடியாக வையும் பெண்களைச் சில்லாட்டை எனத் திட்டுவார்கள்.*
அறுத்தல்	- *வைதல்.*

தூ! விடுதல்

தொட்டு விளையாட்டு, நொண்டியடித்துத் தொட்டு வருதல் போன்றவை தீவிரமாக நடந்துகொண்டிருக்கும் போது, ஓடிக்கொண்டிருப்பவரின் இடுப்பு ஆடை அவிழ்ந்து விட்டாலோ, காலில் முள்குத்தி விட்டாலோ, அல்லது அவர் கடுமையாகக் களைப்படைந்துவிட்டாலோ "தூ" என்று சொல்லி நின்றுவிடுவார். தொட்டு வருபவரும் உடனேயே அந்த இடத்திலேயே நின்றுவிட வேண்டும். "தூ" விட்டவர் தன் பிரச்சினையைச் சரி செய்து "தூ அழிஞ்சிது" என்று சொல்லி ஓடத் தொடங்கியதும் விளையாட்டு தொடரும்.

போர்க்களத்தில் எதிரி களைத்தாலோ, ஆயுதம் இழந்தாலோ போரை நிறுத்தி, எதிரி தன்னைத் தயார் செய்துகொள்ள வாய்ப்பளிப்பது போன்றது இது.

ஊஞ்சல் பாட்டு

இளமை வாழ்வில் ஊஞ்சலாட்டம் மிக முக்கியமான ஒரு விளையாட்டு. ஊஞ்சலை இந்தப் பக்கங்களில் குஞ்சாலம் என்பார்கள். ஆவணி மாசப் பிறப்பு அன்று எல்லா வீடுகளிலும் ஊஞ்சல் போட்டுவிடுவார்கள். இதற்கான தயாரிப்புகள் கிட்டத்தட்ட ஒரு மாதத்துக்கு முன்னமேயே தொடங்கிவிடும். பனை நாரினாலோ, தென்னங் குருத்தோலை களாலோ நீளவடங்கள் வீட்டில் உள்ளன. ஆண்கள் முறுக்குவார்கள். விசாலமாக ஆடும் வகையில் உயரமான மரக்கிளைகளிலிருந்து இந்த வட்டத்தை இரண்டாகத் தொங்கவிட்டு, அதில் உட்காருவதற்கு உலக்கைகளை அல்லது அதுபோன்ற தடிகளைக் கட்டுவார்கள். வீட்டுப்பக்கம் உயரமான மரக்கிளைகள் கிடைக்கவில்லை என்றால், இரண்டு மரங்களுக்கிடையிலோ, இரண்டு பனைகளுக் கிடையிலோ உயரத்தில் ஒரு தடியைக் குறுக்கக் கட்டி, அதில் ஊஞ்சல் வடத்தைத் தொங்கவிடுவர்.

ஒரே நேரத்தில் ஐந்து பேர் ஊஞ்சலில் எதிரெதிர் பக்கமாக உட்கார்ந்து ஆடுவார்கள். ஊஞ்சல் முன்னே போகும்போது குழுவின் தலைவி ஒவ்வொரு அடியாக எடுத்துப்பாட, பின்னே போகும்போது மற்றவர்கள் அதைத் தொடுத்துப் பாடுவார்கள். பட்டாடை உடுத்தி, சடை பின்னி தேவதைபோல் இருக்கும் இளம்பெண்கள் ஆகாயத்திற்கும் பூமிக்குமாக ஊஞ்சலில் பறப்பது கண்கொள்ளாக் காட்சி.

ஊஞ்சல் பாட்டு நீளமானது, பல மணிநேரம் பாடக் கூடியது. ஊஞ்சல் பாட்டுப் பாடும் மேதைகள் ஊரில் பலர் உண்டு. ஆவணி மாதம் முழுவதும், இரவும் பகலும் இளம் பெண்களுக்கு ஊஞ்சல்தான் கதி.

ஒரு மம்பட்டி

(ஊஞ்சல் பாட்டின் ஒரு பகுதி)

ஒரு மம்பட்டி மண்கோரி
போட்டேன் அம்மா பொன் பாவை
பொன் பாவையும் பூத்துக் கிடக்கு
பொன்னே நம்முட வாசலிலே
பறிப்பாருக்கு ஏத்த பூ
பனிமுகத்தில விரிஞ்ச பூ......
காலடியாம் வேலப்ப நாடான்
கரிசனையோடத் தொடுத்த பூ
தொடுத்த பூவைத்
தோளில போட்டு
மிஞ்சன பூவை
மடியில கட்டி
பூக் கொள்ளுங்கோ பூக் கொள்ளுங்கோ
பொன் தரத்துப் பூக் கொள்ளுங்கோ
பூவே என்ன சத்தத்தில
பூப்புள்ள மக மயிலானா
மயிலானா துயிலுடுப்பா
மாதமொரு பட்டுடுப்பா
பட்டு நிலம் தூங்க
பகடக்கால் - சீராட
பொன் முந்தி நிலந்தூங்க.......

பொன்னுக்கால் சீராட
ஏங்க மச்சான் பேயாடி
தெப்பக் குளத்தில நீராடி
பாக்கு கண்டா பகட்டிடுவார்
பருவத்தால் மின்னிடுவார்
குரும்ப கண்டால் குந்திடுவார்
குன்னி முத்தாய் மின்னிடுவார்.

ஓராம் பூசரி

இதுவும் ஒரு பகுதியே

(பூசரி - பூவரசு)

ஓராம் பூசரி பூக்கவே
பூத்த பூ வெல்லாந் தொளியவே
முன்னூறு கை கொண்டு ஏந்தவே
வெள்ளி உதிக்க வருவோம் நாங்க
வெள்ளப் பிராமணன் மக்கோ நாங்க
மாலை கொண்டு வருவோம் நாங்க
மைனி கழுத்தில போடுவோம் நாங்க
ஆரம் கொண்டு வருவோம் நாங்க
அண்ணன் கழுத்தில் போடுவோம் நாங்க
தாலி கொண்டு வருவோம் நாங்க
தட்டான் கையிலே கொடுப்போம் நாங்க.

புஷ்ப நாயகி, பள்ளம்

வாறாரையா

வாறாரையா சுப்பையா
வழி விடம்மா மீனாட்சி
மீனாட்சியம்மைய மின்னுக்கிருத்தி
காமாட்சியம்மைய பின்னுக்கிருத்தி
கப்பல் தேங்காய
டப்புன்னு உடச்சி......

கல்லடியிலே ஊஞ்சல் போட்டு

கல்லடியிலே ஊஞ்சலப் போட்டு
காத்திருந்தாடுவோம் குறப்பெண்டுக நாங்க
கல்லுகல்லெண்ணு ஆடுவோம் நாங்க
கல்லடி நாட்டுக் குறப்பெண்டுக நாங்க
நெல்லடியிலே ஊஞ்சலப் போட்டு
நீண்டிருந்தாடுவோம் குறப்பெண்டுக நாங்க
நெல்லு நெல்லுண்ணு ஆடுவோம் நாங்க
நெல்லடி நாட்டுக் குறப்பெண்டுக நாங்க.

(அ. அழகிய நாயகி அம்மாள்)

எதிர்ப்பாட்டு

குழந்தைகள் தங்களை இரண்டு குழுக்களாகப் பிரித்துக் கொள்ளுவார்கள். இரண்டு குழுக்களும் ஒன்றுக்கொன்று எதிராக அமர்ந்துகொள்ளும். ஒரு குழு ஒரு வரி பாட, எதிர் வரிசைக்காரர் மறுவரி பாட, அந்தாதி முறையில் இரண்டு கூட்டத்தினரும் ஒரே பாட்டை விடாமல் மாறி மாறித் தொடரவேண்டும். பொருத்தமான எதிர்பாட்டு பாட முடியாதவர் தோற்றுப் போனவராகக் கருதப்படுவர். சந்தனமாம் சந்தனம், நொண்டங்கா, நொண்டங்கா ஆகிய பாடல்கள் இந்த வகையைச் சார்ந்தவை.

ஊஞ்சல் பாட்டில்கூட எதிர்க்குழு தன் வாய்ப்புக்காக தரையில் காத்து நிற்க, அந்தாதி முறையில் போட்டி நடக்கும். தரையில் நிற்கும் குழு ஆடும் குழுவைத் தோற்கடித்து ஊஞ்சலில் ஏறிக்கொள்ள வேண்டும்.

குழந்தைகளின் மொழித் திறமைக்கும் கற்பனை வளத்திற்கும் இந்தப் பாட்டுமுறை சிறந்த பயிற்சிக்களமாக அமையும்.

இந்தப் பாடல் சொன்னவர் மேலகிருஷ்ணன் புதூர் புஷ்ப நாயகி.

சந்தனம் சந்தனம்

சந்தனம் சந்தனம்
என்ன சந்தனம்
செஞ்சந்தனம்
சந்தனம் என்றால் மணக்காதோ
மணக்கதுக்கும் பூவோ
பூ வென்றால் வாடாதோ
வாடதுக்குச் சருகோ
சருகு என்றால் ஓடாதோ
ஓடதுக்கு வள்ளமோ
வள்ளம் என்றால் உடையாதோ
உடையதுக்குத் தேங்காயோ
தேங்காயென்றால் தொங்காதோ
தொங்கதுக்கு வவ்வாலோ
வவ்வால் என்றால் கவ்வாதோ
கவ்வதுக்கும் நாயோ
என்ன நாய்
வேட்டை நாய்
என்ன வேட்டை
பண்ணி வேட்டை
என்ன பண்ணி
ஊர்ப் பண்ணி
என்ன ஊர்
அரசி ஊர்
என்னரசி
பொன்னரசி
என்னப் பொன்னு

காக்காப் பொன்னு
என்ன காக்கா
அண்டங் காக்கா
என்ன அண்டம்
சோறு அண்டம்
என்ன சோறு
பழஞ் சோறு
என்ன பழம்
வாழைப்பழம்
என்ன வாழை
கரு வாழை
என்ன கரு
முட்டைக் கரு
என்ன முட்டை
கோழி முட்டை
என்ன கோழி
தெருக் கோழி
என்ன தெரு
தேங்காய்த் தெரு
என்ன தேங்காய்
நெய்த் தேங்காய்
என்ன நெய்
பாம்பு நெய்
என்ன பாம்பு
மலைப் பாம்பு
என்ன மலை
சீதை மலை
என்ன சீதை
சாமி சீதை
என்ன சாமி
தங்க சாமி.......

நொண்டங்கா நொண்டங்கா

நொண்டங்கா நொண்டங்கா
கொத்தோட நொண்டங்கா
யாருக்கு வாழ்க்கைப்பட்டா
அரசனுக்கு வாழ்க்கைப்பட்டேன்
அரசன் என்ன தந்தான்
கல்லும் கட்டியும் தந்தான்
கல்லும் கட்டியும் என்ன செய்தா
காடிப்பானையில போட்டேன்
காடிப்பானை என்ன தந்தது
ஒரு சருவம் காடி தந்தது
காடிய என்ன செய்தா
மாட்டுக்கு வச்சேன்
மாடு என்ன தந்தது
ஒரு கூட்டம் சாணி தந்தது
சாணிய என்ன செய்தா
வீடு மொழுவினேன்
வீ டெதுக்கு?
பிள்ளை பெற
பிள்ளை எதுக்கு?
பள்ளிக்கு விட
பள்ளியெல்லாம் பாம்பாக் கிடக்கு
பாம்படிக்கக் கம்புக்குப் போனேன்
கம்பெல்லாம் பீயாக் கிடக்கு

பீ கழுவத் தண்ணிக்குப் போனேன்
தண்ணியெல்லாம் மீனாக் கிடக்கு
மீன் பிடிக்க வலைக்கு போனேன்
வலையெல்லாம் ஓட்ட வல
ஓட்ட தைக்க ஊசிக்கு போனேன்
ஊசியெல்லாம் மொட்ட ஊசி
மொட்ட மொட்ட
என்ன மொட்ட....
(நொண்டங்கா - பிஞ்சுப் புளியங்காய்)

(வெ. புஷ்ப நாயகி)

அக்கா வீட்டுக்கு

அக்கா வீட்டுக்குப் போனேன்
அரிசிமாவு தந்தா
வேண்டாம் வேண்டாஞ் சொன்னேன்
வாற வழியில பாம்பு
பாம்ப அடிக்க கம்பெடுத்தேன்
கம்பெல்லாம் பீ
பீயக் கழுவ ஆத்துக்குப் போனேன்
ஆறெல்லாம் மீனு
மீனப் பிடிக்க
வலைய எடுத்தேன்
வலையெல்லாம் ஓட்ட
ஓட்ட தைக்க ஊசி எடுத்தேன்
ஊசி எல்லாம் வெள்ளி
வெள்ளியம்மா வெள்ளி
உங்கம்மா கள்ளி

அனந்தை ரா. சுகாசினி

சடங்குப் பாட்டு

ஒண்ணாங் கிண்ணரத்தா

பெண் பூப்பெய்வதைப் பெரிய விழாவாகக் கொண்டாடும் பழக்கம் இந்தப் பக்கத்திலும் உள்ளது. பூப்பெய்துவதை இப்பகுதியில் நிறம்புதல், புத்தியறிதல், சடங்காதல், சமைதல், பெரிய பிள்ளையாதல், திரளுதல், குத்த வைத்தல் என்றெல்லாம் குறிப்பிடுவார்கள். பெண் குழந்தைகள் உரிய வயதை எட்டத் தொடங்கியதிலிருந்தே, தாய்க்குக் கவலை பிறந்துவிடும். உரிய காலத்தில் மகள் பூக்க வேண்டுமே...... நாளாக நாளாகக் கவலை தவிப்பாய் வளரும். தங்கள் குழந்தைகள் இருளியாகி விடக்கூடாதே!

பெண் குழந்தைகள் பூத்த செய்தி அறிந்தவுடனேயே சடங்குகள் தொடங்கிவிடும். அக்கால வழக்கங்கள் சிலவற்றை இப்பாடலில் இருந்து தெரிந்து கொள்ளலாம். மிக நீண்ட பாடலின் ஒரு பகுதிதான் இங்கே பதிவாகியிருக்கிறது.

ஒண்ணாங் கிண்ணரத்தா
நிறம்புனாஎன்னு ஆளு வந் (த) தாம்
காட்டுக்கே நின்ன
கருங்காலிக் கம்பு வெட்டி
வெட்டித் திருத்தி
இரு கரையும் ஒப்பனிட்டு
குலுக்கை திறந்து
ஒரு கோட்டை நெல்லெடுத்து
கோட்டை திறந்து
கொத்துச் சம்பா நெல்லெடுத்து

குத்திப் புடைச்சாளே
குமிழம் பூ சையலிலே
அடிச்சிப் புடச்சி - அளந்தா
ஆவரம்பு சையலிலே
குத்திப் புடைச்சி
மாவிடிச்ச ஆள்பிடிச்சா
ஒத்த வெள்ளிக்காரி
உமையம்மா மாவிடிவா
பூட்டு வெள்ளிக்காரி
பொன்னம்மா மாவிடிவா
ஒத்த வெள்ளிக்காரியெல்லாம்
ஒத்து நின்னு மாவிடிச்ச
பூட்டு வெள்ளிக்காரியெல்லாம்
பொருந்தி நிண்ணு மாவிடிச்ச
குருத்தோலப் பாய்போட்டு
குமுகுமுண்ணு மாதெள்ளி
சாரோலப் பாய்போட்டு
சரசரண்ணி மாதெள்ளி
ஊருக்கு மாவு
ஒத்து நிண்ணு விளம்புங்கோ

(அ. அழகிய நாயகி அம்மாள்)

காதல்

சீரகப் பாத்தி கட்டி

சீரகப் பாத்தி கட்டி
செடிக்குச் செடி குஞ்சங் கட்டி
சீமானார் பெத்த மக - என்
சின்னப் பொண்ணு நடையே - நீ
செடிக்குச் செடி குந்தலாமோ
சின்னப் பெண்ணு நடையே
கொத்த மல்லிப் பாத்தி கட்டி
கொத்துக் கொத்தா குஞ்சங் கட்டி
கோமானார் பெத்த பொண்ணு
சின்னப் பொண்ணு நடையே - நீ
கொடிக்குக் கொடி குந்தலாமோ
சின்னப் பொண்ணு நடையே
காஞ்ச உருள மஞ்ச
கன்னாங் கடைக் கொத்து மஞ்ச
கண்ணகியார் தான் குளிச்ச
சின்னப் பொண்ணு நடையே - நான்
பாத்துனக்கு வாங்கி வந்தேன்
சின்னப் பொண்ணு நடையே
பச்ச உருள மஞ்ச
பத்துக் கடை கொத்து மஞ்ச

பாத்துனக்கு வாங்கி வந்தேன்
அன்னப் பொண்ணு நடையே
பார்வதியாள் தான் குளிக்க
அன்னப் பொண்ணு நடையே
அஞ்சு விரல் மோதிரமாம்
அரும்பு வச்ச ரெத்தினமாம்
ஆசாரி செஞ்ச கல்லாம்
சின்னப் பொண்ணு நடையே - நான்
ஆசை வச்சி வாங்கி வந்தேன்
சின்னப் பொண்ணு நடையே
பத்து விரல் மோதிரமாம்
பவுனு வச்ச ரெத்தினமாம்
பத்தரு செஞ்ச கல்லு
அன்னப் பொண்ணு நடையே - நான்
பாத்துனக்கு வாங்கி வந்தேன்
சின்னப் பொண்ணு நடையே

நகோமி - ஆரல் அழகிய நகர்

ஒரு செம்பு நீரெடுத்து

ஒரு செம்பு நீரெடுத்து நாங்கள் குளிப்போம் - வள்ளி
நாங்கள் குளிப்போம்
ஓராத்து நீரெடுத்து நாங்க துவைப்போம் - வள்ளி
நாங்கள் துவைப்போம் - எங்க
காலிலே சேறுபட்டா
யாரு துடைப்பார் - வள்ளி
யாரு துடைப்பார்
மல்லிகைச் செண்டாலே
மாமன் துடைப்பார் - வள்ளி
மாமன் துடைப்பார்..........

(இரு செம்பு, ஈராத்து என்று இந்தப் பாடல் திரும்பத் திரும்பப் பத்துமுறை பாடப்படும்)

பாடியவர் மீனாட்சி, அரச்சலூர், வயது 40

பொருந்தா உறவு

மாலையம்மை!

வருவார் போவார்க்கும்
வழிபோவார் எல்லார்க்கும்
பொதுவாய் இருந்தாளே
பொன்னுருவி மாலையம்மை
பண்டி பெருத்தவளே
பாளறு வா மாலையம்மா
ஒன்னால ராமட்டினன்
உலகமெல்லாம் பெரேத்தான்

மச்சான் போறான்

தான் விரும்பிய அத்தை மகன் ஆற்றங்கரை வழியாக மாப்பிள்ளைக் கோலத்தில் போய்க்கொண்டிருக்கிறான். அவனைப் பார்க்க விரும்பிய பழைய காதலிக்கும் அவளுடைய அத்தைக்குமான உரையாடல்.

ஆத்தங் கரையிலே
மாப்பிள போறான்
அத்தே செத்த பாத்து வாரேன்
பிள்ளா
உன் பிரியன் கோபக்காரன்

கண்டால் பழி எடுப்பான்
போவாத புள்ளா
போவாதே!
வையக்கரையிலே
மாப்பிள்ள போறான்
மாமி செத்த பாத்து வாரேன்
பிள்ளா
உன் பிரியன் கோபக்காரன்
கண்டால் பழி எடுப்பான்
போவாத புள்ள போவாத - அவள்
மாமன் மவனே
மாதுளம் பூ கொண்டக்காரா - நீ
மாலையிடப் போவச்சில
நான் மறைவில் நின்னு பார்ப்பேனே
அத்த மவனே ஆதளம்பூ கொண்டக்காரா
நீ ஆளோட போவச்சில
ஆர விட்டுக் கூப்பிடுவேன்.

வெள்ளாங்கியம்

(ஏற்கெனவே முளைக்க வைத்த பூண்டுக் குழம்புக்கு ஆகாது. அது போலத்தான் இந்த மாப்பிள்ளையும்)

வெள்ளாங்கியம் வெள்ளாங்கியம்
மொளைய வச்ச வெள்ளாங்கியம்
வெள்ளாங்கியச் செட்டி மக்க
பெண்பேசி வாராவ
ஆத்தங்கரச் சின்னையா

ஆகாதுண்ணு சொன்னாராம்
குளத்தங்கரச் சின்னையா
கூடாதுண்ணும் சொன்னாராம்
தண்டட்டி போட்ட அத்த
தரமில்ல என்னாளாம்
மூக்குத்தி போட்ட அக்கா
மொறையில்ல என்னாளாம்
(வெள்ளாங்கியம் - வெள்ளைப்பூண்டு)

ஒரு கொட்டைப் பெட்டி

ஒரு கொட்டப் பெட்டி நெத்தெடுத்து
ஒண்ணரத் தோட்டம் கரும்பு நட்டு
கவணிமொவன் செவணி ராசா
தூத்துக்குடி மேடையில
தூதளம் பூ சையலிலே
வாற வாற பொண்களெல்லாம்
பலக தட்டி கொலவயிட
(நெத்து - நெற்று முற்றி உலர்ந்த பயிற்றங்காய்)

கெற்பனம்

(நிறைசூல்)

கிழவனுக்குப் பெண்டிருந்த ஒருத்தி நிறைமாதச் சூலி ஆகிறாள். கிழவனைக் கிண்டல் செய்யும் பாடல்.

"யாண்டே யாண்டே அடிக்கெறா - அவ
தம்பி உண்டாவி இருக்கிறா"
"மாதம் பத்தும் தெகஞ்சாளோ
மறுபடி ஆம்பள பெறுவாளோ
கெப்பனையானது மெய்யானா - அவ
உப்பில்லாக் கூழு குடிப்பாளே"
"மாம்பழச் சந்தையிலே - கெழவா
மாம்பழம் வாங்கி வாடா
மாம்பழம் வாங்கித் தந்தா - நான் ஒரு
ஆம்புள பெத்துத் தாறேன்"
கெழவா கெழட்டேரி - உனக்கு
எத்தனை பெண்டாட்டி?
நாயன் தந்த பாக்கியமா
நாலாறு பெண்டாட்டி

(அ. அழகிய நாயகி அம்மாள்)

கிழவன் பாட்டு

இதுவும் கிழவனைக் கிண்டல் செய்யும் பாடல்தான்

அவள்:

இழுக்கிழுக் கெண்ணு
மஞ்சள் அரச்சதும்
இந்தக் கிழவனுக்கோ - நான்
இத்தனை நாளும்
பக்தி நடந்ததும்
இந்தக் கிழவனுக்கோ
புள்ளையில்லாக் கிழவா
துள்ளி விளையாடுவியோ
ஆடுவியோ கெழவா - ஒன்னுட
ஆட்டத்த நான் பார்க்க
பாடுவியோ கெழவா - ஒன்னுட
பாட்டையும் நான் பார்க்க
ஆடுற ஆட்டத்தப் பாருங்கடி
ஆலடிப் பொம்பளயா
பாடுற பாட்டயுங் கேளுங்கடி
பண்ணையூர் பொம்பளையா

(அ. அழகிய நாயகி அம்மாள்)

உறங்காது

கொஞ்சி விளையாட வேண்டிய கணவன் குறட்டை விட்டு உறங்குகிறான். அவனை எழுப்ப வேண்டி முருகனை அழைக்கிறாள் மனைவி. முருகனோ, நீ செய்ததற்கு தண்டனை யாகத்தான் இது கிடைத்தது, அழுதுகொண்டு இரு என்கிறான்.

பெண்

சங்கு முழங்குந் தமிழ்நாடு
தன்னை நினைக்கும் போதெல்லாம்
திங்களுறங்கும் புள்ளுறங்கும்
தென்றலுறங்குஞ் சில காலம்
அல்லும் உறங்கும்
அகில மெல்லாந் தானுறங்கும்
எங்கு முறங்கு மிராக்காலம்
என் கண்ணிரண்டு முறங்காது.
பொங்குந் தென்திசை வேலவரே
திருத்தணி வாழும் முருகையா - உம்
அண்ணனும் நீரும் வந்தே - என்
அரசனை எழுப்பித் தருவீரோ
கொரு கெருத்த மணலுக்குள்ளே
கூனிருந்து இயல்பாட
அருகிருந்த தோழனையும்
அருங்கயத்தே தாத்தவளே
ஆசையும் அன்பும் உண்டுமானா
அங்கேயே நின்று அழுது போ.

(அ. அழகிய நாயகி அம்மாள்)

கூப்பிட வருவாரோ

புருசன் கிட்டே கோவிச்சிக்கிட்டுத் தாய்வீட்டுக்குப் போகும் பெண்கள், நாளாக நாளாக புருசன் கூப்பிட வரமாட்டானா என்று ஏங்குவார்கள். அந்த உணர்ச்சியைச் சித்திரிக்கும் பாடல் இது.

பழங்காலத்தில் குடும்பப் பெண்களின் ஓய்வுநேரம் நூல் நூற்பதே. இதைக் கொட்டை நூற்றல் என்பார்கள். வீட்டைச் சுற்றி விளைந்து கிடக்கும் பருத்தியை அரவைமணையில் அரைத்துக் கொட்டையைப் பிரிப்பார்கள். பஞ்சைப் பஞ்சு வெட்டும் புரையில், பாய்மேல் போட்டுப் பஞ்சு வெட்டும் வில்லில் நாண் ஏற்றி, தெறித்துப் பஞ்சை மென்மையாக்கு வார்கள். அந்தப் பஞ்சைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து, நாணல் குச்சின் மீது சுருட்டித் திரியாக்குவார்கள். இந்தத் திரியை ராட்டில் நூற்று நூலாக்குவார்கள்.

"கொட்டக் கம்பு" என்பது கொட்டை என்று கிராமத்தில் அழைக்கப்படும் பஞ்சுத் திரியை உருவாக்கப் பயன்படும் இரண்டு சாண் நீள நாணல் குச்சி. பஞ்சட்டான் கம்பு என்பது பஞ்சு வெட்டப் பயன்படும் மூங்கிலாலான வில். இவற்றின் ஓசை கணவன் வருகையைக் குறிப்பால் உணர்த்துவதாகப் பெண்கள் நினைப்பார்கள்.

கொட்டக் கம்பு குடுகுடுக்குவு - என்னைக்
கூப்பிட வாறாரோ?
பஞ்சட்டங் கம்பு படபடக்குவு - என்னப்
பாக்க வாறாரோ?

(நல்ல தம்பி, பூதைப்பாண்டி)

புருசன் பெண்டாட்டி சண்டை

சோம்பேறிக் கணவன், பெருந்தீனி மனைவி முரணைச் சித்திரிக்கும் பாடல்.

குளம் வற்றி அழிந்துகொண்டிருக்கிறது. மீன் பிடிக்கும் ஊத்தால் பரணில் சும்மாக் கிடக்கிறது. மீன் பிடித்துக்கொண்டு வந்தால் பிள்ளைகள் சாப்பிடுமே என்று சோம்பேறிக் கணவனைக் குத்திக் காட்டுகிறாள் மனைவி.

கணவனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வருகின்றது. ஆக்கி அவித்து நல்லா தின்னுக்கிட்டு என்னையா வேலைக்குப் போகச் சொல்லுறா? என்று அந்தப் பெருந் தீனிக்காரியைச் சீறுகிறான்.

பெண்டாட்டி புகார்:

ஊரு குளமும் அழியுவே
ஊத்தாலும் பரணுல கிடக்குவே
சள்ளயக் கிள்ளயப் புடிச்சா - இந்தப்
புள்ளய குட்டிய தின்னாதா
அது தானுஞ் சொல்லப் புடாதோ
அடி வட்ட மண்ணாவானுக்கு..........

புருசனுடைய பதில்:

ஆமாடி ஆமா - உன்னுடைய
அடக்கு மொறய அறிஞ்சேனடி
கதகதையாங் காரணமாங்
காலொழக் கெடுத்து ஏழொளக்காம்
உப்புக் கண்டமாம் உறித்தயிராம்
இரு பலகையாம் கொதிச் சோறாம்
உண்டா தின்னா சும்மாக் கெட
ஊரு வெள்ளாட்டி

(அ. அழகிய நாயகி அம்மாள்)

கேலி

மாபாவி

மச்சான் என்கிற மாபாவி
மல்லிகைப் பூ கொண்டு எறிஞ்சாண்டி
சோங்கு மாங்கு குடிச்சாண்டி
சொக்கட்டங் கஞ்சியும் குடிச்சாண்டி
அண்ணு குடிச்ச குடியோட
ஆறு மாசம் கிடந்தாண்டி
சிங்கி குத்துவோம் நாங்க
சோளம் குத்துவோம் நாங்க
களியாங்காட்டுக் கழி மண்ணுல
கழியுங் குத்துவோம் நாங்க
வண்டி அடிச்ச மச்சான்
வண்டிக் கிடாய் மேச்ச மச்சான்
குண்டிச் சீலையத்து
குத்த வச்சான் கண்டீரோ

வெ. புஷ்ப நாயகி, பள்ளம்

ஆனை முழங்குதென்ன?

மருமகள் வீட்டிற்கு வந்த பிறகு மாமியார் கருவுறக் கூடாது என்பது எழுதப்படாத விதி. மீறி அவர் கருவுற்று விட்டால் சமூகம் அவரை இழிவாகவே பார்க்கும். இப்படிக் கருவுற்றுவிட்ட மாமியாரை மருமகள் கேலி செய்து பாடுவதாக அமைந்திருக்கிறது இந்தப் பாடல். ரொம்ப அபூர்வமான நாட்டார் பாடல் இது. அம்மாவின் குறிப்பிலிருந்து எடுத்தது.

ஆன முழங்குதென்னே - அத்தை இருந்த
அரண்மனை தாரு தென்னே
குதிரை முழங்குதென்னே - அத்தை இருந்த
கொட்டாரந் தாரு தென்னே
ஏதேது எம்மாமி - உங்களுக்கு
இந்த விதி வந்ததென்ன
அரங்கு முகந் தொறந்து
அழகுச் சம்பா வித்தெடுத்து
குலுக்க தொறந்து
கொத்துச் சம்பா வித்தெடுத்து
குத்திப் புடைச்சளந்தா
குமிளம்புச் சைய்யலிலே
அடிச்சிப் புடைச்சளந்தா
ஆவரம் பூச் சையலிலே
மண்பான கழுவினா - மாமிக்கு
மண்மூசி தட்டுமெண்ணு
பொன்பான தாங்கழுவி - மாமிக்கு

போதராவா உலையும் வச்சி
ஊத்தி ஆத்தி - அத்தை இருந்த
ஒய்யார மேடையிலே
தலதாங்கி தானொருத்தி - அத்தையிருந்த
தங்கமணி மண்டபத்தே
ஒரு கிண்ணி தாங்குடுத்தா - மாமிக்கு
ரெண்டு கிண்ணி எடுத்திடுமாம் (வாந்தி எடுத்திடும்)
ஏது எது எம்மாமி - உங்களுக்கு
இந்த விதி வந்ததென்னெ
முன்னூறு ராசமன்னர்
கூடுங்களரியிலே
மூக்கெடுத்து ஒங்க மகன்
முறை பேசி நிக்கணுமே
நானூறு ராசமன்னர்
கூடுங்களரியிலே
நாக்கெடுத்து ஒங்க மகன்
நடுப்பேசி நிக்கணுமே
மூக்கையறுத்தாளே
முறைகெட்ட ஒன் தாயும்
நாக்கையறுத்தாளே
நாணங்கெட்ட ஒந்தாயும்
தாயில்லே எங்களுக்கு
சத்திராதி ஆனாளே
(சத்திராதி - எதிரி)

(அ. அழகிய நாயகி அம்மாள்)

தங்கப் பொண்ணே

தங்கப் பொண்ணே தாராவே
தட்டான் கண்டால் விடமாட்டான்
உருக்கி உன்னை வார்த்திடுவான்
ஊட்டுக்குள்ளே ஒழிஞ்சிக்க.......

வேம்பரங்கு

வேம்பரங்கு வேம்பரங்கு
கட்டுவோம் நல்வேம்பு
காட்டுல வேம்பரங்கு
ஊட்ல நல்ல வேம்பரங்கு
தெக்கத்தி மாமனுக்கு
தென்னையிலயாம் வேம்பரங்கு
வடக்கத்தி மாமனுக்கு
வாழையிலையாம் நல்வேம்பரங்கு
கிழக்கத்தி மாமனுக்கு
கீழ் வாழையாம் பாக்கு வச்சி
மேக்கத்தி மாமனுக்கு
மாவிலையாம் பாக்கு வச்சி
தோடுகள் போடும் சிலர்
காத விட்டுக் கீழிறங்கி
மூக்குத்தி போடும் சிலர்
மூக்கு விட்டுக் கீழிறங்கி

செயினுகள் போடும் சிலர்
　　　கழுத்த விட்டுக் கீழிறங்கி
கொலுசுகள் போடும் சிலர்
　　　கால விட்டுக் கீழிறங்கி
மிஞ்சிகள் போடும் சிலர்
　　　விரல விட்டுக் கீழிறங்கி.

அனந்தை ஜெகதா

குன்னி முத்தா

இறங்கிறங்கடி குன்னிமுத்தா
இண்டகம் பண்ணாத குன்னிமுத்தா - உன்
பாடகக் காலப் பையவச்சிப்
பாத்தெறங்கடி குன்னிமுத்தா......
(நீண்ட பாடலின் ஒரு கண்ணி)

அ. அழகிய நாயகி அம்மாள் சேகரிப்பு

அகத்தியபுரத்தில அம்மன் கொட

குழந்தைகள் வட்டமாக உட்கார்ந்து, ஒன்றாகவோ அல்லது குழுவாகவோ பிரிந்து, ஆளுக்கொரு அடியாக மாறி மாறிப் பாடும் வேடிக்கைப் பாடல். அகஸ்தீஸ்வரம் தென்குமரியில் முக்கியமான ஊர். அந்த ஊர் அம்மன் கொடை பற்றிக் கேலியாகச் சொல்லும் பாடலின் பகுதி இதுவும் என் அம்மா குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டதே.

சுக்குச் சுக்குத் தண்டட்டி
சுப்பிரமணியன் பெண்டாட்டி
ஆலங்கால் தண்டட்டி
அணஞ் செருமா பெண்டாட்டி
சுப்பையா சுப்பையா - ஒனக்கு
எப்பய்யா கலியாணம்?
காரி* விளையவிட்டு
கண்டாங்கி** நெய்ய விட்டு
எள்ளும் பறிக்க விட்டு
இடுமடியுங் கட்ட விட்டு
சொள்ளமாடா சொள்ளமாடா
கொம்ம எங்க போனாளடா?
தாழையடி குண்டுக்குத்
தலைகழுவப் போனாளடா
கூனங் கொழலூத - கூனன்

பெண்டாட்டி தப்படிக்க
ஆவாத கூனனுக்கு
அழுது வந்து மாரடிக்க
பாறுவதித் தாயே - ஒன்ன
ஆரு கொள்ள வாறா?
படுக்கப் பத்து நாடான் மொவன்
பரிசங்*** கொண்டு வாறான்
ஆதிச்ச நாடான் பேயாடா - அதச்
சோதிச்ச நாடான் சேந்தாடா
நடுச் சந்தியிலே பேயாட
நாகமணி நாடான் - பார்த்தாட
கூத்துப் பாத்தாரே மூத்த நாடான்
கூட்டங் கொலச்சானே செவனடிமை
அகத்தியரத்தில அம்மங்கொட
விரிச்சிப் பாடுடா பாட்டாளி
நல்லா பாடுனான் பொலவென் பட்டாளி
நாங்கெடந்து ஒறங்கினேன் மேலச் சந்தியிலே.

* காரி - புஞ்சையில் விளையும் ஒரு நெல்.

** கண்டாங்கி - 16 முழச் சேலை.

*** பரிசம் - பெண்ணைக் கட்டுவதற்காக மாப்பிள்ளை வீட்டார் பெண்ணின் தகப்பனாருக்குக் கொடுக்க வேண்டிய பணம்.

பழைய காலத்தில் பெண்கொள்ள மாப்பிள்ளை வீட்டார் தான் பணம் கொடுக்க வேண்டும். இன்றைய சீதனம் அன்று வழக்கம் இல்லை.

(அ. அழகிய நாயகி அம்மாள்)

கைலாசம் போனீரே

கணவனும் மனைவியுமாய் இரு நண்டுகள் வயல்வரப்பு வளையில் வாழ்ந்து வந்தன. வரப்பு சரிசெய்ய விவசாயி வந்து வரப்பை வெட்டியபோது, கணவன் நண்டு வெட்டுப்பட்டு விட்டது. அதைக் கட்டெறும்புக் கூட்டம் இழுத்தது. பார்த்த காகம் தூக்கிக்கொண்டு வானத்தில் பறந்தது. இதையெல்லாம் பார்த்துக் கலங்கிய மனைவி நண்டு அழுகிறது.

வரப்பு வெட்ட வெட்ட

வாய்க்கால் தண்ணி முங்கமுங்க

கட்டெறும்பு மொய்க்க மொய்க்க

கால் இரண்டும் தொங்கத் தொங்க

கறுத்த குதிரை ஏறி

கைலாசம் போனீரே.........

சமூகம்

தாறா தாறா

வீட்டில் அண்ணன் பெண்டாட்டி அதிகாரத்துக்கு வந்துதுமே, அண்ணனின் திருமணமாகாத தங்கச்சிக்காரிக்கு அடிவயிற்றில் பொறாமை பற்றிக் கொள்ளுகிறது. அண்ணியாரைக் குறைகாணத் தொடங்குகிறாள். அண்ணனைத் தூண்டிவிட்டு, அவளுக்கு அடிவாங்கிக் கொடுக்க நினைக்கிறாள்.

தாறா தாறா தண்ணிக்குள்ளே
தவளை ரெண்டும் பொந்துக்குள்ளே
நேத்து வந்த குட்டச்சி
நெய்யி ஊத்தித் தின்னாளாம்.
பணியாரஞ் சுட்டுப்
பானைக்குள்ள வச்சாளாம்
அண்ணனுக்குத் தெரியாம
அடிபட்டு சாவாதே.....

(அ. அழகிய நாயகி அம்மாள்)

யோகம்

திடீரென்று ஒரு அம்மாளுக்கு யோகம் அடித்துவிட்டது. அவள் பச்சை நெல் குத்தி பணியாரம் சுடுகிறாள். என்ன யோகம் இவளுக்கு? பக்கத்து வீட்டுத் தாடப்பன் பெண்டாட்டி பூச்சைக் கண்ணியின் தாலிஅறுந்து விழுந்ததுதான்.

பச்ச நெல்லுங்கிச்ச நெல்லுங் குத்தித் தாங்காணும்
பணியாரங் கிணியாரஞ் சுட்டுத் தாங்காணும்
தாடப்பன் பெண்டாட்டி பூச்சக் கண்ணி
தாலியறுந்து விழுந்த தாங்காணும்.......

(அ. அழகிய நாயகி அம்மாள்)

மகள் துயரம்

ஒரு காலத்தில் தன்னைவிட இழிவாக இருந்தவர்கள் பல்லாக்கில் போக, ஊர் நாடான் மகனுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட தன் செல்லமகள் வறுமைப்பட்டுக் கணவனோடு நடந்து போகிறாளே என்கிற தாயின் ஏக்கத்தை வெளிப்படுத்தி, நகர வளர்ச்சியால் ஏற்பட்ட காலமாற்றத்தைச் சொல்லும் பாடல்.

ஊரான் மொவனோட, ஒரு பணத்துத் தாலியோட
நாடான் மொவனோட, நான் வளர்த்தா(ள்) போறாளே
நண்டு தின்னி நாறப்பய பல்லாக்குலே போறான்
நாவளத்த செல்லமவ கால்நடையாப் போறா
பட்டுடுத்தி பணியுடுத்தி எந்தமவ போறா?

பட்டணத்து வாக்கப்பட்ட பாரமவ போறா
துண்டுடுத்துத் துணியுடுத்து எந்தன் மவ போறா
தூரத்திலே வாக்கப்பட்ட செல்லமவ போறா

(அ. அழகிய நாயகி அம்மாள்)

பூவரசம் பூ

பூசரம் பூவையடி
    பொழுதிருக்க பூத்த பூவு
நாதியத்த பூவு நானே
    நன்னன நானானே.......
நானொரு நாள் பேச்சுக் கேட்டேன்
    நன்னன நானானே (தன்னானே)

சப்பாத்திப் பழம் பழுக்க
    சதுரக் கள்ளி பிஞ்சிறங்க
சதிகார அண்ணனோடு
    நன்னன நானானே - நான்
சரியாய்ப் பொறக்கலாமோ
    நன்னன நானானே
கொத்த மல்லிப் பூ பூக்க
    கொடி முருங்கப் பிஞ்சிறங்க
கொலகார அண்ணனோட
    நன்னன நானானே - நான்
உடன் பொறக்கலாமோ
    நன்னன நன்னானே (தன்னானே)

ஆத்துக்கு அக்கரையாம்
அலையடிக்கும் தண்ணீராம்
அண்ணனோட தண்ணியின்னு
நன்னன நன்னானே - நான்
அள்ளக் கூட பயமாருக்கே
நன்னன நன்னானே
குளத்துக்கும் அக்கரையாம்
கண்ணாடியாத் தண்ணீராம்
கொழுந்தனோட தண்ணியின்னு
நன்னன நானானே - நான்
குடிக்கக் கூட பயமாருக்கே
நன்னன நானானே *(தன்னானே)*

செம்ப லிங்கம்

1973ல் ஒரு கிறிஸ்துமஸ் இரவில், நான் ஆரல்வாய் மொழியில் சேகரித்த பாட்டு இது. கிறிஸ்துமஸ் ஊர்வலத்தில் ஆண்கள் எட்டுபேர் கோலாகலமாகக் கழியல் அடித்து ஆடியபடி போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களில் இருபது வயதிலிருந்து அறுபது வயதினர் வரை இருந்தார்கள். வேட்டியை இடுப்பில் சுருட்டிக் கட்டி, உடம்பில் கையில்லாத முண்டாபனியன் அணிந்து, தலையில் பெரிய தலைப்பாகை யோடு அவர்கள் பின்னிப் பின்னி ஜோடி மாறி ஆடியது பெட்ரோமாக்ஸ் ஒளியில் கண்கொள்ளாக் காட்சி. அவர்கள் பாடிய பாடல்களில் என் மனதைக் கவர்ந்தது இரண்டு பாட்டு. ஒன்று செம்பலிங்கம் பாட்டு.

செம்பலிங்கம் (1890 - 1923) நெல்லை மாவட்டத்தின் தென்பகுதியில் வாழ்ந்த ஒரு கருணைத் திருடர். அன்றைய சூழலில் ஆதிக்கக் கொடுமைகளை எதிர்த்துத் தலைமறைவு வாழ்க்கைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர். தனவந்தர்களிடம்

கொள்ளையடித்து ஏழைகளுக்கு உதவியவர், தென்னிந்தியா வின் ராபின் ஹூட் என்று வரலாற்றில் புகழப்பட்டவர்.

அவரைப் பற்றிய கதைகள், துணுக்குகள், பாடல்கள் ஏராளம். கீழ்க்கண்ட பாடல் பிரபலமானது.

பாடல்

வள்ளியூரு வடகிழக்கு
வடவிளைச் செம்பலிங்கம்
வள்ளியூரு ரோட்டதிலே
வழிமறிச்சிக் கொள்ளை செய்தான்.........
பொல்லாதவனய்யா செம்பலிங்கம்
பொல்லாதவனய்யா.........
ஏட்டை இழுத்தடிப்பான்
இனிசு பெட்டரைப் போட்டடிப்பான்
போலீசு சூப்பிரண்டப்
போடச் சொல்லுவான் தோப்புக்கரணம் (பொல்லா....)

எல்லாரும் குடிக்குந் தண்ணி
ஆத்துத் தண்ணி குளத்துத் தண்ணி - எங்க
செம்பலிங்கம் குடிக்குந் தண்ணி
சரியான சாராயத் தண்ணி......... (பொல்லா.......)

எல்லாரும் பிடிக்கும் குடை
ஓலைக்குடை சீலைக்குடை - எங்க
செம்பலிங்கம் பிடிக்கும் குடை
எட்டு ரூவாப் பட்டுக்குடை (பொல்லா.......)

மாயாத்தா

(செம்புலிங்கத்தின் முரட்டுத்தனத்தைச் சித்திரிக்கும் பாடல் இது)

மாயாத்தா தேடும் முதல்
மலையளவும் கடலளவும்
அத்தனையும் அழிப்பதற்கு
அவம் பொறந்தான் செம்பலிங்கம்
ஒளக்கரிசி காய்ச்சா மாயாத்தா
ஊத்திக் குடிச்சாஞ் செம்பலிங்கம்
செருப்ப எடுத்தா மாயாத்தா
செவுட்டுல போட்டான் செம்பலிங்கொம்
(முதல் - செல்வம்)

(அ. அழகிய நாயகி அம்மாள்)

ஏமாற்றமான சீதனம்

மருமகனுக்கு நிறைய சீதனம் தருகிறேன் என்று சொல்லி, ஏமாற்றிப் பெண் கொடுக்கிறான் மாமன்காரன். திருமணத்துக்குப் பின், மருமகன் மாமனிடம் பேசிய சீதனம் கேட்க, மாமா சொல்லுகிறான்: பதனீர் சுரந்து ஓய்ந்த பருவப்பனை. அதில் பாளைகளோ பால் வற்றிய பசுவின் காம்புகள் போன்று உலர்ந்து போனவை. இவற்றைப் போக வர பார்த்து நிறைவுகொள் என்று கேலி செய்கிறான் மாமனார். சீதன வழக்கத்தைக் கேலி செய்யும் பாடல் இது.

ஏறி ஒழிஞ்ச பருவப்பனையும்
இடுக்கி ஒழிஞ்ச கட்டுப்பாளையும்
போக வர பாத்துக்க... என்
பொன்னு மருமவனே......

நாஞ்சில் நாடு

நாஞ்சில் நாடு செழிப்பானது. ஆனால் கோவில்களில் பேய்கள் குடியிருக்கின்றன. அங்கே நீதியில்லை... இதை மறைமுகமாகக் குறிப்பிடும் பாட்டு.

நாஞ்சில் நாட்டு ஊரதிலே
நாங்க பாடும் கோயிலிலே
பேய்களுக்குஞ் சொந்த முண்டோ சாமி
பேய்களுக்குஞ் சொந்த முண்டோசாமி.
நாடு நல்ல நாஞ்சி நாடு - அங்கே
நாலு போட்டா அஞ்சு குருக்குஞ் செல்வநாடு.
ஓரா ஓராண்டி ஒன்ன
ஊராரழைக்கிறாங்கோ
யாதுமத்த ஓரானை
யாதுக் கழைக்கிறாங்கோ
ஒம் பேரு கூலிப் பணத்துக்கு
ஓரை அறுத்து விக்கியதுக்கு.
(ஓர் - வீங்கிய விதை)

(அ. அழகிய நாயகி அம்மாள்)

பள்ளிப் பாட்டு

இது ஒரு கும்மிப்பாட்டு

கொக்கு நாலு குருவி நாலு
கூடியாடி மேயச்சிலே
பக்கம் பாஞ்ச பனங் குருவிக்கிப்
பகட்டப் பாரடி பள்ளியரே
தெக்கே நாலு வடக்கே நாலு
சேந்து நின்னு ஆடயிலே
செவத்த வாலு சிட்டுக் குருவிக்க
சீரப்பாரடி பள்ளியரே
உழப் போனாங் கண்டியளோ - உழவக்
கொண்டு வந்தாங் கண்டியளோ
அறுக்க அறுக்க அறுவது துண்டு
எண்ண எண்ண எழுவது துண்டு
ஏத்தமச்சாங் கொண்டு வந்தது
எனக் கொருத்திக்குப் பத்தாது

அ. அழகியநாயகி அம்மாள்

குறவன் பாட்டு

முன் காலத்தில் காதுகுத்தி நீளமாக்குவதற்கும் அறுந்த காதை ஒட்டவைப்பதற்கும் குறவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும். திருமண நேரத்தில் பெண் காதில் பொன் மாட்டு வதற்கும் குறவருக்குப் பணம் கொடுக்க வேண்டும்.

அண்ணன் தங்கையாய்ப் பழகினாலும் காசு முக்கியம் என்று விளக்கும் பாடல் இது.

அறுந்த காது வக்கணுமே அண்ணே குறவா - அதுக்கு
அஞ்சி பணம் வேணுமடி மூளித் தங்கச்சி
கல்யாணமும் வருவே அண்ணே கொறவா - அதுக்கு
அஞ்சி பணம் வேணுமடி மூளித் தங்கச்சி

(மூளி - காதறுந்தவள்)

கதை

சின்னாடான் கதை

இப்பாடலின் காலம் 17 அல்லது 18ஆம் நூற்றாண்டு தொடக்கம் எனலாம். அக்காலத்தைய திருவாங்கூர் நிலஉடைமை அமைப்பு இன்றுள்ளதிலிருந்து நிரம்பவும் வித்தியாசமாயிருந்தது. நிலம் மன்னனுக்கோ, நம்பூதிரி நிலப்பிரபுவுக்கோ, கோயிலுக்கோ சொந்தமாயிருந்தது. இந்த நிலத்தில் உழைத்துப் பிழைக்கும் சாதாரண மக்களிடமிருந்து வரிவசூல் செய்து, அதில் ஒரு பகுதியைத் தாங்களே எடுத்துவிட்டு, மீதியை உடைமையாளர்களுக்குக் கொடுத்து ஆடம்பரமாய் வாழும் இடைப்பிரபுக்களில் ஒருவரே சின்னாடான் என்ற இக்கதையின் நாயகன். இவருடைய அதிகாரத்துக்கு உட்பட்ட மண்ணில் பனை ஏறும் ஏழை ஒருவருக்குச் சின்னப்பிள்ளை என்னும் அழகான மகள் இருந்தாள். அவளை எப்படியாவது தனக்காக்கிக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டு, அதில் வெற்றி பெறுகிறார் சின்னாடான். இதுதான் கதை.

சின்னப்பிள்ளை அழகானவள் மட்டுமல்ல, சுறுசுறுப்பானவள்.

"தலைக்கோழிச் சத்தத்திலே
தயிர் கடஞ்சி மாத்துடுத்தி
மறுகோழிச் சத்தத்திலே
பஞ்சுப் பாயும் போடுவாளாம்.
வெட்டுண்ணு விடியும் முன்னே - பஞ்சு
வெட்டிக்கரை ஏறுவாளாம்

கூட்டப்புளித் தட்டோடே
கூண்டுராட்டு வைப்பாளாம்
இளநேரம் ஆகுமுன்னே
ஏழு களிநூல் நூப்பாள்"

அதிகாலையிலேயே எழுந்து தயிர் கடைந்து, பஞ்சு வெட்டி, ராட்டு வைத்து நூல் நூற்றுக்கொண்டிருக்கும் சின்னப்பிள்ளையை அடைய நினைத்த சின்னாடான், தக்க தருணத்துக்காகக் காத்திருக்கிறார்.

விடிந்து, பொழுது ஏறுகிறது. சின்னப்பிள்ளைக்குப் பசி எடுக்கிறது. பனை ஏறிக்கொண்டிருந்த தகப்பனிடம் போகிறாள். அவர் பனையில் தன் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். பதனீர் குடிக்க இவளுக்குப் பட்டை தேவை.

"அப்பாச்சாரே அப்பச்சாரே - ஒரு
அஞ் செலக்குப் பட்டை போடும்"

என்று கேட்கிறாள். தகப்பனாருக்கோ வேலை அதிகம். மகளிடம்

"கட்டுப்பாள எட்டு முட்டி
கலந்து கட்ட நேரம் செல்லும்
பருவப்பனை பத்து முட்டி - மகளே
பகுந்து கெட்ட நேரஞ் செல்லும்
நீ
ஆல இலையில
அழகுக் கிண்ணி தான் பிடிச்சி
குடுவப் பயினியிலே
கோரிக்குடி மகளே" என்றார்.

சின்னப்பிள்ளை ஆல இலை பறிக்கப் போகிறாள். இந்த வாய்ப்பான நேரத்தில் அங்கே வருகிறார் ஈத்தாமொழி சின்னாடான். அவரை இப்படி அறிமுகம் செய்கிறது பாடல்.

"ஈத்தாமொழி சின்னாடான் - இளங்
கொண்டையில தீ எரிவான்
ஆசை வழி செய்தானே
அடியறுவான் சின்னாடான்
காலைப் பயினியில
கலந்தானே மாத்தானை"

பதனீரில் சின்னாடான் வசிய மருந்தைக் கலந்து விடுகிறார். பதனீரைக் குடித்த சின்னப்பிள்ளை சின்னாடான் மேல் மையல் கொண்டு, உடன் போகப் புறப்படுகிறாள். தகப்பன் அவளைத் தடுத்து நிறுத்துகிறார். சின்னாடானுக்குக் கோபம் வருகிறது. சின்னப்பிள்ளையின் தகப்பனிடம் கரப் பணத்துக்காகவும், குப்பைக்காச்சிப் பணத்துக்காகவும் கெடுபிடி செய்கிறார்.

"ஈத்தாமொழி சின்னாடான் - இளங்
கொண்டையில தீ எரிவான்
அங்கே இங்கே போக விடான்
ஆயக்காரன் அதியாரி
கடவப் பணத்துக்கு - சின்னப்புள்ள அப்பச்சிய
குனிய நிறுத்தினானே
குப்பக்காச்சிப் பணத்துக்கு - சின்னப்புள்ள அப்பச்சிய
கல் லேத்தி விட்டானே"

சின்னப்புள்ள அப்பாச்சிக்குத் தப்பிக்க வழி இல்லை. தன் வீட்டில் கிடந்த பாத்திர பண்டங்களை வரி பாக்கிக்காகக் கொடுக்கிறார். போதாது என்றார் சின்னாடான். தொழிற் கருவிகளைக் கொடுத்துப் பார்க்கிறார் அப்பச்சி. அதுவும் போதாது என்கிறார் நாடார். தப்ப வழி இல்லாமல் சின்னப்புள்ள அப்பாச்சி திணறுகிறார். எல்லாம் வச்சா வரி பாக்கிக்குப் போதா தெங்கிறியளே, இனி என்னத்த வைக்க? என்று பரிதாபமாகக் கேட்கிறார். இந்தக் கேள்வியை எதிர்பார்த்துக் கொண்டு நின்ற சின்னாடான் "ஒன் மக சின்னப்புள்ளைய வைவி. வரிபாக்கி தீர்ந்துவிடும்" என்றார்.

தன் மகளைக் கொடுத்து வரிபாக்கி தீர்க்கிறார் அந்த ஏழை தகப்பன்.

அன்றைய தெற்கத்திப் பெண்களின் வேலைகளை, குறிப்பாகத் தயிர் கடைதல், பஞ்சு வெட்டுதல், நூல் நூற்றல் முதலியவற்றை விளக்குவதோடு, சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்த வட்டாரத்தில் நடைமுறையில் இருந்த வரிக் கொடுமையையும், வரிவசூலிக்கும் கொடிய முறைகளையும் பாடல் அப்படியே சித்திரிக்கிறது. இந்த வரிக்கொடுமை யால், உழைக்கும் மக்கள் நிலப்பிரபுக்களுக்கு எந்த அளவுக்கு அடிமைப்பட வேண்டியதிருந்தது என்பதையும் தெளிவாக சித்திரிக்கிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1977ல் சென்னையில் நடத்திய நாட்டுப்புறவியல் கருத்தரங்கில் பி. எஸ். கே. பக்தவத்சலன் என்னும் பெயரில் என்னால் படிக்கப்பட்ட "கதைப்பாடல் - குமரி மாவட்டம்" என்னும் கட்டுரையில் இந்தப் பாடலும், அடுத்த பத்தினிக்கதையும் இடம் பெற்றுள்ளன. அவை மேலும் விரிவாக்கப்பட்டு இங்கே தரப்பட்டுள்ளன.

பத்தினி கதை

பிள்ளையில்லாத ஒருத்தியின் துயர்

பட்டணத்துச் செட்டியாரின் அழகிய மகள் பத்தினி. அவள் சிறுமியாக இருக்கும்போதே பக்கத்தூர்ச் செட்டி விரும்பி வலிந்து திருமணம் செய்துகொண்டான்.

பத்தினிக்குப் பிள்ளையில்லை. பிள்ள ஆசை அவளை வதைக்கிறது. கோயில் கோயிலாக அலையத் தொடங்குகிறாள். கணவன் தடுக்கிறான். ஒரு பிள்ளையைத் தத்தெடுக்கிறான்.

பிள்ளையை ஆசையாய்ப் பள்ளிக்கு அனுப்புகிறாள் பத்தினி. அடங்காத குழந்தை முரட்டுத்தனம் பண்ணுகிறது. மகனை அடிகொடுத்து வளர்க்க ஆசிரியரிடம் சொல்லுகிறாள் பத்தினி. மலடியே உனக்குத் தெரியுமா என் தாய் என்னைப் பெற்றெடுக்கப் பட்டபாடு என மகன் பத்தினியை ஏசுகிறான். இப்பாடல் என் அம்மாவின் குறிப்பிலிருந்து எடுத்தது.

பட்டணமாம் பட்டணமாம் - பழைய
பாரமன்னன் பட்டணமாம்
பட்டணத்துச் செட்டியார்க்கு
பதினாறு மக்களுண்டாம்
ஒரு மகளாம் பத்தினியாம்
ஒய்யாரப் பேரழகாம்
பத்தினியக் கொள்ள வாறான்
பாரமன்னன் செட்டிமகன்
கல்சோறும் கல்க்கறியும் - பத்தினி
காய்ச்சி விளையாடையிலே
கல்லப் பறிச் செறிஞ்சான் - அவ
கைபிடிச்சான் செட்டிமகன்

மண்சோறும் மண்கறியும்
வச்சி விளையாடயிலே
மண்ணப் பறிச் செறிஞ்சான்
மாலை போட்டாஞ் செட்டிமகன் - பத்தினி
சிறு சுளகும் பம்பரமும் - கொண்டு
தெள்ளி விளையாடயிலே
சுளகப் பறிச் செறிஞ்சான்
சேலை போட்டான் செட்டிமகன்.

இந்தக் கோலத்தைப் பார்த்துப் பத்தினியின் தாய் அழுகிறாள்

கீரையறுக்க வாறான் - என்
கிளிமூக்கக் கொள்ள வாறான்
கீரை அறுத்தாலும் - என்
கிளிமூக்கக் கொடுப்பதில்லை
சாணமெடுக்க வாறான் - என்
சந்தனத்தைக் கொள்ள வாறான்
சாணம் குடுத்தாலும் - எஞ்
சந்தனத்தெ குடுப்பதில்லெ
குடுப்பதில்லையென்றால்
விடுவதில்லை செட்டிமகன்.

இருவருக்கும் கலியாணம் கழிந்தது.

கோரம்பாயில்லாமெ - பத்தினி
குத்த வைக்கமாட் டெனெண்ணா
கோரம்பா அஞ்சிபணம் - குத்த
வையம்மா பத்தினியே
வண்ணப் பெட்டி இல்லாமெ - பத்தினி
வாழப் போகமாண் டெனெண்ணா
வண்ணப் பெட்டி அஞ்சிபணம்
வாழப்போம்மா பத்தினியே

வாழப்போகிறாள் பத்தினி :

வண்டாளச் சங்கூதி - கூட
  வாழப்போறா பத்தினியும்
குண்டாளச் சங்கூதி
  கூடப்போறா பத்தினி
சின்னச் சின்னச் சங்கூதி - கூட
  சேரப்போறா பத்தினியும்

பத்தினியைக் கணவன் வீட்டில் கொண்டு விட்டாயிற்று. அங்கே செட்டிச்சி

வாழும் பெருமை யெல்லாம்
  வாக்குரைக்கக் கூடாது
பட்டணத்துச் செட்டி மக்கள்
  பவுறு சொல்லக்கூடாது - ஆனா
பிள்ளையில்லாக் குறையாலே
  பேதலித்தா பத்தினியும்
மதலையில்லாக் குறையாலே
  மனமுடைந்தா பத்தினியும்

புருசனிடம் அவள் சொல்லுகிறாள்.

புள்ளைக்கு நான் போய்வாறேன் - எம்
புண்ணியரே ராசமன்னா

அவன்

புள்ளைக்கு நீ போக வேண்டாம்
பத்தினியே கண்மணியே

பத்தினி அழுகிறாள்.

மோடு தழைக்கட்டென்றே
மோட்டெலி வாங்கி விட்டேன்
நான்தான் மலடிருக்க
நாயனுக்கே செய்த பாவம்

மோட்டெலி மலடிருக்க
கண்டோமோ வையகத்தே
குப்ப தழைக்கட்டென்று
கோழிக்குஞ்சு வாங்கி விட்டேன்.
நான் தான் மலடிருக்க
நாயனுக்கே செய்த பாவம்
கோழிக் குஞ்சும் மலடிருக்க
கண்டோமோ வையகத்தே
வளவு தளைக் கட்டென்று
வாழைமரம் நட்டு வச்சேன்
நாந்தான் மலடிருக்க
நாயனுக்கே செய்த பாவம்
வாழ மரம் மலடிருக்க
கண்டோமோ வையகத்தே
மூத்தந்தான் தழைக் கட்டென்று
முருங்கை மரம் நட்டு வச்செென்
நாந்தான் மலடிருக்க
நாயனுக்கு செய்த பாவம்
முருங்கமரம் மலடிருக்கக்
கண்டோமோ வையகத்தே

புள்ளக்கினான் போய் வாறேன் - யெம்
புண்ணியரே ராசமன்னா
மதலைக்கு நான் போய் வாறேன் - யென்
மன்னவரே ராச மன்னா.

கணவன்

புள்ளக்கி நீ போக வேண்டாம் - ஒன்
பொன்னுடலே மாட்ட வேண்டாம்
தம்பிக்கி நீ போக வேண்டாம் - உன்
தன்னுடலே மாட்ட வேண்டாம்.

பத்தினி

பிள்ளைக்கு நான் போகவேணும்
புள்ளப் பலங்காண வேணும்
பள்ளிக் கிருத்தி வச்சி - படிச்சி வாற
பாவன பாக்காண்டாமோ
பல கலையும் தான் படிச்சி
பருவம் வந்த மகனார்க்கு
பெண் பேசிநான் பாக்கும்
பெருமைகாண வேண்டாமோ
கலியாணஞ் செய்து நான்
கண் குளிர வேண்டாமோ
கொள்ளிவச்சிக் குடமுடைத்துக்
கூவி வரப்புள்ள வேணும்
அங்கங் கொண்டு கடல் வரையும்
அழுது வரப்புள்ள வேணும்

கணவன்

புள்ளைக்கி நீ போகவேண்டாம் - ஓம்
பொன்னுடலே மாட்ட வேண்டாம்
தம்பிக்கி நீ போகவேண்டா - பத்தினி உன்
தண்ணுடலே மாட்ட வேண்டாம்
வாரிப்பணம் நான் குடுத்து - உனக்கு
வழக்கெடுத்துப் புள்ள தாறேன்
தேடிப்பணம் நான் குடுத்து - உனக்கு
தத்தெடுத்துப் புள்ள தாறேன்

பத்தினி

வாரிப்பணம் குடுத்தாலும் - மன்னா
வழக்கெடுத்த புள்ள என்பார்
தேடிப்பணங் குடுத்தாலும் - மன்னவரே
தத்தெடுத்த புள்ள என்பார்

ஊரில் அம்மன் கொடை வருகிறது.

மூத்தாத்தா ஊடதிலே
மூணுநாள் தெய்வக் கொடெ
நடுஆத்தா வீட்டிலே
நாலு நாள் தெய்வக் கொடெ - எல்லாரும்
புள்ளயையுங் கையுமா - அங்கே
பொருந்தி வந்து நிக்கயிலே - நான்
வெத்திலையுங் கையுமா
வெத்துடலா நிப்பேனே
பால் கொச்ச வீச
பாலகரை ஏந்தி நிற்பார்
மேல் கொச்சை வீச
வெத்துடம்பாய் நிப்பேனே

கடைசியில அவள் கணவன்

தேடிப்பணங் கொடுத்துத்
தத்தெடுத்தான் புத்திரன.
வாரிப்பணங் கொடுத்து
வளர்ப்பெடுத்தான் புத்திரனே

தன் பிள்ளைய அவள் பள்ளி போகச் சொல்லுகிறாள்:

பள்ளிக்குப் போ பள்ளிக்குப் போ - ஏம்
பள்ளித் தம்பி பள்ளிக்கு போ

பையன் பதில்:

பள்ளித் தம்பி நாந்தாண்டி
பருமலடி நீ தாண்டி

தாய்:

பள்ளிக்குப் போ பள்ளிக்குப் போ - என்
செல்லத் தம்பி பள்ளிக்குப் போ

மகன்:

செல்லத் தம்பி நாந்தாண்டி
செறுமலடி நீ தாண்டி

அவளுக்குக் கோபம் வந்தது

ஆதாளங் கம்பு வெட்டி அண்ணாவிய - அலற
அலற அடியுமுண்ணா
தூதாளங் கம்பு வெட்டி - அண்ணாவி
துள்ளத் துள்ள அடியுமுண்ணா
வைக்கப்பிரி முறுக்கி
வடம் வடமா உரியுமுண்ணா

அண்ணாவி அடித்தார். பயல் துடித்தான். சொல்லுகிறான்:

பிள்ளை அழும்பாடு - இந்த
பருமலடியறிவாளோ
பேடியறிவாளோ - என் தாயார்
பெத்தெடுக்கப் பட்டபாடு
மோட்டுவளை பிடிச்சி - என் தாயார்
முறையிட்டு நின்னழுதா
பக்கவளை புடிச்சி - என் தாயார்
பரமனைத் துதிச்சி நின்னா
கோட்டாத்துக் கொச்சி மஞ்செ - என் தாயார்
குலகுலயாத் தின்னறுத்தா
ஆளுரு அடுக்கு மஞ்ச - என் தாயார்
அடுக்கடுக்கா தின்னறுத்தா
இருளி அறிவாளோ - என் தாயார்
ஈன்றெடுக்கப் பட்டபாடு.......

(கதை முடியவில்லை)

பறவையின் கண்ணீர்

உயர்ந்த மலையிலே
ஒரு கழுகு காத்திருந்து
இட்டது நாலு முட்ட - நாம்பாவி
பொரிச்சுது மூணு குஞ்சி
மூத்த குஞ்சிக்கிரை தேடி
மூணுமலை சுத்தி வந்தேன்.
இளைய குஞ்சிக்கிரை தேடி
ஏழுமலை சுத்தி வந்தேன்.
காத்திருக்குங் குஞ்சுக்கு
கனகமலை சுத்தி வந்தேன்.
பாத்திருக்குங் குஞ்சுக்கு - நாம்பாவி
பவளமலை சுத்தி வந்தேன் - அங்கே
கானாங் குறத்தி மகன்
காத்திருந்து கண்ணி வச்சான் - என்
காலுரெண்டு கண்ணிக்குள்ளே
செறகு ரெண்டும் மாரடிக்க - நான்
அண்ணழுத கண்ணீரும்
இண்ணழுத கண்ணீரும்
ஆறுபெருகி ஆன குளிப்பாட்டி
குண்டுபெருகி குதுர குளிப்பாட்டி
ஆயிரம் பாப்பான் அமுதுண்டு கைகழுவி
தொண்ணூறெருமை தொளி எருமை குளிப்பாட்டி
இஞ்சிக்குப் பாய்ஞ்சி ராமிச்சி வேரூணி
மஞ்சைக்குப் பாய்ஞ்சி - வருகுது
மாரளவு கண்ணீரு . . . .

(அ. அழகிய நாயகி அம்மாள்)

ஏ அக்கா..........

அக்காளுந் தங்கையுமா - நாங்க
ஆர மீனு கொத்தயிலே
குஞ்சி வேட்டக் காரப்பய - என் அக்காளக்
குறுக்குலே போட்டானே
கொசவனொட பானையிலே
கொத்திப் பெரட்டிவச்சி
தச்சன் நல்ல ஆப்பையாலே
தாறுமாறக் கிண்டினானே
எச்சிப்பட்ட எலும்ப
எடுத்தெறிஞ்சாங் கொளக் கரையில்
கொளத்தோட வாராயோ - யே அக்கா - உன்
குறுக்கெலும்புங் காணேனோ
ஆத்தோட வாராயோ - ஏ அக்கா - உன்
அருகெலும்புங் காணேனோ.

(அ. அழகிய நாயகி அம்மாள்)

நாயின் துயரம்

ஒரு கணவன் நாயும் மனைவி நாயும் குழந்தை குட்டிகளோடு ஒரு பனங்காட்டில் வாழ்ந்து வந்தன. பக்கத்திலே ஒரு பனைத் தொழிலாளியின் செருவைப்புரை (சுவரும் கூரையும் பனை ஓலையிலான குடில்). இந்தச் செருவைப்புரையில் ஏதாவது திருடலாமா என நாய் கண்ணோட்டமிட்டதைக் கண்ட பனைத்தொழிலாளி, அதை கல்லால் அடித்துவிட்டான். நாய்க்குத் தலையில் பலமான அடி. அது வீட்டிற்கு ஓடிவந்து பெண்டாட்டியிடம் சங்கதியைச் சொல்லி, தன் நெற்றியில் ஒத்தடம் கொடுக்க வேண்டுகிறது.

பெண்நாய்க்கு ஒரே சங்கடம். பனையேறி உம்மை இப்படிச் செய்துவிட்டானே, கண்முழியாக் குட்டிகளை இனி எப்படிக் காப்பாற்றுவது? குட்டிகளைத் தூக்கிக் கொண்டு கடப்புறத்துக்குப் போய்விடுவோம். கருவாட்டுத் தலை பொறுக்கிக் காலம் கழிக்கலாம் என்கிறது. இந்த ஆபூர்வமான பாடலும் என் அம்மா குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்டதே.

ஆண்நாய்:

பருவப்பன பக்கத்துலெ
படுத்துறங்கி எழுந்திரிச்சி
செருவப் பெரயச்
சுத்தி வாற நேரத்துலெ
சாணாஞ் சக்குளுவி - அவம்
பனையிலே நக்கழுவி
கல்லெடுத்து எறிஞ்சானே

கலக்குமட்டச் சாணாப்பய
முள்ளெடுத் தெறிஞ்சானே
முருக்குத் தட்டிச் சாணாப்பய
பாயத்தாம் போடடியே - நான் பட்டுவந்த
பாவனையக் கேளடியே
வெளக்கத்தான் கொளுத்தடியே - நான் பட்டுவந்த
வேதனையச் சொல்லி அழ
உப்பதாங் கட்டடியே
ஒத்தடியே நெத்தியிலே
சுக்கத்தாந் தட்டடியே
பூசடியே புண்ணதிலே
(பருவப்பனை - பெண்பனை,
தட்டடியே - உடைத்து நசுக்கடி)

பெண்நாய்:

ஏதேது நாய்த் தலவா - ஒனக்கு
இந்த விதி வந்த தென்னே
கதவு உள்ள ஊட்டுக்கு
கண்ணோட்டம் போடுவீரே
படல் உள்ள ஊட்டுலே
பாரமா நொணயிவீரே
சாணாங் கருப்பட்டி
செரட்டயோடே தருவீரே
சாணாத்திக் கூப்பனி
சட்டியோட தருவீரே
பாவிப் பனையேறி - ஒம்மள
பங்கப் படுத்தினானே
நீசப்பனையேறி - ஒம்மள
நெட்டூரஞ் செய்தானே
கண்முளியாக் குட்டிகளெ

காப்பாத்துவார் ஆரோ?
முகம் பாராக் குட்டிகளெ
முகம் பார்ப்பா ராரோ
பனையேறி ஒறவு
பகையாச்சே நம்மளுக்கு
சாணான் உறவு
சண்டைக்கி இட மாச்சே
இந்த இடத்திலே
இனி இருக்க ஆகாது
குட்டியளத் தூக்கிக்கிட்டு
போவோண்டா கடப்புறத்தே
கருவாட்டுத் தலை பொறுக்கி
காலங் கழிச்சலாமே.

நண்டாத்தா

நண்டுக்கும் ஓணானுக்கும் நல்ல சினேகம். இப்படி இருக்கிற சமயம், நண்டு பிள்ளை பெத்ததாக ஓணான் அறிஞ்சது. அறிஞ்ச ஒடனே, சாமானெல்லாஞ் சேகரிச்சி, நண்டு வீட்டுக்கு ஓணான் புறப்பட்டது எப்படி?

நாய் தலையில நாலு தேங்காயும்
கட்டெறும்பு தலையில கனக்கும் பாரமும்
சித்தெறும்பு தலையில சொமக்கும் பாரமும்,
தம்பி கிடத்தத் தடுக்கும் பாயும்,
வெள்ளி அரஞாணும்
வீரத் தண்டையும்

மேல் முருகு குச்சியும்

கொண்டு புறப்பட்டு

குளத்தங்கரை வயக்காட்டு வரப்புல நடந்து

நண்டக் கண்டதாம்.

கண்டதும் அன்போட,

நண்டாத்தா, நண்டாத்தா

தம்பி பெத்தியா

தரையில ஒறங்குவானா

வாற வரியம்

வரப்பேறி மேய்வானா

என்று விசாரித்தது.

நண்டாத்தா என்ற சத்தம் கேட்டதும் நண்டுக்குக் கோபம் வந்தது. நாம் ஆண் குழந்தை பெற்று எவ்வளவு பவிசாய் இருக்கிறோம், இந்த ஓணான் நண்டாத்தா என்று இப்படி அலட்சியமாய்ப் பேசிவிட்டதே எனக் கோபப்பட்டு,

அட ஒட்டாங்குண்டி ஒந்தலே

என்னய நண்டாத்தான்னு

எப்பிடிடே கேட்டா? ...ன்னு

ஏசிச்சி.

கோவத்துல

ஓணானத் தன்

வெட்டுக் காலால மவட்டிச்சி.

ஓணான் துள்ளிச் சாடி

நண்டக்கடிச்சது

இதக் கண்ட நாயி

எழும்பி வந்து

நண்டக் கடிச்சித் தின்னது.

அதன் குட்டிய

கட்டெறும்பும் சித்தெறும்பும்

அரிச்சது.

நண்டுக் குடும்பம் அடியோட அழிஞ்சது.

நாழி - உழக்கு

நாழி தன் வரலாற்றைச் சொல்லுகிறது

முட்டு முட்டா வளர்ந்தாள்
மொழி மொழியா வளர்ந்தாள்
கட்டுக் கட்டாகக்
கணு விட்டுத்தான் வளர்ந்தாள்
தீ சுட்ட வெக்கயிலே
திருத்தி நெறுத்தி வளர்ந்தாள்
வெட்டுப்பட்டா துண்டு பட்டாள்
அறுபட்டா அளவு கொண்டாள்
நெல்லரிசிக் காறங்கூட
நீண்ட வழி போனாள்
அவர தொவரக் காறென்
அவனோடு போனா
காணப் பயிறுக்காறெங் கூட
கனவழி போனா
ஆணோடு போனா
பெண்ணோடெ போனா
அய்யய்யோ அவபாடு

அள்ளத் தொலையாது
காணிக்குள்ளே அவளில்லாமெ
கணக்குந் தொலையாது
(நாழி - உழக்கு)

(அ. அழகிய நாயகி அம்மாள்)

எலிக்கனா

எலி பிடிப்பவர்கள் எலி வாழும் வேலியை வெட்டி அழித்து, எலிச்சிலவைக் கம்பு போட்டுக் குத்திக் கலச்சி, அதனைப் பிடிச்சி, வெட்டி, பானையில கொதிக்க வைத்துக் குழம்பாக்கி, அதை அகப்பையால் கிண்டி ஆற்றி - சோறு மேலே வைத்துச் சாப்பிடுவதாகக் கனவு கண்டதாம். ஒரு மருமகள் எலி அதை மாமியாரிடம் இப்படிச் சொல்லியது. அது

கண்டேன் அத்தெ கண்டேன்
ஒரு கனவு கண்டேன்
கண்ட கனவைக்
கருத்தாய்ச் சொல்லு மருமகளே
மம்பட்டிக்காரன்
மகிழ்ந்து நின்று வெட்டக் கண்டேன்
கம்பு தடிக்காரன் - என்னயத்
தட்டி எழுப்பக் கண்டேன்
வெட்டருவாக் காரன் - வேலிய
வெட்டி அழிக்கக் கண்டேன்
கொல்லனார் கத்தியால என்னைய
குறுக்கே வெட்டக் கண்டேன்

கொசவனார் பானையில - நான்
அலறிக் கொதிக்கக் கண்டேன்
தச்சனார் ஆப்பையில்
தயவாக ஆத்தக் கண்டேன்
அன்னத்தை கீழே வச்சி - என்னைய
அதுக்கும் மேலே வச்சி
சாப்பிடக் கண்டேன் அத்தே
சந்தனமாப் போகக் கண்டேன்

த. ஜெயமதி, அனந்தசாமிபுரம்

அறிவுரை

புகையிலை

பழங்காலத்தில் வெற்றிலை போடாதவர்கள் இல்லை. ஈத்தாமொழி தளிர் வெற்றிலை, பச்சைப் பாக்கு, சிப்பிச் சுண்ணாம்பு இவற்றைப் போட்டுச் சவைத்த பின் ஒரு துண்டு புகையிலையும் கன்னத்தில் ஒதுக்குவார்கள்.

அக்காலத்தில் நல்ல புகையிலை யாழ்ப்பாணத்தில் இருந்து வரும். போதை மிக்கது அது. இதை வாங்குவதற்கு நிறைய காசு செலவாகும். இதனால் புகையிலை போடும் பழக்கத்தைக் கண்டிக்க வேண்டிய சூழ்நிலையும் அக்காலத்தில் ஏற்பட்டது. இதுவும் என் அம்மா குறிப்பிலிருந்த பாடல்.

தாய் தாலி அறுக்கும் போயிலெ,
தகப்பன் குடியக் கெடுக்கும் போயில
வித்தாரக் கொண்டயக்
கொலச்சும் போயிலெ
மேனி மினுக்கக்
கெடுக்கும் போயிலெ
வெத்திலைக்குச் சத்துரு - இப்
போயிலையாச்சே
சத்துக் கெட்ட (போயிலெய பாத்துக்)கடி
முத்து ஞானப் பெண்ணெ

செய்யாதே

உலகுடையார் மக திருவுடையா
ஓடைக்கு மேக்கே நின்னு
ஒரு சத்தம் போட்டா
பள்ளக்குடி நாயெல்லாம்
சள்ளு சள்ளுன்னு சொல்ல
பாளையங் கோட்டை வண்டியெல்லாம்
கிடுகிடுன்னு நடுங்க
கொட்டப் பாக்கத்
தல்லாதே தல்லாதே
கொழுந்து வெத்தல
கிள்ளாதே கிள்ளாதே
ஆத்தங்கரை பக்கம்
போகாதே போகாதே
அந்திப் பனை
ஏறாதே ஏறாதே
அந்திக் கருப்பட்டி
ஊத்தாதே ஊத்தாதே
(தல்லாதே - கல்லால் அடித்து நசுக்காதே)

(அ. அழகிய நாயகி அம்மாள்)

தூக்கம்

(அய்யா வைகுண்டர் சொன்னதாகச் சொல்லப்படுவது)

வாழ்வு வருங்காலம்
வாராது கண் தூக்கம்.
தாழ்வு வருங்காலம்
தொலையாது கண்தூக்கம்
வயித்த நினைச்ச குடி
வாழாது எந்தன் மக்கா........

இழவு

கர்த்தாவே என் துரையே
கணவனுக்கு மாரடிப்பு

கர்த்தாவே என் துரையே
கைலாசம் சேர்ந்தீரோ
உத்தமரே என் துரையே
உம்பர்பதி சேர்ந்தீரோ
ஒருத்தியுமாய் என்னைவிட்டு - நீங்கள்
ஓடவுந்தான் நீதியுண்டோ?
தனியாக என்னைவிட்டு
தாண்டவுந் தான் நீதியுண்டோ?
ஒரு நாளும் பிரியாத
என்னைப் பிரிந்துவிட்டீர்
அனேக நாள் பிரியாத
அடியாளை ஏன் பிரிந்தீர்
என்னைத் தனியா(க) விட்டு
எவ்விடமோ போய் நடந்தீர்
பொன் அத்தான் நீர் போயும்
பூமியில் நான் தங்குவனோ
கட்டழகா உமைப்பிரிந்து - நான்
மண் மேல உலாவுவனோ......
கர்த்தாவே......
மஞ்சள் கறுப்பாச்சே - ஓ பொன்னத்தான் எனக்கு
மருதாணி வேம்பாச்சே எனக்கு

புஷ்பம் கறுப்பாச்சே - எனக்கு
பூவின் முகம் வேம்பாச்சே - நான்
மஞ்சள் கயிறு கழற்றி - ஒங்க
மாளிகையில் நின்றழுதேன் - நான்
அடுக்குடனே பெண் பிறந்து - ஒங்க
அம்பலத்தில் நின்றழுதேன் - நான்
மெத்தையிலே பெண் வளர்ந்து - உங்க
மண்டபத்தில் நின்றழுதேன் - ஒன்
தங்கமுடி கொள்ளையென்று ஓ - அத்தான் நான்
தாலிச் சரடிழந்தேன் - உங்க
பொன்னின் முடி கொள்ளையென்று ஓ
பொன்னத்தான் - நான்
புஷ்பம் மறந்து விட்டேன் - நான்
ஆரைக் கழுத்தியல்லோ - நான்
அரைக் கழுத்தியானேனே நான்
கோரைக் கழுத்தியல்லோ - நான்
கொறைக் கழுத்தி ஆகிவிட்டேன் - என்
பொன்னான அத்தானே - நீங்க
பொன்னுலகம் சேந்திகளோ?
ஓ. . . . .

கட்டுக் கயிறவிழ்த்தேன்

கட்டுக் கயிறவிழ்த்தேன் - என் பொன் அத்தான்
நான் களரியில் பூவிழந்தேன் - நான்
கொண்டைக் கயிறவிழ்ந்தேன்
என் பொன்னத் தான் ஒங்க
கூடத்திலே பூவிழந்தேன் - நான்
வாரி முடித்த கொண்டை - என்
வரிசை குலைத்து விட்டீர் - நான்
சீவிமுடித்த கொண்டை - என்
சீரைக் குலைத்து விட்டீர் - ஒங்க
மாணிக்கக் கூடத்தில - ஓ பொன்னத்தான் நான்
மயிரவிழ்க்க நாளாச்சே - ஒங்க
கொற்றவர் கூடத்திலே - என் தொரையே நான்
குழல் விரிக்க நாளாச்சே என்
சாந்திடும் நெற்றியிலே - எனக்குச்
சாம்பல் படிய வைத்தீர் - என்
பொட்டிடும் நெற்றியிலே - எனக்கு
புழுதி படிய வைத்தீர் - நான்
ஆரைக் கழுத்தி அல்லோ - நான்
அரைக் கழுத்தி ஆனேனே
கோரைக் கழுத்தி அல்லோ நான்
கொறைக் கழுத்தி ஆகிவிட்டேன்
என் பொன்னான அத்தானே - நீங்க
பொன்னுலகம் சேந்திகளோ?

பர்த்தாவே என் துரையே

பர்த்தாவே என் துரையே - தெய்வமே - என்
பாக்கியத்தக் காணோமே - என்னை
கர்த்தாவே என் துரையே - தெய்வமே - என்
கண்மணியைக் காணோமே - என்
அஞ்சு பிராயந்தனில் - நான்
அறியாத நாளையிலே
பத்து பிராயந்தனில் - என் துரையே நான்
பால் குடிக்கும் நாளையிலே - நீர்
ஆணழகர் மாலையிட்டு - என் துரையே
அழகாக வைத்திருந்தீர் - நீர்
கட்டழகர் மாலையிட்டு - என்னைக்
காட்சியுடன் வைத்திருந்தீர் - என்னைக்
காட்சி குலைத்துவிட்டீர் - என் துரையே நீர்
கர்த்தன் பதி போய் நடந்தீர் - என
மகிழ்ச்சி குலைத்துவிட்டீர் - என் துரையே நீர்
மான் மேலே போய்ப் படுத்தீர்.
என்னைக் கொண்ட அருமை என்ன - என் துணை நாதா
கண்டவர் நகைக்க விட்டு - என் துரையே நீர்
கயிலாசம் போய் நடந்தீர் - உங்கள்
பள்ளியறைப் பெருமைகளும்
பாண்டியனார் சேவகமும் - உங்கள்
பொன்னு அரண்மனையும் - உங்கள்
பெருமையுள்ள வார்த்தைகளும் - உங்கள்

கச்சேரி தன் கொலுவும் - உங்கள்
கட்டழகர் சேவகமும்
குதிரை அலங்கரித்து - உமக்கு அங்கே
கோடிப்பேர் வந்திருக்க
ஆளை அலங்கரித்து - எமக்கு
ஆயிரம்பேர் காத்திருக்க - நீங்க
அத்தனையும் கையமர்த்தி - என் தொரையே நீங்க
ஆகாசம் போய் நடந்தீர்

தண்ணியிலே கண்ணாடி

(தாய் இறந்த பதினாறாம் நாள், முற்றத்தில் திருவிளக்கை வைத்து பெண்கள் விளக்கைச் சுற்றி வந்து இரு கைகளாலும் மார்பில் அடித்துக்கொண்டு பாடுவது)

அம்மாடி தாயாரான அம்மா தாயே
அன்புள்ள மாதாவே அம்மா தாயே
சித்திரரே புத்திரரே அம்மா தாயே
புத்திரரைப் பெற்றெடுத்தீர் அம்மா தாயே
மாதுளைக்கு நீர் வார்த்து அம்மா தாயே
மங்கையரைப் பெற்றெடுத்தீர் அம்மா தாயே
தண்ணியிலே கண்ணாடி அம்மா தாயே
தெருவுக்கு அலங்காரம் அம்மா தாயே
வாசலிலே கண்ணாடி அம்மா தாயே
வளவுக்கு அலங்காரம் அம்மா தாயே
சாமிகளைப் பூசை செய்து அம்மா தாயே
சந்திரனைப் பெற்றெடுத்தீர் அம்மா தாயே
இந்திரனைப் பெற்றெடுத்த அம்மா தாயே
இளையவனைப் பெற்றெடுத்தீர் அம்மா தாயே

மந்திரிபோல் பிள்ளைபெற்று அம்மா தாயே
மங்களமாய் வாழ்ந்திருந்தீர் அம்மா தாயே
பொழுதடையும் திண்ணையிலே அம்மா தாயே
பூப்போட்ட மெத்தையிலே அம்மா தாயே
சாந்திட்ட மெத்தையிலே அம்மா தாயே
தலைவலியால் போய்ப்படுத்து அம்மா தாயே
படுத்துவந்த நாழிகையில் அம்மா தாயே
பண்டிதரைக் கூப்பிட்டோம் அம்மா தாயே
வாருமையா பண்டிதரே - வாசலிலே
வந்து இரும் என்றழைத்தோம்.
கைபார்த்தார் கைபார்த்தார் அம்மா தாயே
பண்டிதரும் கைபார்த்தார் அம்மா தாயே
காரணத்தைக் கண்டவுடன் அம்மா தாயே
தங்கச் சிமிழ் திறந்தார் அம்மா தாயே
வேறு மருந்தெடுத்து அம்மா தாயே
விலைமதியாக் கடை மருந்து அம்மா தாயே
பஞ்சினால் பாலெடுத்து அம்மா தாயே
பட்டு கொண்டு முகத்தரசி அம்மா தாயே
கெண்டியிலே பாலெடுத்து அம்மா தாயே
சேலை கொண்டு முகத்தரசி அம்மா தாயே
மருந்ததுவும் செய்துவிட்டார் அம்மா தாயே - வந்த
வலியதுவும் தீரவில்லை அம்மா தாயே.

பாடியவர் : லெட்சுமி, காருபாறை

பதிவு : தா. முருகன், காருபாறை

தாயைப் பறிகொடுத்து

தாயைப் பறி கொடுத்து - நாங்க
தயங்குவோமோ பூமியிலே
பெத்தவளைத் தோற்றுவிட்டு - என்னம்மாடி நாங்க
பூமியிலே இருப்பதுண்டோ
மாதாவப் பறி கொடுத்து - நாங்க
மண் மேலே இருப்போமோ
தொப்பயத் தடவியல்லோ - எங்கள்
தொந்தி நிரம்பச் சோறுமிட்டாய் - எங்கள்
பக்கத்தத் தடவியல்லோ - என்னம்மாடி
பால் குடுத்து வளர்த்துவிட்டாய்
பெத்த மைந்தர் இங்கிருக்க - என்னம்மாடி நீ
பொன்னுலகம் போய்ச் சேர்ந்தாய்
ஈன்ற மைந்தர் இங்கிருக்க - என்னம்மாடி நீ
எமன் பதி போய் நடந்தாய்
உனக்கான உறவிருக்க - என்னம்மாடி நீ
அரன்பதியைப் போய் நடந்தாய் - உனக்கு
வேணே பேர் இங்கிருக்க - என்னம்மாடி நீ
வேந்தர் பதி போய் நடந்தாய்.

(வேணே பேர் - வேண்டிய பேர்)

பெத்தாளிறந்த போது

நீ
பெத்தாளிறந்த போதே - என்னம்மாடி நாங்க
பேதமையாய் நின்று விட்டோம் நீ
வளத்தாளிறந்த போதே - என்னம்மாடி நாங்க
மாபாவியாகிவிட்டோம் - நீங்க
கல்லிழைத்த மாளிகையில் - என்னம்மாடி உன்
கனத்த முடி தேடுகிறோம் உன்
மூன்று கட்டு வாசலிலே - என்னம்மாடி உன்
முத்துமுடி தேடுகிறோம்
உழுத்தை நிழலாமோ - என்னம்மாடி
உன்னைப்போல் தாயாமோ
கள்ளி நிழலாமோ - என்னம்மாடி
கணவர்கள் தாயாமோ
வேலி நிழலாமோ - என்னம்மாடி
வேண்டும்பேர் தாயாமோ
மாதாவைத் தோத்துவிட்டு - என்னம்மாடி
வையகத்தில் வாழ்வோமோ
தாயைப் பறி கொடுத்து - என்னம்மாடி நாங்க
தயங்குவோமோ பூமியிலே .... ம்..ம்..ம்.....
கப்பல் வரப் போகுதுண்ணு - என்னம்மாடி
கரையேறிப் பாத்திருந்தோம்.

கப்பலுடைந்த போதே
கரையோரம் நின்றழுதோம் - உங்க
தோணி வரப் போகுதுண்ணு - என்னம்மாடி
துறையேறிப் பாத்திருந்தோம் - உங்க
தோணி ஒடஞ்ச போதே - என்னம்மாடி
துறையோரம் நின்றழுதோம் - என்
மாமி அரண்மனையில் - என்னம்மாடி நாங்க
மகிழ்ச்சியுடன் இருக்கையிலே - உங்கள்
ஆளடிமை சேவகம் - என்னம்மாடி
அங்கே வந்து நின்றால் - என்
மாதா வருவாரென்று - என்னம்மாடி
மனமகிழ்ச்சி கொண்டிருந்தோம் - எங்கள்
பெற்றோர் வருவாரென - நாங்கள்
பெருமை அடைந்திருந்தோம் - எங்கள்
பெருமை குலைத்துவிட்டாய் - என்னம்மாடி என்
பூ முடியைக் கொள்ளை யென்னாய்
என்னருமை குலைத்துவிட்டாய் - என்
நீள முடி கொள்ளை யென்னாய்.

ஐயாவே ஐயாவே!

ஐயாவே ஐயாவே - என்
அன்புள்ள ஐயாவே - என்
ஐயாவைக் காணாமல் - நாங்கள்
அலைகிறோம் பூமியிலே - எங்கள்
பெற்றோரைக் காணாமல் - நாங்கள்
புலம்புகிறோம் பூமியிலே.
நீர் வளத்த அருமையென்ன - நீர்
வரிசையிட்ட நேர்த்தியென்ன - நீர்
வானத்து அம்புலிகள் - என்னையாவே எங்களுக்கு
வரவழைக்க வேண்டுமென்றால் - நீர்
மேகக் குறி பாத்து - என்னையாவே எங்கள
வரவழைத்துத் தந்திடுவீர்.
வேண்டுமென்ற பண்டமெல்லாம் - என்னய்யா நான்
விருப்பமாய்க் கேட்டாலும்
கொண்டு வந்து தந்திடுவீர் - என்
அய்யாவே அய்யாவே
அன்புள்ள அய்யாவே.
பெற்றாரைக் காணவில்லை
பெண்களோட பந்தியிலே
வளர்த்தாரைக் காணவில்லை
வரிசையுள்ள பந்தியிலே
கல் புதைத்த தூணுக்கு - என் ஐயாவே
கலக்கமில்லை என்றிருந்தேன்

கற்றூணு அற்றது போல்
கனத்த முடி சாய்த்துவிட்டீர்
கரும்பான தூணுக்கு
இளைப்பில்லை என்றிருந்தேன்
இரும்பான தூணதுபோல் - என்னையாவே
இழந்துவிட்டீர் பூமுடியை
பொன்னை பூமுடியை
பூமியிலே சேரவிட்டீர் - என்
ஐயாவே ஐயாவே - எங்கள்
அன்பு மறந்தீகளோ - எங்கள்
கூக்குரலைக் கையமர்த்தி - நீங்க
கொஞ்சம் வந்து பேசுங்களேன்
மைந்தர் செவி கேளாதோ
குழந்தை புலம்புறது
கொற்றவர்க்குக் கேட்கலயோ
ஊரை வளைத்தாலும் - எங்களுக்கு
உற்ற துணை என்பார்களே
முடிக்கு முடியானாலும் - உங்க
முத்து முடி யாகாதே
தளுத்த முடியானாலும் - உங்க
தங்கமுடி யாகாதே..........

ஆதரிப்பார் யாருமில்லை

ஈச்ச மரத்தடியில்
  இருக்கலாமுன்னு வந்தோம் - எனக்கு
ஈச்சமுள்ளு குத்தியது
  இருக்க பயமாகுதம்மா......
தாழ மரத்தடியிலே......
  தங்கலாம்னு வந்தேனம்மா
தாழமுள்ளு குத்தியது......
  தங்க பயமாகுதேம்மா......
ஆத்துக்கு அந்தண்டயாம்
  ஆகாச சத்திரமாம்
அண்ட நிழலுமில்ல.... என்ன
  ஆதரிப்பார் யாருமில்ல........

சாத்திக் கதவடைப்பாள்
(அம்மா இல்லாத வீட்டில் ஆசாரம்)

என்னப் பெத்த அம்மா
நீங்க இல்லா வாசலிலே
சாத்திக் கதவடைப்பாள்
தாழ்ப்பாளை உள்ளிடுவாள்
இருத்திக் கதவடைப்பாள்
ஈரமண்ணைப் போட்டறைவாள்
கொப்பறையில் பால் காயும்
கோருதற்கு பயமானோம்
அறையும் அறைத் தெருவும்
அஞ்சரங்கு மாளிகையும்
அண்டாவில் பால் காயும்
அள்ளிப் பருக பயமானோம்
கள்ளியிலே வெள்ளருகு
கர்ணர் எல்லாம் என் பிறவி - கர்ணருக்கு
வாய்த்த அலங்காரி - எங்களை
கள்ளி என்றே ஏசுவாளே
தண்ணியிலே வெள்ளருகு
தர்மர் எல்லாம் என் பிறவி தர்மருக்கு
வாய்த்த அலங்காரி - எங்களை
தள்ளிப்போ என்றுரைப்பாள்
ஆலம் விழுதானோம்
நீங்கள் இல்லா வாசலிலே - நாங்கள்
ஆகாத பிள்ளையானோம்

பொங்கும் வாசலிலே நாங்கள்
பொல்லாத பிள்ளையானோம்

பாடியவர் : லெட்சுமி, காருபாறை

எழுதியவர் : தா. முருகன்

ஆத்தா

அதிகாரம் பெருத்த ஒருவனிடம் மாட்டி
கொண்ட ஏழைப் பெண்ணின் புலம்பல்!

பூலாத்திப்பழம் பறிச்சப்
போனேண்டி - ஆத்தா
புதுக்குளத்து வெள்ளாறங்
கண்டாண்டி - ஆத்தா
மல மேலே குச்சி வெட்டித்
தந்தாண்டி - ஆத்தா
தலை மேலே கையவச்சித் - தண்டம்
போட்டேண்டி - ஆத்தா

மழைப்பாட்டு

சட்டியிலே மாகலக்கி

(களக்காடு வடகரையில் 1977ல் சேகரித்தது)

கோடை மழை பெய்யாதோ
கொடிய பஞ்சம் தீராதோ
ஏத்து மீனு ஏறாதோ
எங்க பஞ்சம் தீராதோ
குளத்து மீனு ஏறாதோ
குழந்தைப் பஞ்சம் தீராதோ
சட்டியிலே மாகலக்கி
சந்தியிலே கோலமிட்டேன்
கோலம் அழிவதற்கு - ஒரு
கோடை மழை பெய்யாதோ
மாரி மழை பெய்யாதோ
மக்கள் பஞ்சம் தீராதோ
உருண்டு திரண்ட பஞ்சம்
உள்ளூரு சோத்துப் பஞ்சம்——

வட்டாரச் சொற்கள் சில

அகராதி - திமிர். அகராதி பிடிச்ச பய, தெறிச்சிக் கிட்டு நிப்பான். அவன் ஒரு அகராதி.

அடியோலை - பனை ஓலையில் பின்னிய செருப்பு எளிதில் சிதைந்து போகும். அதுபோல் சிதைபவரைக் குறிக்கும் சொல்.
(எ.கா.) அய்யோ, நான் இப்பிடி அடியோலைப்படுறேனே.

அண்டி - 1. பிஞ்சு முட்டைக்குள் முழுமையாக வளராத குஞ்சின் பின்பகுதியில் ஒட்டிக் கொண்டிருக்கும் மஞ்சள் கரு. பொதுவாக முதிர்ச்சியில்லாதவரைக் குறிப்பிடும் சொல்.
(எ. கா.) அண்டி கரையாத பய, இந்த நிலை நிக்கியான்! அண்டி ஒறச்ச பய, எதுவுஞ் செய்வான்.

2. முந்திரிக்கொட்டையின் இளம் பருப்பு. இந்த அண்டியில் செய்த அண்டி அவியல் அண்டிக் குழம்பு ஆகியன சுவையாயிருக்கும்.

3. பொதுவாக முந்திரிக் கொட்டைப் பருப்பை அண்டி என்பார்கள். அண்டி தின்னா குண்டி பருக்கும் என்பது பழமொழி.

அத்தம் - அற்றம், நுனி, முனை, முடிவு. அத்தம் காணாம விடமாட்டேன்.

அம்பாரம் - குவியல். அம்பாரத்தில இருந்து பத்து தேங்கா எடுத்திட்டு வா.

அய்யாவுண - அய்யா+ஆணை. அய்யாவுண நான் சொல்லுவது உள்ளது. (உள்ளது- உண்மை)

அய்யம் - மோசம், தீயது, கெட்டுப்போனது, பண்டம் அய்யமாப் போச்சு, சப்பட்டை

அயர்த்து - மறந்து, அந்தச் செய்தி அயத்துப்போச்சி.

அயர்ந்து - களைத்து, பய அயந்து தூங்குதான்.

அலகு(அலவு) - கீழ்த்தாடை, அலகப் பேத்திருவேன், போயிரு.

அழகு - எதிர்ச்சொல் இழவு. ஆளப்பாத்தா அழகு போல. காரியத்தப்பாத்தா இழவு போல.

அறம் - சாபம், அறம் பாடியே என்னைய இல்லாம லாக்கிப் போட்டியே.

அறுப்பு - ஏச்சு. அறுத்துக் கிழிச்சிருவான், அறுத்துத் தூக்கிருவான். தள்ளைக்கு அறுப்பான் (தாயைக் குற்றப்படுத்தி ஏசுவான்), மண்ட கெண்டண்ணு மானங்கெட்ட அறுப்பு அறுப்பான்.

அனந்தரத்தி - சகோதரர்களின் மனைவிமார்கள்.

அன்னம் - சோறு. அன்னப்பால்-வடிகஞ்சி. பருப்பு வகைக் காய்களின் முதிராத விதைப்பகுதி. பயிறு இன்னும் அன்னம் வைக்கல்ல. அன்னப்பறவை. அவ அன்னம் போல இருப்பா.

ஆஞ்சிக்கிட்டு - ஆராய்ந்து கொண்டு. கழுகு ஆஞ்சாப்புல ஆஞ்சிக் கிட்டு திரியிறான்.

கௌறு ஆஞ்சிக்கிட்டு நிக்கி (தலையைத் தண்ணி மட்டத்தில் காட்டியபடி நீந்துகிறது) ரெண்டு நெல்லையும் வச்சிக் கிட்டு பயிரு ஆஞ்சிக்கிட்டு நிக்கிறதப் பாரு. (கதிர் கனக்காமல் நிமிர்ந்து ஆடிக் கொண்டிருக் கிறது). கொளைய ஆஞ்சிப் போடு. (சிறு கிளைகளை வெட்டிப் பிரி).

இரைப்பெட்டி - இரைப்பை, உன் இரப்பெட்டியக் கலக்கிப் புடுவேன்.

இளமாங்காய் - இதயம்.

ஈச்சி - ஈ.

உடிச்ச - வரை. எதுவுடிச்ச போறிய? கோட்டாறு உடிச்ச.

உடைப்பு - ஆறு, குளம் இவற்றின் கரை உடைதல். அவனத் தூக்கி ஒடப்புல போடு (அந்தக் காலத்தில் ஆறு, குளம் அடிக்கடி உடைந்தால் உடைத்த இடத்தில் ஒருவரைப் போட்டு மண்ணால் மூடிவிடுவார்கள் - பலியிடுவதற்குப் பதிலாக).

உதை - உதைத்துவிட்டான் என்பதை, வெட்டி உப்புக் கண்டம் போட்டுட்டான், நொறுக்கிட்டான், தல்லிட்டான், உளுக்கு எடுத்திட்டான் (உளுக்கு - சுளுக்கு) நெளிசல எடுத்திட்டான், பிசிறக் கழட்டிட்டான்..., எலும்ப எண்ணிட்டான்... என்பார்கள்.

உரப்பாக - வலுவாக, உரப்பாப் பேசாதே, ஒறப்பாக (ஒரப்பாக) - உறப்பா அடிச்சிட்டானோ?

உறைப்பு - காரமாக, எரிப்பாக, கறி உறைச்சுக் கிடக்கு, வலுவாக, உறுதியாக, மண்ணு இறுகி உறச்சிப் போச்சி, தைரியம், ஆளு அவன் உறச்சக்கட்டை

ஊச்சாளி - சண்டியர்.

ஊர் விலக்கு - குற்றம் சாட்டப்பட்டவரும், அவர் குடும்பமும் ஊரிலிருந்து விலக்கி வைக்கப் படுதல், கோயில் உரிமை, உறவுகள் உரிமை, குடிமக்கள் உதவி எல்லாம் மறுக்கப்படும், சாவு, வாழ்வு எதிலும் ஊர் சேராது.

எட்டுல
எடையில - இடை இடையே

எச்சி - எக்ஷி, பேய்.

ஏச்சு - இடிவுளுவான், பேதியில போவான் (பேதி- காலரா), முடிவான், இடறி விழுவான்,

		இவன் போன இடம் புல்லு முளைக்காது, மாடு சமுட்டிபய (ஆண்மையற்றவன்)
ஒடியேறு	-	புகார்
ஒரு சந்தி	-	நீலசாமிக்கு வைக்கும் மாலை நேரப்பூசை
ஒருமூச்சு	-	மூச்சு வாங்கித் திணறும்வரை, ஒரு மூச்சு வேலை இருந்தது.
ஒருநடை	-	ஒரு தடவை போய்வரும் வேலை, ஏழு நடை சுமந்திருக்கேன்.
ஓடிவிட்டான் என்பதற்கு	-	பெருக்கிற்றான், வச்சி வாங்கிற்றான், பறிஞ்சிற்றான், நழுவிற்றான், சறுவிற்றான், பூஞ்சிற்றான்.
கண்டு மேவிக் கட்டினது	-	காதல் கல்யாணம்.
கரைச்சல்	-	சிக்கல்
கருகரா	-	கருகரா இருட்டிட்டு (நன்றாக)
கழுவிக் கமத்தியாச்சி	-	காரியம் முடிஞ்சிட்டு.
கறி	-	உடல் தசை (சதை), கறி முறுவி நிச்சியான். கறிய உலைச்சி வேலை செய்யணும். குண்டிக்கறிய வவுந்துப்புடுவேன். கொடிக் கறி போட்டுப் புடுவேன், பணத்த சொன்ன கெடிக்கிக் கொடுக்கட்டா கறிய அறுத்துப் புடுவேன்.
கறி	-	குழம்புவகை : பருப்புக்கறி, கூட்டுக்கறி (பொரியல்), மீன்கறி, வெண்டைக்காய்க்கறி, எலும்புக்கறி - எலும்பு ரசம் (ஒரு காலத்தில் இப்பகுதி மக்கள் முழுக்க முழுக்கக் கறி சாப்பிடுபவர்களாக இருந்திருக்க வேண்டும்)
கிடாரி	-	ஈனாத ஆனால் பருவம் வந்த கன்றுக்குட்டி
கிடாவு	-	எருமைக்கிடா.
கிரக்க நெடி	-	பதட்டமான மனநிலை. பயல இன்னும் காணல்ல, கிரக்க நெடியா இருக்கு

கிளாய்ப்பு	-	செல்லக் கோபம், ஊடல். அவன் கிளாய்ச்சிட்டுப் போறான். ஏட்டீ, இது என்ன கிளாய்ப்பு?
கீழ்க்கிடையே	-	ஏற்கெனவே, கீழ்க்கிடையே அவன் அப்படித்தான்.
குடல்	-	குடலை உருவிப்புடுவான். குடல உருவிப் போட்டாலும் வாழைநார் என்பான். என் குடல் கொதிப்பு தீருமா!
குலான்	-	நட்பு. குலானா இருந்தியளே, இப்ப என்ன, தெத்துக் கள்ளி, திருகுகள்ளி ஆயிட்டிய? (தீர்க்க முடியாத சிக்கல்)
கைந்தலை	-	சிறு குழந்தைகள். கைந்தலைகளோட அவ படும்பாடு....
கூதற	-	மமமமமஒழுக்கக்கேட்டில் துணிந்தவள்.
கூராப்பு	-	வெளிச்சமற்ற மந்தமான காலநிலை. வானம் கூராந்து கிடக்கு. மழை வரும்போல, சோர்ந்து, உன் முகம் ஏன் கூராந்து போயிருக்கு.
கெடி	-	காலவரையறை, தடவை கெடி கட்டிட்டான், இந்த ஒரு கெடியும் பொறுத்துக்க, இந்தக் கெடி அவன் தப்ப முடியாது.
கொசு	-	கன்னங்கரேரென்று எள் வடிவத்தில் இருக்கிற பறக்கும் பூச்சி. தொங்குகிற கயிறுகளிலும், குச்சுகளிலும் அடையும் அடர்த்தியாக. அழுகிய பழங்கள், காயங்கள், புண்கள், நோயுள்ள கண் இவற்றில் அமர்ந்து சாறு உறிஞ்சும். இவற்றில் முட்டையிட்டு இனம் பெருக்கும்.
கொதி	-	கொதித்தல், தண்ணி கொதிச்சிட்டு இருக்கு கொதித்துக் கொந்தளித்தல். என் குடல் கொதிச்சுவே. ஈரக்கொல கொதிச்சுவே. கொதிபோடுதல் : சாப்பிடுவதைப் பார்த்து பசித்தவர் ஏங்குவதால், சாப்பிட்டவருக்கு

வருவதாக நம்பப்படும் வயிற்றுப் பிரச்சினை. பிள்ளைக்குக் கொதி விழுந்திருக்கு. எவ பார்த்தாளோ தடவிப்போடு.

கொட்டி - சிறியது; கொட்டி மாங்காய், கொட்டிப் பலாப்பழம், அல்லியைக் கொட்டித் தாமரை என்பார்கள்.

கொடுக்கன் - தேள், கொடுக்கு உடையது.

கொச்சி, கொச்சன் - தேங்காயில் சிறியது.

கோட்டி - மனக்கோளாறு. கோட்டிக்காரப்பய.

கோலம் கழித்தல் - கோலத்தைக் குலைத்தல். அவமானப் படுத்துதல், கோலங்கழிச்சிட்டாளே.

கைவழிச்ச மண்ணு - சுயதன்மை இல்லாதவன். மண்சுவர் எழுப்பும்போது சில இடத்தில மண் பிதுங்கி நிற்கும். அதைக் கையில் வழித்து, சுவர் வைப்பவர் தனக்கு விருப்பமான குழிந்த பகுதியில் எறிந்து ஒட்டுவார். எந்த இடத்தில் உன்னை ஒட்டலாம் என மண்ணை அவர் கேட்க மாட்டார். இப்படி அடுத்தவர் கைகளில் பயன்படுவோர் கை வழிச்ச மண்ணு. (லேய் அவன் கை வழிச்ச மண்ணு).

சகபாடி - சகோதரிகளின் கணவன்மார்.

சக்களத்தி - இரண்டாம் மனைவி

சாபங்கள் - நீ விளங்கவே மாட்டா, ஒன் பெண்ணடி தழைக்காது, கொள்ளி முடிவா, கொள்ளி யத்துப் போவா, கொள்ளையில போவா, பாடையில போவா, வாரண்டுல போவா (வாரண்டு - காலரா), உன் கொடி தழைக்காது.

சமுண்டு - உதை, மிதி, சமுண்டிருவேன், ஈரத்தில சமுண்டாத.

சமயம் சார்ந்த சொற்கள்	-	லே, அவன் பெரிய காவடி, பெண் கொடுக்காத, கொடுத்த பணத்தத் தீவாளி குளிச்சிட்டான். சாப்பிட்டுக் கிருஷ்ணான்னு ஒரு தூக்கம் போடணும். வாங்கின பணத்தக் கோவிந்தா போட்டுட்டான். கருமம் பிடிச்சவன் அவன் (கருமம் - அடித்தள மக்களின் கருமங்கள் துயரம் சார்ந்தவை). அவனை வினை பிடிச்சி ஆட்டுவு (வினை- அடித்தள மக்கள் துயரம். வினை தீ வினை யோடு தொடர்புபடுத்தப்படுகிறது.
சவால்	-	இந்த வட்டாரத்தில் சவால் விடும் முறை. மயிரப் புடுங்குவான், நொட்டுவான், கிழிச்சிருவான்!
சவுண்டு கொடுத்தல்	-	விறைப்புக்காட்டாமல், இணக்கமாய்ப் போதல் : அவன் பேசினான், நான் சவுண்டு குடுத்துப் போயிட்டேன்.
சாடு	-	குதி, மரத்தில இருந்து சாடு, கோபப்படு (என்னையச் சாடு சாடுன்னு சாடிட்டான்).
சாவு	-	மண்டையப் போட்டுட்டாரு, ஊத்து பறிஞ்சி போச்சு, சீட்டு வாங்கிட்டாரு.
சாறா	-	பூரான்
சித்த(செத்த)	-	சிறிது, சித்தோல, சித்த வந்திருடே, சித்தோல கறி குடுட்டீ, கொஞ்சம், சித்தோல படுமுன்ன தேச்சியப்படுவா.
சிறை	-	சலிப்பு : வீட்ல யாருமில்ல. சிறையாயிருக்கு.
சிமிட்டுதல்	-	பவுறு காட்டுதல், (பவிசாக நடத்தல்), ரெண்டுக்காயி உண்டுமானா எம்மவ சின்னப்புள்ள, அதுக்குத் தக்கின ஒரு சிமிட்டு சிமிட்டத்தான் செய்வா. கண் சிமிட்டுதல்.... கண் சிமிட்டி வராதவன் கையப் பிடிச்சா வருவானா?

செல்லம் - வேலைப்பாடமைந்த சிறிய பித்தளை வெத்திலைப் பெட்டி, விலை உயர்ந்த பொருட்கள் வைக்கும் வேலைப்பாடு நிறைந்த அழகிய சிறுபெட்டி. (உ-ம்) வெற்றிலைச் செல்லம், மிகுந்த அன்பு பாராட்டப்படும் குழந்தை, பயலுக்கு வீட்ல ஒரே செல்லம்.

தண்டனைகள் - கோட்டை கீறி வெயில்ல நிறுத்துவது, குனிய நிறுத்தி முதுகில கல் ஏத்துறது, மொட்டையடிச்சி கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதையில ஏத்தி கொடுக்குக் கள்ளிக் கம்பால ஊரச்சுற்றி அடிக்கிறது, சாணி தண்ணிய தலையில விட்டு விளக்கு மாத்தால அடிக்கிறது, தோப்புக்கரணம் போட வைக்கிறது, கோயிலுக்குத் தேங்காய் உடைக்கிறது. முள்ளுவெட்டி வீட்டு வாசலைச் சாத்தி மூடுவது, ஊரைவிட்டு விலக்கி வைக்கிறது.

தத்திர - தீவிரமான காலம். இப்ப தத்திர மாங்காய் காலம். தத்திர விளையாட்டு (தீவிர விளையாட்டு).

தப்பு - 1. ஈர மண் குவியலை அல்லது வரப்பை இறுகும்படி மண்வெட்டியால், கையால் தட்டுதல்.
2. தவறு.
3. தப்பித்தல் - திருட்டுப் பையன் தப்பி விட்டான்.
4. தப்பு என்னும் தோல்கருவி
5. தப்பு - குற்றிப் பிழிந்து துவைப்பது

தளை நோயால் அல்லது வேறு பிரச்சினையால் உடல் மெலிந்தவரைத் தேறவைக்கக் கொடுக்கும் சிறப்பு உணவு வகை. கொதித்தல் தண்ணி தளைக்கட்டு (கொதிக்கட்டும்).

தாயமாடாம - சுணங்காமல், நேரம் கடத்தாமல்.

திறவியல் - திறவுகோல், தாக்கோல், இன்று சாவி.

தோடு - ஓடு, கடலைத்தோடு, புளியந்தோடு.

நரங்கிப்போச்சி- கரண்டு போச்சி (வளர்ச்சி குன்றி போச்சி), பய ஏன் நரங்கிப் போனான்?

நெட்டி - பனங்காய், தேங்காய் இவற்றின் முகத்தில், காம்புடன் இணைந்திருக்கும் பூ இதழ்கள்.

நெல்குத்துதல் - துவைத்தல், மழுக்குதல், தீட்டுதல், புடைத்தல்.

நொண்டங்காய்- புளியங்காய்ப் பிஞ்சு.

பக்கி - (பட்சி) வண்ணத்துப்பூச்சி.

பரிவேகப்படுதல் - கட்டுப்பட்டு கிடந்து துடித்தல் (கட்டில் கிடந்து ஓடத்துடிக்கும் குதிரை போல)

பள்ளை - இடுப்பின் ஓரங்கள்.

பல்லே - பிலே, ஏலே - அடேய்

பாடு - கதை, உரையாடல், துன்பம், உழைப்பு

பாச்சா - கரப்பான் பூச்சி

பாளை - 1. விரியாத பனம் பூக்கொத்து, தென்னம் பூக்கொத்து. 2. கல்லீரல்

பிச்சாத்தி - பிச்சுவாக்கத்தி

புட்டான் - துள்ளும் சிறுபூச்சி

புருவை - ஈனாத ஆடு

பூட்டு - ஒரு சோடி, ஒரு பூட்டு ஓலை எடு, வீட்டுக்குப் போடும் பூட்டு

பூ - இதயம். அவன் சொன்னது என் பூவில பொறுத்திட்டு.

பெல்லுமில்ல
பிரேக்குமில்ல - கட்டுப்பாடு எதுவும் இல்லாதவர்

மடலேற நிச்சியான் - திமிரெடுத்து நிற்கிறான்

மனையான் - ஆண் பெண் சேர்தல்

மாக்கையன் - மந்தபுத்திக்காரன், மாந்தையன், மிலாக்கன்.

முடுவல் - முடுவலா இருக்கு (வெட்கை, புழுக்கம்) வானம் முடுமுடுங்குது(உறுமுகிறது)

முலை - அம்பது வருசத்துக்கு முன்வரை இது மதிப்புக்குரிய சொல். இப்போது அது பாலுணர்வைத் தூண்டத் தொடங்கிக் கெட்டுப் போச்சு.

ஒரு அம்ம முலையில பால் குடிச்சி வளர்ந்தவன்டா நான், சாதாரணமா நினையாத, நெஞ்சிலே முலை முளைச்ச வன்னா நேருக்கு நேர் சொல்லுளா.

முறி - துண்டு, மரத்தின்துண்டு, வீட்டின் சிறிய அறை, தேங்காயை இரண்டாக உடைத்து, ஒரு பகுதி.

வாய்ப்பிறப்பு - (வார்த்தை) என் வாய்ப்பிறப்பை வாங்காதே.

வார்தல் - ஒரே அகலத்தில் நீளமாகக் கத்தியால் கிழித்து எடுத்தல், ஓலையை வார்ந்து வை. பெட்டி செய்ய, கறியை வார்ந்து தொடிக் கறி போடு.

வாள்போல - ஈவுசாய்வு இல்லாமல் வாள்போல நிக்கியான்

வாளி - கடற்கரையில் கிடைக்கும் சிறிய வழுவழுப் பான சிப்பி. வாளி விடுதல் ஒரு விளையாட்டு. பூ, காய் முதலியவற்றின் காம்பு.

வில்லுவச்சாச்சி
வில்லு பூட்டியாச்சி - வசவு தொடங்கிவிட்டது. அவ வில்லு வச்சிட்டா.

வாழி பாடியாச்சி - எல்லாம் முடிஞ்சிட்டு (வாழி என்பது வில்லுப்பாட்டின் இறுதி)

மோர் விட்டாச்சி - காரியம் முடிஞ்சிட்டு (சாப்பாட்டில் கடைசிப் பகுதி மோர்ச்சோறு)

விடை - பருவம் வந்த கோழி

விண்டி - குசும்புப் பயல்

விண்ணாணம் - சவடால். அவ விண்ணாணம் அடிக்கியா.

விளை - புஞ்சை விளைநிலம். மரங்களும் இருக்கும். புஞ்சைப் பயிர்களும் இருக்கும்.

வீடு : அக்காலப்

பகுதிகள் - தாய் வீடு (பெரிய அறை), நாலுகட்டு (சுற்றிலும் திண்ணையும் நடுவில் முற்றமும் கொண்டது). படிப்புரை முன் படிக்கட்டை யொட்டி அமைந்த பகுதி, அரங்கு, முக்கியமான பொருள்கள் வைக்கும் பகுதி. விடிலி, குசினி, ஆக்குப்புரை, சமையல் பகுதி. வீட்டின் பல்வேறு துணைப்புரைகள் (அறைகள்) நெல்லுப்புரை நெல்லுகுத்து, புரை, தறிப்புரை, வண்டிப்புரை, மாட்டுத் தொழுவையொட்டி கன்றுக்குட்டிப்புரை.

வெட்டை - இறுகிய நிலம்

வெகுளி - அப்பாவி, மந்தப்புத்திக்காரன்

வெடைக்கோழி- முட்டையிடும் பருவம் வந்த ஆனால் முட்டையிடாத கோழி (பெடை)

றாங்கி - திமிர். அவ றாங்கி பிடிச்சவ.

பவுறு - பவுறு காட்டுறா.

வட்டாரமொழி இலக்கணம்

வேற்றுமை உருபுகள்:

'அது' என்ற வேற்றுமை உருபுக்குப் பதிலாக இந்தப் பக்கங்களில் 'உடைய' என்னும் பொருளில் 'க' உருபு பயன்படுத்தப்படுகிறது.

அவனுடைய பேனா என்பது இங்கு அவனுக்க பேனா என்று வழங்கப்படுகிறது.

அசைச் சொற்கள்:

சவம், இழவு, தாயளி, வந்து - இவை இங்குப் பொதுவாக பயன்படும் பொருளற்ற அசைச் சொற்கள்.

சவம் அவன் சரியில்ல.

தாயளிக்க திறமையப்பாரு, ஆஹா.

இது என்ன இழவு.

விளிவேற்றுமை:

ஆண்பால் ஒருமை - ஏ, ஏய், லே, லேய், ஏலேய், பிலே.

பெண்பால் ஒருமை - ஏய், லேய், ஏட்டி, லேட்டி, லேளா, லோளா.

எழுத்துத் திரிபு:

விட்டார் - பிட்டார்

அதை அவர் செய்துவிட்டார் - அதை அவர் செய்துப் பிட்டார்.

கொண்டான் - கிட்டான்.

அவன் அவளைக் கட்டிக்கிட்டான்.

ஒலிக் குறிப்புச்சொல்:

ஏதாவது ஒரு பொருளைக் குறிப்பிடும்போது அதற்கு இணையான பிறவற்றையும் சேர்த்துச் சொல்ல முதற் சொல்லில் உள்ள முதல் எழுத்தைக் ககரமாக மாற்றிப் பயன்படுத்துகிறார்கள்.

உதாரணம் : சோறு கீறு இருக்கா?

இதன் பொருள் - சோறோ அதுப்போன்ற சோளம், கேப்பை, கம்பம் புல் அல்லது வேறு ஏதாவது ஒன்று இருக்கிறதா என்பது.

காப்பி கீப்பி இருக்கா?

கஞ்சி கிஞ்சி இருக்கா?

பாம்பு கீம்பு கிடக்கும், பாத்துப்போ

பணம் கிணம் இருக்கா?

'வு' விகுதி 'கிறது' என்பதற்குப் பதிலாகப் பயன்படுகிறது.

அது அப்படி இருக்குவு - அது அப்படி இருக்கிறது.

இது இப்பிடிச் செய்யுவு - இது இப்படிச் செய்கிறது.

ற்றேன் இது விட்டேன் என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகிறது.

போயிற்றான் - போய்விட்டான்

ஒப்பேத்திற்றேன் - ஒப்பேற்றி விட்டேன். சமாளித்து விட்டேன்.

ஆங்கம் : ஆ நீண்டு ஆங்கம் ஆயிற்று.

வரவேண்டுமா - வரணுமாமாங்கம்

நான் அதச் சொல்லணுமாங்கம்?

உடிச்ச வரை: - உடுச்ச, உடிச்ச

அதுவரை இதுவரை என்பதற்குப் பதிலாக அது உடுச்ச, இது உடுச்ச எனப் பேசுகிறார்கள்.

கிறது - கது

இருக்கிறதைக் கொடு - இருக்கதக் கொடு

விட்டான் - உற்றான்.

செய்துவிட்டான் - செய்திற்றான்.

செய்துவிடு - செய்திரு.

ஒலித் திரிபுகள்:

க, ச, திரிபு : நிற்கையில் - நிச்சயில, நிக்கச்சில.

போகையில் - போகயில, போவச்சில.

அவன் தெனவெடுத்து நிச்சியான்.

ற - க : நிற்க - நிக்க

க - வ : சாக - சாவ

ண - ற :கண்ணு - கன்று

பண்ணி - பன்றி

திரிபு

லகர யகர ஒற்றில் முடியும் பெயர்ச்சொற்களில் லகர யகர ஒற்றுக்கள் கெட்டு குற்றியலகரம் இகரம் உகரமாகத் திரியும்.

அகரமாய்த் திரிதல்:

தோளில் - தோள்ல

காலில் - கால்ல

களை - கள

மழை - மழ

இகரமாய்த் திரிதல்:

பேய் - பேயி

பாய் - பாயி

காய் - காயி

உகரமாய்த் திரிதல்

உரல் - உரலு

பரல் - பரலு

அந்தக் கால அணிகலன்கள்

தலையணிகள் - (பெண்)

பந்துபோல் ஓலையில் முடைந்து, அல்லது உலர்ந்த நுங்குக் கூந்தலை எடுத்து, அதன் மேலே மெழுகு பூசி, குன்னி முத்து, பொன்வண்டின் மண்டையோடு போன்றவற்றை ஒட்டுவார்கள். இதை உள்ளே வைத்துத் தலைமுடியை மேலே சுற்றிக் கொண்டை அலங்காரம் செய்வார்கள். வளையம் போல் துணியில் செய்து அதன்வழியே தலை முடியை இழுத்துச் சுற்றிக் கட்டி, அதன் மீதும் பூ சுற்றிக் கொள்ளு வார்கள். முந்தைய காலங்களில் பூவுக்குப் பதிலாக வேரை நறுக்கிய முளைப் பயிரைச் சரமாகக் கட்டித் தலையில் சூடும் வழக்கமும் இருந்தது.

தலையில் மாட்டுப்வை:

(தங்கத்தாலும் வெள்ளியாலும்)

தாழம்பூ, கொண்டைப்பூ, உச்சிப்பிறை, நெற்றிப்பிறை, மயிர்மாட்டி

செவியணிகள்: பெண் குழந்தைகள்:

பிறந்த வீட்டிற்குள் காதுகுத்தி ஓட்டை பெரிசாவதற்காக பஞ்சு அல்லது தக்கையைத் திணித்துவிடுவார்கள். காது குத்துபவர் குறவர்.

பதினாறாம் நாள் கழிந்ததும், காதின் ஊஞ்சல் போன்ற தோல் வளையத்தில் ஈயக்குணுக்கள் போடுவார்கள். வளையத்தின் பிளவில் (காதில் மாட்டுவதற்குரிய இடைவெளி) மெழுகு வைத்துப் பொன்வண்டின் தலையை அதில் ஒட்டுவார்கள். பணக்காரர்கள் வெண்கலக் குணுக்குகளோ, வெள்ளிக் குணுக்குகளோ, தங்கக் குணுக்குகளோ போடு வார்கள்.

செவியின் மேல் மடல்:

செவியின் மேல் மடலில் இரும்புக் குச்சி, புன்னைக்காய் முருகு இவைகளைச் செருகிவிடுவார்கள். புன்னைக்காய் முருகு இரண்டு பக்கமும் பந்து போலவும் நடுவில் கம்பியாகவும் இருக்கும்.

காது:

காதுக்கு பதினாலு பாம்படம் போடுவார்கள். காது நிறைந்திருக்கும். மேலிடு, இட்டிடுக்கி, அரித்தழுப்பனும் போடுவார்கள்.

காது மேல் மடல்:

முருகு - பின்னைக்கா முருகு

மேல் முருகு - முத்து முருகு

தேர் வாளி - விசிறி

காது கீழ் மடல்:

பாம்படம், தண்டட்டி, முடிச்சு, அரித்தழுப்பன்.

பவுன் வந்தது:

இருநூறு வருசம்தான் இருக்கும் (வெள்ளைக்காரன் கொண்டு வந்தது) அதற்கு முன் பொன்தான்.

மூக்குத்தி:

ஒற்றைக்கல் முதல் ஒன்பது கல் வரை வைத்த மூக்குத்தி களை மூக்கில் அணிவார்கள். மூக்கின் நடுத்தண்டிலிருந்து தொங்கும் பில்லாக்கு அணிவார்கள்.

கழுத்து:

1. நூலில்லா மாலை அல்லது நாவடக்கு மாலை.
2. காசிமாலை.
3. உருண்டை மாலை (கம்பியில் உருண்டை மணிகள் தொங்கும்).

கழுத்துக் கோர்வைகள்:

எருக்கிலை மொட்டுக் கோர்வை.

காசிச் சூலம்.

ஒத்தக் கோர்வை.

ரெட்டைக் கோர்வை.

1. நாவடக்கு மாலை (ஒற்றை வெள்ளைப்பூண்டு அரிசியின் தொடர்).

2. நூலில்லா மாலை.

3. அடுக்குக்காசி மாலை.

4. பவளக் கோர்வை (பவுன் - வெள்ளி பொன்னு).

தாலி:

பிடரித் தாங்கி, கொப்புள் மணி, ஒத்தமணி, ரெட்டமணி, முக்கூட்டுமணி, தாயத்து, பச்சக்கல்லு.

புள்ளையாரு ஒருபுறம், சங்குசக்கரம் மறுபுறம், இது தாலியும் சங்கும். இருபத்தியோரு உருப்படி கோர்க்கப்படும். நூலில் கோர்த்துப் போடுவது வழக்கம்.

தோள்:

தோள் நெளிவு: தோளில் மாட்டப்படும் வளைந்த நகை. ஒத்தை நெளிவு, இரட்டை நெளிவு உண்டு.

தோள் காப்பு, தொந்திக் காப்பு, தோள் வளையம், இதில் பவளங்கள் தொங்கவிடப்பட்டிருக்கும்.

கை:

செருகு - மணிக்கட்டுக்கு மேலே புட்டுக்குழல்போல நீளமாக ஒரு நகை.

சந்துறை:

மணிக்கட்டுப் பகுதியை மறைத்தபடி இருக்கும் ஒரு காப்பு.

காப்பு வகைகள்:

தோள் காப்பு

தொந்திக் காப்பு (பவுன், பவளம்)

பட்டணக் காப்பு

அவல் காப்பு.

மணிக்கட்டு:

மணிக்கட்டில் சந்துறைக் கடயம், ஊமைக் கடயம். கடயத்தின் உட்பகுதி பொள்ளலாக, மெழுகு அடைத்து இருக்கும்.

கைவிரல்:

விரல்களில் மோதிரங்கள்:

1. பாச்சா மோதிரம் (மோருவம்)
2. பல்லி மோதிரம்
3. நெளிவு மோதிரம்.

இடுப்பு:

ஒட்டியாணம் (வெள்ளி, தங்கம்)

பாதவிரல்:

பீலி - 2-ம் விரல் (செம்பு வளையம்)

பில்லணை - 3-ம் விரல்

மயிலடி - 4-ம் விரல்

பெருவிரல் தாங்கி - 1-ம் விரல் (வெள்ளி)

சுண்டுவிரல் தாங்கி - 5-ம் சுண்டுவிரல்

எல்லாம் கணுக்காலில் கிடக்கும் ஒரு செம்பு வளையத்தோடு சங்கிலிகளால் பொருத்தப்பட்டிருக்கும்.

ஐவர்ணம்: பாதத்தின் மேலே உள்ளது. பாதவிரல் வளையங்களையும் செம்பு வளையத்தையும் இணைப்பது. பார்க்க பாம்புச் சட்டைபோல் வெள்ளியில் அமைந்திருக்கும்.

பாதத்தின் மேலே: காலில் அணிவது.

1. பாடகம் - உரல்பெட்டி மாதிரி பாதத்தின் மேலே காலில் அணிவது.

2. கொலுசு - அத்திக்காய்க் கொலுசு.

3. தண்டை - வேப்பிலைத் தண்டை, பட்டைத் தண்டை, வழுக்குத் தண்டை

4. பாதசரம் - அகலமாக கொத்துக்கு மூணுமுத்து கோர்த்திருக்கும். நடக்கும்போது சிலிர் சிலிர் என்று ஓசை கேட்கும்.

முக ஒப்பனை:

மஞ்சனை: மஞ்சள்நெய் (மஞ்சள் + சுண்ணம்+நெய் = சிவப்பு). சாணிபோல் முகத்தில் லேசாக மஞ்சனை பூசி, வாய் நிறைய வெற்றிலை போட்டு, வாழைப் புகையிலை அமுக்கினால், கன்னங்கள் புடைத்து நிற்கும். இது அந்தக் கால அழகு.

திருமண ஒப்பனை:

(முகூர்த்தத்தை முழுத்தம் என்பார்கள்)

கலியாணப் பொண்ணுக்கு முறிச்சிக் கெட்டி முழுத்தச் சேலை. இது ஆயிரம் பணம்வரை விலை. குன்னிமுத்துக் கண்டாங்கிபோல சேலை வகைகள் சேலை நீளம் எட்டு முழம்.

பெண்கள் சேலை:

சாயச் சீலை, உள்ளுக்கு வெள்ளை, வெளியே சிவப்புக் கரை போட்டது.

ஆண்களுக்கு:

காது வடிக்க மாட்டார்கள். குத்திக் கடுக்கன் போடுவார்கள். செவியின் மேல் மடலில் முருகு குத்துவார்கள்.

ஆண்குழந்தை: கழுத்தில் குவளை - பவுன் கம்பி அல்லது வெள்ளிக் கம்பியில் கோர்த்துக் கட்டப்பட்டிருக்கும்.

காதில் கடுக்கன்.

கையில் கடகம் (வெள்ளி).

ஆண் உடை:

கசவு(சரிகை) வைத்த வேட்டி.

கசவு போட்ட இரணியல் நேரியல், அதில் வட்டத் தலைப்பாகை கட்டி, குஞ்சம் பின்பக்கம் தொங்கும். தோளில் துப்பட்டா, காதில் கடுக்கன், மேலே மேல் முருகு.

உறுமால் கட்டு:

பதினாறு வயதில் காதுகுத்தி சமூகப் பெரியவர் தலைப்பாகை கட்டி உறைக்கத்தியை இடுப்பில் செருகு வார்கள். அன்று ஊராரும் உறவினரும் வந்து இருப்பார்கள். அன்று பெரும் செலவில் விருந்து நடக்கும்.

ஆண்கள் ஒப்பனை:

இரணியல் தரம் பெரிய நேரியல் தோளில் போட்டு இடுப்பில் உறைப்பிச்சாத்தி (பிச்சுவாக்கத்தி) செருகியிருப் பார்கள். இது ஒருபுறம் எழுத்தாணி, மறுபுறம் கத்தி என அமைந்தது. மடியில் சில ஓலை இலக்குத் துண்டுகள் இருக்கும்.

கொண்டை:

ஆண்களுக்கு உண்டு. முன்பக்கம் மழித்து பின்பாகக் கொண்டையை மடக்கிச் செருகியோ, வாழைப்பூபோல உருட்டிக் கட்டியோ இருப்பார்கள்.

செருப்பு:

பனை மட்டைச் செருப்பு. (பனை ஓலையில் பனையைப் பற்றியிருக்கும் பகுதி பத்தை. இதை அறுத்து, நார்போட்டுச் செருப்பாக்குவார்கள்)

பனை ஓலைச் செருப்பு.

கட்டைச் செருப்பு (மரக்கட்டை).

தோல் செருப்பு.

குடை:

ஓலைக்குடை, சீலைக்குடை (இதில் கருப்பு, வெள்ளை).

மக்களும் மரபுகளும்

1. மாதங்கள்
2. கால நிலைகள்
3. மரங்கள்
4. பயிர்கள்
5. உணவு
6. தொழில்
7. விளையாட்டுகள்
8. நாணயம்

நிலமும் பயிரும்

நிலப் பெயர்கள்

புரையிடம் : புரை - (குடில்) இருக்கும் இடம். நிலத்தின் ஒருவகை அளவு இது.

ஒருவன் ஒரு புரை நாட்டியிருக்கும் இடத்தைச் சுற்றி அவன் நிலம் பயிர் விளையும் இடம். பண்டைக்காலத்தில் புரை (குடில்) அதைச் சுற்றிப் பயிரிடும் அளவை வைத்து பகுக்கப்படுகிறது.

விளை : ஒரு குறிப்பிட்ட பயிர் விளைவிக்கும் இடம்.

தட்டு : தட்டையாக அமைந்திருக்கும் ஒருவருடைய விளைநிலப்பகுதி.

பற்று : ஒரு குளத்தை அல்லது ஊற்றை ஆதாரமாகக் கொண்டு நெல் பயிரிடப்படும் பகுதி.

கண்ணாறு : ஒரு ஊற்றுக்கண் அல்லது குளத்து மடையின்கண் பாய்ந்து விளையும் இடம்.

கோணம் : மலை அல்லது மேடு சூழ்ந்திருக்கும் இடைப்பட்ட கோணப்பகுதி.

மாதங்கள் - காலநிலை

ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி

ஆவணி ஒன்று - ஆண்டுபிறப்பு.

ஆடிக் கடைசி - ஆண்டிறுதி.

1. ஆனி, ஆடி - சாரல் மழைக்காலம். காற்றும், மழையும், குளிரும் நடுங்கவைக்கும். ஆவணி - வறண்ட காலம்.
2. ஐப்பசி, கார்த்திகை - அடைமழைக்காலம். ஐப்பசி அடைமழை, கார்த்திகை கனமழை.
3. மார்கழி - மார்கழி மாதம் மரம் பிளக்கக் காற்றடிக்கும்.
4. தை, மாசி - தரை குளிரப் பனிபெய்யும்.
5. பங்குனி, சித்திரை - படுவெயில் காலம்.

   சித்திரை - கோடை மழை பெய்யும்.
6. வைகாசி விசாகக் கெடிக்கு மழை தொடங்கும்.

பனைக்காலம்

ஆடி - அபூர்வமாகப் பாளை வரும்.

ஆவணி - வேகமாகப் பாளை வரும்.

புரட்டாசி முதல் மாசி வரை ஆறுமாதம் - பதனீர் காலம்.

சொந்தப் பனைக்காரர் ஏறினால் முழுப்பதனியும் அவருக்கு. அடுத்தவருக்கு ஏறினால் ஒருநாள் பதனீர் உடைமையாளனுக்கு, மறுநாள் ஏறுபவனுக்கு.

மார்கழி, தை, மாசி - பதனீரும் நுங்கும்.

தை மாதம் - தந்திர பயினி (தீவிர பதனீர் காலம்)

மாசி, பங்குனி, சித்திரை - பனம்பழம்.

பாண்டிப் பயினி

சித்திரையில் பெரும்பாலும் குடும்பத்தோடு பாண்டிக்குப் போவார் பனைத்தொழிலாளி.

தனியாகப் போகிறவர் கூலிக்குப் பனை ஏறுவார். குடும்பத்தோடு போகிறவர் பாட்டத்துக்கு ஏறுவார். வைகாசி, ஆனி, ஆடி அங்கே தந்திரப் பயினி. மாதப் பிறப்புக்கு ஒக்க ஊர் வந்திருவார்கள்.

மரங்களும் பயிர்களும்

மாமரம் : காலமாங்காய்

தை: மா இலை உதிரும்.

மாசி: தளிர்த்துப் பூக்கும்.

பழமொழி: மாசி அறியாதவன் மாம்பூ வைப்பார்.

பங்குனி: வடுமாங்காய்.

சித்திரை, வைகாசி: தந்திர மாங்காய் காலம்.

மாங்காய் வண்டி பாண்டிக்குப் போகும்.

கோடை மாங்காய்:

ஐப்பசி, கார்த்திகை - கோடை மாங்காய்.

ஆவணி - பூக்கும், புரட்டாசி - பிஞ்சு பிடிக்கும்.

சக்கை (பலாப்பழம்):

காலச்சக்கை:

தை - பொங்கல் களையாடும் (பிஞ்சு விடும்).

சித்திரை, வைகாசி - பலாப்பழக் காலம்.

கோடைச் சக்கை:

ஆவணி - ஔணக்களை ஆடும்.

ஐப்பசி, கார்த்திகை - சக்கப்பழக் காலம்.

கொல்லா: (முந்திரி மரம்)

புரட்டாசி - தளிர்க்கும்.

ஐப்பசி - பூக்கும்.

கார்த்திகை - கருங்காய் காய்க்கும் (காம்பு பச்சையாக இருக்கும்).

மார்கழி, தை, மாசி - கொல்லாம்பழக் காலம்.

வேம்பு:

மார்கழி - காற்றில் இலை உதிரும்.

தை - தளிர்க்கும்.

மாசி, பங்குனி - பூத்துக் காய்க்கும்.

வைகாசி, ஆனி, ஆடி - வேப்பம்பழக் காலம்.

பொதுவாக:

மரங்கள் - மார்கழியில் இலை உதிரும். தை, மாசி, பங்குனி தளிர்க்கும். சித்திரை, வைகாசி பூக்கும்.

புன்னை:

வருடத்துக்கு 3 தடவை பலன் தரும்.

3 மாதப் பயிர் - ஆடி, தை, சித்திரை பூக்கும்.

புரட்டாசி, பங்குனி, ஆனி - பழுக்கும்.

பலன்கள்:

நெல், புளி, பயிறு, புன்னைக்காய், பயினி - இவ்வளவும் தை மாதம் வீட்டுக்கு வரும். செழிப்பான காலம். வீடுகளில் பசி இருக்காது. பயினி, நுங்கு, பனம்பழம் நேரடி உணவு.

புளி:

வருடத்துக்கு ஒரு முறை பலன் தரும்.

தை - இலை உதிரும்.

பங்குனி, சித்திரை - தளிர்க்கும்.

வைகாசி, ஆனி - பூக்கும்.

கார்த்திகை, மார்கழி - பழம் விழும்.

பிஞ்சு, நொண்டங்காய், புளியங்காய், பழம்.

பயிறு:

சித்திரை 10ல் பயிறு விதைப்பார்கள்.

ஆனி, ஆடி - பயிறு பறிப்பு.

பயிறு கொடி வீசிப் படர்ந்து தட்டுத்தட்டாகக் காய்க்கும், பிஞ்சு, கொடுங்காய், காய், நெற்று நெத்து எடுப்பு ஒரு பருவத்தோடு நடக்கும். கொடுங்காய் உப்பு சேர்த்து அவித்துத் தின்ன ருசியாய் இருக்கும் - பிஞ்சு பச்சையாகத் தின்னலாம்.

காணம் (கொள்ளு):

புரட்டாசி மழையில் காணம் விதைப்பார்கள். கார்த்திகை, மார்கழியில் அறுவடையாகும். காணத்தைப் பிடுங்கி அடைந்து, புழுங்க வைத்து, பிறகு காய் நெத்து இவைகளைப் பிரிப்பார்கள். விளைந்த காய் அவித்துச் சாப்பிட ருசியாய் இருக்கும்.

தென்னை:

தேங்காய் இல்லாத பாளை குதம்பு. குதம்பின் உட்பகுதியான பூக்குலை. குலைக்காஞ்சி : சல்லடை போன்று மட்டையின் இருபக்கத்திலும் இருப்பது. சில்லாட்டை : இலக்கின் இரண்டு சிறகுகளின் நடுவில் இருப்பது ஈக்கு (ஈர்க்கு).

தேங்காய்:

வெளிப்புற நார்த்தோல் தொண்டி அல்லது கதம்பல் உள்ஓடு சிரட்டை பருப்பைத் துருவி எடுப்பது துருவு (திருவு).

தென்னையில் நெய்மரம் தனியாக இருக்கும். அதன் காயைத் துருவிப் பால் பிழிந்து காய்ச்சினால் தேங்காய் நெய் கிடைக்கும். வாசமாக இருக்கும். தலைக்குத் தடவ இதைப் பயன்படுத்துவார்கள்.

பனை:

பனங்கொட்டையை முளைக்க வைத்தால் கிழங்கு உருவாகும்.

கிழங்கிலிருந்து வெளியே வரும் முதல் ஓலைகுப் பீலி என்று பெயர்.

கிழங்கு முளைக்கத் தொடங்கியதும், பனங்கொட்டையின் உள்ளே இருக்கும் இறுகிய தேங்காய் போன்ற பொருள் குளுக்கோசாக மாறி மென்மையாகும். இதன் பெயர் அவுண் அல்லது தவண். இந்தப் பருவத்தில் பனங்கொட்டையை இரண்டாக வெட்டி அவுணைத் தோண்டிச் சாப்பிடலாம். மிகவும் ருசியாக இருக்கும். வளர்ந்த பனங்கன்றுக்கு வடலி என்று பெயர்.

இலக்கு:

ஓலையில் பல ஈர்க்குகள் இருக்கும். ஒவ்வொரு ஈர்க்கின் இருபக்கமும் இருக்கும் சிறகு போன்ற பகுதி இலக்கு ஆகும். இதில்தான் பழந்தமிழர்கள் எழுதினார்கள். இந்த இலக்கில் எழுதப் பட்டதுதான் இலக்கியம் ஆயிற்று.

ஓலை:

1. கா(ய்) ஓலை. காவோலை.
2. சார் ஓலை. பெட்டி, பாய் முடையலாம்.
3. முற்றிய பச்சை ஓலை. இது வார் ஓலை. பெட்டி முடைய உதவும்.
4. குருத்து ஓலை - இது எழுதவும் உதவும். நடுவில் இருக்கும் மஞ்சள் ஓலை குருத்தோலை. பனை ஓலையின் காம்பிற்கு மட்டை என்று பெயர்.

கருக்கு:

மட்டையின் இருபுறமும் வாள்போன்று முள்ளு முள்ளாகக் கூர்மையாகக் கருக்கு இருக்கும். கருக்கைச் செதுக்கி வலுவான நாராகக் கிழிக்கலாம். மட்டையின் மேல் பகுதியிலிருந்து உரித்து எடுக்கப்படும் நார் பனைநார். (மன்னன் நார்முடிச்சேரல் இந்த நாரில் பின்னிய கிரீடத்தைத் தான் அணிந்தான்) கட்டில் கட்டவும் திரவங்களை ஊற்றி வைக்கத் தக்க பாத்திரம் செய்யவும் (முக்கியமாக பயினிக் குடுவை) பயன்படும். இருபுறமும் கருக்கு அமைந்த கருக்கு மட்டையின் ஒரு முனையைக் கைப்பிடியாகச் சீவிக் கொண்டால் அது வாள்போன்ற பயங்கரமான ஆயுதம். கருக்குமட்டை என்பது அதன் பெயர். பனையோலைப் பட்டை

சாப்பிட சோத்துப் பட்டை, கஞ்சிக் குடிக்க கஞ்சிப்பட்டை கிணற்றிலிருந்து நீர் இறைக்க தோண்டிப்பட்டை பயன்படும்.

அலகுப்பனை:

இது ஆண்பனை. கம்பங்கதிர்க் கொத்துக்களைப்போல அதன் பாளை இருக்கும். பாளை பருவம் அடைந்ததும் வேப்பம் பூக்களைப் போல் சின்னச் சின்னப் பூக்கள் அவற்றில் மலரும். இந்தச் சிறிய பூக்களைத் தொடுத்துத்தான் சேர மன்னர்கள் பழங்காலத்தில் பனம்பூ அணிந்தார்கள்.

பருவப்பனை:

இதன் பாளைகள் நுங்காகப் பனங்காயாக வளரும்.

பக்குவப்படுத்துதல்:

சரியான பருவத்தில், நீண்ட மரக்கட்டைகளால் பாளைகளை நசுக்கி, உள்ளே ஓடும் சல்லடைக் குழாய்களை திறப்பார்கள். பாளைகளின் நுனியைச் சீவும்போது சல்லடைக் குழாய்கள் வழியே வரும் சத்துநீர் (பதனீர்) வடியத் தொடங்கும். சுண்ணாம்பு தடவிய கலசங்களில் அவற்றைச் சேகரித்தால் பதனீர். சுண்ணாம்பு தடவவில்லையென்றால் அது நொதித்து கள்ளாகிவிடும். பாளையை ஒரு நாளைக்கு இருமுறை சீவ வேண்டும். பதனீர் காலையில் மட்டும் எடுப்பார்கள். மாலைப் பதனீர் உடம்புக்கு மிகவும் நல்லது.

ஒரு பனைத்தொழிலாளி ஒரு பருவத்தில் நாற்பது பனையைப் பக்குவப்படுத்திப் பதனீர் எடுக்கமுடியும். அது ஓர் ஆள்பனை-40. இன்று பாளையைப் பக்குவப்படுத்தி விட்டால் அதில் குழாய்களைப் பொருத்தி ஒரு வாரம் வரை கீழிலிருந்தே பதனீரைச் சேமிக்கலாம்.

பனை தமிழகத்தின் தேசிய மரம். ஆயினும் அரசின் வைதீகச் சார்பின் காரணமாக பனை விவசாயம் மேம்படப் போதுமான ஆராய்ச்சிகள் இல்லை. பதனீரிலிருந்து பல்வேறுவிதமான நல்ல பானங்களும் உணவுப்பொருட்களும் தயாரிக்க முடியும்.

நுங்கு:

நுங்கு இயற்கையின் இனிய வரம். பருவப்பனைப் பாளை நுங்காகப் பருக்கிறது. ஒற்றைக்கண் நுங்கு, இரட்டைக்கண்

நுங்கு, மூன்றுகண் நுங்கு, நான்குகண் நுங்கு உண்டு. நுங்கில் முகப்புப் பகுதியைச் சீவி விரலால் குடைந்து சாப்பிடலாம். வெட்டிப் பிளந்து நுங்குச்சுளைகளை எடுத்தும் சாப்பிடலாம். நுங்குச்சுளைகள் தோண்டப்பட்ட மீதி பாகம் கூந்தல் எனப்படும். கூந்தலை நன்றாகக் காயவைத்து அக்காலப் பெண்கள் தலையலங்காரத்துக்குப் பயன்படுத்தினார்கள். பெண்களின் தலைமுடி கூந்தலானது இப்படித்தான்.

'நுங்கு தின்னவன் நுங்கு தின்னான்
கூந்தல் வழிச்சவன் பேரேற்றான்' என்பது பழமொழி.

குதிரைவால் கொண்டைபோல பூ பூக்கும் பனைகள் கூந்தல் பனைகள் என அழைக்கப்படுகின்றன.

பனம்பழம்:

'பனம்பழம் ஒரு சுவையான உணவு. நன்றாகப் பழுத்த பனம்பழத்தைத் தோல் உரித்து அப்படியே சப்பிச் சாப்பிடலாம். நெருப்பில் சுட்டுச் சாப்பிடலாம். கத்தியால் பழப்பகுதியைச் சீவி, பானையில் போட்டு சிறிது தண்ணீர் விட்டு, கருப்பட்டி, ஏலக்காய் போட்டு அவித்து சாப்பிடலாம். பனம்பழத்தைச் சாறு பிழிந்து தகுந்த சேர்மானங்களைச் சேர்த்து, பாட்டில்களிலோ ஈயத்தாளிலோ அடைத்து விற்பனைச் செய்யலாம்.

பனை ஒரு காட்டு விவசாயம். தண்ணீர் தேவையில்லை. பெரிய அளவுக்கு உரமும் தேவையில்லை. சத்து நிறைந்த உணவுகளைத் தரும் விவசாயம். தமிழ்நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு மிகவும் பொருத்தமான விவசாயம். அதை மேம்படுத்துவது பற்றி அரசும் அறிஞர்களும் சிந்திக்க வேண்டும்.

பதனீரிலிருந்து உணவு வகைகள்:

பதனீரை முறுகும் பருவத்துக்குக் காய்ச்சி இறக்கி, துடுப்பினால் துளாவி, சிரட்டைகளில் ஊற்றி ஆறவைத்தால் கருப்பட்டி அல்லது பனைவெல்லம் கிடைக்கும். இது சிரட்டைக் கருப்பட்டி. பானையில் ஊற்றினால் பானக்

கருப்பட்டி, கருப்பட்டியை பரணில் ஆறுமாதம் போட்டு வைத்திருந்தால், பரண் கருப்பட்டி. இது வெளியே கருப்பாகவும் உள்ளே சந்தன நிறமாகவும் மாறி, தின்ன ருசியாக இருக்கும். சுண்ணாம்புப்பருவங் குறைந்து சளிக்கும் பருவம் வருவதற்கு முன்னாலேயே, பயினியைச் சுத்தமான பாத்திரத்தில் தெளித்து, மண்டியை நீக்கிவிட்டுக் காய்ச்சி, கூழ்ப்பருவம் வந்ததும் துடுப்பினால் துளாவி, பானையில் விட்டு வைத்தால், அது வெண்ணெய் போன்ற வெள்ளைக் கருப்பட்டி.

காய்ச்சிய பயினியை ஒற்றைத் துளிப் பருவத்தில் எடுத்து ஆறவைத்து, புது மண்பானையில் விட்டு, கொறண்டு என்கிற காட்டுச் செடியைக் காயவைத்து இலையை உதிர்த்துவிட்டு அந்தச் செடியை அந்தக் கூப்பனிப் பானைக்குள்ளே போட்டு வைத்தால், போட்டிருக்கும் கொறண்டிச் செடியோடு பானையின் அடிப்பாகத்தில் கல்லக்காரம் என்று சொல்லப் பட்ட பனங்கற்கண்டு பரல் பரலாக வளர்ந்து இருக்கும்.

ஒற்றைத் துளிப்பருவத்தில் காய்ச்சிய கூப்பனியை மண்பானையில் விட்டு வைத்து, தோடு உடைத்த புளியைக் கொட்டையோடு சேர்த்து நன்றாய்க் காயவைத்து, அந்த கூப்பனிக்குள்ளே போட்டு, மூன்று மாதங்கழிந்து எடுத்தால் அதைப் புளிக்கூப்பனி என்று குடிக்கலாம்.

காணப் பயிறை வறுத்து உடைத்துப் ப்ருப்பாக்கி வைத்துக்கொண்டு, ஒரு தேங்காயைத் துருவி வெயிலில் காயவைத்து, கொஞ்சம் முந்திரிக் கொட்டைப் பருப்பும் அதோடு சேர்த்து, காணப் பருப்பையும் சேர்த்து ஒற்றைத் துள்ளிப் பருவத்தில் காய்ச்சின கூப்பனியில் போட்டுக் கலக்கி வைத்து, நாற்பது நாள் கழித்து எடுத்துத் தின்றால் தின்பதற்கு ருசியாகவும், உடம்புக்கு நன்மையாகவும் இருக்கும்.

பச்சரிசி மாவை இடித்து, அதில் தேங்காயும் வெள்ளைக் கருப்பட்டியும் சேர்த்துப் பிசைந்து உருட்டி, பனங்குருத் தோலையில் ஒவ்வொரு இலக்கின் உள்பாகத்திலும் கொஞ்சம் மாவை தகடுபோல் நீளமாக வைத்து, கொஞ்சம் இடம் விட்டு மேலும் மாவு வைத்து, அதைக் குறுக்காக மடக்கி

ஓலைக் கொளுக்கட்டை என்று அவிக்கலாம். பூவரசு இலையிலும் தெரளி இலையிலும் அந்த மாவை வைத்தும் அவிக்கலாம். அதை இலைப் பணியாரம் என்று சொல்லு வார்கள். இந்த கொளுக்கட்டைகளை கூப்பனியில் போட்டு வைத்துத் தின்னலாம்.

கூப்பனியை நன்றாய் வேகவைத்துப் பக்குவத்தில் எடுத்து, புட்டுக் கருப்பட்டி, மாக்கருப்பட்டி, மணல் கருப்பட்டி என்றும் பல வகையாகச் செய்யலாம்.

பனங்கருப்பட்டியை நாம் எவ்வளவு தின்றாலும் அது நம் உடம்புக்கு நன்மையாகவே இருக்கும். குழந்தைகள் பிறந்த வுடனே கருப்புக் கட்டியைத் தண்ணீரில் கரைத்து குழந்தைக்கு ஊட்டுவார்கள். இதை குழந்தைக்குச் சேனை ஊட்டுவது என்று சொல்லுவார்கள். பனையின் ஒவ்வொரு பாகமும் மனிதருக்கு அவசியமான பொருள்.

கழிக்கஞ்சி: பயினி முதல் கொதி கொதித்ததும், அதில் அரிசி மாவைத் தூவிக் கிண்டி இறக்கி ஆறவைத்தால் கழிக்கஞ்சி கிடைக்கும். இலக்குத் துண்டினால் எடுத்துச் சாப்பிடலாம். ருசியாக இருக்கும். இந்தக் கழிக்கஞ்சியில் அவித்த பெரும்பயிறும் சேர்த்துக் கிண்டிச் சாப்பிடுவார்கள். முக்கியமாகக் கழிக்கஞ்சியை நிரம்பினவீட்டில் விருந்தினருக்கு வழங்குவார்கள்.

(அ. அழகிய நாயகி அம்மாள்)

நெல்:

புஞ்சைப் பயிராகப் புழுதி உருட்டி நெல் பயிரிடலாம். கால மழையில் விதைத்துவிட்டால், மழையிலும் பனியிலுமாக விளைந்துவிடும். நல்ல மகசூல் தரும். இந்த நெல் தமிழ் நாட்டுக்கு மிகவும் ஏற்றது. தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை. ஆனால் இது இன்று கிட்டத்தட்ட அழிந்து போய்விட்டது. ஊற்றுக் கிடக்கும் இடத்தில் வட்டி போட்டு இறைத்து, அறுவன் குருவை, சம்பா போன்ற ரகங்களைப் பயிரிடுவார்கள்.

நாத்து முற்றினால் கருநாத்து. நட்டு வேர் பிடித்ததும் கருநடவு. பின் பொதிப் பருவம். பொதி தள்ளிய பருவம்.

கதிர்ப் பருவத்தில் நெல்பால் எடுத்துத் திரளும். சுவைக்க ருசியாயிருக்கும். கதிர் முற்றித் தலை சாய்ந்த பருவம். அடிப்பாகம் தாள், மேலே கதிர் தாள். கால்நடை உணவு. கதிர் அடித்து நெல்லாக்கினால் மனிதருக்கு உணவு.

தேங்காய்:

நல்ல மரம் முடி முப்பது காய்க்கும். வெட்டுக்குக் குறைந்தது அறுபது தேங்காய் கிடைக்கும். இளந்தென்னையின் பெயர் தென்னம்பிள்ளை. இலை பட்டைபோல் ஒரே பரப்புடையதாக இலக்குகள் ஒட்டியிருக்கும்.

தூர் திரண்ட நிலைக்குக் குத்திவச்ச பருவம் என்பது பெயர். அப்போது, இலக்குகள் பிரிந்து ஓலைவரும். அது கணக்கோலை.

இளமரத்தில் பாளை வரும். வெடித்துப் பூவிரியும். (தென்னையில் ஆண்தென்னை அபூர்வமாகக் காணப்படும்).

சிறிய காய் குரும்பல், குரும்பை சற்றுப் பருத்து உள்ளே நீர் பெருகத் தொடங்கியதும் கருக்கு.

அடுத்து விடலை - இளநீர்.
தேங்காய் காய்ந்தால் நெத்து (நெற்று).
தென்னை ஓலை மொத்தமாக மடல்.
காம்பு மட்டை, தோகை - ஓலை.
ஓலையைக் கீறினால் கீத்து (கீற்று).

மரத்தின் பாகங்கள்

வேர்:

ஆணிவேர், பக்கவேர், சல்லிவேர். சல்லிவேரைப் பீவேர் என்றும் சொல்லுவார்கள். பனைவேர் தண்ணீர் இருக்கும் இடம் தேடி ஆழம் வரை போகும்.

தண்டு:

எந்த மரமானாலும் சரி இந்தப் பகுதியில் 6 அடி உயரத்துக்கு மேல்தான் கொண்டை கட்ட அனுமதிப்பார்கள். கொண்டைக்கும் வேருக்கும் இடைப்பட்ட தண்டுப்பகுதி பருக்கும்போது பயனுள்ள மரமாகும். வேரோடு ஒட்டிக் கொண்டிருக்கும் அடிமரத்தைத் தூர் என்றோ, மூடு என்றோ சொல்லுவார்கள். தரைக்கு மேல் கொண்டைக்குக் கீழே உள்ள பகுதி தடி எனப்படும். கொண்டை கொப்புகளாகப் பிரியும். கொப்பு மாறுகளாகப் பிரியும். மாறுகளின் நுனியில் இலைக்கொத்துகள் இருக்கும். இவற்றைக் குளை என்பார்கள்.

பலா:

பலா மரத்தின் காய் சக்கை எனப்படும். பலா மரத்தில் பூ வருவதை களையாடுதல் என்பார்கள். பலாக்காய்ப் பிஞ்சுக்குக் களை என்று பெயர். இளங்களையைத் தோல் சீவி இடித்து அருமையாகப் பொரியல் செய்வார்கள். முற்றிய களையைத் தோல் சீவி நறுக்கி இறைச்சி மிளகுகள் சேர்த்து வறுக்கலாம், குழம்பும் வைக்கலாம். அசல் இறைச்சிதான்.

பலாவில் பலவகை உண்டு. வருக்கைப் பலா, கூழைப் பலா, ஆயினிப் பலா, ஈரப்பலா என்பவை முக்கியமானவை. வருக்கைப் பலா ருசியாக இருக்கும். பலாப்பழத்தின் நடுப் பகுதியில் ஒரு நடுத்தண்டு இருக்கும். அதைச் சுற்றி தோல் வரை பூஞ்சியிருக்கும். பூஞ்சியின் இடையில் நெருக்கமாகச் சுளைகள் இருக்கும். சுளையைக் கிழித்தால் இனிப்பான ஒருவகைத் திரவம் வடியும். அதற்குக் கனி என்று பெயர். கனி சுரந்து இருக்கும் சுளை ருசியாக இருக்கும். செம்பருத்தி வகைப் பலாச்சுளை சிவப்பாக இருக்கும். மணிக்கட்டிப் பொட்டல் பலாப்பழத்துக்குப் பெயர்பெற்ற ஊர்.

பலாக்கொட்டையைக் குழம்பு வைத்துக் சாப்பிடலாம். அவித்து உரித்துச் சாப்பிலாம். அவித்து உரித்துக் கருப்பட்டியும் தேங்காயும் சேர்த்து இடித்து, உருண்டை பிடித்தும் சாப்பிடலாம். நறுக்கிக் காயவைத்துக் கொண்டால் பலாக் கொட்டையைப் பல மாதங்கள் பயன்படுத்த முடியும். பூஞ்சியைப் பிரித்து, உப்பு மிளகுத்தூள் தடவி எண்ணெயில் வறுத்துச் சாப்பிடலாம். பலாச்சுளைப் பாயாசம் ருசியானது. பலாப்பழ அல்வாவும் அருமையானது. விளைந்த, ஆனால் பழுக்காத பலாச்சுளைகளைக் கிழித்து உப்பு மிளகு தடவி எண்ணெயில் பொரித்துச் சாப்பிடலாம்.

கூழைப்பலா: (கூழஞ்சக்கை)

பழுத்ததும் குழைந்துவிடும் வகை இது. பழத்தின் உள் தண்டு மரத்தில் இருக்க, பழம் கழன்று தரையில் விழுந்து விடும். நல்ல இனிப்போடு சுளை அல்வா மாதிரி இருக்கும். நன்றாகப் பழுக்குமுன் அறுத்தால் சுளை இறுக்கமாய் இருக்கும். மலைப் பலாப்பழம் ருசி குறைவாக இருக்கும்.

ஆயினிப் பலா:

இந்தப் பலா காட்டுமரம்போல நெடுநெடுவென 200 அடிகூட ஒற்றைத் தடியாக வளையாமல் வளரும். தடியின் உட்பகுதி மஞ்சள் நிறத்தில் வைரம் பாய்ந்து இருக்கும். சிறிய பழம், சிறிய முட்கள், சிறிய சுளைகள். லேசாகப் புளிக்கும். சிறுவர்கள் விரும்பிச் சாப்பிடுவார்கள். பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் குரங்குகளுக்கும் உணவாக அமையும்.

ஈரப்பலா:

ஆமணக்கு இலை போன்ற பெரிய இலைகள். பலமற்ற தடி. பெரிய மாங்காய் அளவில் பச்சைக் காய்கள் காய்க்கும். காய் சமையலுக்குப் பயன்படும்.

அண்டி:

வடுப்பருவத்தில் இருக்கும் மாங்காய், முந்திரிக்காய் இவற்றை அறுத்துப் பார்த்தால் முதிராத பருப்புப் பகுதி வெள்ளை வெளேரென இருக்கும். இது அண்டி எனப்படும்.

முட்டைக்குள்ளே முக்கால் வளர்ச்சியடைந்த குஞ்சின் பின்பாகத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் மஞ்சள் கருவையும் அண்டி என்பார்கள். அம்மாதிரிப் பருவத்தில் உள்ள குஞ்சை அண்டி கரையாத குஞ்சு என்பார்கள். பருவத்திற்கு மீறிய சில்மிசங்களைச் செய்யவும் சிறுவர்களையும் விடலைப் பயல்களையும் குத்திக்காட்டுவதற்கு "அண்டிகரையாத பய, இப்போவே இந்த வரத்து வாறானே" என்பார்கள்.

முந்திரியின் பசுமை மாறாத கொட்டையை இரண்டாக அறுத்து, உள்ளே இருக்கும் இளம்பருப்பாகிய அண்டியை எடுத்துத் துணியால் துடைத்து, அப்படியே சாப்பிடலாம். தென்னங்குருத்துப்போல சுவையாயிருக்கும்.

அண்டிக் குழம்பும், அண்டி அவியலும் அபூர்வமான ருசியுடையவை. தின்னத் தின்ன ஆசை தீராது.

உணவு:

காலையும் மதியமும் பனை ஆகாரம். இரவு மட்டும் அரிசி உணவு. மத்தியானம் வடிகஞ்சி குடிப்பார்கள்.

சமஞ்ச வீடு:

சமஞ்ச வீட்டில் மாவு இடிக்கணும். அந்தக் காலத்தில் அரிப்பு அபூர்வம். மாவைச் சுளகில் போட்டுத் தெள்ள வேண்டும். தெள்ளிய மாவில் களிக்கஞ்சி காய்ச்சி ஊருக்கு வழங்க வேண்டும்.

பண்டம்:

1. குழாய்ப்புட்டு : மூங்கில் குழாயில் அரிசி மாவை நிரப்பி இடையிடையே தேங்காய்ப்பூ தூவி அவிப்பது.

உதிர்ப்புட்டு : வாய்விரிந்த கலயத்தில் வண்டு கட்டி அவிப்பது.

2. கொழுக்கட்டை : (திருக்கார்த்திகைக்குக் கட்டாயம்).

3. தோசை : (மாதப் பிறப்புக்குக் கட்டாயம்).

அரையங்குலம் கனத்தில் அகலமாக மென்மையாக, ருசியாக இருக்கும். சட்டினியைக் கிச்சடி என்பார்கள்.

பணியாரம்:

1. மஞ்சப் பணியாரம், 2. வெள்ளைப் பணியாரம், 3. முறுக்கு, 4. முந்திரிக் கொத்து, 5. உன்னியப்பம்.

தின்னக்கூடிய காட்டுப்பயிர்கள்:

காட்டவரை - அவரைபோல் பெரிதாக இருக்கும். இளம்பிஞ்சுக் காய்கள் பொரியலுக்குப் பயன்படும். முற்றிய விதையை மாணவர்கள் ஒருவருக்கொருவர் சூடுபோட்டு விளையாடப் பயன்படுத்துவார்கள்.

வத்தக்கு - வெள்ளரிச் செடிபோல் தரையில் படரும். மாங்காய் அளவுக்குப் பந்துபோல் காய்க்கும். வறுமைக் காலங்களில் அதைத் துருவி அரிசியோடு கலந்து, கஞ்சி காய்ச்சிக் குடிப்பார்கள்.

கோவை - உடை, கள்ளி இவைகளில் கொடி வீசிப் படர்ந்து மரத்தையே மறைத்துக் கிடக்கும். மனம்போல பூத்துக் காய்க்கும். பழங்களைப் பறித்துத் தின்னுவது சிறுவர்களின் பழக்கம். பருத்த குருத்துத் தண்டையும் அவர்கள் விரும்பித் தின்பார்கள். காய் வற்றல் போட, சாம்பார், பொரியல் செய்யப் பயன்படும்.

நரிப்பயிறு - கொள்ளுச் செடிபோல, ஆனால் சற்று சாம்பல் நிறத்தில் இருக்கும். காய் அவித்துத் தின்ன ருசியாக இருக்கும்.

முட்டைக் காளான் - கிராமப்புறத்தில் உணவாகப் பயன்படும் ஒரே வகைக் காளான் இதுவே. இடிமழைக் காலத்தில் நிறைய வளரும். ஒருபோதும் குடையாக விரியாது. தவில் அடிக்கும் கம்புபோல வெள்ளையாக இருக்கும். முற்றாத காளான்களைச் சேகரித்துக் கழுவி நறுக்கி, அதனோடு சின்ன வெங்காயம், பச்சை மிளகாய், நுணுக்கிய சீரகம், தேவைக்கு உப்பு இவற்றைக் கலந்து பூவரசு இலைத் தொன்னையில் மடக்கித் தீயிலே சுடுவார்கள் இளைஞர்கள். அபூர்வமான ருசி. வீட்டில் காளானை நறுக்கி இறைச்சி மிளகுகள் சேர்த்துப் பொரியல் வைப்பார்கள். இறைச்சிப் பொரியல் போல் இருக்கும்.

கள்ளி

திருக்குக் கள்ளி, மட்டைக் கள்ளி, கொடிக் கள்ளி (பென்சில் கள்ளி), சப்பாத்திக் கள்ளி (பாம்புக் கள்ளி), சீமைக் கள்ளி (இது நான்கு அல்லது ஐந்து முகங்களில் வரிசை வரிசையான முட்களைக் கொண்டதாகக் கிட்டத்தட்ட சிலிண்டர் வடிவத்தில் மேல்நோக்கிக் கிளைகள் விட்டு வளரும். ஒலிபெருக்கிக் குழாய்கள்போல வெள்ளைப் பூக்கள் பூக்கும்). இவை முக்கிய கள்ளிவகைகள்.

சீமைக் கள்ளி அல்லது பாம்புக் கள்ளிப் பூக்களில் நிறைய தேன் இருக்கும். அதிகாலையில் சிறுவர்கள் கும்பாக்களை (அரைக்கோள வடிவக் கிண்ணங்கள்) தூக்கிக் கொண்டு தேன் சேகரிக்கப் போவார்கள். கள்ளிப் பூக்களைப் பறித்து இரண்டாக ஒடித்துத் தேனைக் கும்பாக்களில் கொட்டு வார்கள். அரைமணி நேரத்தில் நூறு மில்லி தேன் எளிதாகச் சேர்ந்துவிடும். அதைப் பங்கிட்டுக் குடிப்பது தனிச் சுவை.

சப்பாத்திக் கள்ளி, சீமைக் கள்ளி வகைகள் பசிய காய்கள் காய்த்துச் சிவப்பாகப் பழுக்கும். பழங்கள் கொட்டைப்பாக்கு அளவில் இருக்கும். இரண்டாகப் பிய்த்தால், உள்ளே பஞ்சுமிட்டாய் போல் வெள்ளை வெளேரென இருக்கும். எள்ளைப்போலக் கருப்பு விதைகளும் இருக்கும். சதையைப் பெருவிரலால் தோண்டித் தின்றால் ஒரு தனி ருசிதான்.

சீமைக் கள்ளி வெள்ளாட்டுக்கு உணவாக அமையும். முள்ளைச் சீவினால், ஆடு விரும்பித் தின்னும். திருகு கள்ளிக் குருத்துப் பகுதியை வெட்டி, அரைமணி நேரம் நீரில் ஊறவைத்துப் பால் மாறியபின் அவித்துப் பொரியல் வைக்கலாம். ருசியாயிருக்கும்.

தொழில்

பெண்கள்:

பயினி காய்ச்சுதல், ஓலை கீறி கீத்து முடைதல், கிடுகு பின்னுதல், வல்லுவம் (பலாக்காய்க்கும், வாழைத் தாருக்கும் கூடை) பின்னுதல்.

பனை ஓலையையும், பனை நாரையும் சாயங்களில் முக்கி அவித்தெடுத்துப் பின்னல்பெட்டி, மூடிப்பெட்டி, பஞ்சுப் பெட்டி, கடவப்பெட்டி, கொட்டைப்பெட்டி, பிளாப்பெட்டி, மடக்குப்பெட்டி, சோத்துப்பெட்டி போன்ற பெட்டிகள் பின்னுதல். குடுவை, சுளகு முதலியவை பின்னுதல். தடுக்குகள், பாய்கள் பின்னுதல்.

பனை நாரை வார்ந்து கட்டில் பின்னுதல், தேங்காய்க் கதம்பையை (மட்டையை) அழுகவைத்து, அதைத் தல்லித் தும்பு தயாரித்தல், கயிறு முறுக்குதல்.

ஆண்கள்:

பனை மரத்தில் ஏறிப் பதனீர் எடுத்தல், ஓலை வெட்டுதல், நுங்கு, பனங்காய் வெட்டுதல், மட்டையில் நார் உரித்தல்.

தென்னை, மா, பலா, கொல்லா (முந்திரி), நெல், வாழை பயிரிட்டுப் பலன் பெறுதல். பருவகாலங்களில் விளைகளில் பயிறு வகைகள் பயிரிட்டுப் பலன் பெறுவார்கள்.

மண் வெட்டுதல், மண் சுமத்தல், விறகு வெட்டுதல், தோட்ட மண்ணைக் கிளைத்துக் கொடுத்தல் (வெட்டிப் பறிப்பு).

தென்னைத் தொழில்

தென்னை மரத்தில் ஏறித் தேங்காய் வெட்டுதல், தேங்காய் உரித்தல், தேங்காய் நார் அழுக வைத்தல், தேங்காய் நார் அடித்தல், கயிறு திரித்தல், கடை வியாபாரம், சந்தை வியாபாரம், தலைச்சுமை வியாபாரம்....

செங்கல் சூளை, ஓட்டுச் சூளை முதலியவற்றில் பணி, 20ஆம் நூற்றாண்டு தொடக்கத்திலிருந்து கொத்து வேலை, கல்தொழில், தச்சு வேலை.

கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாக எல்லாவிதமான அரசாங்க வேலைகளிலும், வெள்ளைக் காலர் தனியார் வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். நெசவு வேலை களிலும் ஏராளமானோர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வட்டாரத்தில் நிலமும் உழைப்பும் மலிவாகக் கிடைப்பதாலும் தண்ணீர் வசதி இருப்பதாலும் புதிய புதிய தொழிற்பேட்டைகள் உருவாகி வருகின்றன. தேங்காய் மட்டை (கதம்பல்) நாரைக் கொண்டு கயிறு, பாய், விரிப்புகள் மற்றும் பொருட்கள் செய்யும் தொழிற்சாலைகள், மீன்வலை பின்னும் தொழிற்சாலைகள், முந்திரித் தொழிற் சாலைகள், தேங்காய் எண்ணெய் ஆலைகள் முதலியன வேகமாக வளர்ந்து வருகின்றன. ஏராளமான இளம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. இந்த தொழிற்சாலைகள் சமூகத்தில் பெரிய மாறுதல்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன.

வெள்ளையர் துணி இறக்குமதியாகும் வரை அதாவது 19ம் நூற்றாண்டு வரை இம்மக்களும் தங்கள் தேவைக்குத் தாங்களே ஒவ்வொரு வீட்டிலும் துணி தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார்கள். தங்கள் விளைகளில் விளைந்த பருத்தியைச் சேகரித்துக் காய வைப்பார்கள். அரவைமணை என்ற கருவியில் இந்தப் பருத்தியைக் கொடுத்து அரைத்துப் பஞ்சு வேறு, கொட்டை வேறு ஆக்குவார்கள். அந்தப் பஞ்சை அதற்குரிய அறைகளில் (பஞ்சு வெட்டும் புரை) குவித்து அதற்குரிய நாண் ஏற்றிய வில்லால் தெறித்து மென்மை யாக்குவார்கள். இதற்குப் பஞ்சு வெட்டுதல் என்று பெயர். பஞ்சு வெட்டும்போது பஞ்சுத் தூசு மூக்கினுள் போகாமல் இருக்க மூக்கின் மேல் துணியைக் கட்டிக் கொள்வார்கள்.

வெட்டப்பட்ட பஞ்சைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து, நாணல் குச்சுகளில் சுற்றித் திரிகள் ஆக்குவார்கள்.

இதற்குக் கொட்டை என்று பெயர் (இதை அடிப்படையாக வைத்துத்தான் நூல் நூற்றலைக் கொட்டை நூற்றல்

என்பார்கள்). இந்தக் கொட்டைகளை அடுக்கி வைக்கும் சிறிய வண்ணப்பெட்டிகளுக்குக் கொட்டைப்பெட்டி என்று பெயர். இந்தக் கொட்டைகளை ராட்டில் நூற்று, சிட்டம் போடுவார்கள். இந்த நூல் சிட்டங்களை வாங்கிக் கொண்டுப் போய் நெசவாளிகள் நெய்து கொடுத்துக் கூலி பெறுவார்கள். வசதியான வீடுகளில் அவரவர்களுக்கு என்றும் தறியிருக்கும்.

நாட்டுப்புற விளையாட்டுகள்

பெண்கள்:

1. பாண்டியாடுதல், 2. சுட்டி பிடித்தல், 3. ஊஞ்சல் ஆடுதல், 4. பூ போட்டுப் பிடித்தல், 5. கட்டை புதைத்தல், 6. அட்டளங்கா புட்டளங்கா, 7. தட்டுக் கீறி விளையாட்டு, 8. குப்பை தோண்டி.

ஆண்கள்:

1. கிளித்தட்டு, 2. சடுகுடு, 3. பம்பரம், 4. கோலிக் குண்டு, 5. பேய்ப்பந்து, 6. குரங்கு விளையாட்டு, 7. பண்ணிச்சாட்டம்.

பொது விளையாட்டு:

1. தாயம், 2. திரி திரி பம்பக்க, 3. தொட்டு விளையாட்டு, 4. ஒளிந்து விளையாட்டு, 5. நொண்டியடிப்பு, 6. பறவை விளையாட்டு.

அளவைகள்

ரூபா, அணா, காசு

காசுக்குத் தம்பிடி, சல்லி என்பார்கள். காசு எனவும் பெயருண்டு.

நாலுகாசு - (பைசா) ஒரு துட்டு

நாலு துட்டு - ஒரு அணா

பதினாறணா - 1 ரூபா

கால் துட்டு, அரைத் துட்டு, காலணா, அரையணா நாணயங்கள் அன்று புழக்கத்தில் இருந்தன.

ஒரு துட்டு கொடுத்து அன்று நாலு சாமான், ஆறு சாமான் வாங்கினார்கள்.

நாணயம்:

16 காசு 1 சக்கரம்

4 சக்கரம் 1 பணம்

7 பணம் 1 ரூபா

1 ரூபா (28 சக்கரம்)

அனந்தராயன் பணம்:

இது சுத்தத் தங்க நாணயம். நகை செய்யப் பயன் படுத்துவார்கள்.

வெள்ளைக்காரன் பணம்:

16 காசு 1 அணா

16 அணா 1 ரூபா.

ஆங்கில அரசு திருவாங்கூர் அரசுக்கு மேலானது என்று காட்ட, ஒரு பிரிட்டிஷ் ரூபாய்க்கு 28½ சக்கரம் கொடுக்க வேண்டும். திருவாங்கூர் ரூபாய்க்கு 28 சக்கரம் மட்டும் கொடுக்க வேண்டும்.

பணப்பலகை:

அக்காலத்தில் பணம் எண்ணுவது சிரமமான வேலை. வசதி உள்ள வீடுகளில் பணம் எண்ணப் பணப்பலகை பயன் பட்டது. நீள்சதுரக் கட்டைகளில் காசு, சக்கரம், பணம் இவற்றுக்கான குழிகள் அமைந்த கட்டைகள் இருக்கும். 1 பணப்பலகையில் 64 காசுக் குழிகள் அமைந்திருந்து 64 குழி களிலும் காசு நிரம்பினால் 1 பணம்.

ஒரு அணா பலகையில் 16 காசுக் குழிகள் இருக்கும். இதைப்போல 1 ரூபாய் பலகையில் 28 சக்கரக்குழிகள் இருக்கும். 100 பணம் பலகை 1000 பணம் பலகை இவைகளும் உண்டு.

கல்வி

அக்காலக் கல்வி திறனடைவு அடிப்படையில் சரியாக வரையறை செய்யப்படவில்லை. அது நெகிழ்ந்தது. வட்டாரத்தின் தேவைகள், ஆசிரியரின் திறமைகள் இவற்றின் இணைப்பில் உருவாவது. எண்ணும் எழுத்தும் அடிப்படையானது. பழங்கால அளவு முறைகள், அதற்கான வாய்ப்பாடுகள் கற்பிக்கப்பட்டன. மனனமே முக்கியம்.

பாடத் திட்டம்:

அரிச்சூடி - எழுத்து

பேர்ச்சூடி - சரித்திரம்

எண்சூடி - கணக்கு

ஆத்திச்சூடி - ஒழுக்கம்.

இவை முடிந்தபின் மனக்கணக்கு, அதையடுத்துக் கதைகள் இலக்கில் எழுதிக் கொடுப்பார்கள். தேவாரம், திருப்புகழ், அதன்பின் காப்பியக் கதைகள் கற்றுக் கொடுப்பார்கள் அண்ணாவிகள்.

உயர்கல்வி:

ஏட்டோலை தயாரித்தல், எழுத்தாணியில் எழுதப் படித்தல், கூட்டு எழுத்து வாசிக்கக் கற்றுக் கொடுத்தல், அரசு ஆதாரங்கள் ஆவணங்கள் இவை எழுத - படிக்க பயிற்சியளித்தல் இவை அக்காலப் படிப்பின் முக்கிய நோக்கங்கள்.

உடற்கல்வி:

மாப்பிள்ளைக் கல் தூக்கிப் போடுதல், சிலம்பம், சீனா அடி, வர்மாணியம் இவற்றை ஆசான்மார் சொல்லிக் கொடுப்பார்கள். நிலாக்காலங்களில் இளைஞர்கள் மணல் வெளிகளில் இவற்றை ஆசான்களிடம் பயிலுவார்கள்.

இடைக்காலத்தில் தெக்கன்களரியில் வாள், வில் பயிற்சி அளிக்கப்படுவதில்லை. தமிழர்கள் தாழ்ந்த சாதியாக

அறிவிக்கப்பட்டதன் விளைவு இது என்பார்கள் பெரியவர்கள். ஆயுதக்கலைகள் அன்று ஒடுக்கப்பட்டவர்களுக்கு மறுக்கப் பட்டிருந்தது. இவர்கள் மல்யுத்தம், சிலம்பு வீச்சு, சீனா அடி, தொடுவர்மம், படுவர்மம் போன்ற உடல்சார்ந்த வர்மக் கலைகளில் அதிக கவனம் செலுத்தினார்கள். இந்தக் கலை களில் ஆண்களும் பெண்களும் பயிற்சியளிக்கப்பட்டார்கள்.

தொழிற்கல்வி:

தொழிற்கல்வி பெற்றோர் உறவினரின் மேற்பார்வையில் தரப்படுவது. குலத்தொழிலைக் கற்றுக் கொள்வதே நோக்கம். தொழிற்கருவிகளைக் கையாளும் முறைகள், பராமரிக்கும் முறைகள் இவை முக்கியம்.

அக்காலத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் வேலைப் பிரிவினை இருந்தது. கடினமான உடலுழைப்பு தேவைப்படும் வேலைகளை ஆண்களும், இதர வேலைகளைப் பெண்களும் செய்தார்கள். இன்னொரு வகையில் சொன்னால், பொருள் தேடும் வேலை ஆண்களுக்கும், அந்தப் பொருட்களைக் கொண்டு குடும்பம் நடத்தும் வேலை பெண்களுக்குமா யிருந்தது.

புலவர்கள்:

வீட்டிற்கு வீடு, தெருவுக்குத் தெரு, ஊருக்கு ஊர் புலவர்கள் இருந்தார்கள். இவர்களில் பலர் கிராமியக்கலை மேதைகளாக இருந்தார்கள். கிராமப்புற இசைகள், வில்லுப் பாட்டு, களியல் பாட்டு போன்றவற்றில் இளைஞர்களுக்குப் பயிற்சியளித்தார்கள்.

பெண்கள் கல்வி:

சிலம்பக்கலையும், வர்மக்கலையும், சித்த மருத்துவக் கலையும் அக்காலத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானவை. இவற்றில் பெரும் தேர்ச்சி பெற்ற ஆசான் மார்களைப் போலவே ஆசாத்திமார்களும் இருந்தார்கள். இவர்கள் கம்பு வீச்சிலும், சித்த மருத்துவத்திலும், வர்மாணி யத்திலும், தொடுவர்மம், படுவர்மம் ஆகியவற்றிலும் பெரும்

நிபுணர்களாக இருந்தார்கள். ஆத்தூர் செல்லம்மை இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரி மாவட்டத்துப் புகழ்பெற்ற ஆசாத்தி. அவருடைய இல்லம் அக்காலத்தில் புகழ்பெற்ற மருத்துவ இல்லமாக இருந்தது. தாங்களே மருந்து தயாரித்து, நோயாளிகளுக்குக் கொடுப்பது அவர்கள் வழக்கம். மருத்துவம் வியாபாரமாகாத காலம் அது.

எனக்குப் பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயது இருக்கும்போது, ஏதோ ஒரு கணக்கைத் தப்பாகச் செய்து விட்டேன் என்று எங்கள் கணக்கு ஆசிரியர் என்னைப் பிடரியில் அறைந்துவிட்டார். நான் நினைவிழந்து அங்கேயே விழுந்துவிட்டேன். எங்கள் வில்வண்டியில் என்னைத் தூக்கிப்போட்டு, நேரே ஆத்தூருக்குக் கொண்டு போனார்கள் என் அப்பா. செல்லம்மா ஆசாத்திக்கு அப்போது வயது அறுபதுக்கு மேல் இருக்கலாம். இறுக்கம் தளர்ந்த பெரிய உடம்பு. சட்டை அணியாமல் வெள்ளைச் சேலைகட்டி உடம்பை போர்த்தியிருந்தார். கைகளைத் தூக்கி எட்டத்தைப் பிடித்தபடி, வாசலில் நிறைந்துநின்று, அவர் முன்னே தரையில் கிடத்தப்பட்டிருந்த என்னை உற்றுப் பார்த்தாராம். கீழே இறங்கி வந்து தன் கால் பெருவிரலால் என் கழுத்துப் பக்கத்தில் மிதித்தாராம். அவ்வளவில் நான் எழுந்து உட்கார்ந்துவிட்டேனாம். அப்புறம் பத்துநாள் அவர்களின் வைத்தியசாலையில் தங்கிச் சரியாகிவிட்டேன்.

ஆத்தூர் செல்லம்மைக்கு நிகரான எனக்குத் தெரிந்த இன்னொரு ஆசாத்தி முகிலன்விளை பெத்தம்மாத்தங்கம் ஆசாத்தி.

என் மூத்த மருமகன் ஜெயராம் ஒரு வர்மக்கலை நிபுணர். புகழ்பெற்ற மேக்கோட்டு ஆசான் குடும்பத்து வாரிசு. ஒருநாள் இரவு இரண்டு மணி இருக்கும். அவர் வீட்டில் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தேன். அவர்கள் மருத்துவ மனையில் கார்கள் வருவதும், கதவுகள் திறப்பதும் மூடுவதும், ஆட்கள் கத்திப் பேசுவதுமாக ஒரே சந்தடி. மருமகன் எழுந்து மருத்துவமனைக்குப் போனார். சத்தங்கள் அடங்கிவிட்டன. இரண்டு நிமிடம் கழிந்திருக்கும். ஒரே ஒருவருடைய கூச்சல்

கேட்டது. கெண்ட மண்ட என்று மானதானமில்லாமல் திட்டும் ஒலி அது. தொடர்ந்து கார்கள் வெளியேறும் ஓசை. திரும்பி வந்த மருமகனிடம் சங்கதி என்ன என்றேன். "ஏதோ திருவிழாவில் குழு மோதல் வந்திருக்கும்போல, அடிப்பட்டு மயக்கமா விழுந்திட்டான் ஒருத்தன். இங்கிலீஷ் டாக்டர்களால் அவனை ஓர்மைப்படுத்த முடியல்லியாம். பொசத்துக்கு (புயம்) கீழே பெருவிரல்களால ஒரு அமுக்கு அமுக்கினேன், எழுந்திரிச்சிட்டான். நல்ல குடிவெறி, இன்னும் சண்டைக் களத்தில் நிக்கிறதா நினைச்சு ஏசுறான். உடனே வெளியே போகச் சொல்லிவிட்டேன்" என்றார்.

ஆசான்கள்:

இம்மாதிரி ஆசான்கள் தென்குமரியில் பலர் இப்போதும் இருக்கிறார்கள். ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள். மக்களுக்கு மருத்துவத் தொண்டு செய்வதோடு, மருத்துவக் கலையும் தற்காப்புக்கலையும், கற்றுக் கொடுக்கிறார்கள். காட்டுக்கடை ஆசான், கருங்கல் ஆனைக்குழி ஆசான், கேரளம் மரப்பாலம் ஆசான், புலிக்குன்னு ஆசான், காஞ்சிரங்குளம் ஆசான், நெல்லிமூட்டு ஆசான், பூவாறு ஆசான், சாமியார் மடம் பின்னக்கோட்டு ஆசான், மயிலாடி ஆசான், பரக்கோடு ஆசான், பாலப்பள்ளம் ஆசான், பொன்மனை ஆசான், முன்சிறை ஆசான், புதுக்கடை ஆசான், கொல்லங்கோடு ஆசான், நடைக்காவு ஆசான், ஓலக்கோடு ஆசான் முதலிய ஆசான் குடும்பங்கள் இன்னும் சிறப்போடு தொண்டு செய்து வருகின்றன. இந்தக் கல்வியையும் மருத்துவத்திறனையும், சித்தமருத்துவக் கல்லூரி வழியாக அரசு இன்றைய சித்த மருத்துவ மாணவர்களுக்கு வழங்கச் சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். பரம்பரை சித்த மருத்துவர்களின் சிறப்பு மருத்துவத்திறன் அழிந்து போகாமல் தொடரச் சிறப்புச் செயல் திட்டங்கள் வகுக்கவேண்டும். இதை வளர்ச்சிப் போக்கில் ஒழுங்குபடுத்துவதில் அரசும் சமூகமும் அக்கறை செலுத்த வேண்டும்.

இந்தக் கலைகள் தேர்ந்த வாரிசுகள் கிடைக்கப்படாததால் கைமாற்றப்படாமல் அழிந்துகொண்டிருக்கின்றன. அரசு

ஆதரவுடன் வளர்ந்துவரும் ஆங்கில மருத்துவத்தின் ஆதிக்கமும், பொதுவாக, நம்முள் வளர்ந்து வரும் மேல்நாட்டு மோகமும், அசுர வேகத்தில் உருவாகி வரும் புதிய புதிய அறிவியல் கருவிகளை அலோபதி மருத்துவம் பயன்படுத்திக் கொள்வதுபோல பயன்படுத்திக் கொள்ள சித்தமருத்துவம் போதிய பயிற்சி பெறாமையும், இவை ஆயுர்வேத மருத்துவத்தின் வலுவும், தமிழர்களின் பொதுவான பண்பாட்டு வீழ்ச்சி இப்படிப் பல காரணங்களால் இன்று சித்தமருத்துவம் தாழ்வுற்று இருக்கிறது. இதர தேச மருத்துவங்களைப்போல இது எழுச்சி பெறவில்லை. தன் அடிதாளத்தை இழந்து விடாமல் பிறமருத்துவச் சாதனைகளைத் துணைக்கு அழைத்துக் கொண்டு சித்தமருத்துவம் எழுச்சி பெறவேண்டும். தேசிய எழுச்சியின் ஒரு முக்கியமான கூறு இது.

ஒரு காலத்தில் தென்பகுதியில் பனைத் தொழிலும் கடல் தொழிலும் பிரதானத் தொழில்கள். எலும்பு முறிவுகளும் சதை முறிவுகளும், பிறழ்வுகளும் இத்தொழில்கள் தரும் அன்றாடப் பரிசுகள். எனவே இவைகளுக்கான தீர்வில், அன்று சித்த மருத்துவம் அதிக கவனம் செலுத்தியது. ஆனால் அது எல்லாத் துறைக்கும் உரியது. எல்லாத் துறைக்கும் உரியதாக்க வேண்டும். மண்சார்ந்த, சூழல் சார்ந்த மருத்துவமே மனிதமருத்துவம்.

நவீனக்கல்வி:

இந்த வட்டாரத்தில் நவீனக்கல்வி வெள்ளைக்கார கிறிஸ்தவ மிசனரிகளால் 19ம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டது. ஆத்திக்காட்டு விளை, கோயில்விளை, ஈத்தாமொழி ஆகிய சுற்றுப்புற ஊர்களில் 1810லேயே தொடக்கப் பள்ளிகள் திறக்கப்பட்டன. 1845ல் வைகுண்டசாமியின் தூண்டுதலால் மணிக்கட்டிப் பொட்டலிலேயே ஒரு பள்ளி திறக்கப்பட்டது. இப்பொழுது அரசு மேல்நிலைப் பள்ளிகளும் தனியார் கலைக்கல்லூரிகளும் உள்ளன. பொறியியல் கல்லூரிகளும் ஏராளமாக உள்ளன.

அத்தாணிப் பாடல்கள்

அம்மா பிறந்தாச்சாம்

அம்மா பொறந்திச்சாம்
அலவாக் கரையோரம்
அல வந்து மோதுதுன்னு - மாரியம்ம
அலையா மறஞ்சிச்சாம்
ஓ— ஓ— ஓ— ஓ— (குரவை)
ஊரைச் சுத்திப் புளியமரம்
உலுக்கி விட்டா கலகலங்கும்
பேரைச் சொல்லி நான் பாட - மாரியம்ம
பெழை ஒண்ணும் இல்லாம.
ஓ— ஓ— ஓ— ஓ— (குரவை)
இட்டாளாம் கோலத்த
எழுதினா சித்திரத்த
வச்சா மது கொடுங்கோ - மாரியம்ம
வாசல் தோறும் கொள்ளாம
ஓ— ஓ— ஓ— ஓ— (குரவை)

(தொடர்ச்சி)

மாரியம்மா

தானேதன்னா நானேநன்னா...... தன்ன.....
தானானே மாரியம்மா.......
தலைமேலே தாழம்பூவாம்
மடி மேலே முத்துச்சரம்
சிந்தாமக் காத்துவாரா
சின்னப் பொண்ணு மாரியம்மா......
தானேன்னா...... தானேன்னா....... தன்ன.....
ஏ.... தயிலந் தேச்சித் தலைமுழுகி
தங்கநாற்காலி மேலேறி
எண்ணெய் தேச்சித் தலைமுழுகி
இரும்பு நாற்காலி மேல ஏறி
தன்னேன்னா....... தானேன்னா...... தன்ன.......
ஏ..... இந்திரர் போல் மேலிருந்து
எதிரே இருந்தா மாரியம்மா.....
சுந்திரர் போல மேலிருந்து
சரியா இருக்கிறா மாரியம்மா.....
தன்னேன்னா...... தானேன்னா..... நானா.....
ஏ...... ஊசி நுழையாத.....
நுழையாத காட்டுக்குள்ளே
ஏ...... உத்திரமும் தூணும் போட்டு
ஊஞ்சலாடுறா மாரியம்மா
ஏ...... சரடு நுழையாத

கன்னா பின்னா காட்டுக்குள்ளே
ஏ..... சங்கிலியும் நாரும் போட்டு
சாயலாடுகிறா மாரியம்மா
தன்னேன்னா...... நானேன்னா..... தன்ன......
எண்ணத் தலையில பொங்கப்பான - நல்ல
ஏட்டிலடங்காத சாவத்தல
அறுத்த சாவலும் எடுத்துக் கூவுதே
அம்மா சன்னதி வாசலிலே
இரும்பு நாற்காலி மேல ஏறி - நல்ல
எண்ணெயும் தேச்சித் தல மொழுகி
இந்திரனைப் போல் நம்ம மாரியம்மா
எதிரே நிக்கிறா பாருங்கடி
தங்க நாற்காலி மேல ஏறி - நல்ல
தைலம் தேச்சித் தல மொழுகி
சந்திரனைப் போல் நம்ம மாரியம்மா
சரியா நிக்கிறா பாருங்கடி (குரவை)

(சு. லட்சுமி, அத்தாணி, வயது 40)

ஆறு ரெண்டும் காவிரியாம்

ராராரோ ராராரோ - எங்க கண்ணே
ராரிரரோ ராராரோ
ராராட்டும் கேட்பாரோ - எங்க அம்மா நீ
சீராடும் தொட்டியிலே
தொட்டி சுழன்றாட - எங்க ஆயா நீ
சுரபாலா நின்னாட
ஆறு ரெண்டும் காவிரியாம் - எங்க ஆயா
அதனிடையே சீரங்கமாம்
சீரங்கப் படித்துறையாம் - எங்க ஆயா
சின்னரங்கம் சன்னதியாம்
சன்னதிக்குப் போனாளோ - எங்க அம்மா நீ
சாமி வரம் கேட்டறிய (ராராரோ)
அழுதழுது போனியம்மா - நீ
அய்யா மலை சன்னதியில்
அய்யா என்ன சொன்னாரோ - எங்க ஆயா
அதிக வரம் தந்தாளோ

(சு. லட்சுமி, அத்தாணி, வயது - 40)

வள்ளி அழகுக்கோ

பெண் தாலாட்டு

வள்ளி அழகுக்கோ
வலது கை தேமலுக்கோ
கூந்தல் அழகுக்கோ - வேலவர்
குறவேசம் கொண்டாரோ
முத்தோ பவளமோ
முக்கனியோ ரத்தினமோ
காசியிலே பட்டெடுத்து - என் அரசிக்குக்
கப்பலிலே தொட்டில் கட்டி
காசி வனத்தாளோ நீ எனக்கு
கவலை முடி தீர்க்க வந்தாய்
பிச்சைக்கு வந்தவளோ
பிள்ளைக்கலி தீர்க்க வந்தாய்
ஐந்து சடையாண்டி
ஆறுமுக வேலாண்டி
பிச்சிச் சடையாண்டி
பிச்சைக்கு வந்தாண்டி
பொன்னுரைத்துப் பொட்டுமிட்டு
பொழுதுக்கு பால் புகட்டி
தங்கம் உரச்சுப் பொட்டிட்டு
தரை வெளுத்துப் பால் புகட்டி
மூத்தமாமன் என்ன தந்தான்
முழுக்கயிறும் தொட்டிலிட்டான்
முன்பக்கத் தொட்டிலுக்கு
முன்னுள்ள பெயரெழுதி

பக்கத்துத் தொட்டிலுக்கு
பாட்டையாரின் பெயரெழுதி
வலது பக்கத் தொட்டிலுக்கு
வரிசையம்மான் பெயரெழுதி
இடதுபக்கத் தொட்டிலுக்கு - உன் அப்பா
இந்திரனார் பெயரெழுதி
தாழே கிளி எழுதி
தாத்தாவின் பெயர் எழுதி
வச்சளக்க நாளி - உனக்கு
வரிசை அம்மான் தந்தவரோ
முத்தளக்க நாளி - உனக்கு
மூத்தமாமன் தந்தவரோ
என் அரசைக் காணாமல்
காடெல்லாம் நானலஞ்சி
காடெல்லாம் பிச்சி - கரை
ஓரமெல்லாம் செண்பகப்பூ
செண்பகப்பூ கொண்டு வந்து - என் அரசன்
கூந்தலிலே பூச்சூடி
சீரங்கம் ஆடி - நான்
சிவனிடத்தில் வாதாடி
வாதாடி தந்த பிச்சை - உன்னை
வளர்த்ததும் நூறு கோடி
வேலு மலை காவலிலே - வேலவர்
வீற்றிருக்கச் சொன்னாராம்
போரார் பெரியவரோ
பேரிலங்கை ஆண்டவரோ
சீரார் குமாரரே
திருச்செந்தூர் வேல்முருகா

(பாடியவர்: சி. இராமலெட்சுமி அம்மாள்)
(தொகுப்பு: சி. உதயகுமார்)

முத்தளக்கும் செட்டி

ஆண் தாலாட்டு

முத்தளக்கும் செட்டி
முதலுக்கும் பொன்னாகி
வச்சளக்கச் சொல்லி
வரிசையிட்டார் உன் மாமன்
திரும்ப அளந்தாராம்
தெய்வப் பிறவி உன் மாமன்
ஆராரோ ஆரிரரோ...... எங்க கண்ணே
ஆராரோ ஆரிரரோ.......
சுண்டு போட்டு அளந்தாராம்
சூரியரோ உன் மாமன்
படிபோட்டு அளந்தாராம்
பரமசிவம் உன் மாமன்
ஆராரோ....... ஆரிரரோ.......
எங்க கண்ணே ஆராரோ...... ஆரிரரோ......
மரக்கா புடிச்சளந்தாராம்
மாயப் பெருமாள் உன் மாமன்
சேர்த்துக் கணக்கெடுத்து
வரிசையிட்டார் உன் மாமன்
பாத்துக் கண்டெடுத்து
பங்கிட்டார் உன் மாமன்
ஆராரோ....... ஆரிரரோ.......
எங்க கண்ணே ஆராரோ...... ஆரிரரோ.....

(ஜெயந்தி மோகன்) - திருத்துறைப்பூண்டி.

மலைக்கு மலை மண்ணெடுத்து

மலைக்கு மலை மண்ணெடுத்து - எங்கண்ணே
மதுரை லயனெடுத்து - எங்கண்ணே
ஆசார வீடுகட்டி - எங்கண்ணே
அழகு ரதத் தொட்டி கட்டி
ஆட்டுங்க அத்தையரே - எங்கண்ணே நீ
அன்னக் கிளி கண்ணசர
பட்டெடுங்க தொட்டியெல்லாம் - எங்கண்ணே
பவுனெடுங்க ராராட்ட
துண்டெடுங்க தொட்டியெல்லாம் - எங்கண்ணே
துயரம் சொல்லி ராராட்ட
மாமி அடிச்சாளோ - எங்கண்ணே
மகிழம் பூத் தண்டாலே
பாட்டி அடிச்சாளோ - எங்கண்ணே
பால் வார்க்கும் கையால
அத்தை அடிச்சாளோ - எங்கண்ணே
ஆவரம் பூச் செண்டாலே
தங்கத்தினால் காப்படிச்சி - எங்கண்ணே
தருவிச்சார் தாய்மாமன்
பொன்னினால காப்படிச்சி - எங்கண்ணே
பிறந்தெடத்தில் போட்டாரே

கண்ணுமணி பொன்னுமணி - எங்கண்ணே
கருத்தரோட ஏழுமணி
சங்கு ஒசந்திருக்கும் - எங்கண்ணே
சங்கரனார் கோயிலிலே
இந்து ஒசந்திருக்கும் - எங்கண்ணே
ஈசவரனார் வாசலிலே

(சு. லட்சுமி, அத்தாணி)

குளிக்கக் குளமும் வெட்டி

குளிக்கக் குளமும் வெட்டி
கும்பிடக் கோவில் கட்டி
படிக்கப் பள்ளி கட்டி - வைக்கும்
பாண்டியனார் பேரரசே
அன்னக் கொடியுங் கட்டி
அசையா மணியுங் கட்டி
சொற்ணக் கொடி கட்டித்
துவங்க வந்த ரத்தினமோ
அந்தி சந்திச் சூரியனார்
அனுதினமும் பூசை பண்ணி
செய்ததோர் புண்ணியத்தால்
செல்வம் பிறந்தாயோ
வேம்பரசு சுற்றி வந்து
வினாயகரைத் தெண்டனிட்டு
சாம்ப சிவன் பூசை பண்ணி
தரணியில் பிறந்தாயோ

சங்கரனார் தன்னருளால்
அரணியில் பிறந்தாயோ
அரசாள வந்தாயோ
சீராடச் செப்புகளாம்
சுழன்றாடப் பம்பரமாம்
தானாடத் தங்க ஊஞ்சல்........
தவம் பெற்று வந்த கண்ணே
ஆடுமாம் தொட்டி
அசையுமாம் பொன்னூஞ்சல்
பாடுமாம் வீணை - நீ
படுத்துறங்கும் வேளை எல்லாம்
வெள்ளி விளக்கெரிய
வெங்கலங்கள் ஓசையிட
தங்க விளக்கெரியும் - உன்
தாய்மாமன் வாசலிலே
செம்பொன் எழுத்தாணி
சேரக் குருத்தோலை
மைபிடித்து கணக்கெழுதும்
மந்திரிமார் பேரரசோ
பட்டெடுத்து தொட்டில் கட்டி
பவுனுரைத்துப் பொட்டுமிட்டு
இட்டமுள்ள தொட்டிலுக்கு
எத்தனை பேர் காவல் உண்டு
கெங்கா சரஸ்வதியும்
கிருபையுள்ள லட்சுமியும்
அல்லி துரோபதையும் - பஞ்சவர்
ஐவருங் காவலுண்டு
பட்டால தொட்டிலும்
பவளக் கொடிக் கயிறும்

முத்தாலே ஆபரணம்
முடிக்கப் பிறந்த கண்ணோ
அம்மான்கள் வாசலிலே - ஒரு
புள்ளிமான் துள்ளுது
பத்தி விளையாடையா - உன்
பாதசரம் ஓசையிட
மயிலுங் குயிலும் - உன்
மடியிலே ஓலமிட
மயிலாட்டம் பார்க்க வந்த
மரகதமே கண்ணுறங்கு
பட்டணத்து வில்லைகளாம்
பணம் பெற்ற பன்னீராம்
தொட்டெடுத்து பொட்டு வைக்கும்
துரைமார்கள் பேரரசோ
ராரராரோ, ராரிராரோ
ஆரிவரோ ராரிராரோ.

(சு. லட்சுமி, அத்தாணி)

யாரடிச்சா

யாரடிச்சி ஏன் அழுதா
எங்க கண்ணே......
அடிச்சாரச் சொல்லி அழு
அக்கா அடிச்சாளோ
ஐவிரலும் தீண்ட வில்லை
முத்தான வாய் திறந்து
முளிப்பதற்கே கண்வளராய்
ஆராரோ...... ஆரிரரோ......
எங்க கண்ணே ஆராரோ...... ஆரிரரோ......
வண்ண மணித் தொட்டிலிலே
வாய்ச் சிதம்பம் கட்டிலிலே
தந்தாத்தா சேனைகளும் - எங்கப்பா
சந்தோசமான நித்திரையோ......
வங்காளப் பச்சிகளாம்
வயலிறங்கி மேயுங்களாம்
சிங்கார வில்லெடுத்துச்
சரந்தொடுப்பார் உன் மாமன்
வில்லெடுத்து விசையேத்தும்
வீரரா உன் மாமன்
ஆராரோ...... ஆரிரரோ......
எங்க கண்ணே ஆராரோ....... ஆரிரரோ.......

(ஜெயந்தி மோகன், திருத்துறைப்பூண்டி)

அக்காளக் கட்டிட்டு

அச்சச்சோ மொச்சக் கொட்டை
அக்காளக் கட்டிக்கிட்டேன்
மதுரைக்கிப் போனேன்
மல்லிகைப் பூ வாங்கினேன்
கொண்டையில வச்சேன்
குருவி கொத்திப் புடிச்சி
குளிக்கப் போனேன்
நண்டு கடிச்சுப் புடிச்சி
அழுதுக்கிட்டுப் போனேன்
அம்மா ரெண்டு போட்டாக.

(பாடியவர் குணவதி, அத்தாணி)

பூ முடிக்க வரல்லியே

காதல் தோல்வி

தன்னே நானே நானே தன்னா.....
தன்ன நானே........
ஏ..... குளத்துல நல்ல
அல்லி தாமரையாம்
என்ன பார்த்து சிரித்ததம்மா
நான் பூத்து நாளாச்சி நானே நன்னானே...... என்னப்
பூ முடிக்க வல்லியே
நானேனன்னா.......

நாலுமூலைத் திண்ணையிலே
நான் படுத்துத் தூங்கையிலே
தன்னேன்னா...... நானேன்னா.......
பூங்காவனம் பூக்கள் என்று தன்னேநானே......
என் தம்பி வந்தானே நானேன்னா.....
பூக்கள் தான் பேசுதுன்னு - நான்
அலட்சியமா எண்ணியிருந்தேன்
தன்னேநானே தன்னே...

அப்பா வரும் சத்தமா - தானேன்னா......
அலறித்தான் எந்திரிச்சேன் தானேநன்னா.....
அம்மாவோட தம்பிஎன்னான்........
அம்மாகிட்ட கேட்டேன்டி தன்னேநானே.......

எனக்குத்தான் நிறைய தம்பி
எந்த தம்பிய நான் கண்டேன் -
தானேன்னா— தானே நன்னா——
ஏ—— சர்க்காரு வேலையில
சேர்ந்தானடி - தன்னே நானே——
மெலுக்கா நடந்த தம்பி தன்னே——
சேந்தேன்டி ஒரு நாளு தானே நானே——
பொல்லாத தூரமுங்க தன்னே நானே தானே நன்னா——
உசுரே போவுதுங்க என்று - தன்னே நானே——
வந்தவரு தண்ணி கேட்டார் தானே நன்னா——
பொல்லாத தாழம்பூவா——
சேந்தேன்டி தானே நன்னா——
முள்ளிருந்து குத்தியது - நானேன்னா—— தானே
மனசிருக்க மகராசன்
பூ மேல நானென்ன - தன்னா
வந்தவரு சோறு கேட்டார் - தன்னே நானே——
ஏ—— உசுரத்தாரேன் என்றேனம்மா——
தானே நன்னா——

(பொட்டு அம்மாள், அத்தாணி)

தனிமை வலி

பூசரம் பூவையடி
　　பொழுதிருக்கப் பூத்த பூவு
நாதியத்த பூவு நானே
　　தன்ன்ன நானானே.......
நானொரு நாள் பேச்சுக் கேட்டேன்
　　தன்னன நானானே(　　　　தன்னானே)

சப்பாத்திப் பழம் பழுக்க
　　சதுரக் கள்ளி பிஞ்சிறங்க
சதிகார அண்ணனோடு
　　தன்னன தானானே - நான்
சரியாப் பொறக்கலாமோ
　　தன்னன தானானே
கொத்த மல்லிப் பூ பூக்க
　　கொடி முருங்கப் பிஞ்சிறங்க
கொலகார அண்ணனோட
　　தன்னன தானானே - நான்
கூடப் பொறக்கலாமோ
　　தன்னன நன்னானே　　　　(தன்னானே)

ஆத்துக்கு அக்கரையாம்
　　அலையடிக்கும் தண்ணீராம்
அண்ணனோட தண்ணியின்னு
　　தன்னன நன்னானே - நான்
அள்ளக்கூட பயமாருக்கே
　　தன்னன நன்னானே

குளத்துக்கும் அக்கரையாம்
  கண்ணாடியா தண்ணீராம்
கொழுந்தனோட தண்ணியின்னு
  தன்னனே நானே தானே - நான்
குடிக்கக் கூட பயமாருக்கே
  தன்னானே நானானே (தன்னானே)

(சிட்டு அம்மாள், அத்தாணி)

ஆத்தோரம்

ஆத்தோரம் மண்ணெடுத்து - ஆயமகனே
அருமையாகச் சேணு செய்து
ஊத்தோரம் போகாதேடா - ஆயமகனே
பூநாகம் தீண்டுமடா
ஆத்துக்கு அந்தண்ட
என்னைப் பெத்த அப்பாவே
ஆகாசத் தண்டி மரம்
அந்த மரமும் இல்ல - என்ன
ஆதரிப்பார் யாருமில்ல.......
குளத்துக்கு அந்தண்ட
குலகுலையாத் தண்டி மரம் - எனக்கு
குந்த நிழலுமில்ல ஆயமகனே - என்னக்
கொண்டணைப்பார் யாருமில்ல......
கோரைய நம்பியல்லோ - நான்
குதிச்சனப்பா கங்கயில
கோர விலகிடுச்சா - நான்
குதிச்ச மவா மாளுறனே

(ந. பிரபாகரன் சேகரித்தது)

சிட்டு வடிவெடுத்து

சிட்டு நல்ல வடிவெடுத்து - எம்மா......
வடிவெடுத்து..... நல்ல வடிவெடுத்து - நா
சோளம் திங்கப் போனேனம்மா
தன்னே நானானே - அம்மா
தானே நன்னானே......
சோளத்துக்கே அதியாரியுண்டோ - எம்மா
அதியாரியுண்டோ என்ன
சில்லாலே அடிச்சாகளே தன்னானே
நானே - எம்மா தன்னானே நானே......
சில்லடிதான் - எம்மா - தாங்காமலே
எம்மா தாங்காமலே - நான்
சோர விட்டேன் கண்ணீரயே
தன்னே நன்னானே - எம்மா
தானே நன்னானே....
ஏ..... காக்கா நல்ல
வடிவெடுத்து - எம்மா
வடிவெடுத்து - நான்
கடல திங்க போனேனம்மா
தன்னே தன்னானே
தானே நன்னானே

(சு. லட்சுமி, அத்தாணி)

அத்தாச்சிமார் சண்டை

(வறுமை தாங்காமல் கணவன் வீட்டிலிருந்து அண்ணன் வீட்டுக்கு வருகிறாள் தங்கை. அண்ணன் பொண்டாட்டி அவளைத் துரத்துகிறாள்).

ஏ... வடக்கத்தி ராஜா மவ
வடநாட்டுச் செல்ல மவ
வரிசையாக நிக்க வேணும்......
வகை தம்பி வந்தாலும் - ஏ
வாசலிலே நிக்கா தெம்பா
வாசப்படி தாண்டா தெம்பா.....
வாசலில நிக்க வல்ல
வாசப்படி தாண்ட வல்ல
வரிசையிட்ட அண்ணன் கிட்ட
வறுமைகளைச் சொல்ல வந்தேன்.
வடிக்காதம்மா கண்ணீர
வகுராதம்மா பூ முடிய.......
ஏ...... தெக்கத்தி ராஜா மவா
தென்னாட்டுக் கள்ள மவா
தேசம் ஒரு பயணம்
தெசை தப்பி வந்தாலும்
தேசம் அறியாது
திங்க வந்த சண்டாளி
தின்ன வந்து இருக்காளெம்பா
திண்ணப்படி தாண்டாதெம்பா

(சு. லட்சுமி, அத்தாணி)

ஒரு கல்

இது ஒரு உழைப்புப் பாடல். பொருள்களை ஒரு இடத்திலிருந்து மறு இடத்துக்குக் கடத்தும்போது, அலுப்புத் தட்டாமல் இருக்கப் பாடுவது. ஒருத்தி ஒரு அடிபாட, மற்றவர்கள் அதை எடுத்துப் பாடுவார்கள்.

ஒரு கல் எடுக்கெடுக்க
ஒத்த ரூபாய் சம்பளமாம்
அய்யோ தெய்வமே.......
ஒத்த ரூபாய் சம்பளமாம்
அய்யோ பாவமே......
ரெண்டு கல் எடுக்கெடுக்க
ரெண்டு ரூபாய் சம்பளமாம்
அய்யோ தெய்வமே......
ரெண்டு ரூபாய் சம்பளமாம்
அய்யோ பாவமே........
மூணுகல் எடுக்கெடுக்க
மூணு ரூபாய் சம்பளமாம்
அய்யோ தெய்வமே.......
மூணு ரூபாய் சம்பளமாம்
அய்யோ பாவமே......
நாலு கல்......
அஞ்சு கல்......
ஆறு கல்......
ஏழு கல்......
எட்டு கல்......

ஒன்பது கல்......
ஒண்ணாவே வாறவளே
அய்யோ பாவமே........
காசம்மாவக் கண்ணால் காணோம்
அய்யோ தெய்வமே........
காசம்மா கண்ணால் காணோம்
அய்யோ பாவமே......
காசம்மா போடும் சட்ட
யாரு போடப் போறாகளோ
அய்யோ பாவமே.......
காசம்மா வைக்கும் பொட்டு
யாரு வைக்கப் போறாகளோ......
சாலையில கூட்டம் கூடி
சரி நாயம் பேசயிலே - இந்த
சாதி கெட்ட பையனாலே - ராசாவே
சபையில கையெடுத்தேன்......
அய்யோ பாவமே,......
படுத்தா பல நினைவு
பாயெல்லாம் கண்ணீரு
கொல்லையில கூட்டம் கூடி
நாயம் பேசயிலே - ராசாவே
கொணம் கெட்ட பையனாலே
அய்யோ பாவமே.....
படுத்தா பல நினைவு
பாயெல்லாம் கண்ணீரு
கொழுந்தனுக்கு வேணுமின்னு
கொய்யாபழம் வாங்கி வந்தேன்
கொய்யாபழம் வாசமில்லை - ராசாவே
கொஞ்சமும் பாசமில்லை...... அய்யோ பாவமே.

(ஜெயந்தி மோகன்)

ரொம்ப சடையிறாரே

(நடவுக்கூலிப் போராட்டம் பற்றியது)

ஒட்டட ஒட்டடக் கம்பத்திலே - ராசா
விட்டுட்டுப் போனாரே அம்பத்திலே
தன்னானே நானே நன்னே - தன்னானே
நாளானே நன்ன நன்னே......
நடவும் நட்டுப் பாத்தோம், நட்டமுடி
கும்பிட்டும் கேட்டுப் பாத்தோம்
கூலியக் கேக்கப் போனா - முதலாளி
ரொம்ப சடையிறாரே
எல்லார்க்கும் சந்தியிலே - மொதலாளி
சேரக் கொளுத்திவிட்டான்......
சேர்வைக்கார மொதலாளி - ஒடனே
தந்தியடிச் சாரே
தந்தியக் கண்ட நாளில் - சின்னஞ்சிறு
போலீசார் வந்திறங்கி
போலீசக் கண்ட நாளில் - ஏழை மக்கள்
எல்லாரும் கையெடுத்தார்........

(பொட்டம்மா, அத்தாணி)

பார்க்க வச்சித் திங்குறானே

(துயரம்)

மண்ணுக்குக் கீழே......
மண்பான சக்கரையாம்
மன்னவன் சரியிருந்தா
மாதாவீடு ஏன் போறேன்
பூமிக்குக் கீழே.......
புதுப்பான சக்கரையாம்
புருசன் சரி இருந்தா.....
பொறந்த இடம் ஏன் போறேன்
எட்டுத்தட்டு இட்டலியாம்
இளந்தேங்காய்ச் சட்டினியாம்
எடுத்து வச்சித் திங்கிறானே
ஈச்ச மரத்தடியினிலே
பத்துத்தட்டு இட்டிலியாம்
பாவக்காச் சட்டினியாம்
பாக்க வச்சித் திங்கிறானே...
பாலா மரத்தடியினிலே
கருப்பு மண்ணுக்கும்
கட்டுப் போட்ட ரோட்டுக்கும்
காசால பாபோட்டு
காசி போட்டு உள்ளழைப்போம்
செகப்பு மண்ணுக்கும்
சிமெண்ட் போட்ட ரோட்டுக்கும்
சீனியால பாபோட்டு
சீனி வச்சி உள்ளழைப்போம்.

கரும்பு வெட்டிக் கால் நிறுத்தி

அப்பா இழவு

இஞ்சி வெட்டி கால்நிறுத்தி
இடுக்குக்கொரு பூ தொடுத்து - நீங்க
இடுகாடு போற விதி - என்ன பெத்த அப்பாவே
இருந்தழுதா பொன்னாத்தா
கரும்பு வெட்டிக்கால் நிறுத்தி - என்ன பெத்த அப்பா
கணுவுக்கொரு பூ தொடுத்து - நீங்க
கைலாசம் போறதுக்கு - என்ன பெத்த அப்பா என்ன
கண் குருடா பண்ணிட்டிய

இடுப்பளவு தண்ணியில
இருந்து குளிக்கயில - நான்
இடுகுருவி சத்தம் கேட்டு
என்ன பெத்த அப்பாவே நான்
ஏன்தான் பொறுத்திருந்தேன்
மாரளவு தண்ணியில - நான்
மறஞ்சி குளிக்கையில -நான்
மறுகுருவி சத்தம் கேட்டு
என்ன பெத்த அப்பா - நான்
மனக்குழப்பம் பெற்று விட்டேன்

வேம்பாய் வளர்ந்த மக - நான்
வேதனையை அடைகிறேனே.

(சிட்டம்மா, அத்தாணி)

வாசலிலே வாகைமரம்

ஏ...... ராசா நல்ல வருவாருன்னு
ரோசாப்பூவு வாங்கி வச்சேன்
தன்னே நானே நானே நானே
தானே நானானே
தன்னே நானே நானே நானே
நானே சொந்த மாதாவே
ராசா நல்லா வரவும் இல்ல
ரோசாப்பூவும் வாடலாச்சே
தானே நானானே......

வாசலிலே வாகைமரம்
வாது வாதா ஓடும் மரம்
தன்னே நானே தானே நானானே
எந்தன் தாயாரே
வாது ஓடும் பக்கமெல்லாம்
வம்பு வந்து நேர்ந்திடுதே......
தன்னே நானானே......

கொல்லையிலே கொய்யாமரம்
கொடி கொடியா ஓடும் மரம்..... தன்னை நானானே
கொடி போன பக்கமெல்லாம்
குத்தம் வந்து நேரிடுதே..... தன்னே நானானே
ஏ..... ஆசை நல்ல கிளி வளர்த்தேன்
அக்கறையா மேயவுட்டேன்...... தன்னே நானானே - அது
எப்ப வந்து சேதி சொல்லும்

சொந்த மாதாவே - என்
கவலையெல்லாம் எப்ப தீரும்
சொந்த மாதாவே
பத்தடுக்கு டிப்பனுல
பாத்து வச்சேன் சாதங்கறி
தன்னே னன்னானே..... என்னய
பாக்கு மரச்சோலையிலே
பாக்க வெச்சித் திங்குறாரே..... தன்னே நானானே......

எட்டடுக்கு டிப்பனிலே
எடுத்து வச்சேன் சாதங்கறி
எள்ளுச் செடிக் காட்டினிலே
தன்னே னன்னானே..... என்னய
ஏங்க வச்சித் திங்கிறாரே
சொந்த மாதாவே

மந்தையிலே மாட்டக் கட்டி
மாமனாரு காத்த காவல்
தன்னே னன்னானே
மங்கு வச்சி பால் கறந்தால்
மாமனாரு சாதிப்பாரோ தன்னனேதானானே.......
கொல்லையிலே மாட்டக் கெட்டி
கொழுந்தனாரு காத்த காவல்
கும்பா வச்சிப்பால் கறந்தா - தன்னேனன்னா
கொழுந்தன் வச்சிச் சாதிப்பாரோ
தன்னே நானே நானே.

(பிரபாகரன், அத்தாணி)

தொப்பயத் தடவியல்லோ

எங்க
தொப்பயத் தடவியல்லோ ...... எங்க
தொந்தி நிரம்பச் சோறுமிட்டாய் - எங்க
பக்கத்தத் தடவியல்லோ - என்னம்மாடி
பால் குடித்து வளர்த்து விட்டாய்
வீதியிலே நாங்களெல்லாம்
விளையாடி வீடு வந்தால்
நீதியுடன் தான் பார்த்து
நேர்த்தியுடன் சோறிடுவாய்
பல வீதி நான் திரிந்து
பந்தடித்து வீடு வந்தால்
பாசமுடன் நீ பார்த்து
பரிந்துமல்லோ சோறிடுவாய்
சோறூட்ட கை மறந்து
சொர்க்கப் பதி சேர்ந்தாயோ
அன்னமிட்ட கை மறந்து
அரன்பதியே - போய்ச் சேர்ந்தாய்
உழுத்தை நிழலாமோ - என்னம்மாடி
உன்னைப் போல் தாயாமோ
கள்ளி நிழலாமோ - என்னம்மாடி
கணவர்கள் தாயாமோ
வேலி நிழலாமோ - என்னம்மாடி
வேண்டுவோர் தாயாமோ
(தொப்பை - பெருத்த வயிறு தொந்தி)

(பொட்டம்மா, அத்தாணி)

அம்மாடி பெத்தவளே

அம்மாடி பெத்தவளே - என்
ஆச்சியடி தாயாரே
வீதியிலே நாங்களெல்லாம்
விளையாடி வீடு வந்தால்
நீதியுடன் தான் பார்த்து
நேர்த்தியுடன் சோறிடுவாய்
பல வீதி நான் திரிந்து
பந்தடித்து வீடு வந்தால்
பச்சமுடன் நீ பார்த்து
பரிந்துமல்லோ சோறிடுவாய்
சோறிட்ட கை மறந்து
சொற்கபதி சேந்தாயோ?
அன்னமிட்ட கை மறந்து
அரன்பதியே போய்ச் சேர்ந்தாய்

(சிட்டம்மா, அத்தாணி)

ஒத்துமை
(ஒற்றுமை)

பத்துப் பனைமரமாம்
பத்தாயிரம் பன்னாடையாம்
பத்துப் பேரும் ஒத்துமையா - செல்லையா - நாம
ஈஸ்வரிய ஒத்ததானோம்......
செல்லையா செல்லையா செல்லையா
ஒன்பது பனைமரமாம்
ஒன்பதாயிரம் பன்னாடையாம் - நாம
ஒன்பது பேரும் ஒத்துமையா - சொல்லையா - நாம
ஈஸ்வரிய ஒத்ததானோம்
சின்னையா சின்னையா சின்னையா......
எட்டுப் பனைமரமாம்
எட்டாயிரம் பன்னாடையாம் - நாம
எட்டுப் பேரும் ஒத்துமையா - சொல்லையா - நாம
ஈஸ்வரிய ஒத்ததானோம்.
சின்னையா சின்னையா சின்னையா......
ஏழு பனைமரமாம்
ஏழாயிரம் பன்னாடையாம்
ஆறு பனைமரமாம்
அஞ்சு பனைமரமாம்
நாலு பனைமரமாம்
மூணு பனைமரமாம்

ரெண்டு பனைமரமாம்
ஒத்த பனைமரமாம் ஓராயிரம் பன்னாடையாம்
ஊரெல்லாம் ஒற்றுமைதான் செல்லய்யா - நானும்
ஈஸ்வரிய ஒத்ததானேன்
சின்னய்யா சின்னய்யா சின்னய்யா


பாடியவர்: பொட்டம்மா, சிட்டம்மா, அத்தாணி
சேகரித்தவர்: நா. பிரபாகரன்

தோணிக்காரா தோணிக்காரா

தோணிக்காரா தோணிக்காரா
எங்கள் அண்ணா......
ஏ..... ஆமாய்யா......
தள்ளாதேடா தள்ளாதேடா
தங்கத் தோணி......
நெட்டிய நம்பியல்லோ
நீர் செனப்பார் கங்கையில
நெட்டி மிதந்திருச்சோ..... நான்
நீஞ்ச மக அந்தரம் தான்
பாவி போகும் பாதையிலே
பாம்பு படுத்திருக்கு
பாம்பத் துரத்திருந்தா
பாசமுள்ள அப்பாவுக்குப்
பாலூட்டத் தரமசம் தான்...
நீலி போகும் பாதையில
நெருஞ்சி படர்ந்திருக்கும்
நெய்யாறு கிட்டருக்கும்

நேசமுள்ள அப்பாவுக்கு - நான்
நெய்யூட்ட தாமசம் தான்
மானா மருதையில
மாடு மேய்க்கும் சின்னப் புள்ளே
மாடுக மேய்ஞ்சாலென்ன
மஞ்சங் கொல்லை தின்னாலென்ன......

❖ ❖ ❖



தென்குமரி வட்டார வழக்கிலிருக்கும் பழமொழிகள், விடு கதைகள், பாடல்கள், கதைகள், விளையாட்டுகள் போன்றவற்றை நிறப்படுத்தி தந்திருப்பதோடு, பல வட்டாரத்தின் சிறப்பு சொற்களும் அணிவகுத்து நிற்கிறது. மக்களின் அணிகலன்கள், வட்டாரம் சார்ந்த நிலம், பயிர், கல்வியும்கூட தொகுக்கப் பட்டிருப்பது நூலிற்கு இன்னும் வலுசேர்க்கும் விடயமாகப் படுகிறது.

பொன்னீலன் அவர்களின் இத்தொகுப்பின் அடையாளம் என்பது பிற மாவட்ட மக்களும் அறிந்து, உணர்ந்து கொள்ளவும் குறிப்பாய் தமிழ் இலக்கிய வாசக பெருமக்களுக்கு தாகம் தணிக்கும் விதமாகவும் படைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் வெளிப்படுகிறது.

ISBN 978-81-2342-373-9

NCBH

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-600 098.
போன்: 26251968,26359906,26258410.

9 788123 423739
Code No. A2737 ₹ 220.00